# திருமூலர் திருமந்திரம்

மூலமும் உரையும்

பகுதி II

மௌனாச்சிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் திருமந்திரம்
# மூலமும் உரையும்

மௌனாச்சிரம்

**1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஓம் சிவம்

ஏழு மௌன மடங்கள்
பாரத பூமியில் நிறுவிய

குரு முதல்வர்

# திருமூலர் பெருமான்

குருபூசை விழா மலர்

**16-11-1995**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

# திருமூலர் திருமந்திரம்

மூலமும் உரையும்

மூன்றாம் தந்திரம், நாலாம் தந்திரத்தின் முதல் நாலு பகுதிகள்.
496 மந்திரங்கள்

## பகுதி II

முதலாம் பதிப்பு.

உரையாளர்

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்.

மௌனாச்சிரம்
19, I. B. C. Road,
வெள்ளவத்தை
கொழும்பு - 6
இலங்கை.

1995

வெளியீட்டு எண் - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

# முன்னுரை

❊ திருமூலர் திருமந்திரம் விளக்க உரையுடன் பகுதி பகுதியாக வெளிவந்த வண்ணம் உள்ளது. 1993ஆம் ஆண்டு திருமூலர் திருமந்திரம் முழுவதும்– 3,000 மந்திரங்களையும் உள்ளாக்கிய நூல் வெளியாகியது.

❊ 1994 ஆம் ஆண்டு முதற்பகுதி உரையுடன் வெளியாகியது. இதில் முதல் 548 மந்திரங்களும் வெளிவந்துள்ளன.

❊ இவ்வருடம் 1995 இல் இரண்டாம் பகுதி வெளிவருகின்றது. மந்திரங்கள் சொற்பிரிவுடன் அமைந்துள்ளன. (இதில் மூன்றாம் தந்திரம்–335 மந்திரங்கள், நாலாம் தந்திரத்தின் முதல் நாலு பகுதிகள் – 161 மந்திரங்கள் ஆகியன உள்ளடங்கியுள்ளன.) மந்திரங்களின் உரையின் ஆங்கில மொழிபெயர்ப்பும் (பகுதி II) தனியாக வெளிவருகின்றது.

❊ இவை அனைத்தும் சிவபரம்பொருளின் அன்பாலும், கருணையாலும், அருளாலும் நிகழ்கின்றன. இத்திருமந்திர நூல்கள் இறைதாகம் உள்ளவர்களின் ஆத்மீக இதய இல்லங்களில் சிறப்புடன் விளங்க வேண்டும் என இது அன்போடு பிரார்த்தனை செய்கின்றது.

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்

மௌனாச்சிரம்
19, I. B. C. Road,
Colombo - 6 Wellawatta
Sri Lanka.

06 – 11 – 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | **மூன்றாம் தந்திரம்** | **280** |
| I | அட்டாங்க யோகம் | 280 |
| II | இயமம் | 282 |
| III | நியமம் | 283 |
| IV | ஆதனம் | 284 |
| V | பிராணாயாமம் | 285 |
| VI | பிரத்தியாகாரம் | 293 |
| VII | தாரணை | 296 |
| VIII | தியானம் | 301 |
| IX | சமாதி | 311 |
| X | அட்டாங்க யோகப் பேறு | 317 |
| XI | அட்டமாசித்தி | 320 |
| XII | கலைநிலை | 348 |
| XIII | சரீரசித்தி உபாயம் | 352 |
| XIV | காலசக்கரம் | 359 |
| XV | ஆயுட் பரிட்சை | 374 |
| XVI | வாரசரம் | 383 |
| XVII | வாரசூலம் | 387 |
| XVIII | கேசரி யோகம் | 388 |
| XIX | பரியங்க யோகம் | 399 |
| XX | அமுரி தாரணை | 408 |
| XXI | சந்திர யோகம். | 411 |
| | **நாலாந் தந்திரம்** | **426** |
| I | அசபை | 427 |
| II | திரு அம்பலச் சக்கரம் | 438 |
| III | அருச்சனை | 471 |
| IV | நவகுண்டம் | 475 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## மூன்றாம் தந்திரம் - சாராம்சம்.

1. ※ இயமம் சிறப்பாக விளக்கப்படுகின்றது.
※ மூன்றுவகை நியமம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.
※ எட்டுவகையான ஆசனங்கள் மாத்திரம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
※ பிராணனாரை அந்தர் யாகத்தின் ஆகுதியாக வழங்குவதே பிராணாயாமம் ஆகும்.

2. ※ பிரத்தியாகாரம், தாரணை ஆகியவற்றின் சிறப்பு விளக்கப்படுகின்றது.
※ 16 வகைத் தியானம் கூறப்பட்டுள்ளது.
※ இருவகைச் சமாதி தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

3. ※ அட்டாங்க யோகத்தின் பேறும், அட்டமா சித்திகளும் விபரிக்கப்பட்டுள்ளன.
※ ஆன்மீகக் கலைகளும், சரீரத்தைக் காக்கும் உபாயங்களும் கூறப்பட்டுள்ளன.
※ காலசக்கரத்தின் நிலைப்பாடு, ஆயுளின் நீடிப்பு முறை விபரிக்கப்படுகின்றன.

4. ※ கேசரி யோகம், கேசரி முத்திரை விளக்கப்பட்டுள்ளது.
※ குடும்ப அமைப்பு,குடும்பயோகம், குடும்பக்கலை, காதலர் சிறப்பு, காதலின் அழகு ஆகியவற்றின் முக்கியத்துவம் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

5. ※ சிவ அமிர்தம், சந்திரயோகம் ஆகியன நேரடியாக விபரிக்கப்பட்டுள்ளன.
※ ஒன்பது வகையான சக்கரங்கள், ஒன்பது வகை சத்தி பேதங்கள், ஒன்பது வகையான யோகங்கள் ஆகியன தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## நாலாம் தந்திரம் - முதல் நான்கு பகுதிகளின் சாரம்

1. ❋ ஓரெழுத்து - பேசா எழுத்து - மோனமந்திரம் - அசபை நன்கு ஆராயப்பட்டு விளக்கப்பட்டுள்ளது.

2. ❋ தமிழில் உள்ள 51 வகையான சப்த்தங்களும் தெளிவாக்கப்பட்டுள்ளன.

3. ❋ திரு அம்பலச்சக்கரம் தெளிவாக வரையப்பட்டுள்ளது.

4. ❋ ஐந்து எழுத்தின் சிறப்பு, தூய ஆகமம், தூய வெறுவெளி ஆகியனவற்றிற்கு இடையேயான தொடர்பு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

5. ❋ இறைவரை நேரடியாக அருச்சனை செய்து வழிபாடு செய்யும் முறை கூறப்பட்டுள்ளது.

6. ❋ மனித உடல் நவகுண்டமாக வனையப்பட்டுள்ளது. இது மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# மூன்றாம் தந்திரம்

## i அட்டாங்க யோகம்

549 உரைத்தன அவர்க்கு அரி ஒன்று மூடிய
நிரைத்த இராசி நிரை முறை எண்ணிப்
பிரைச் சதம் எட்டும் பேசியே நந்தி
நிரைத்த இயமம் நியமம் செய்தானே.

❊ வார்த்தைகளால் விளக்க முடியாத சிறந்த யோகம் ஒன்றை ஒன்பது யோகங்களில் ஒன்றாகிய அட்டாங்க யோகத்தை;

❊ வகை வகையாக ஒழுங்குபடுத்தி, முறைமுறையாக நெறிப்படுத்தி;

❊ தனது எட்டுச் சீடர்களாகிய எமக்கு திருநந்தி எம் பெருமானார் போதித்து அருளினார்.

550

செய்த இயம நியமம் சமாதி சென்று
உய்யப் பராசத்தி உத்தர பூருவ
மெய்த கவச நியாசங்கள் முத்திரை
எய்த உரை செய்வன் இந்நிலை தானே.

❊ அட்டாங்க யோகத்திலே இயமம் நியமம் முதல் சமாதிவரையுள்ள நிலைப் பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

❊ பராசத்தியிடம் இருந்து உண்மையான கவசங்களைத் தெய்வீக முத்திரைகளை யான் பெற்றேன்.

❊ அவற்றை இந்த உலகம் உய்வு அடையும் பொருட்டு திருமூலராகிய யான் உரை செய்யப் போகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

551 அந்நெறி இந்நெறி என்னாது அட்டாங்கத்து
அந்நெறி சென்று சமாதியிலே நின்மின்
நன்நெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்
புன்நெறி யாகத்தில் போக்கு இல்லை ஆகுமே.

* அந்த வழி இந்த வழி என்று பேசி அலைந்து திரிய வேண்டாம்;
* ஒரே நிலைப்பாட்டுடன் அட்டாங்க யோக வழிமுறைகளைக் கைக் கொண்டு அதன் இறுதி நிலையான சமாதி கைவரச் சாதனை செய் யுங்கள்;
* இந்தச் சிறந்த நல்ல வழியைப் பின்பற்றுபவர்கள் இறைஞானத்தைப் பெறுவார்கள்;
* பலிசெய்து யாகம் செய்கின்ற கீழ்மையான வழிகளைப் பின்பற்றாதீர்கள்.

552 இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயம் உறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்கம் ஆவதும் ஆமே.

அட்டாங்க யோகத்தில் கூறப்படும் நிலைகள் ஆவன;

1. இயமம் – இயற்கையாகவே,இயல்பாகவே இயற்றுவிக்கப் பட்டதுடன் இயைந்து வாழ்தல்.
2. நியமம் – நியமிக்கப்பட்ட நியதியை உணர்ந்து நித்தம் நித்தம் கை விடாது அனுசரித்தல்.
3. ஆசனம் – ஆத்மா சனனிக்கும் – ஓய்வு எடுக்கும் – ஆறி அமர்ந்து கொள்ளும் நிலை.
4. பிராணாயாமம் – பிராணனை, உள்ளே தோன்றுகின்ற எல்லா விதமான அக்கினிக்கும் ஆகுதியாக அந்தர்யாமம் செய்தல்.
5. பிரத்தியாகாரம் – உள்ளே உள்ள சகல செயற்பாடுகளையும் தனித் தனியாகப் பிரித்துப் பிரித்து உணர்ந்து அவற்றில் தெளிவு ஏற்படல்.
6. தாரணை – உள்ளே உள்ள சகல செயற்பாடுளையும் ஒன்றாக் கித் தெளிவாக்கி ஒருமுகப்படுத்தி நோக்கல்.
7. தியானம் – முழுமைத்துவமான விழிப்பு நிலையில் இருந்து முழுமைத்துவத்தை இடைவிடாது சிரத்தை யோடு அவதானித்தல்.
8. சமாதி – பரிபூரணத்துவமான தெளிந்த தெளிவு நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii இயமம்

553 எழுந்து நீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழும் தண் நியமங்கள் செய்மின் என்று அண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர் சடையோடே
அழுந்திய எண்மர்க்கு அருள் புரிந்தானே.

❋ எட்டுத்திக்குகளில் இருந்தும் பலவிதமான கஷ்டங்கள், துன்பங்கள் வரும்;

❋ "சிறந்த உயர்ந்த நியமங்களை - ஒழுக்கங்களைத் தவறாது தினமும் கடைப்பிடியுங்கள்- பின்பற்றுங்கள்" என ;

❋ முழுமைத்துவம் நிறைந்த குளிர்ச்சி பொருந்திய சுத்த சத்தியோடு கூடிய இறைவர் ;

❋ உண்மையாக, விசுவாசமாகச் சத்தியத்தில் திளைத்து இருக்கும் எண மருக்கும் அனுக்கிரகம் செய்கின்றார்.

❋ எண்மர் : சக்தி, சதாசிவர், உமா மகேஷ்வரர், நந்திதேவர், ஈசர்,பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்.

554
கொல்லான் பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கம் உடையான் நடுச் செய்ய
வல்லான் பகுந்து உண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்து இடையில் நின்றானே.

❋ "இயமம்" நிலையினை மேற்கொள்பவர்களின் செயற்பாடுகள் ஆவன;

1. கொல்லாமை
2. பொய் கூறாமை
3. களவு இல்லாமை
4. எணவகைக் குணம் மேற்கொள்ளல்
5. அடக்கம்-பொறை உடைமை
6. எல்லாவற்றையும் சமன் செய்தல்
7. பகிர்ந்து உண்ணல்
8. எதுவித குற்றமும் இல்லாமை
9. கள் அருந்தாமை
10. காமம் இல்லாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## iii நியமம்

555 ஆதியை வேதத்தின் அப்பொருளாளனைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசக்தியோடு உடன்
நீதி உணர்ந்து நியமத்தன் ஆமே.

❊ எல்லாவற்றிற்கும் முதலானதை – ஆதியை, வேதத்தினது பொருளாக விளங்குபவரை;

❊ தனிப்பெரும் ஜோதியாக விளங்குபவரை, தகதக எனக் காலிக்கும் அக்கினி மயமானவரை;

❊ அர்த்த நாரீஸ்வர சொரூபமாகக் காட்சி கொடுக்கும் இறைவரை;

❊ ஆத்மார்த்தமாக உணர்ந்து தெளிவு பெறுதல் ஒருவகை நியமம் ஆகும்.

556 தூய்மை அருள் ஊண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்ற இவை
காமம் களவு கொலை எனக் காண்பவை
நேமி ஈர் ஐந்து நியமத்தன் ஆமே.

❊ இரண்டாவது வகையான நியமத்தின் பத்து அம்சங்களாவன :

1. அகப்புறத் தூய்மையாக இருத்தல்
2. இறை அருளோடு இருத்தல்
3. உணவைச் சுருக்கி இருத்தல்
4. சாந்தமாக இருத்தல்
5. சரியானவற்றைச் செய்தல்
6. வாய்மை பேசுதல் – காத்தல்
7. எல்லாவித நல்ல நிலைப்பாடுகளையும் வளர்த்தல்
8. காமவெறி அற்று இருத்தல்
9. களவு செய்யாது இருத்தல்
10. கொலை செய்யாது இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

557 தவம் செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவம் தன் விரதமே சித்தாந்தக் கேள்வி
அகம் சிவ பூசை ஒண்மதி சொல் ஈர் ஐந்து
நிவம் பல செய்யின் நியமத்தன் ஆமே.

❊ மூன்றாவது வகையான நியமத்தின் அம்சங்களாவன;

1. இறைவரை நோக்கித் தவம் செய்தல்.
2. இறைவரின் நாம ஜெபம் செய்தல்.
3. இறை ஆனந்தத்தை உள்ளே வளர்த்தல்.
4. இறைவரின் மீது பரிபூரண நம்பிக்கை வைத்தல்.
5. தானம் செய்ய வேண்டிய அனைத்தையும் கொடுத்தல்.
6. இறைவரை நோக்கி ஆத்மார்த்த விரதம் இருத்தல்.
7. மனம்- சித்தம் கடந்து இறைஞானத்தைக் கேட்டல்.
8. ஆத்மார்த்தமாகச் சிவ பூசை செய்தல்.
9. உயர்ந்த இறை ஞானத்தை உள்ளே உருவாக்கல்.
10. இறைவரின் புனிதமான "நாமத்தோடு" இருத்தல், வாழ்தல்.

## iv ஆதனம்

558 பங்கயம் ஆதி பரந்த பல் ஆதனம்
அங்கு உளவாம் இருநாலும் அவற்றின் உள்
சொங்கு இல்லை ஆகச் சுவத்திகம் எனமிகத்
தங்க இருப்பத் தலைவனும் ஆகுமே.

❊ பலவகையான ஆசனங்களுள்ளே; பங்கயாசனம்/தாமரை ஆசனம்/பத்மாசனம் மிகவும் ஆதியானது;

❊ பலவகையான ஆசனங்களுள்ளே மிகவும் சிறந்த ஆசனங்கள் எட்டு ஆகும்.

❊ சிறந்த எட்டு ஆசனங்களுள்ளே சுவத்திகம் எனப்படும் சித்தாசனமே மிகமிகச் சிறந்த ஆசனமாகும்;

❊ இந்தச் சித்தாசனத்தில் அகமும் புறமும் ஆறுதல் பெறும் வண்ணம் அமர்ந்திருப்பவர் சிறந்த தலைவர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

559 **ஓர் அணை அப்பதம் ஊருவின் மேல் ஏறிட்டு**
**ஆர வலித்து அதன் மேல் வைத்து அழகு உறச்**
**சீர் திகழ் கைகள் அதனைத் தன்மேல் வைக்கப்**
**பார் திகழ் பத்மாசனம் எனல் ஆகுமே.**

* பத்மாசனம் – தாமரை ஆசனம் செய்யும் வகை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது;
* இடது காலை மடித்து அதன் கணுக்காலைப் – பாதத்தை வலது தொடையின் மேல் வைத்தல். அவ்வாறே வலது காலை மடித்து அதன் கணுக்காலைப் – பாதத்தை இடது தொடையின் மேல் வைத்தல்;
* கைகள் இரண்டையும் முழங்கால் மீது தனித்தனியே வைத்தல் அல்லது கை இரண்டையும் சேர்த்துக் கால்கள் இரண்டும் மடிந்து செல்லும் இடத்தில் வைத்து நிமிர்ந்து இருத்தல்.

560 **துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து**
**அரிய முழந்தாளில் அங்கையை நீட்டி**
**உருசியொடும் உடல் செவ்வே இருத்திப்**
**பரிசு பெறும் அது பத்திராசனமே.**

* இப்பாடலில் பத்திராசனம் செய்யும் வகை கூறப்பட்டுள்ளது;
* மடிக்கப்பட்ட இடது கால் தொடைமேல் வலது காலை மடித்து இரு முழங்கால்களும் ஒன்றோடு ஒன்று பொருந்த இருத்தி, முழந்தாளின் மேல் இருகைகளை இணைத்து வைத்தல்;
* பின் நிமிர்ந்து நேராகி இருத்தல்.

561 **ஒக்க அடி இணை ஊருவில் ஏறிட்டு**
**முக்கி உடலை முழங்கை தனில் ஏற்றி**
**தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்**
**குக்குட ஆசனம் கொள்ளலும் ஆமே.**

* இப்பாடலில் குக்குட ஆசனம் அல்லது மயூராசனம் செய்யும் வகை கூறப்பட்டுள்ளது;
* பத்மாசனத்தில் அமர்ந்து, உடலின் முழுப்பழுவையும் முழங்கையில் ஏற்றி இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

562 பாத முழந்தாளிற் பாணிகளை நீட்டி
ஆதார வோடும் வாய் அங்காந்து அழகு உறக்
கோதில் நயனம் கொடி மூக்கிலே உறச்
சீர்திகழ் சிங்காதனம் எனச் செப்புமே.

❇ இப்பாடலில் சிங்காதனம் அல்லது வீராசனம் செய்யும் வகை கூறப்பட்டுள்ளது;

❇ ஒரு முழந்தாளின் மேல் ஒரு பாதமும், மறு முழந்தாளின் கீழ் மறுபாதமும் அமையும் வண்ணம் அமர்ந்து;

❇ ஒரு உள்ளங்கை ஒரு முழந்தாளிலும், மறுகை அதே காற்பாதத்திலும் பொருந்த அமர்ந்து;

❇ கண்கள் இரண்டையும் மூக்கின் நுனியை நோக்கியவாறு இருத்தலாகும்.

563 பத்திரம் கோமுகம் பங்கயம் கேசரி
சொத்திரம் வீரம் சுகாதனம் ஓர் ஏழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டு, எட்டுப்
பத்தொடு நூறு பல ஆசனமே.

❇ திருமூலர் எட்டு ஆசனங்களை மாத்திரமே கூறுகின்றார்.
இவ் எட்டு ஆசனங்களில் சித்தாசனமே (மாமுது அல்லது சுவத்திகம்) மிகவும் சிறந்த ஆசனம் ஆகும். பல நூறு ஆசனங்கள் உண்டு. எட்டு ஆசனங்கள் முறையே :

1. பத்திரம்
2. கோமுகம் (பசு ஆசனம்)
3. பங்கயம் (பத்மாசனம்)
4. கேசரி
5. சொத்திரம் (வச்சிராசனம்)
6. வீரம் (சிங்காசனம்)
7. சுகாசனம்
8. சித்தாசனம் (மாமுது அல்லது சுவத்திகம்)

குறிப்பு: **சித்தாசனம் செய்யும் வகை:**

இடது குதிக்கால் மூலாதாரத்தில் இருக்கும் வண்ணம் இடது காலை மடிக்கவும். வலது குதிக்காலை ஆண்குறியோடு அணைந்து இருக்கும் வண்ணம் வலது காலை மடிக்கவும். இருகால்களின் பாதங்களும் - வலது காலின் பாதம் மடிக்கப்பட்ட இடது காற் தொடையின் உள்ளேயும், இடது காலின் பாதம் மடிக்கப்பட்ட வலது தொடையின் உள்ளேயும் அமையுமாறு அமர்ந்து இரு கைகளையும் சேர்த்து வலது குதிக்காலுடன் இணைத்து வைத்து நிமிர்ந்து இருக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## V. பிராணாயாமம்

564 ஐவர்க்கு நாயகன் அவ் ஊர்த் தலைமகன்
உய்யக் கொண்டு ஏறும் குதிரை மற்று ஒன்று உண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாது போய்ப்
பொய்யாரைத் துள்ளி விழுத்திடும் தானே.

❊ ஆத்மா எனும் ஊருக்கு உயிரார் தலைமகனாக உள்ளார். உயிராரே ஐந்து புலன்களுக்கும் தலையாய நாயகன் ஆவர்;

❊ உயிரார் தான் உய்வு அடையும் பொருட்டு ஏறிச் செல்லும் குதிரை ஒன்று உண்டு. அதுவே பிராணன் ஆகும். பிராணன் எனும் வாகனத்தில் உயிரார் ஏறி உடல் பூராவும், அணுமுதல் அண்ட சராசரங்கள் வரை வலம் வருவார்;

❊ பிராணன் - உயிர்ப்பு சக்தி எனவும் அழைக்கப்படும்:

❊ உண்மையை நோக்கிச் செயற்படுபவர்களுக்கு, பிராணனார் பெரும் காரியங்களைச் செய்வார்;

❊ பொய்மையை நாடுபவர்களுக்குப் பிராணனார் துள்ளி அவர்களை மீள முடியாதவாறு தள்ளி விழுத்திவிடும்.

565 ஆரியன் நல்லன் குதிரை இரண்டு உள
வீசிப்பிடிக்கும் விரகு அறிவார் இல்லை
கூரிய நாதன் குருவின் அருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே.

❊ ஆத்மா என்றும் மிகவும் சிறப்புடையது. ஆத்மாவைச் சூழ இரண்டு குதிரைகள் வலம் வந்து கொண்டே இருக்கும். ஒன்று **பிராணன்.** மற்றையது **குண்டலினி;**

❊ இந்த இரண்டு வாகனத்தையும் வகை தெரிந்து அறிந்து பயன்படுத்துபவர் ஒருவரையும் காணவில்லை;

❊ விழிப்பு நிலையில் இருக்கும் உயிரார். குருவாகிய இறைவரின் அருளை முதலில் பெற வேண்டும்:

❊ அதன் பின் மிகவும் இலகுவாக இவ் இரு வாகனத்தையும் சிறந்த வகையில் வசப்படுத்திப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

566 **புள்ளினும் மிக்க புரவியை மேற் கொண்டால்**
**கள் உண்ண வேண்டாம் தானே களிதரும்**
**துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்**
**உள்ளது சொன்னோம் உணர்வு உடையோருக்கே.**

❋ பறவையிலும் பார்க்க மிகவும் வேகமாகச் செல்லும் பிராணன் எனும் வாகனத்தில் உயிரார், உடல்பூராவும் பயணம் செய்ய வேண்டும்;

❋ அப்பொழுது எந்தவகையான தேனையும் உண்ணாமலே தானகவே பெரும் இன்பம் கிடைக்கும்;

❋ மிகவும் சுறுசுறுப்பாக எம்மைச் செயற்பட வைக்கும். எமது சோம்பலை முற்றாக நீக்கி விடும்;

❋ இவ்வாறு நிகழ்வது உண்மை. உணர்வு உடையவர்கள் இதனை உணர்ந்து கொள்ளட்டும்.

567 **பிராணன் மனத்தொடு பேராது அடங்கிப்**
**பிராணன் இருக்கில் பிறப்பு இறப்பு இல்லை**
**பிராணன் மடைமாறிப் பேச்சு அறிவித்துப்**
**பிராணன் அடைபேறு பெற்று உண்டீர் நீரே.**

❋ பிராணனார் மனத்தாருடன் வேறுபடாது, அந்நியப்படாது ஒன்றாகி அடங்கி ஒடுங்கிக் கொள்ளும்;

❋ பிராணனார் இவ்வாறு அடங்கி ஒடுங்கி அமர்ந்து கொண்டால் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை;

❋ பிராணனார் புறச் செயற்பாடுகள், உலகச் செயற்பாடுகள் ஆகியவற்றில் இருந்துவிடுபட்டு அகநோக்கி - ஆத்ம நகரை நோக்கிச் சென்று மூன்றுவித பேச்சையும் (மனம், வாக்கு, காயம்) நிறுத்திப் பரிபூரண மௌன நிலைக்கு இட்டுச் செல்லும்;

❋ பிராணனாரைப் பயன்படுத்தி நீங்கள் அடையக்கூடிய உயர்ந்த "மௌனத்தை" அதன் பயனை அடைந்து உய்வு அடைவீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

568 **ஏறுதல் பூரகம் ஈர் எட்டு வாமத்தால்**
**ஆறுதல் கும்பம் அறுபத்து நாலு அதில்**
**ஊறுதல் முப்பத்து இரண்டு அதி ரேசகம்**
**மாறுதல் ஒன்றின் கண் வஞ்சகம் ஆமே.**

❋ சுவாச ஓட்டத்தின் பயிற்சி வகை இப்பாடலில் கூறப்படுகின்றது.

❋ 16 மாத்திரை அளவு காலம் காற்றினை உள்ளெடுக்கவும். உள்ளே எடுக்கப்பட்ட காற்றினை 64 மாத்திரை அளவு காலம் உள்ளேயே வைத்திருக்கவும்.

உள்ளே வைத்திருந்த காற்றினை 32 மாத்திரை அளவு காலம் தொடர்ச்சியாக வெளியே விடவும். இதுவே ஒரு சுவாச ஓட்டத்தின் காலப் பிரமாணமாகும். (1:4:2)

1 மாத்திரை = 1 இதயத்துடிப்பின் காலம் அல்லது கண் மூடித்திறக்கும் காலம்.

❋ இந்த ஒழுங்கின் முறை மாறினால் அது பெரும் துன்பத்தையே விளைவிக்கும்.

குறிப்பு: அகரத்தில் இருந்து (எட்டு – அ), உகரம் நோக்கி (இரண்டு –உ) பிராணனாரை இயங்க வைத்தல்.

அப்பொழுது 64 வகையான கலைகள் கைகூடும். அல்லது எல்லாவித பற்றுக்களும் அறுபடும். 32 ற்கு மேற்பட்ட தத்துவங்கள் கைகூடும்: அகர உகரங்களுக்கிடையில் பிராணனாரை ஏற்றி இறக்குதல் மாறுபடில், பெரும் துன்பம் பிராணனாரால் ஏற்படும்.

569 **வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்**
**பளிங்கு ஒத்த காயம் பழுக்கினும் பிஞ்சாம்**
**தெளியக் குருவின் திரு அருள் பெற்றால்**
**வளியினும் வேட்டு வளியனும் ஆமே.**

❋ காற்றினை உள்ளே எடுத்து இரைப்பையினுள் நிரப்பி நிறுத்த வேண்டும்;

❋ அவ்வாறு செய்தால் உடம்பு வயதில் முதிர்ந்தாலும், இளமையாகவே பளிங்கு போல் இருக்கும்;

❋ தெளிவு நிலை கைகூடும் போதுதான் குருவாகிய இறைவரின் திருவருள் கிடைக்கும்;

❋ அதன் பின்னரே பிராணனார், உடம்பின் உள்ளே தோன்றுகின்ற எல்லாவித அக்கினிக்கும் ஆகுதி ஆகிக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

570 **எங்கே இருக்கினும் பூரி இடத்திலே**
**அங்கே அது செய்ய ஆக்கைக்கு அழிவு இல்லை**
**அங்கே பிடித்தது விட்ட அளவும் செல்லச்**
**சங்கே குறிக்கத் தலைவனு ம் ஆமே.**

* பிராணனார் எந்த இடத்தில் இருந்தாலும், அவரை உடம்பின் சகல உயிர்க் கலங்களுக்கும் அனுப்பி உடல் பூராவும் மலர்ச்சி அடையச் செய்யவும்;
* இவ்வாறு செய்தால் உடம்புக்கு ஒருபோதும் அழிவு இல்லை;
* உடம்பின் எல்லா அணுக்களிலும் பிராணனாரை அனுப்பி உயிர்க்கலச் செயற்பாட்டைச் சமன் செய்யவும்;
* அப்பொழுது வேண்டாதன எல்லாம் உடம்பின் உள்ளே சங்காரம் ஆகிவிடும். அதன் பின்னரே உயிரார் ஆத்ம ஊருக்குத் தலைவனாக விளங்குவார்.

571 **ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்**
**காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார் இல்லை**
**காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாளர்க்குக்**
**கூற்றை உதைக்கும் குறியது வாமே.**

* பிராணனாரை ஏற்றவாறு ஏற்றி இறக்கி இடகலை, வலகலை நாடிகளை மலர்ச்சி அடையச் செய்து, காற்றை எடுத்துக்கொள்ளும் வகையை அறியாமல் உள்ளார்களே;
* எவர் காற்றை எடுத்துக் கொள்ளும் வகையை அறிகின்றார்களோ, அவர்கள் காலத்தைக் கடந்து மரணம் இன்றி வாழ்வார்கள்.

572 **மேல் கீழ் நடுப்பக்க மிக்கு உறப் பூரித்துப்**
**பாலாம் இரேசத்தால் உட் பதிவித்து**
**மாலாகி உந்தி உட் கும்பித்து வாங்கவே**
**ஆலாலம் உண்டான் அருள் பெறலாமே.**

* சகஸ்ராரம், மூலாதாரம், நாபிக்கமலம், ஆகியவை முழுமையாக மலர்ச்சி அடையும் வண்ணம் பிராணனாரைச் செயற்பட வையுங்கள்;
* காற்றை வெளியே விடும்பொழுது பிராணனாரை உரிய உரிய இடத்தில் உள்ளே அமரவைத்தால் உடல் பால் நிறமாகும்;
* வயிற்றின் உள்ளே காற்றை அடைக்கில் விஷ்ணுவின் தன்மையைப் பெறலாம்;
* பிராணனாரை முறைப்படி நெறிப்படுத்தினால் நஞ்சுண்ட கண்டராகிய சிவனது அருளினைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

573 வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத்து இரண்டும் இரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ் இரண்டு
ஓமத்தால் எட்டு எட்டுக் கும்பிக்க உண்மையே.

❋ பிராணனாருக்கு இடகலையும் வலகலையும் இரண்டு கண்கள் ஆகும். பிராணனார் உள்ளே தோன்றும் அக்கினிக்கு, காற்றின் உதவி கொண்டு ஓமம் செய்வார்- தானே ஆகுதியும் ஆவார்;

❋ காற்று உள்ளே எடுக்கும் கால அளவு - 16 மாத்திரை
காற்று உள்ளே வைத்திருக்கும் கால அளவு - 64 மாத்திரை
காற்று வெளிவிடும் கால அளவு - 32 மாத்திரை

574 இட்டது அவ்வீடு இளகாது இரேசித்துப்
புட்டிப் பட தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனும் கும்பித்து
நட்டம் இருக்க நமன் இல்லைத் தானே.

❋ பிராணனாரினதும், அபானனாரினதும், செயற்பாட்டை நன்கு தெளிந்து கொள்ள வேண்டும்;

❋ காற்றை உள்ளெடுக்கும்போது 10 நாடிகளும் மலர்ச்சி அடையவேண்டும்; உள்ளே காற்று இருக்கும் போது பிராணன், அபானன் ஆகியவற்றை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும்.

❋ தொடர்ச்சியாகக் காற்றை வெளிவிட வேண்டும். இவ்வாறு செயற்படில் உடலும் இளமையாக இருக்கும். காலதேவனும் அணுக மாட்டான்.

575 புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின் மலம் ஆக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

❋ ஒழுங்கின்றி உள்ளே ஓடுகின்ற காற்றை நெறிப்படுத்தி, உள்ளேயே அடங்கும் படியாக வைக்க வேண்டும்.

❋ அப்பொழுது உடம்பு சிவப்பாகும். உரோமம் கருமை நிறமாகும். உயிரா ரும் உடம்பை விட்டுப் போகமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

576 கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண்டு அங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளில் கோல அஞ்சு எழுத்தாமே.

❋ அகரத்திற்கும் உகரத்திற்கும் இடைப்பட்ட தூரம் 12". அகரம் – ஆத்ம இதய வெளி. உகரம் – ஆயிரம் இதழ்த் தாமரை சகஸ்ரம்;

❋ பிராணனாராகிய மங்கை நல்லாள் காற்று எடுக்கும்போது 12" மேல் நோக்கி ஓடுவார். அப்பொழுது காற்றானது 8" உள்ளே புகும்.

❋ பிராணனார், காற்று வெளியே செல்லும் போது, மீண்டும் கீழ்நோக்கி12" ஓடித் தன் இருப்பிடம் வருவார். அப்போது காற்று 4" ஓடி, வெளியே செல்லும்.

❋ இச்செயற்பாட்டில் ஓங்காரத்தின் பாதங்களாகிய ஐந்து எழுத்தின் தாற் பரியத்தை உணரலாம்.

577 பன்னிரண்டு ஆனை பகல் இரவு உள்ளது
பன்னிரண்டு ஆனையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண்ட ஆனையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண்டு ஆனைக்குப் பகல் இரவு இல்லையே,

❋ பிராணனார் சஞ்சாரம் செய்கின்ற இடத்திற்கு – (12" தூரதேசம்) பகலும் இரவும் உண்டு;

❋ பிராணனார் ஆகிய யானையைப், பாகனாகிய உயிரார் அறியாது உள் ளார்;

❋ உயிரார் பிராணனாரை அறிந்து கொண்டால் பிராணனாருக்குப் பகலும் இரவும் இல்லை. பிராணனாரை எக்காலத்திலும் நெறிப்படுத்தலாம் என்பதே இதன் கருத்தாகும்.

❋ தெளிவு அடைந்தவர்கள் எந்நேரமும் பிராணனைச் செயற்படவைப்பர்.

❋ தெளிவு பெறாதவர்கள் பகலில் மாத்திரம் பிராணனைச் செயற்பட வைக்க வேண்டும். இரவில் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## vi. பிரத்தியாகாரம்

578 கண்டு கண்டு உள்ளே கருத்து உற வாங்கிடில்
கொண்டு கொண்டு உள்ளே குணம்பல காணலாம்
பண்டு உகந்து எங்கும் பழ மறை தேடியை
இன்று கண்டு இங்கே இருக்கலும் ஆமே.

❊ எம் உள்ளேயும் வெளியேயும் நிகழும் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் தெளிவு ஏற்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்வுகளும் தனித்தனியாக ஆராய்ந்து, அவற்றில் தெளிவு ஏற்பட வேண்டும்;

❊ ஒவ்வொரு நிகழ்விலும் தெளிவு ஏற்படும் போது இறைவரின் பலவிதமான செயற்பாடுகளை நாம் காணலாம்;

❊ இன்றும், எங்கும் தொன்று தொட்டே இருந்து வரும் புராதனமான மறைகள் தேடுகின்ற இறையை , என்றும் நாம் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து இருக்கலாம்.

579 நாபிக்குக் கீழே பன்னிரண்டு அங்குலம்
தாபிக்கு மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரம் தன்னை அறிந்த பின்
கூவிக் கொண்டு ஈசன் குடி இருந்தானே.

❊ தொப்பூழில் இருந்து கீழே 12" தூரத்தில் மூலாதாரம் உண்டு;

❊ இம்மூலாதாரத்தில் இருந்து புறப்படும், என்றும் உள்ள மந்திரம் ஒன்று உண்டு. இதை அநேகர் அறியாது உள்ளார்கள்;

❊ எல்லாவற்றையும் தாபிக்கின்ற அந்த மந்திரத்தை உணர்ந்தால் (ஓங்காரம்), இறைவர் மிகவும் ஆனந்தமாக எம்முள்ளே குடி இருப்பார்.

580 மூலத்து இருவிரல் மேலுக்கு முன் நின்ற
பாலித்த யோனிக்கு இருவிரல் கீழ் நின்ற
கோலித்த குண்டலி உள் எழும் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால் விரற் கீழதே.

❊ குய்யத்தில் இருந்து இருவிரல் அளவு தூரம் மேல்நோக்கி;

❊ பாலியல் உறுப்பில் இருந்து இருவிரல் அளவு தூரம் கீழ்நோக்கி;

❊ தொப்பூழில் இருந்து நாலுவிரல் அளவு தூர்ம் கீழ்நோக்கி;

❊ செஞ்சுடர் போன்ற குண்டலினி எனும் வாகனம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

581 நாசிக்கு அதோ முகம் பன்னிரண்டு அங்குலம்
நீ சித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்து தலைப்பு எய்தும்
தேகத்துக்கு என்றும் சிதைவு இல்லை ஆகுமே.

❇ முக்கு நுனியில் இருந்து நேரே முன்னோக்கி 12" தூரத்தில் அதோமுக மாகிய இறைவரின் ஆறாவது முகம் புலப்படும்;
❇ உண்மையான விருப்பத்துடன் மேற்கூறிய இடத்தில் அதோ முகத்தைத் தியானம் செய்ய, வழிபட வல்லவர்கள் ஆயின்;
❇ அதி சிறந்த சித்துக்களும், உன்னத யோகமும் கைகூடும்.
❇ உடம்புக்கு ஒருபோதும் அழிவு ஏற்படாது.

582 சோதி இரேகைச் சுடர் ஒளி தோன்றிடில்
கோதில் பர ஆனந்தம் என்றே குறிக் கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவு ஒளி எய்தினால்
ஓதுவது உன் உடல் உன் மத்த மாமே

❇ இறை ஜோதியின் ஒளிக்கீற்று உங்களுக்கு உள்ளேயோ ,வெளியேயோ தென்பட்டால்;
❇ அதுவே இறைபேரானந்தம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்;
❇ கண்டத்திற்கு நேரே மேல் நோக்கிப் புருவ மத்தியில் நிலவின் ஒளிபோன்ற காட்சி கிடைத்தால்;
❇ உங்கள் உடல் ஒருபோதும் அழியாது என்பதை உணருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

583 மூலத் துவாரத்தை மொக்காரம் இட்டு இரு
மேலைத் துவாரத்தின் மேல் மனம் வைத்து இரு
வேல் ஒத்த கண்ணை வெளியில் விழித்து இரு
காலத்தை வெல்லும் கருத்து இதுதானே.

❋ குண்டலினி உறைகின்ற மூலாதாரத்தை எப்பொழுதும் கண்ணும் கருத்துமாகக் காத்துக் கொள்ளுங்கள்;
❋ மனதின் சஞ்சாரம் எப்பொழுதும் சிரசின் உச்சியில் – சகஸ்ரத்தில் இருக்கட்டும்;
❋ அம்புபோன்ற கூர்மையான கண்களை எப்பொழுதும் "வெளியை" நோக்கிச் செலுத்தி விழித்து இருக்க வேண்டும்;
❋ இதுவே காலத்தைக் கடந்து செல்வதற்குரிய வழிவகையாகும்;

584 எருவிடும் வாசற்கு இருவிரல் மேலே
கருவிடும் வாசற்கு இருவிரல் கீழே
உருவிடும் சோதியை உள்க வல்லார்க்குக்
கருவிடும் சோதி கலந்து நின்றானே.

❋ குய்யத்திற்கு இரு அங்குல தூரம் மேல் நோக்கியும்,பாலியல் உறுப்பில் இருந்து இரு அங்குல தூரம் கீழ்நோக்கியும் உள்ள பகுதியில் மூலாதாரம் உண்டு. இதிலே குண்டலினி சக்தி உறைந்திருக்கின்றது;
❋ இவ்விடத்திலே இறைஜோதியை எவரெல்லாம் உணர்கின்றார்களோ;
❋ அவர்கள், எல்லா உற்பத்திக்கும் காரணமாக உள்ள இறைஜோதியுடன் கலந்திருப்பார்கள்.

585 ஒருக்கால் உப ஆதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்து உணர் அந்த உப ஆதிப் பிரிவைக்
கரைத்து உணர்வு உன்னல் கரைதல் உள்நோக்கல்
பிரத்தியாகாரப் பெருமை அதாமே.

❋ ஒரு தடவையேனும் ஆதியின் துணைப்பகுதியாக உள்ள ஜோதியை;
❋ ஆய்ந்து உணர்ந்து கொள்ளுங்கள்;
❋ இந்த ஜோதியை இடைவிடாது ஆய்ந்து, உணர்ந்து, முயற்சி செய்து அதனுடன் ஒன்றாகிப் பின் உள்முகமாக ஆத்ம நகரை நோக்கிப் பயணம் செய்தல் வேண்டும்;
❋ இதுவே பிரத்தியாகாரத்தின் பெருமை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

586 புறப்பட்ட வாயு புகவிடா வண்ணம்
திறப்பட்டு நிச்சயம் சேர்ந்து உடன் நின்றால்
உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந் தகையானே.

* பிராணனாருடன் ஒன்று கலந்த காற்றை வெளியே செல்லா வண்ணம் காத்து, அதன் உள் நோக்கிய செயற்பாட்டுடன் ஒன்றித்து நில்லுங்கள்;
* உள்ளமும் அகச்செயற்பாட்டுடன் உறவு கொண்டு ஒன்றித்து நிற்கும்;
* அப்போது உயிராரும் உடலை விட்டு நீங்காது இருப்பார்.

587 குறிப்பினின் உள்ளே குவலயம் தோன்றும்
வெறுப்பு இருள் நீங்கி விகிர்தனை நாடும்
சிறப்புறு சிந்தையைச் "சிக்" கென்று உணரில்
அறிப்புறு காட்சி அமரரும் ஆமே.

* தெளிந்த உள் உணர்வின் உள்ளே பிரபஞ்சம் ஆனந்த சொரூபமாகப் புலப்படும்;
* வெறுப்பு, விரக்தி ஆகிய இருளை விட்டு விலகி இறைவரை நாடுங்கள்;
* சிறப்புக்கள் நிறைந்த சித்தத்தைச் சடுதியாக முற்றும் எதிர்பாராத வண்ணமே நாம் உணரலாம்;
* அப்பொழுது நாம் அறிய முடியாத இறை காட்சியைக் கண்டு அமரர்களின் நிலை எய்துவோம்.

## vii தாரணை

588 கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத் தண்டு ஊடே வெளி உறத் தான் நோக்கி
காணாக் கண் கேளாச் செவி என்று இருப்பார்க்கு
வாழ்நாள் அடைக்கும் வழியது வாமே.

* குற்றம் குறைபடாத மனத்தைக் கீழ் நோக்கிச் செல்லா வண்ணம் ஒருமுகமாக்கி, நடு நாடித் தண்டின் ஊடாக மேல்நோக்கி வெளியே செலுத்தவும்;
* காணமுடியாத கண்ணால் (அகக்கண்) இறை காட்சியைக் கண்டு, கேட்க முடியாத காதால் இறைகாட்சியைக் கேட்டு ,(அகச்செவி) இருப்பவர்களுக்கு; இதுவே
* இனியேதும் வருந்தாத வாழ்க்கையை அடைப்பதற்கு வழிவகையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

589 மலையார் சிரத்திடை வான்நீர் அருவி
நிலையாரப் பாயும் நெடு நாடி ஊடே
சிலையார் பொதுவில் திருநடம் ஆடும்
தொலையாத ஆனந்தச் சோதி கண்டேனே.

* கைலாய மலையின் உச்சியில் இருந்து ஆகாய கங்கை வற்றாது உருவாகிப் பூமியை நோக்கிப் பாய்கின்றது;
* எனதுள்ளே நடு நாடியின் உச்சி சந்திக்கின்ற இடத்தில் இருந்து (சகஸ்ராரத்தில் இருந்து) நிலையாக ஊற்றெடுத்துப்பாயும் கங்கையாகிய அருள் நதி உடலாகிய பூமியை நோக்கிப் பாய்கின்றது;
* மேற்கூறிய இரு இடங்களிலும் (ஒன்று வெளியே, மற்றையது உள்ளே) இறைவரது திருநடனத்தையும், இழந்து போகாத, மறைந்து போகாத;
* ஆனந்தமான ஜோதியையும் நான் கண்டு கொண்டேன்.

590 மேலை நிலத்தினாள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார் நந்தி ஆணையே.

* வேதங்கள் போற்றுகின்ற சுத்த சத்தியாகிய "பெண்பிள்ளை" சகஸ்ராரத்தின் உச்சியில் சஞ்சாரம் செய்து கொண்டே இருப்பாள். இவள் என்னுள்ளே இறை நாதம் உருவாகக் காரணம் ஆவள்;
* மூலாதாரத்திலே குண்டலினி காணப்படுகின்றது. இதில் இருந்து "பிந்து" ஆகிய மூர்த்தி வெளிப்படுவார்;
* நாதத்தையும், பிந்துவையும் ஏற்றவாறு ஒரே நேரத்தில் எழுப்பி சந்திக்க வைக்க வேண்டும்;
* அப்பொழுது இளமை நிலை முதிர்ந்தாலும் மீளக் கைகூடும். இவ்வாறு நிகழும் என நந்திமீது ஆணையாகச் சொல்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

591 **கடை வாசலைக் கட்டிக் காலை எழுப்பி**
**இடை வாசல் நோக்கி இனிது உள் இருத்தி**
**மடை வாயில் கொக்குப் போல் வந்து இருப்பார்க்கு**
**உடையாமல் ஊழி இருக் கலும் ஆமே.**

* கீழ்நோக்கிச் செல்கின்ற வாசலைக் கட்டி விடுங்கள். (லிங்கவாசல்) மூன்று நாடிகளையும் எழுப்பி விடுங்கள். (இட, வல, நடு, நாடிகள்);
* ஆத்மீக இதய வாசலில் ஆறி அமர்ந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்;
* ஆத்மீக நகர்க்கதவு திறக்கும்வரை தூங்கியும் தூங்காமலும் அமர்ந்து கொள்ளுங்கள். இது அருவியில் தன் இரையாகிய மீன் கிடைக்கும் வரை கொக்கு தூங்கித் தூங்காமல் இருப்பதற்கு ஒப்பாகும்;
* இவ்வாறு அமர்ந்துவிட்டால், எந்தவித நோய் நொடியும் இன்றி, எத்தனை உழிக் காலங்கள் வந்தாலும் வாழலாம்.

592 **கலந்த உயிருடன் காலம் அறியில்**
**கலந்த உயிரது காலின் நெருக்கம்**
**கலந்த உயிரது காலது கட்டில்**
**கலந்த உயிர் உடல் காலமும் நிற்குமே.**

* உடலோடு ஒன்றித்தே இருக்கும் உயிரையும், காலப் பரிமாணத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்;
* இடநாடி, வலநாடி, நடுநாடி ஆகிய மூன்றும் உயிருடன் மிகவும் நெருக்க மாகத் தொடர்பு கொள்வன;
* இந்த மூன்று நாடிகளையும் முறையாகக் கட்டிவிட்டால்;
* காலப் பரிமாணத்தைத் தாண்டி விடலாம். உயிரும் ஓய்வு நிலையில் இருக்கும்.

593 **வாய் திறவாதார் மனத்தில் ஓர் மாடு உண்டு**
**வாய் திறப்பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்**
**வாய்திறவாதார் மதியிட்டு மூட்டுவர்**
**கோ திறவாவிடில் கோழையும் ஆமே.**

* வாய் திறவாதுமௌன நிலையில் இருப்பவர்களது மனதில் பிராணனார் ஆகிய மாடு உண்டு;
* வாய் திறந்து அலட்டிக் கொள்பவர்கள் வளியை வெளியே வீசிப் பிராண சத்தியையும் விரையம் ஆக்குவர்;
* மௌன நிலையில் இருப்பவர்கள் ஞானாக்கினியைத் தங்களுக்குள் ஏற்படுத்துவர்;
* இவ்வாறு சாதனைகள் மேற்கொள்ளும்போது, ஆத்மாவின் வாசல் திற படாது போனால் சாதனையும் பயன்படாது போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

594 வாழலுமாம் பலகாலும் மனத் திடைப்
போழ்கின்ற வாயு புறம் படாப் பாய்ச்சுறில்
ஏழு சாலோகம் இரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி அறையே.

❇ மனம், பிராணன், வாயு மூன்றும் ஒருமித்து ஒன்றாக அடங்கும் பொழுது; வாயுவும் வெளியே விரையமின்றிச் செல்லாவிடில் பல ஆண்டுகள் வாழலாம்;

❇ ஏழுவகையான உலகங்கள்; பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டு பெருவாசல்களைக் கடந்து ஞானம் எனும் மிகப் பெரிய பள்ளி அறையை அடையலாம்.

நிரம்பிய ஈர் ஐந்தில் ஐந்து இவை போனால்
595 இரங்கி விழித்து இருந்து என் செய்வை பேதாய்
வரம்பினைக் கோலி வழி செய்கு வார்க்குக்
குரங்கினைக் கொட்டை பொதியலும் ஆமே.

❇ பத்து வயது நிரம்பிய பருவத்தில், ஐந்து புலன்கள் இருந்தும் – அவற்றின் வெளிநோக்கிய செயற்பாடுகள் அற்றுப் போய்விட்டால்;

❇ இரக்கம் கொண்டு, விழித்து இருந்து, வெறுமனே காலத்தைக் கடத்தி என்ன செய்வாய் குழந்தாய்!

❇ சுயமாகவே எல்லாவற்றிலும் வரையறையை மேற்கொண்டு, தனது வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்பவர்களுக்கு;

❇ மனமாகிய குரங்கின் வீராப்பு எல்லாம் அற்றுப்போய், மனம் பெரும் செல்வமாக விளங்கி வழித்துணையாகச் செயற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

596 முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்
பின்னை வந்தவர்க்கு என்ன பிரமாணம்
முன்னுறு கோடி உறுகதி பேசிடில்
என்ன மாயம் இடி கரை நிற்குமே.

* எத்தனையோ வகையான கோடிக்கணக்கான ஆத்ம புருஷர்கள் பூமியில் தோன்றினார்கள். பின் எல்லாருமே சென்றுவிட்டார்கள்;
* இன்றும் எத்தனையோ பேர் உள்ளார்கள். இனியும் வரவுள்ளார்கள். இவர்கள் எவருமே நிலையானவர்கள் அல்லர். "நிலையானதிற்குரிய" எந்தவிதமான பிரமாணங்களும் இவர்களில் காணப்படவில்லை;
* எந்த ஆத்மீக புருஷர்களும் எவ்வளவுதான் "நிலையானது பற்றிய" உறுதியான கோடிக் கணக்கான வழிமுறைகளைப் பேசினாலும்;
* இவை எல்லாம் நிலையற்ற ஆச்சரியப்படக்கூடிய மாயமான வழிமுறைகள் ஆகும். ஆனால் **"உண்மை"** - **"நிலையானது"** எல்லா விதமான பாதைகள், வழிமுறைகள், வரம்புகள் அனைத்தையும் கடந்தே நிற்கும்.

597 அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்துப்
பொருத்த ஐம் பூதம் சத்து ஆதியில் போந்து
தெரித்த மன ஆதி சத்து ஆதியில் செல்லத்
தரித்தது தாரணை தற் பரத் தோடே.

* எண்ணிறந்த வாசல்கள் உடைய உடலை ஐம்பூதங்களில் படிப்படியாக ஆற்றுப்படுத்தவும்;
* பின்னர் ஐம்பூதத்தை " சத்து" ஆகிய ஆதியை நோக்கி நெறிப்படுத்தவும்;
* அதே நேரத்தில் மனத்தையும் "சத்து" ஆகிய ஆதியை நோக்கி நெறிப்படுத்தவும்;
* அப்பொழுது ஐம்பூதங்களால் ஆன உடலும், அதனோடு தொடர்புடைய ஐந்து புலன்களும், மனமும் ஒருமுகப்பட்டு இறை நீழலில் ஓய்வு பெற்றுக் கொள்ளும். இதுவே தாரணையின் சிறப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

598 **VIII தியானம்**

**வரும் ஆதி ஈர் எட்டு உள் வந்த தியானம்**
**பொருவாத புந்தி புலன் போக மேவல்**
**உருவாய சத்தி பரத்தியானம் உன்னும்**
**குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே.**

**16 வகையான தியான வகைகள் கூறப்படுகின்றன.**

❇ இந்தப் பதினாறு வகையும் ஆதியாகிய இறைவரோடு தொடர்பு கொள்ளும் வழிமுறையாகும்;

❇ புலன்களையும், அறிவையும் கடந்து செல்ல வேண்டும்;

❇ சகல உருவங்களையும் சத்தியாகப் பாவனை செய்து வழிபடல். இது **பரத்தியானம் - உகரத் தியானமாகும். இது முதலாவது வகைத் தியானம்** ஆகும்.

❇ யோகத்தால் ***இறைவரை குருவாகப்*** பாவனை செய்தல் - வழிபடல். இது **சிவத்தியானம் - அகர தியானமாகும். இது இரண்டாவது** வகைத் தியானம் ஆகும்.

599

**கண் நாக்கு மூக்கு செவி ஞானக் கூட்டத்து உள்**
**பண் ஆக்கி நின்ற பழம் பொருள் ஒன்று உண்டு**
**அண் நாக்கின் உள்ளே அகண்ட ஒளி காட்டிப்**
**புண் ஆக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.**

❇ கண், நாக்கு, மூக்கு, செவி, மெய் (புருவமத்தி) இவ் ஐந்து பகுதிகளும் ஞானக் கதவுகளாகச் செயற்படும்;

❇ இவ் ஐந்து கதவுகளையும் ஒரே நேரத்தில் வகை முறை தெரிந்து திறக்கும்போது, ஆத்மா எனும் பண்பாடு செய்யப்பட்ட இடத்தைக் காணலாம்.ஆத்மா எனும் நகரிலே பழம் பொருளாகிய இறைவரின் தரிசனம் காணலாம்;

❇ இவ் ஐந்து ஞானக் கதவுகளும், உள்ளே- சிரசின் கீழே- சகஸ்ரத்தின் கீழே சந்திக்கும் இடம் **அண்ணாக்கு** ஆகும். இக்கதவுகள் திறபடும்போது அகண்டாகாரத்துடன், அண்டசராசரத்துடன், இறைவருடன் தொடர்பு ஏற்படும். இறைஜோதி புலப்படும்;

❇ எல்லாவிதமான நோய்களையும், வேதனைகளையும் இறையவர் நீக்கி எம்மை எல்லாம் ஆட்கொள்கின்றார்.

இது ***பஞ்ச முகிமுத்திரா*** தியானமாகும்.

(ஐந்து ஞானக் கதவுகளையும் ஒரே நேரத்தில் திறத்தல்) **இது மூன்றாவது வகைத் தியானம்** ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

600 ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளி தன்னைக்
கண் ஆரப் பார்த்துக் கலந்து அங்கு இருந்திடில்
விண் ஆறு வந்து வெளி கண்டிட ஓடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலும் ஆமே.

- ❊ சாதாரணமாகக் காணமுடியாத கண்ணில்– புருவமத்தியில் – நெற்றியில் உள்ள கண்ணில் தோன்றுகின்ற ஒளியை;
- ❊ அகக் கண்ணால் பார்த்து அதனோடு கலந்து அவ்விடத்திலே அமர்ந்திட வேண்டும்;
- ❊ அப்பொழுது சகஸ்ரத்தில் இருந்து விண்ணின் அருளாகிய கங்கை உரு வாகி எம்முள்ளே ஆத்ம வெளியை நோக்கி ஓடிப் பாயும்;
- ❊ இந்த அற்புதமான காட்சியை எப்பொழுதும் குன்றாது நாம் பார்க்கலாம். இது ஒளி தியானமாகும். – புருவமத்தியில் தோன்றுவது. இது நாலாவது வகைத் தியானமாகும்.

601 ஒரு பொழுது உன்னார்உ டலோடு உயிரை
ஒரு பொழுது உன்னார் உயிர் உட் சிவனை
ஒரு பொழுது உன்னார் சிவன் உறை சிந்தையை
ஒரு பொழுது உன்னார் சந்திரப் பூவே.

- ❊ ஒரு கணப்பொழுதாவது உடலோடு ஒன்றாகவே இருக்கும் உயிரை அவதானியுங்கள்;
- ❊ உயிரோடு உயிராய் உயிருக்குள் இருக்கும் சிவனை ஒரு பொழுதாவது அவதானியுங்கள்;
- ❊ சித்தத்தின் உள்ளே உறைகின்ற சிவனை ஒரு பொழுதாவது அவதானி யுங்கள்;
- ❊ எம்முள்ளே பூரணச் சந்திரன் போன்று தோன்றுகின்ற ஒளியை ஒரு கணப்பொழுதேனும் அவதானியுங்கள். இது முழுமைத்துவமான "அவ தானிப்பு" தியானமாகும். இது ஐந்தாவது வகைத் தியானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

602 **மனத்து விளக்கினை மாண்பட ஏற்றிச்**
**சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி**
**அனைத்து விளக்கும் திரிஒக்கத் தூண்ட**
**மனத்து விளக்கது மாயா விளக்கே.**

- மாயையாகிய மன விளக்கை மிகவும் சிறப்புடன் ஒளிரச் செய்யுங்கள்;
- சினமாகிய விளக்கையும் ஒளிரச் செய்துவிடுங்கள்;
- இறுதியில் இவ் இரு விளக்குகளும் இல்லாது செயலற்று அழிந்து போய்விடும்;
- அப்பொழுது மெய்ஞ்ஞானம் விளைவிக்கின்ற சகல விளக்குகளும் எம் முள்ளே தெளிவாகத் தூண்டப்பட்டு ஜோதியாய்ப் பிரகாசிக்கும். இது மனச் செயற்பாடுகள் அனைத்தையும் கடந்து செல்லும் வகையினைக் குறிக்கும்.

  **மனோநாசம் ஏற்படலும்-ஞானவிளக்கை** எமக்குள் ஏற்றும் தியானமாகும்.

  இது **ஆறாவது வகைத் தியானமாகும்.**

603

**எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்**
**கண்ணார் அமுதினைக் கண்டு அறிவார் இல்லை**
**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்**
**கண்ணாடி போலக் கலந்து நின்றானே.**

- எண்ணாயிரம் ஆண்டுகள் யோகிகள் யோகம் இருக்கின்றார்கள்;
- நாம் கண்ணாரக் காணும் அமுதமாகிய இறைவரை அவர்கள் காணவும் மாட்டார்கள். அறியவும் மாட்டார்கள்;
- நடுநாடியின் உள்ளே ஒளி தோன்றும் வண்ணம் ஆத்ம நகரை நோக்கிச் செல்லுங்கள்;
- அப்பொழுது இறைவர் எம்மோடு ஒன்று கலந்து இருப்பார். இறை ஆத்ம கலப்பு கண்ணாடியின் முன்னே நாமும் எமது விம்பமும் ஒன்றாகி இருப்பதற்குச் சமானமாகும்.
- இது **சுசுமுனா நாடியில் ஒளியைத் தோற்றுவிக்கும் தியானம்** ஆகும். இது **ஏழாவது வகைத்** தியானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

604

**நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**
**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவு இல்லை**
**ஓட்டமும் இல்லை உணர்வு இல்லைத் தான் இல்லை**
**தேட்டமும் இல்லைச் சிவன் அவன் ஆமே.**

* அகப் புற ஆர்வம், சிரத்தை, செயற்பாடுகள் அனைத்தையும் சுசுமுனா நாடியில் ஒடுங்கி லயப்படச் செய்யுங்கள்;
* அப்பொழுது உடம்புக்கு எந்த விதமான சோர்வும் இல்லை. அழிவும் இல்லை;
* எந்தவிதமான பதபதைப்பும் இல்லை. உணர்வும் அற்றுப் போகும். தான் எனும் அகங்கார மமகாரமும் ஆணவமும் அற்றுப்போகும்;
* சொந்தமாக வைத்திருப்பதற்கு எதுவுமே இல்லை. எல்லாமே சிவ சொரூப மாகிவிடும்.
* **இது சுசுமுனா நாடியில் அனைத்தையும் லயமாக்கும் தியான மாகும் .இது எட்டாவது வகைத் தியானம் ஆகும்.**

605

**நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்டு**
**உயர்வு எழா வாயுவை உள்ளே அடக்கித்**
**துயர் அற நாடியே தூங்க வல்லார்க்குப்**
**பயன் இது காயம் பயம் இல்லைத் தானே.**

* கண்கள் இரண்டினதும் பார்வையை மூக்கின் நுனிமீது அமர்த்தி விடுங்கள்;
* மேலே எழுகின்ற வாயுவை நுட்பமாக உள்ளேயே அடங்கச் செய்துவிடுங்கள்;
* எல்லாவிதமான துன்பங்களையும் கடந்து சென்று ஆழ்ந்த யோக ஞானத் தூக்கத்தில் ;அமர்ந்து கொள்ளுங்கள்;
* அப்பொழுது நாம் இந்தப் பிறப்பின் பயனைப் பெற்றுக் கொள்வோம். உடம்பும் ஒருபோதும் அழிந்து போகாது. இது **யோக ஞானத் தூக்க தியானமாகும்.**

இது ஒன்பதாவது வகைத் தியானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

606

**மணிகடல் யானை வார் குழல் மேகம்**
**அணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்**
**தணிந்து எழுநாதங்கள் தாம் இவை பத்தும்**
**பணிந்தவர்க்கு அல்லது பார்க்க ஒண்ணாதே.**

❊ அன்பு, கருணை, அருள் இம்மூன்றினையும் ஒருவர் உணர்ந்து கொள்ளும் போது அவருக்குப் **பரிபூரண பணிவு** ஏற்படுகின்றது;

❊ அப்பொழுது அவரால் ***பத்துவகையான நாதங்களைத்*** தன்னுள்ளேயே உணர முடியும். பத்துவகையான நாதங்கள் ஆவன;

❊ மணி, கடல், யானை, குழல், மேகம், வண்டு, தும்பி, வளை, பேரிகை, யாழ் ஆகும்.

❊ பரிபூரண பணிவு உள்ளவர்களால் மாத்திரமே இந்த அற்புதமான இறை நாதத்தை உணர முடியும்.

❊ **இது பரிபூரண பணிவு** தியானமாகும்.

❊ இது **பத்தாவது வகைத் தியானம்** ஆகும்.

607

**கடலொடு மேகம் களிறொடும் ஓசை**
**அட எழும் வீணை அண்டர் அண்டத்துச்**
**சுட மனு வேணுச் சுரிசங்கின் ஓசை**
**திடம் அறி யோகிக்கு அல்லால் தெரியாதே.**

❊ யோக நிட்டையில் இருக்கும் திடகாத்திரமான ஒரு யோகிக்குப் பின்வருவனவற்றின் ஓசை அவர்களுக்கு உள்ளேயே கேட்கும்;

❊ கடலோசை, இடி ஓசை, களிறோசை, வீணையோசை, அண்ட அசைவு ஓசை, புல்லாங்குழல் ஓசை, வலம்புரிச் சங்கோசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

608 ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இயங்கும் பரிந்து உயிராய் நிற்கும்
ஓசை அதன் மணம் போல விடுவதோர்
ஓசையாம் ஈசன் உணர வல்லார்க்கே.

❊ முன்கூறிய பாடலில் ஏழுவகையான ஓசைகள் கூறப்பட்டுள்ளன;
❊ இறைவரை உணரும் இயல்பும், தேவர்களினால் சேர்க்கப்பட்ட செல்வமும்- எமக்கு மிகவும் கருணையாகவும், அன்பு நிறைந்தும் எம் உயிரோடு இணைந்து நிற்கும்;
❊ இறைவரில் இருந்து புறப்படுகின்ற அன்பும், கருணையும் எம் உயிரோடு இணைந்து மீண்டும் எம்மில் இருந்து அன்பாகக் கருணையாக மணம் வீசும். அப்பொழுது எம்மில் இருந்து இறை ஓசை புறப்படும். இறை ஓசை முழுமை யாக உணரப்படும்;
இது ஓசை உணரும் தியானம் ஆகும். இதனை ஆத்ம ஓசை என்றும் கருதலாம்.
இது பதினோராவது வகைத் தியானம் ஆகும்.

609 நாத முடியிலே நல்லாள் இருப்பது
நாத முடிவிலே நல்யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சு கண்டனே.

❊ நாதத்தின் முடிவிடத்தில் சுத்த சத்தியாகிய தெய்வீகத்தாய் இருப்பாள்;
❊ நாதத்தின் முடிவிடத்தில் சிறந்த யோகமாகிய சிவயோகம் இருக்கும்.
❊ நாதத்தின் முடிவிடத்தில் இறையவர் நாட்டம் இருக்கும்;
❊ நாதத்தின் முடிவிடத்தில் எல்லாவிதமான மாற்றங்களையும் கண்டு கொண்டேனே;
இது நாத தியானம் ஆகும்.
இது பன்னிரண்டாவது வகையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

610 உதிக்கின்ற ஆறினும் உள் அங்கி ஐந்தும்
துதிக்கின்ற தேசுஉடைத் தூங்கு இருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக் கொன்றை ஈசன் கழல் சேரலாமே.

❊ ஒவ்வொரு ஆதாரத்தில் இருந்தும் ஒவ்வொரு வகையான நாதம் உதிக்கின்றது. ஒவ்வொரு நாதத்தையும் சூழ ஐந்து வகையான கவசங்கள் அமைகின்றன;

❊ இறைவரை வணங்கும் உடலைச் சூழத், தூங்கிய வண்ணம் உள்ள இருள் இயல்பாகவே நீங்கும்;

❊ சர்வ பிரபஞ்சங்களையும் நிர்வாகம் செய்து வருகின்ற பிரம்மா, விஷ்ணு, சிவன், மகேஷ்வரர், சதாசிவர் ஆகிய ஐவருள்ளும் நாதம் ஒடுங்கி ஐக்கியமாகிவிடும்;

❊ அதன் பின்னரே இறைவரின் கழலின் நீழலில் ஆத்மா ஓய்வு எடுத்துக் கொள்ளும்.

நாத தியானத்தின் சிறப்பு இதில் கூறப்பட்டுள்ளது.

611 பள்ளி அறையில் பகலே இருள் இல்லை
கொள்ளி அறையில் கொளுந்தாமல் காக்கலாம்
ஒள்ளி தறியிலோ ரோசனை நீளிது
வெள்ளி அறையில் விடிவு இல்லைத் தானே.

❊ இறைவரின் அருள் ஞானப் பள்ளி அறையில் ஒளியாகிய வெளியே உண்டு. அங்கு இருள் இல்லவே இல்லை;

❊ ஞான அக்கினி மயமான இறைவரிடத்தில், நாம் இருக்கும்போது அந்த ஞான நெருப்பு எம்மை எரிக்கமாட்டாது;

❊ சிந்தனைகளையும், எண்ணங்களையும் அதற்குக் காரணமாகிய மனத்தையும் கடந்துவிட்டால் தூரத்தையும் நேரத்தையும் தாண்டிவிடலாம். அதன் பின் ஒளிமயமான லிங்கத்துடன் இருக்கலாம்;

❊ பேரம்பலமாகிய – கைலாயமாகிய – வெள்ளிமலையில் இருளும் இல்லை. அதனால் விடிவும் இல்லை. அனைத்தும் ஜோதிமயமாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

612 **கொண்ட விரதம் குறையாமல்தான் ஒன்றித்**
**தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு**
**மண்டல மூன்றினும் ஒக்க வளர்ந்த பின்**
**பிண்டமும் ஊழி பிரியாது இருக்குமே.**

❈ இயல்பாகவே காக்கவேண்டிய எல்லா விரதங்களையும் குறைவுபடாமல் மேற்கொள்ளும் ஒரு யோகி;
❈ எப்பொழுதும் சுசுமுனா நாடியிலேயே சஞ்சாரம் செய்வர்;
❈ மண், வான், விண் ஆகிய மூன்று மண்டலங்களிலும் இந்த யோகியான வர் சஞ்சாரம் செய்யும் ஆற்றல் உடையவர்;
❈ அதனாலே யோகியானவரின் உடலும் உயிரும் ஊழி ஊழி காலங்களாகச் சிறைவு படாது பிரியாது இருக்கும்.
❈ இது **சுசுமுனா நாடியில் சஞ்சாரம் செய்யும் தியானம்** ஆகும்.
❈ இது **பதின்மூன்றாவது வகைத் தியானமாகும்.**

613 **அவ் அவர் மண்டலமாம் பரிசு ஒன்று உண்டு**
**அவ் அவர் மண்டலத்து அவ் அவர் தேவராம்**
**அவ் அவர் மண்டலம் அவ் அவர்க்கே வரில்**
**அவ் அவர் மண்டல மாய மற்றோர்க்கே.**

❈ எவரெவர் எவ்வெவ் மண்டலங்களில் சஞ்சாரம் செய்கின்றார்களோ அவர்களுக்கு ஏற்ற பரிசு ஒன்று கிடைக்கும்;
❈ அவர்கள் சஞ்சாரம் செய்கின்ற வகைகளுக்கு ஏற்றவாறு அவர்களே அந்த மண்டலத்திற்குத் தேவர் ஆவர்.
❈ அவர்கள் விரும்பியவாறு சஞ்சாரம் செய்கையில் அவர்கள் அந்த மண்டலத்திலேயே இருப்பார்கள்;
❈ ஒருவர் சஞ்சாரம் செய்கின்ற – இருக்கின்ற மண்டலம் மற்றவர்களுக்கு விளங்கப் போவதில்லை. அது வெறும் மாயையாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

614 இளைக்கின்ற நெஞ்சத்து இருட்டு அறை உள்ளே
முளைக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
துளைப் பெரும் பாசம் துருவிடும் ஆகில்
இளைப்பு இன்றி மார்கழி ஏற்றம் அதாமே

* இதய கமலம் என்றும் விரிந்து சுருங்கிக் கொள்ளும். ஆத்மீக இதயவெளியிலே இருட்டு அறை ஒன்றுண்டு;
* மண், வான், விண் ஆகிய மூன்று மண்டலங்களும் ஆத்ம இதய வெளியிலே ஒன்றாகச் சந்திக்கின்றன;
* ஆத்ம இதய வெளியிலேயே இறைவரின் திருப்பாதங்கள் உள்ளன. அவற்றைத் தியானிப்போமானால் எல்லாவிதமான பந்தபாசங்களும் அற்றுப் போய்விடும்;
* நாமும் எந்தவித சோர்வும், களைப்பும் இன்றி மார்கழி மாதத்தின் ஆனந்தம் போன்று, என்றும் ஆனந்தமாய் இருப்போம்.

இது ஆத்ம இதயவெளி தியானம் ஆகும்.
இது பதினான்காவது வகைத் தியானமாகும்.

615 முக்குண மூடு அற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலம் இடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர் நிலை வானவர் கோனே.

* கபம், பித்தம், வாதம் ஆகிய மூன்றுவிதமான நோய்கள் தோன்றுவதற்கு ஏதுவாக இருக்கின்ற வாயுவை, மூலாதாரத்து அக்கினிக்கு ஆகுதியாக்கி விடவேண்டும்;
* மூலாதாரத்திலேயே முழுமையாகச் சஞ்சாரம் செய்ய வேண்டும்;
* வல இட நாடிகளை முறையாகப் பயன்படுத்தி மேற்கூறிய சாதனையைச் செய்ய வேண்டும்;
* அப்பொழுது உயிரானது தேவர்களின் தலைவனைச் சார்ந்தே நிற்கும்.

இது மூலாதார தியானம் ஆகும்.
இது பதினைந்தாவது வகைத் தியானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

616 நடலித்த நாபிக்கு நால் விரல் மேலே
மடலித்த வாணிக்கு இருவிரல் உள்ளே
கடலித்து இருந்து கருத வல்லார்கள்
சடலத் தலைவனைத் தாம் அறிந்தாரே.

❋ துன்பம் நிறைந்த நாபிக் கமலத்திற்கு நாலு விரல்கள் அளவு தூரத்தில் *மேல்* நோக்கி;

❋ சரஸ்வதி உறைந்திருக்கும் நாவில் இருந்து இருவிரல் அளவு தூரம் கீழே உள்நோக்கி; உள்ள பகுதியில் இருந்து அவதானிக்க வேண்டும். இவ்விடம் ஓங்கார பாதத்தின் ***மகரம்*** உள்ள பகுதியாகும்.

❋ அப்பொழுது, சர்வ உருவங்களினதும் தலைவரை – இறைவரை நாம் உணர்ந்து கொள்வோம்.

இது மகர தியானம் ஆகும்.

இது பதினாறாவது வகைத் தியானமாகும்.

617 அறிவாய சத்து என்னு மாறாது அகன்று
செறிவான மாயை சிதைத்து அருளாலே
பிறியாத பேரருள் ஆயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலை அறிந்தாரே.

❋ அறிவு நிறைந்த சத்துப்பொருளை நிரந்தரமாகவே விட்டு முற்றாக விலக வேண்டும்.

(அறிவு + சத்தி = சுத்தசத்தி = சுத்தமாயை)

❋ இறைவரின் அருளாலே மிகவும் வேகமாக ஆட்சி செய்கின்ற மாயையைச் சிதைக்க வேண்டும்;

❋ அதன் பின்னர் ஒரு பொழுதும் எம்மைவிட்டு நீங்காத இறைவரின் பேரருள் எமக்குக் கிடைக்கும்;

❋ சிறந்த உயர்ந்த நெறியைக் கடைப்பிடிக்கின்ற அன்பு நிறைந்தவர்கள் தங்கள் நிலையையும், இறைவரையும் உணர்ந்து அறிந்து கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## ix. சமாதி

618 சமாதி அம் ஆதியில் தான் செல்லக் கூடும்
சமாதி அம் ஆதியில் தான் எட்டுச் சித்தி
சமாதி அம் ஆதியில் தங்கினோர்க்கு அன்றே
சமாதி அம் ஆதி தலைப்படும் தானே.

* முன் கூறப்பட்ட அட்டாங்கயோக நெறிமுறைகளை ஒழுங்காக அனுசரித்தால்;
ஆதி நிலையோடு சமமாக உள்ள ஒரு நிலை கைகூடும். இது "***சமாதி***" எனப்படும்;
* அப்பொழுது எட்டு வகையான சித்திகள், இறை அருட்பெறுபேறுகள் கிடைக்கும் ;
* நிலையாகவே இந்நிலையில் தங்கிவிட்டால் அது நிரந்தர சமாதி நிலை ஆகிவிடும்.
* இது "***நிர்விகற்ப சமாதி***" எனப்படும். சமாதி தற்காலிக நிலையானால் "***சவிகற்ப சமாதி***" ஆகும்.

619 விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்
சந்தியில் ஆன சமாதியில் கூடிடும்
அந்தம் இலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியும் தோன்றிடும் தானே.

* மூலாதாரத்தில் உள்ள குண்டலினி எனும் வாகனத்தில் இருந்து பயணம் செய்யும் பிந்துவானது (சப்த்த சொரூபம்) பிராணன் எனும் வாகனத்தில் பயணம் செய்யும்.
* அவ்வாறு பயணம் செய்து, நாதத்துடன் (அதிர்வு சொரூபம்) ஒன்றுபட்டு மேரு எனப்படும் ஆயிரம் இதழ்த் தாமரை ஆகிய சகஸ்ரத்தில் கூடிவிட்டால் அதுவே உண்மையான சமாதியாகும்;
* அறிவு எல்லாம் கடந்த, சமாதி கூடிவரின் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் பொருளாகிய இறைவரின் அற்புதமான அழகு நிறைந்த சோதி எம்முள் தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

620 மன் மனம் எங்கு உண்டு வாயுவும் அங்கு உண்டு
மன் மனம் எங்கு இல்லை வாயுவும் அங்கு இல்லை
மன் மனத்து உள்ளே மகிழ்ந்து இருப்பார்க்கு
மன் மனத்து உள்ளே மனோலயம் ஆமே.

* மகிழ்ச்சி நிறைந்த மனமானது, உடம்பின் உள்ளே எங்கே சஞ்சாரம் செய்கின்றதோ –அங்கே வாயுவானது சஞ்சாரம் செய்கின்றது;
* மனசஞ்சாரம் இல்லையானால் வாயுவின் செயற்பாடும் இல்லாது போய் விடும்;
* மகிழ்ச்சி நிறைந்த மனத்தின் உள்ளே மகிழ்வு எய்தி இருந்தால்;
* மகிழ்ச்சி நிறைந்த மனத்தின் உள்ளேயே மனமானது லயப்பட்டு ஒடுங்கி விடும்.

621
விண்டு அலர் கூபமும் விஞ்சத்து அடவியும்
கண்டு உணர்வு ஆகக் கருதி இருப்பார்கள்
செண்டு வெளியில் செழும் கிரியத்து இடை
கொண்டு குதிரை குசை செறுத்தாரே.

* வான் வெளியிலே ஒவ்வொரு பிரபஞ்சமும் ஒவ்வொரு கிணறுபோல் காட்சி அளிக்கின்றது. அப்பிரபஞ்சத்தை அளவு கடந்து வளர்ந்த காடு போல் இருள் சூழ்ந்துள்ளது;
* இந்தப் பிரபஞ்சத்தின் அற்புதக் காட்சியைக் கண்டு உணர்ந்து அதே கருத்தோடு இருப்பவர்கள்;
* வெறு வெளியிலே உள்ள அருள் மலையின் உச்சியில் இருக்கும் அனு பவம் பெறுவர்;
* இவர்கள் எப்பொழுதோ மனமாகிய குதிரையின் வேகத்தை அடக்கி அதனை மாய்த்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

622 மூலநாடி முகட்டு அலகு உச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பீர்காள்
மேலை வாசல் வெளி உறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே.

* மூலாதாரத்தில் இருந்து புறப்படுகின்ற சுசுமுனா நாடி சகஸ்ரத்தின் உச்சியில் முடிவடைகின்றது;
* நாலு வாசல்களும் (கண், காது, வாய், மூக்கு), புருவமையத்தின் வாசலும் சிரசின் உச்சியாகிய சகஸ்ரத்தை நோக்கிச் செல்கின்றது;
* பஞ்ச முகி முத்திராவை வகை தெரிந்து பயன்படுத்தி மேலை வாசலாகிய சகஸ்ராரத்தின் உச்சியை அடையுங்கள்;
* அங்கிருந்து தூய வெளியைத் தெளிவாக உணருங்கள். கண்டு ஆனந்தம் அடையுங்கள்;
* அப்பொழுது காலதேவனின் அழைப்பாகிய மரணம் கனவிலும் கூட வரப்போவதில்லை.

623 மண்டலம் ஐந்து வரைகளும் ஈர் ஆறு
கொண்டிட நிற்கும் குடிகளும் ஆறு எண்மர்
கண்டிட நிற்கும் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே.

* எம் ஆத்மாவைச்சூழ ஐந்து வகையான மண்டலங்கள் உண்டு. (பூமி, மண்டலம், நீர் மண்டலம், தீ மண்டலம், வாயு மண்டலம், ஆகாய மண்டலம்) மேலும் 12 வகையான காவல்கள் உண்டு;
* எம்முள்ளேயே ஆறு வகையான குடிகள் உள்ளார்கள். (மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம்)
* எம்முள்ளே நிகழும் சகல செயற்பாடுகளையும் ***எட்டுக் கன்னிகள்*** கண் காணித்துக் கொண்டுள்ளார்கள்;
* இவை எல்லாவற்றையும் உணர்ந்து, தெளிந்து, எம்முள்ளேயே அனைத்தையும் இயக்கும் "ஓம்" எனும் பதத்துடன் அமரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

624 பூட்டு ஒத்து மெய்யில் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டு அற்ற அந்நிலம் சேரும்படி வைத்து
நாட்டத்தை மீட்டு நயனத்து இருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழம் தூங்கலும் ஆகுமே.

❋ வாயுவானது எம்முள்ளே தடைப்பட்டு, சிக்குப்பட்டு, பூட்டப்பட்டு உடம்போடு உள்ளது;

❋ வாயுவின் இத்தன்மையால் உடல் நோய்வாய்ப்பட்டுவிடும். உடலாகிய பூமியை நன்கு பேணிப் பாதுகாக்க வேண்டும்;

❋ எல்லாவித சஞ்சாரங்களையும் நெறிப்படுத்தி அகக்கண்ணில் அமர வைத்து விடுங்கள்;

❋ அப்பொழுது உடம்பாகிய தோட்டத்தில் உள்ள ஆத்மாவாகிய ஞானப் பழம்-மாம்பழம் நன்கு முதிர்ந்து பழுத்துத் தூங்கும்- தொங்கியவாறு இருக்கும். அது இறைவரின் பாதாரத்தில் ஐக்கியமாகி விடும்.

625 உரு அறியும் பரிசு ஒன்று உண்டு வானோர்
கரு வரை பற்றிக் கடைந்து அமுது உண்டார்
அரு வரை ஏறி அமுது உண்ணமாட்டார்
திரு வரையா மனம் தீர்ந்து அற்ற வாறே.

❋ உருவ வழிபாட்டின் சிறப்பினை- அதன் பெறுபேற்றினை அறியத் தேவர்களாகிய வானவர்கள் முயற்சி செய்தனர்;

❋ அதன் பயனாகப் பாற்கடலை, மேரு மலைகொண்டு கடைந்து அமுது எடுத்து உண்டார்கள்;

❋ அருவ நிலையில் இருக்கும் இறைவரை உணர்ந்து, தம்முள்ளே ஊறும் அமுதத்தைத் தேவர்கள் உண்ணவே மாட்டார்கள்;

❋ வரைபுகளைக் கடந்து செயற்படும் மனம், இறைவரின் திருவருளால் முற்றாகவே அழிந்துவிடும். அப்பொழுது எம்முள்ளேயே நாம் இறை அமுதத்தை உண்ணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

626 நம்பனை ஆதியை நான் மறை ஓதியைச்
செம் பொன்னின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை ஆக்கி அருத்தி ஒடுக்கிப் போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டம் இட்டாரே.

❊ நான்கு வேதங்களும் போற்றிப் பாடுகின்ற ஆதியாகிய சிவபரம்பொருளை;
❊ சிவப்பு நிறமான பொன்னின் உள்ளே சோதிமயமாகத் திகழ்கின்றவரை;
❊ சூக்குமமாக வழிபாடு செய்து, அன்பு செய்து, அன்பை ஆக்கி, விருப்பங்கள் எல்லாவற்றையும் மறந்து அனைத்தையும் ஒடுக்கி;
❊ ஆணவமாகிய கொம்பையும் கடந்து இறைவரை வழிபட்டு இறை ஞானசபை அமைத்தார்கள் அடியார்கள்;

627 மூலத்து மேலது முச் சதுரத்து அது
காலத் திசையில் கலக் கின்ற சந்தினில்
மேலைப் பிறையினில் நெற்றி நேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

❊ இறையவர் மூலாதாரத்திலும், அதன்மேலே உள்ள ஆதாரங்களிலும், ஆறு அத்துவாக்களிலும் உணரப்படுவார்;
❊ காலங்கள், திசைகள் எல்லாம் அற்றுப் போகும் இடமாகிய சகஸ்ரத்திலும் இறையவர் உணரப்படுவார்;
❊ பிறைவடிவாகிய நெற்றியில்– புருவமத்தியில் இறையவர் புலப்படுவார்;
❊ ஒவ்வொரு இடங்களிலும் இறையவர் வெவ்வேறு விதமாக எம்முள்ளே புலப்படுகின்றார்.

628 கற்பனை அற்றுக் கனல் வழியே சென்று
சிற்பனை எல்லாம் சிருட்டித்த பேர் ஒளிப்
பொற்பினை நாடிப் புணர் மதியோடு உற்றுத்
தற்பரம் ஆகத் தகும் தண் சமாதியே.

❊ மாயை ஆகிய மனத்தினுடைய எந்தவித கற்பனைகளும் இன்றி, ஞான அக்கினி வழியே சென்று;
❊ சர்வ பிரபஞ்சங்களையும் வடிவமைக்கின்றது இறைவரின் பேரொளி;
❊ இந்தப் பொன்னிறமான இறை பேரொளியை நாடி அதனோடு ஐக்கியமாகி உறுதியாக இருக்க வேண்டும்;
❊ அப்பொழுது எம்முள்ளேயே இறை சொரூபமாகிய சமாதி கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

629 தலைப்பட்டு இருந்திடத் தத்துவம் கூடும்
வலைப்பட்டு இருந்திடும் மாது நல்லாளும்
குலைப்பட்டு இருந்திடும் கோபம் அகலும்
துலைப்பட்டு இருந்திடும் தூங்க வல்லார்க்கே.

* இறைவரை நோக்கி ஏகமாகி இருந்து விட்டால் எல்லாவிதமான தத்துவங்களும் கைகூடும்;
* இறைதேவியும் மிகவும் ஆனந்தமாக எம்மோடு இருந்து விடுவாள்;
* எல்லாவிதமான மாயையின் செயற்பாடும் குலைந்து போகும்.கோபமும் அகன்றுவிடும்;
* ஒருநாளும் இழந்து போகாத இறை ஞானத் தூக்கத்தில் உள்ள சமாதி நிலை கைகூடும்.

630 சோதித்த தனிச் சுடராய் நின்ற தேவனும்
ஆதியும் உள் நின்ற சீவனும் ஆகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடி பணிந்து அன்புறு வாரே.

* தெய்வீக இறைஜோதி என்றும் தூய்மையானது. தனித்து வம் ஆனது;
* இறைஜோதியின் அம்சமே எம்முள்ளே ஆத்மாவாக விளங்குகின்றது;
* ஆதியாகிய பிரம்மாவும், ஆதியாகிய விஷ்ணுவும் இறைவரின் திருவடியை வணங்கி அன்பு செய்வார்கள்.

631 சமாதி செய்வார்க்குத் தகும்பல யோகம்
சமாதியும் வேண்டாம் இறையுடன் ஏகில்
சமாதி தான் இல்லைத் தான் அவன் ஆகில்
சமாதியில் எட்டு எட்டுச் சித்தியும் எய்துமே.

* சமாதி நிலையினை அடைந்தவர்கள், அந்நிலையில் இருந்தவாறே சாதனை செய்தால், பலவகையான யோகங்கள் அவர்களுக்குக் கைகூடும்;
* இறைவருடன் ஆத்மா ஒன்றாகிக் கொண்டு இருந்தால், சமாதி நிலையும் அர்த்தம் அற்றதாகி விடும்;
* இறைவரைப் போன்று ஆத்மா ஆகிவிட்டால், அதற்கு சமாதி என்னும் நிலை இல்லாது போய்விடும்;
* சமாதியிலே எட்டு வகையான இறை சித்திகளை அடைந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# X. அட்டாங்க யோகப் பேறு

## இயமம்

632 போது உகந்து ஏறும் புரிசடையான் அடி
யாது உகந்தார் அமரா பதிக்கே செல்வர்
ஏது உகந்தான் இவன் என்று அருள் செய்திடும்
மாது உகந்து ஆடிடும் மால் விடையோனே.

* இயமத்தை முறைப்படி அனுசரிப்பவர்கள் இறைவரின் திருப்பாதம் காணபர்;
* இறைவரின் இருப்பிடத்திற்கே செல்வர்;
* இவர்கள் என்னதான் தவம் செய்தார்களோ என்று இறைவர் வியந்து இவர்களுக்கு அருள் செய்வார்;
* சத்தியோடு சேர்ந்து இறைவர் திரு நடனம் புரிந்து காட்சி கொடுப்பார்;

## நியமம்

633 பற்றிப் பதத்து அன்பு வைத்துப் பரன் புகழ்
கற்று இருந்து ஆங்கே கருதும் அவர் கட்கு
முற்று எழுந்து ஆங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றும் சிவபதம் சேரலும் ஆமே.

* நியமத்தை நிலையாக மேற்கொள்பவர்கள், இறைவரையே பற்றி நின்று, அன்புவைத்து இறையவர் புகழ்பாடுவார்கள்;
* இறைநிலையை ஆத்மார்த்தமாகக் கற்று இறை கருத்தோடு இருப்பார் கள்;
* இவர்களை இறைவரின் முனிவர் குழாங்கள், இறையவரின் சந்நிதானத் திற்கு அழைத்துச் செல்வர்;
* இவ்வாறு இவர்கள் சிவபதத்திலே சேர்ந்து இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## ஆதனம்

634 வருந்தித் தவம் செய்து வானவர் கோவாய்த்
திருந்த அமராபதிச் செல்வன் இவன் எனத்
தரும் தண் முழவும் குழலும் இயம்ப
இருந்து இன்பம் எய்துவர் ஈசன் அருளே.

❋ ஆசனத்தை நெறி பிறழாது செய்து, தம்மை வருத்தித் தவம் செய்பவர்கள், தேவர்களுக்கும் தலைவராவர்;
❋ இவர்களை இறைவரின் சாம்ராச்சியத்தைச் சேர்ந்தவர்கள் என, இறை சப்த்தமும் இறை நாதமும் முழங்கும்;
❋ இவர்கள் இருந்தபடியே இருந்து இறைவர் இன்பத்தையும், அருளையும் பெறுவர்.

## பிராணாயாமம்

635 செம்பொற் சிவகதி சென்று எய்தும் காலத்துக்
கும்பத்து அமரர் குழாம் வந்து எதிர்கொள்ள
எம் பொற் தலைவன் இவனாம் எனச் சொல்ல
இன்பக் கலவி இருக்கலும் ஆமே.

❋ ஒழுங்குபடப் பிராணாயாமம் செய்பவர்கள், சிவபரம் பொருளோடு ஐக்கியமாகும் காலத்து;
❋ தேவர் குழாங்கள் இவர்களை எதிர்கொண்டு அழைத்து;
❋ எம் பொன்னான தலைவர் இவர் எனக் கூறுவர்;
❋ இவர்கள் என்றும் இறைவரின் இன்பக் கலவியில் இருப்பார்கள்.

## பிரத்தியாகாரம்

636 சேர் உறு காலம் திசை நின்ற தேவர்கள்
ஆர் இவன் என்ன அரனாம் இவன் என்ன
ஏர் உறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
கார் உறு கண்டனை மெய் கண்டவாறே.

❋ பிரத்தியாகார சாதனையை முழுமைத்துவமாகவே மேற்கொள்பவர்களைத் தேவர்கள் "இவர் ஆர்" என ஆச்சரியப்படுவர்!
❋ "இவர்தான் சிவன் எனும் தேவதையோ!" எனத் தேவர்கள் வியப்படைவார்கள்;
❋ சிறப்பு மிகுந்த தேவர்கள் அனைவரும் எதிர்கொண்டு இவரை அழைப்பார்கள்;
❋ அப்பொழுது, இவர் மெய்யாகவே சுத்த சத்தியுடன் கூடிய இறைவரைக் கண்டு கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## தாரணை

637 நல்வழி நாடி நமன் வழி மாற்றிடும்
சொல் வழியாளர் சுருங்காப் பெருங்கொடை
இல்வழியாளர் இமையவர் எண்திசைப்
பல்வழி எய்தினும் பார் வழி ஆகுமே.

❋ தாரணையாகிய நல்ல வழியை நாடும் போது அது மரணமாகிய வழியை மாற்றிவிடும்;
❋ "இறை மூல மந்திரத்துடன்" இருப்பவர்கள் என்றும் சிறந்த கொடை யாளர்களாக விளங்குவர்;
❋ இல்லற வாழ்வினை மேற்கொண்டுள்ளவர்கள் தாரணையை மேற்கொள் ளும்போது எண்திசையாலும் தேவர்களின் நிலையினை எய்துவார்கள்;
❋ எந்தத் திக்கில் இருந்தும் சிறந்த சாதனையை மேற்கொண்டாலும், அவை போற்ற வேண்டிய வழியாகவே விளங்கும்.

## தியானம்

638 தூங்க வல்லார்க்குத் துணை ஏழ் புவனமும்
வாங்கவல் லார்க்கு வலி செய்து நின்றிடும்
தேங்க வல்லார்க்குத் திளைக்கும் அமுதமும்
தாங்க வல்லார்க்கும் தன்னிடம் ஆமே.

❋ இறை சிந்தனையோடு தூங்க வல்லவர்களுக்கு, ஏழு புவனங்களும் துணையாக விளங்கும்;
❋ இறை சிந்தனையை நேரடியாகவே எடுத்துக் கொள்ள வல்லவர்கள், ஆத்மீக வலிமையோடு விளங்குவர்;
❋ இறைசிந்தனையில் ஒன்றாகி ஊறித் திளைத்து இருப்பவர்களுக்கு இறை யவர் அமுதம் சதா கிடைக்கும்.
❋ இறை சிந்தனையைத் தன்னுள்ளேயே தாங்கி வைத்திருப்பவர்களுக்கு, அவர்களுள்ளேயே இறையவர் இருப்பிடம் விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## சமாதி

639 காரியமான உபாதியைத் தான் கடந்து
ஆரிய காரணம் ஏழும் தன்பால் உற
ஆரிய காரணம் ஆயத வத்திடைத்
தார் இயல் தற்பரம் சேர்தல் சமாதியே

* சகல விதமான செயற்பாடுகளையும், அதனால் வரும் உபாதியையும் கடந்து விட வேண்டும்;
* ஆத்மாவின் காரணத்தை உணர, அதனைச் சூழவுள்ள ஏழு புவனங்களையும் உணர்ந்து அவை தன்னுள்ளேயே (ஆத்மாவினுள்ளேயே) அடங்குவதை உணர வேண்டும்;
* ஆத்மாவின் காரணத்தை உணர, தன்னுள்ளே சிறந்த தவம் செய்ய வேண்டும்.
* அப்பொழுது இயல்பாகவே ஆத்மா இறையவரை அடைந்து கொள்ளும். இது சமாதியின் சிறந்த பெறு பேறு ஆகும்.

## Xi அட்டமா சித்தி

### பரகாயப் பிரவேசம்

640 பணிந்து எண்திசையும் பரமனை நாடித்
துணிந்து எண்திசையும் தொழுது எம்பிரானை
அணிந்து எண் திசையினும் அட்டமா சித்தி
தணிந்து எண் திசை சென்று தாபித்த வாறே.

* இறைபரம்பொருளை, மிகவும் பணிவோடு எண்திசைகள் ஊடாகவும் தேடி, நாடிக் கொள்ளுங்கள்;
* இறைபரம் பொருளை, மிகவும் துணிவுடன் எண்திசைகள் ஊடாகவும் தொழுது கொள்ளுங்கள்;
* எண் திசைகளிலேயும் எமக்காக ஏற்படுத்தப்பட்ட அட்டமாசித்திகளையும் அணியாக அணிந்து கொள்ளுங்கள்;
* எல்லாவிதமான இருமைகளையும் தணித்து, எண் திசைகளுக்கும் சென்று, ஆத்மீகத்தை உறுதியாக நிலைப்படுத்தி விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

641 பரிசு அறிவானவர் பண்பன் அடி எனத்
துரிசு அற நாடியே தூவெளி கண்டேன்
அரியது எனக்கு இல்லை அட்டமா சித்தி
பெரிது அருள் செய்து பிறப்பு அறுத்தானே.

❋ இறை திருவடியினை, இறைவரினால் எமக்கு வழங்கப்படும் பரிசு என்றும், பேரின்பம் என்றும் தேவர்கள் கூறுவர்;
❋ எல்லாவிதமான துன்பமும் குற்றமும் முற்றாக நீங்கிய பின்னர் நான் இறைவரை நாடினேன். தூய்மையான வெளியினைக் கண்டேன்;
❋ அட்டமாசித்திகள் எனக்குக் கஷ்டமானது ஒன்று அல்ல;
❋ இறைவர் பேரின்பமாகிய பேரருளை எனக்கு வழங்கி என் பிறப்பை அறுத்து விட்டார்.

642 குரவன் அருளில் குறிவழி மூலன்
பரையின் மண மிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறு எட்டாம் சித்தியே.

❋ திருநந்தி தேவரின் அருளினாலே திருமூலராகிய யான் இறைவரின் வழியை நாடிக் கொண்டேன்;
❋ சுத்த சத்தியின் இறைவாசனை நிறைந்த அதி அற்புத செய்கைகளைக் கண்டேன்;
❋ "கேசரி" எனும் அற்புத முத்திரையைத் தெரிந்து ,அதற்கு அதிபதியான "சாம்பவி" என்னும் தேவதையுடன் சேர வேண்டும்;
❋ அப்போது சிறந்த பேறாகிய சிவபரம் பொருளின் எட்டு சித்திகளையும் அடையலாம்.

643 காயாதி பூதம் கலை கால மாயையில்
ஆயாது அகல அறிவு ஒன்று அனாதியே
ஓயாப் பதி அதன் உண்மையைக் கூடினால்
வீயாப் பரகாயம் மேவலும் ஆமே.

❋ காயமாகிய உடம்பு, ஐந்து பூதங்கள், 64 கலைகள், காலப் பிரமாணம் ஆகிய அனைத்தும் மாயையாம்;
❋ இவை அனைத்தையும் நீக்கி, இறைஞானம் ஒன்றே அனாதியாக உள்ளதை அறிய வேண்டும்;
❋ சதா இறை எனும் உண்மையுடன் கூடி இருத்தல் வேண்டும்;
❋ அப்பொழுது என்றும் உள்ள பரகாயமாகிய இறை சொரூபத்துடன் சேர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

644 இருபதின் ஆயிரத்து எண்ணூறு பேதம்
மருவிய கன்மமாம் அந்த யோகம்
தரும் இவை காய உழைப்பு ஆகும்தானே
அரும் இரு நான்காய் அடங்குமாம் சித்திக்கே.

* கன்மத்தின் உடைய - செயற்பாடுகளினுடைய வேறு பாட்டு எண்ணிக்கை 20,800 வகை ஆகும்;
* இவை முப்பரிமாணக் காயத்தினால் ஏற்படும் செயற்பாட்டு யோக பேதங்கள் ஆகும்;
* 20,800 யோக செயற்பாட்டு பேதங்களும் அட்டமா சித்தியின் வகைகளிற்குள் அடங்கும்.

645 மதிதனில் ஈர் ஆறாய் மன்னு ம் கலையின்
உதயம் அது நால் ஒழிய ஓர் எட்டுப்
பதியும் ஈர் ஆறு ஆண்டு பற்று அறப்பார்க்கில்
திதமான ஈர் ஆறு சித்திகள் ஆமே.

* புத்தியிலே 12 வகையான கலைகளும் பின்னிப் பிணைந்து இருக்கும்;
* "தெளிவுநிலை" எம்முள்ளே உதயமாகும் போது எட்டுத் திசைகளிலும் இருந்து வரும் நால்வகைத் துன்பங்களும் அற்றுப்போகும்;
* 12 ஆண்டுகள் பற்றுக்கள் எல்லாவற்றையும் விலக்கி இறைவரை நோக்கில்;
* 12 வகையான சித்திகள் வந்து கைகூடும்.

646

நாடும் பிணி ஆகும் நஞ்சனம் சூழ்ந்தக்கால்
நீடும் கலை கல்வி நீள்மேதை கூர் ஞானம்
பீடு ஒன்றினால் வாயாச் சித்தி பேதத்தின்
நீடும் தூரம் கேட்டல் நீண்முடி ஈராறே.

* வஞ்சகமும் சூதும் மலிந்துவிட்டால், நாட்டில் பிணி நிறைந்து விடும்;
* நிலையான கல்வியும், கலையும் , மேதாவிலாசமும், கூர்மையான ஞானமும் நாட்டிலே துன்பம் நிறைந்து விட்டால் சித்திக்காது போய்விடும்;
* ஏற்கனவே கைவரப் பெற்ற பன்னிரு சித்திகளும் வெகுதூரம் சென்று விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

647 ஏழு ஆனதில் சண்ட வாயுவின் வேகியாம்
தாழா நடை பல யோசனை சார்ந்திடும்
சூழான ஓர் எட்டில் தோன்றா நரை திரை
தாழான ஒன்பதில் தான் பரகாயமே.

❋ மூலாதாரத்தில் இருந்து சகஸ்ரம் வரையுள்ள ஏழு நிலைகளிலும் வாயு வானது சஞ்சாரம் செய்யும்;
❋ இவ்வாறு வாயு சஞ்சாரம் செய்தால் பலவிதமான எண்ண அலைகள், சிந்தனைகள் தோன்றும்;
❋ வாயு அசையாது உள்ளே இருந்தால் எண்ணங்கள் அகலும். வாயு அசைந்தால் எண்ணங்கள் தோன்றும்.
❋ எம்முள்ளே உள்ள அகரத்தில் - சிவசொரூபத்தில் நாம் சஞ்சரித்தால் எமக்கு நரையும் முதுமையும் தோன்றாது;
❋ ஒன்பதாவது நிலையாகிய வெளியை நோக்கில், நாம் எமது உடலில் இருந்து நீங்கி, வேறு விரும்பிய அமைப்புக்குள் செல்லலாம்.

648 ஈர் ஐந்தில் பூரித்துத் தியான உருத்திரன்
ஏர் ஒன்று பன் ஒன்றில் ஈர் ஆறாம் எண் சித்தி
சீர் ஒன்று மேல் ஏழ் கீழ்ஏழ் புவிச் சென்று
ஏர் ஒன்று வியாபியாய் நிற்றல் ஈர் ஆறே.

❋ சங்கார மூர்த்தியாகிய சங்கரரை தியானத்தில் அமர்த்தி, 10 கலையிலும் பிராணனாரைப் பூரிக்கவும்;
❋ பிராணனாராகிய ஏரிலே 12 வகையான கலைகளும் ஒருமித்துவிட்டால் எட்டு வகையான சித்திகளும் கைகூடும்;
❋ பிராணனார் சீராகப் புவியில் இருந்து மேல்நோக்கி ஏழு உலகங்களையும், கீழ்நோக்கி ஏழு உலகங்களையும் வலம் வருவார்;
❋ பிராணனாருடன் 12 கலைகளும் ஒன்றித்து, எங்கும் வியாபித்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

649 தானே அணுவும் சகத்துத் தன் நெய்ம்மையும்
மானாக் கனமும் பரகாயத் தேகமும்
தானாவதும் பரகாயம் சேர் தன்மையும்
ஆனாத உண்மையும் வியாபியுமாம் எட்டே

❋ தானே அணுவாக விளங்கும். தானே பிரபஞ்சமாகவும் விளங்கும்;
❋ தானே மனமாகவும் அதன் செயற்பாடாகவும் விளங்கும். தானே ***உடலாகவும், உடலற்ற தன்மை***யாகவும் விளங்கும்.
❋ தான் தானாக விளங்கும். ***தானே பரகாயம் சேர்ந்த*** தன்மையாக விளங்கும்;
❋ தானே **உண்மை**யாகவும் விளங்கும். தானே **எங்கும் வியாபித்து** விளங்கும். இவ்வாறு எட்டு வகையான **"தன்மை"** நிலை –தான் நிலை கூறப்பட்டுள்ளது.

தாங்கிய தன்மையும் தான் அணுப் பல் உயிர்
650 வாங்கிய காலத்து மற்று ஓர் குறை இல்லை
ஆங்கே எழுந்தோம் அவற்றுள் எழுந்து மிக்கு
ஓங்கி வர முத்தி முந்திய வாறே.

❋ அனைத்தையும் மிக மிகப் பொறுமையாகத் தாங்குதல் வேண்டும். தன்னையே பல்வேறுவகையான சகல உயிர் அணுக்களிலும் உணர்தல் வேண்டும்;
❋ இவ்வாறு அனைத்தையும் மிகப் பொறுமையோடு ஏற்கின்ற பொழுது வேறு எந்த விதமான குறையும் எழப்போவதில்லை;
❋ எவ்வெவ்விடத்தில் தடைகள் வருகின்றனவோ அவ்வவ்விடத்திலேயே அவற்றைத் தாண்டி விடவேண்டும்;
❋ அப்பொழுது இறைமுத்தியானது ஓங்கி வளர்ந்து வெளிப்பட்டு எமக்குக் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

651 முந்திய முந்நூற்று அறுபது காலமும்
வந்தது நாழிகை வான் முதல் ஆயிடச்
சிந்தை செயச் செய மண்முதல் தேர்ந்து அறிந்து
உந்தியுள் நின்று உதித்து எழுமாறே.

* தொன்று தொட்டே 360 நாட்களை உள்ளாக்கிய ஒரு வருடம் உருவாகி விட்டது;
* இதைத் தொடர்ந்து காலம், நேரம் ஆகியன வானத்தை முதலாக வைத்துத்தோன்றிவிட்டன;
* பூமி முதல் சர்வ பிரபஞ்சம் வரை வியாபித்து நிற்பதை இடைவிடாது சிந்தை செய்து தேர்ந்து , தெளிந்து, உணர்ந்து அறிதல் வேண்டும்;
* அப்பொழுது இறைபரம் பொருள் எமது இதயக்கமலத்தில் இருந்து எழுவதை நாம் உணர்வோம்.

652 சித்தம் திரிந்து சிவமயம் ஆகியே
முத்தம் தெரிந்து உற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாம் ஐந்து தொடக்கு அற்றோர்
சித்தம் பரத்தில் திரு நடத் தோரே.

* சித்தம் தானாகவே, இயல்பாகவே சர்வ இடங்களிலும் எதுவித பேதமும் இன்றிச் சஞ்சாரம் செய்து சிவமயம் ஆகிவிடுகின்றது;
* இறையவரது முத்தம் தெரிந்து, அதனோடு சதா இருப்பவர் மோன நிலையில் உள்ள சிவமுத்தர்கள் ஆவர்;
* ஐந்து புலன்களாலும் ஏற்படுகின்ற தோஷம் கடந்தவர்கள் என்றும் சுத்தமாகவே இருப்பார்கள்;
* இவர்கள் என்றும் தங்கள் சித்தத்தை இறைவரது திருநடனத்துடன் திளைத்து இருக்க விட்டு விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

653 ஒத்த இவ் ஒன்பது வாயுவும் ஒத்தன
ஒத்த இவ் ஒன்பதின் மிக்க தனம் செயன்
ஒத்த இவ் ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்ததே.

❊ பத்து வாயுக்களிலே - ஒன்பது வாயுக்களும் ஒன்றாகிவிடுகின்றன;
❊ பத்து வாயுக்களிலும் தலை சிறந்து விளங்குவது பிராணவாயு ஆகும்;
❊ ஒரே நேரத்தில் ஓரிடத்தில் ஒன்றாகி ஒன்பது வாயுக்களும் இருந்து விட்டால்;
❊ ஒன்றாக இணைந்து இயங்குகின்ற உடலும் உயிரும் அழியாது இருக்கும்.

654 இருக்கும் தனம் செயம் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற்று இருபத்து மூன்றாய்
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்
இருக்கும் உடல் அது வீங்கி வெடித்ததே.

❊ ஒன்பது விதமான ஆதாரங்களில் பிராண சத்தி தங்கிச் செயற்படும்;
❊ பிராண சத்தியின் செயற்பாட்டில் 223 வகைகள் உண்டு;
❊ சாந்தமாகி இருக்கும் உடலில் பிராணசத்தி இல்லாது போனால்;
❊ இருக்கின்ற உடலும் வீங்கிப் பின் வெடித்து இறந்து போகும்.

655 வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்குய வாதமும் கூனும் முடமதாய்
வீங்கு வியாதிகள் கண்ணில் மருவியே.

❊ உடலில் தோன்றுகின்ற வியாதிகளைக் கண்ணின் அமைப்பில் இருந்து அறியலாம். அவையாவன;
❊ கழலை வீக்கம், சிரங்கு, குட்டரோகம், சோகைநோய், வாதம், கூன், முடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

656 கண்ணில் வியாதி உரோகம் தனம் செயன்
கண்ணில் இவ்வாணிகள் காசம் அவன் அல்லன்
கண்ணில் கூர்மன் கலந்திலன் ஆதலால்
கண்ணில் சோதி கலந்ததும் இல்லையே.

* கண்ணிலே "**உரோகம்**" எனும் நோய் தோன்றும்;
* பிராண சத்தியின் செயற்பாட்டின் குறைவால்
* காசநோய் தோன்றும். கண்மணிகள் பாதிப்படையும்;
* கண்ணிலே கூர்மவாயு கலந்துவிட்டால், கண்ணிலே ஒருபோதும் ஒளி தோன்றமாட்டாது.

657 நாடியின் ஓசை நயனம் இருதயம்
தூடி அளவும் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனு ம்
ஓ அற நின்று அங்கு உணர்ந்து இருந்தாரே.

* நாடியினது ஓசை தெளிவாக உணரும்போது கண்ணினதும் இருதயத்தினதும் குறை நிறைகளை அறிந்து கொள்ளலாம்;
* நாடியின் அதிர்வு இருக்கும்வரை ஜோதி உள்ளே சுடர்ந்து கொண்டே இருக்கும்;
* தேவர்களுள்ளே சிறந்து விளங்கும் ஈசரும், பிரம்மாவும், விஷ்ணுவும்;
* மிகமிகத் தெளிந்த நிலையில் இருந்து மிகவும் வியப்புடன் இறையவரை உணர்ந்து கொண்டே உள்ளார்கள்.

658 ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையதோர் இடம்
ஒன்பது நாடி ஒடுங்க வல் லார்கட்கு
ஒன்பது காட்சி இலை பலவாமே.

* உடம்பாகிய பிண்டத்தில் ஒன்பது வாசல்கள் உள்ளன;
* உடம்பின் உள்ளே ஒன்பது நாடிகளும் சந்திக்கும் இடம் ஒன்று உண்டு;
* அவ் இடத்திலே ஏகமாகி ஒடுங்க வல்லவர்களுக்கு இறை காட்சி ஒன்றாகி ஏகமாகப் புலப்படும்;
* அவர்களுக்குப் பலவிதமான வேறுபட்ட காட்சிகள் புலப்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

659 ஓங்கிய அங்கிக் கீழ் ஒண் சுழுமுனைச் செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழும் தரித்திட
ஆங்கது சொன்னோம் அருவழி யோர்க்கே.

- ❋ உடலின் உள்ளே உள்ள அக்கினி சொரூபத்தில் இருந்து சுழுமுனை நாடி புறப்படுகின்றது;
- ❋ சூரிய நாடியும் (வலநாடி), சந்திர நாடியும் (இடநாடி), அக்கினி நாடிக்கு (சுழுமுனை நாடி) ஏற்றவாறு அமைந்து இருக்கும்;
- ❋ எம்முள்ளே உள்ள ஏழு உலகங்களையும் , இம்மூன்று நாடிகளும் தாங்கி நிற்கின்றன;
- ❋ சிறந்த வழியைப் பின்பற்றுபவர்களுக்கு, ஆகவேண்டிய - பின்பற்ற வேண்டிய முறைகளையே யான் கூறினேன்.

660 தலைப்பட்ட வாறு அண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து அன்பு இணை மான் போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்கு உண்ண வைத்தது ஓர் வித்து அதுவாமே.

- ❋ விழிப்பு அடைகின்ற போதெல்லாம் ஆத்மா சுத்தசத்தியை, இறைவியை நாடிக்கொள்ளும்;
- ❋ அன்பாகிய இறைவரின் பாசவலையில் மானாகிய ஆத்ம பெண் கட்டுப் பட்டு இருக்கும்;
- ❋ உணர்தற்கு அரிய சுழுமுனை நாடியை உணர்ந்து ஆத்ம சாதனை செய்தால்;
- ❋ அளவு கடந்த இறைஞானத்தைப் பெற்று சர்வத்திற்கும் மூலமாகிய இறையவருடன் இருக்கலாம்.

661 ஓடிச் சென்று அங்கே ஒரு பொருள் கண்டவர்
நாடியின் உள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச் சென்று அங்கே தேனை முகந்து உண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே.

- ❋ சிரத்தையுடன், ஆர்வத்துடன் தேடி ஓடி - ஒரே பொருளாகிய பரம் பொருளை உணர்ந்து கண்டவர்கள்;
- ❋ தம்முள்ளேயே உள்ள சகல நாடிகளிலும் இறை நாதத்தை எழுப்புவார்கள்;
- ❋ இவர்கள் எங்கும் எவ்விடத்திலும் இறை அமுதத்தை முழுமையாக அருந்துவர்;
- ❋ இதனால் இவர்களுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் எந்தப் பகைவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

662 கட்டிட்ட தாமரை ஞாலத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் மாதுடன் சேர்ந்தனர்
கட்டிட்டு நின்று களம் கனி ஊடு போய்
பொட்டிட்டு நின்று பூரணம் ஆனதே.

❊ உடம்பாகிய ஞாலத்திலே ஒன்பது வகையான தாமரை மலர்கள் உண்டு. (ஒன்பது வாயில்கள்);
❊ உடம்பாகிய ஞாலத்திலே உள்ள கன்னியர்கள், மாதுவாகிய - சுத்த சத்தியாகிய -இறைவியுடன் சேர்ந்து கொண்டனர்;
❊ இது காறும் கட்டுண்ட நிலையில் இருந்த ஆத்மா, இறையவர் சந்நிதானம் சென்று ஞானக் கனியை உண்கின்றது.;
❊ நெற்றியிலே திலகம் இட்டால் நிறைவு ஏற்படுவது போல், ஆத்மா இறையவர் சந்நிதானத்தில் பூரணம் ஆகி அமர்ந்து விடுகின்றது.

663 பூரண சத்தி எழுமூன்று அறையாக
ஏரண கன்னியர் எழுநூற்று ஐஞ்சு ஆக்கினார்
நாரணன் நான்முகன் ஆதிய ஐவர்க்கும்
காரணம் ஆகிக் கலந்து விரிந்ததே.

❊ பூரணத்துவமான சத்தி 21 அறைகளாகப் - பகுதிகளாகக் காட்சி கொடுக்கும்;
❊ பூரணத்துவ சத்தியுடன் தொடர்புடைய கன்னியர் 21 வகைக் காட்சியையும், 705 வகையாக வெளிப்படுத்துகின்றனர்;
❊ பிரம்மா, விஷ்ணு, சங்கரர், ஈசர், சதாசிவர் ஆகிய ஐவர்க்கும் ;
❊ இந்த சத்தியின் பாகுபாடுகளே அவர்களின் செயற்பாட்டிற்குக் காரணம் ஆகி விரிந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

664 விரிந்து குவிந்து விளைந்த இம் மங்கை
கரந்து உள் எழுந்து கரந்து அங்கு இல்லை
பரந்து குவிந்தது பார் முதற் பூதம்
இரைந்து எழு வாயு இடத்தினில் ஓங்கே.

❊ சுத்த சத்தி சர்வமாக விரிவடைந்து, பரம்பொருளிடத்தில் குவிந்து, இறைவியாக மலர்ச்சி அடைந்துள்ளது;
❊ இந்த இறை மங்கையிடம் சரண் அடைந்து சதா ஆத்ம எழிற்சியுடன் , அதனோடு இணைந்திருக்க வேண்டும்;
❊ பூமி தொடக்கம் பிரபஞ்சம் வரை ஐந்து பூதங்களும் பரந்து குவிந்து உள் ளன;
❊ எம்முள்ளே சஞ்சல நிலையில் உள்ள வாயுவானது ஓய்ந்து ஒடுங்கி ஆரம்ப நிலைக்கு – ஒன்றும் இல்லா நிலைக்கு – வெறுமை நிலைக்குச் செல்லும். அவ் இடத்திலே நாம் தெளிந்து இருத்தல் வேண்டும்.

665 இடையொடு பிங்கலை என்னு ம் இரண்டு
மடைபடு வாயுவும் ஆறியே நிற்கும்
தடை அவை ஆறு ஏழும் தண் சுடர் உள்ளே
மிடை வளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே

❊ இடைகலை, பிங்கலை ஆகிய இருநாடிகளிலும் மாறுபட்டுச் செல்கின்ற வாயுவானது ஒரு கட்டத்தில் ஆறுதல் அடைந்து கொள்ளும்;
❊ எம்முள்ளே வெளிப்படும் குளிர்ச்சி நிறைந்த இறை ஜோதியை உணர இருதடைகள் உள்ளன.
1. ஆறு அத்துவாக்கள் 11. ஏழு ஆதாரங்கள்.
❊ எம்முள்ளே உள்ள சகல சக்தி அம்சங்களும் ஆத்மார்த்த சொரூபத்தில் ஒடுங்க வேண்டும்.

666 ஒடுங்கி ஒடுங்கி உணர்ந்து அங்கு இருக்கில்
அடங்கி அடங்கிடும் வாயு அதன் உள்
மடங்கி மடங்கிடு மன்னுயிர் உள்ளே
நடம் கொண்ட கூத்தனும் நாடுகின்றானே.

❊ முழுமைத்துவமாக ஒடுங்கி இறையவரை உணர்ந்து, ஆத்ம சொரூபத் துடன் இருக்க வேண்டும்;
❊ வாயுவும் இயல்பாகத் தானாக அடங்கி ஆத்மாவுடன் ஒன்றித்து விடும்;
❊ உயிரினது செயற்பாடுகள் அனைத்தும் குறைந்து ஒடுக்க நிலையில் இருக்கும்;
❊ அப்பொழுது இறையவர் மிகவிருப்புடன் நடன சொரூபமாக எம்முள் ளேயே வெளிப்பட்டு எமக்கு காட்சி கொடுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

667 நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்
தேடி உடன் சென்ற திருவினைக் கைக் கொண்டு
பாடி உள் நின்ற பகைவரைக் கட்டிடு
மாடி ஒரு கை மணி விளக்கு ஆனதே.

❉ சுழுமுனை நாடியின் உள்ளே, நாதத்தால் உருவாகும் சப்தத்தை உணருங்கள்;
❉ நாத சப்தங்களும், இறையவர் அருளும் உங்களைத் தொடர்ந்து தேடி வரும். இந்த இறையருளின் உதவியை என்று ம் நாடுங்கள்.
❉ எம்முள்ளே உள்ள பகைமை உணர்வினை ஏற்படுத்துகின்ற சகல காரணிகளையும் இனம் காணுங்கள்;
❉ எமது சகஸ்ராரம், ஒரு சிறந்த மணி விளக்காக, எமது ஆத்மாவிற்குத் துணை நிற்கும்.

668 அணும் ஆதி சித்திகள் ஆனவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாதவே கார் பரகாய மேவல்
அணும் அத்தனை எங்கும் தானாதல் என்று எட்டே.

❉ அணுவிலும் பார்க்க ஆதியான இறை சித்திகளைப் பெறு பேறுகளைக் கூறுவேன்;
❉ அணுவிலும் பார்க்க அணுக்கருவும், அணுத்துகள்களும் பெருமை வாய்ந்தன– என்றும் உள்ளன;
❉ உடற் தத்துவமானது சர்வ உலகங்களிலும், சர்வ சூழலிலும் சஞ்சாரம் செய்யும் வல்லமை உடையது;
❉ சர்வ அணுக்களும் எட்டு வகையான இறைபெறுபேறுகளைத் தானாக அடையும் வல்லமை உடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

669 எட்டாகிய சித்தி ஓர் எட்டி யோகத்தால்
கிட்டாப் பிராணனே செய்தால் கிடைத்திடும்
ஒட்டா நடு நாடி மூலத்தே நல் பானு
விட்டான் மதி உண்ணவும் வரு மேலதே

❊ எமது யோக சாதனையால் இறைபெறுபேறு களை அடையலாம்;

❊ பிராணனார் எம்முடன் முற்றாக வசப்படும்போது எட்டு இறைசித்திகளும் எமக்குக் கிடைக்கும்;

❊ தனித்தே உள்ள நடுநாடி மூலத்தில் இருந்து சகஸ்ரம் வரைக்கும் ஒளி மயமாகவே விளங்கும்;

❊ அப்பொழுது இறை அமுதம் எம்முள்ளே வற்றாது ஊறிக்கொண்டே இருக்கும்.

670 சித்திகள் எட்டு அன்றிச் சேர் எட்டு யோகத்தால்
புத்திகள் ஆனவை எல்லாம் புலப்படும்
சித்திகள் எண் சித்தி தானாம் திரிபுரை
சத்தி அருள் தரத் தான் உள ஆகுமே.

❊ அட்டயோகத்தின் எட்டுக் கூறுகளும் தெளிவாகச் சாதனை செய்தால் சித்திகள் எட்டும் கைகூடும்;

❊ எல்லாவகையான புத்திகளின் தெளிவான நிலைப்பாடுகள் அனைத்தும் புலப்படும்;

❊ எட்டு வகையான சித்திகளும், திரிபுரங்களையும் வலம்வந்து ஆட்சி செய்யும் சத்தியின் பகுதியாகும்;

❊ இறைசத்தியின் அருள் கிடைக்குமானால் எல்லாம் எம்முள்ளேயே வெளிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

671 அணிமா

**எட்டு இவை தன்னோடு ஏழில் பரம் கைகூடப்**
**பட்டவர் சித்தர் பரலோகம் சேர்தலால்**
**இட்டம் அது உள்ளே இறுக்கல் பரகாட்சி**
**எட்டு வரப்பும் இடம் தான் இன்று எட்டுமே.**

❊ அட்டமா சித்திகளும் கைகூடும். சகஸ்ராரத்தில் பரம்பொருளுடன் தொடர்பு ஏற்படும்;

❊ இந்நிலையில் இருப்பவர்கள் சித்தர் குழாங்களாகும். இவர்கள் இறை வனது சாம்ராச்சியத்தைச் சேர்ந்தவர்கள்;

❊ சித்தர்களின் சித்தத்தினது போக்கிலேயே இறைகாட்சி அவர்களுக்குப் புலப்படும்;

❊ அட்டயோகம் கைவரப்பெற்ற பின்னர் கைகூடும், அட்டமாசித்திகளின் தன்மைகளும், வகைகளும் இனிவரும் மந்திரங்களில் கூறப்படும்.

672 **மந்தரம் ஏறு மதி பானுவை மாற்றிக்**
**கந்தாய்க் குழியில் கசடு அற வல்லார்க்குத்**
**தந்து இன்றி நற்காயம் இயல் லோகம் சார்வாகும்**
**அந்த உலகம் அணுமாதி யாமே.**

❊ மந்தர மலையாகிய மேருமலையைச் சந்திரனும், சூரியனும் வலம் வரு கின்றன. மேருமலை– நடுநாடி, சந்திரன் – இடநாடி, சூரியன்– வலநாடி;

❊ இம்மூன்றையும் மாற்றி ஒன்றாக்கி சிரசின் உச்சியிலே சகஸ்ரத்திலே ஒருங்க வைத்தல் வேண்டும்;

❊ பஞ்சு இல்லாமலே உருவான ஆடை உடலாகும். இது 5 வகையான உலோகதத்துவங்களின் தன்மையைப் பெறவல்லது.

1. இரும்புதத்துவம் 2. செம்புதத்துவம் 3. வெள்ளிதத்துவம்
4. பொன் தத்துவம் 5. இரசதத்துவம்.

❊ அவரவர்களின் சாதனைக்கு ஏற்றவாறு உலோகதத்துவம் கைகூடும். அவ் உலோகத்தின் அணுத்தன்மையைப் பெற்றுக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

673 முடிந்திட்டு வைத்து முயங்கில் ஓர் ஆண்டில்
அணிந்த அணிமா கைதானாம் இவனும்
தணிந்த அப்பஞ்சினும் தான் னொய்யது ஆகி
மெலிந்து அங்கு இருந்திடும் வெல்ல ஒண்ணாதே.

* ஓராண்டு காலம் அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்தி அணிமா சாதனையை மேற்கொண்டால்;
* மேற்கொண்ட சாதனையின் பயனாகப், பஞ்சிலும் பார்க்க மென்மையாகவும் அணுவிலும் பார்க்கச் சிறிதாகவும் ஆகிவிடுவர்;
* எவராலும் இந்தச் சாதனையாளரை வெல்லவே முடியாது.

## லகிமா

674 ஆகின்ற அத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்றதை ஆண்டில் மாலகு ஆகுமே.

* என்றுமே ஆகிய வண்ணம் உள்ள சுத்த சத்தியுடன் சேர்ந்து கொள்ள வேண்டும்;
* அப்பொழுது எந்தவகையான தத்துவமும் எமக்கு மிக இலகுவாகிவிடும்;
* ஒவ்வொரு நிமிடமும் எம்முள்ளே நிகழும் இறப்பை உணர்ந்து எம்முள்ளே இருத்தல் வேண்டும்;
* அப்பொழுது இல்லாமல் போகின்ற அனைத்தையும் ஆண்டு அறிந்து கொள்ளலாம். இதுவே லகிமா ஆகும்.

675 மாலகு ஆகிய மாயனைக் கண்டபின்
தான் ஒளி ஆகித் தழைத்து அங்கு இருந்திடும்
பால் ஒளி ஆகிப் பரந்து எங்கு நின்றது
மேல் ஒளி ஆகிய மெய்ப் பொருள் காணுமே.

* மாயம் நிறைந்த செயற்பாடுகள் செய்கின்ற லகிமா சித்தியைக் காணுங்கள்;
* அதன் பின்னர் உங்களுக்குள்ளே ஒளி வளர்ந்து நீங்கள் ஒளியாக இருப்பதை உணருங்கள்;
* இதே ஒளி எங்கும் பரந்து நிறைந்து நிற்பதை உணருங்கள்;
* ஒளியிலும் பார்க்க மேலாக விளங்குகின்ற மெய்ப்பொருளை - உண்மையை உணருங்கள்- கண்டுகொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

676 மகிமா.

மெய்ப்பொருள் சொல்லிய மெல்லியலாள் உடன்
தற் பொருள் ஆகிய தத்துவம் கூடிடக்
கைப் பொருள் ஆகக் கலந்திடும் ஓர் ஆண்டில்
மைப் பொருள் ஆகும் மகிமா அது ஆகுமே.

❋ சுத்த சத்தியானவள், மெய்ப்பொருள் ஆகிய இறையவர் செய்தியை எமக்குக் கூறுவாள்;

❋ அப்பொழுது எம்முள்ளே உள்ள உண்மைப்பொருள் இறைதத்துவமாக எமக்குப் புலப்படும்;

❋ உண்மைக் காட்சி, எமக்கு ஓராண்டினுள்ளாக எம்முடன் கலந்துவிடும்;

❋ மகிமா சித்தியானது எம்முடன் மயங்கியவாறு கலந்திருக்கும்.

677 ஆகின்ற கால ஒளி ஆவது கண்ட பின்
போகின்ற காலங்கள் போவதும் இல்லையாம்
மேல் நின்ற காலம் வெளி உற நின்றன
தாழ்கின்ற காலங்கள் தன் வழி ஆகுமே.

❋ என்றும் ஆகிக் கொண்டே உள்ள இறைஜோதியைக் காலம் கடந்த நிலையில் இருந்து கண்டு கொள்ளுங்கள்;

❋ அதன் பின்னர் காலங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் ஏதும் எம்மை வந்து சாராது;

❋ எம்மையெல்லாம் ஆட்சி செய்கின்ற காலப் பிரமாணம் தூய வெளியுடன் ஒன்றாகக் கலந்துவிடும்;

❋ ஊழிக் காலங்களில் ஏற்படுகின்ற விளைவுகளைக் கடந்து நாம் எம்முள்ளே உள்ள உண்மை சொரூபத்தின் வழி நிற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

678 தன் வழி ஆகத் தழைத்திடு ஞானமும்
தன் வழி ஆகத் தழைத்திடும் வையகம்
தன் வழி ஆகத் தழைத்த பொருள் எல்லாம்
தன் வழி தன் அருள் ஆகி நின்றானே.

* எம்முள்ளே உள்ள உண்மை சொரூபத்தின் வழி, எவ்வாறு நாம் சேர்ந்துள்ளோமோ, அதற்கு ஏற்ப : இறைஞானமும் தழைக்கும் .
வையகமும் தழைக்கும்.
* சகலவிதமான செல்வங்களும் எம்மை வந்து அடையும்;
* இந்தப் பொருட்செல்வம் அனைத்தையும், எம்முள்ளேயே வெளிப்படுகின்ற அருட் செல்வத்துடன் நாம் ஒன்றாக்கிவிடுவோம்.

பிரார்த்தி

679 நின்றன தத்துவ நாயகி தன் உடன்
கண்டன பூதப் படை அவை எல்லாம்
கொண்டவை ஓர்ஆண்டு கூட இருந்திடில்
விண்டதுவே நல்ல பிரார்த்தியது ஆகுமே.

* ஐந்து பூதங்களும் எம்முள்ளேயே அவற்றிற்குரிய இறை தத்துவத்துடன் இணைந்து நிற்கும்;
* அப்பொழுது இறை நாயகியை நாம் கண்டு கொள்வோம்;
* இறைதத்துவத்துடன் எம்முள்ளே உள்ள ஐந்து பூதங்களும் இணைந்து ஒன்றாகி ஒருவருடம் இருந்து விட்டால்;
* பிரார்த்தி எனும் இறைசித்தி எமக்குக் கைகூடும்.

680 ஆகின்ற மின் ஒளி ஆவது கண்டபின்
பாகின்ற பூவில் பரப்பவை காணலா
மேல் நின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவதும் இல்லையே.

* மின்னலைப் போன்று உருவாகின்ற ஒளியை எம்முள்ளே காணலாம்;
* அதன் பின்னர் எம்முள்ளே உள்ள ஆத்மாவாகிய பூவின் பரப்பைக் காணலாம்;
* எல்லாவற்றையும் மேவி நிற்கும் காலப் பிரமாணம் வெளியுடன் கலந்து நிற்கும்;
* காலப் பிரமாணத்தால் ஏற்படும் தாக்கங்கள் ஒன்றும் எம்மை வந்து சேரவே மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

681 போவது ஒன்று இல்லை வருவது தான் இல்லை
சாவது ஒன்று இல்லை தழைப்பது தான் இல்லை
தாமதம் இல்லை தமர் அகத்தின் ஒளி
ஆவதும் இல்லை அறிந்து கொள்வார்க்கே.

❊ இறையவர் ஒளிக்குப் போக்கும் இல்லை, வரவும் இல்லை;
❊ இறையவர் ஒளி இறப்பதும் இல்லை. பிறப்பதும் இல்லை;
❊ எம்முள்ளே ஒளி புலப்படும்போது ஒரு நாளும் தாமதம் அடையாது;
❊ உணர்வுடையோர்கள் எம்முள்ளே உள்ள, என்றும் உள்ள ஒளியை உணர்வார்கள்.

இறை ஒளி ஒருபோதும் ஆவதும் இல்லை. அழிவதும் இல்லை.

682 அறிந்த பராசக்தி உள்ளே அமரில்
பறிந்தது பூதப் படை அவை எல்லாம்
குவிந்தவை ஓர் ஆண்டு கூட இருக்கில்
விரிந்த பரகாய மேவலும் ஆமே.

❊ அனைத்தையும் அறிந்த இறைவி எம்முள்ளேயே அமர்ந்துவிட வேண்டும்;
❊ அப்பொழுது எம்முள்ளே உள்ள ஐந்து பூதங்களும் ஓர் ஆண்டிலே குவிந்து மறைந்துவிடும்;
❊ அப்பொழுது நாம், பரந்து விரிந்த காயமாகிய இறையவரின் சந்நிதானத்தை அடையலாம்.

## பிரகாமியம்

683 ஆனவிளக்கு ஒளி ஆவது அறிகிலர்
மூல விளக்கு ஒளி முன்னே உடையவர்
கான விளக்கு ஒளி கண்டு கொள்வார் கட்கு
மேலை விளக்கு ஒளி வீடு எளிதா நின்றே.

❊ தன்னுள்ளே இருக்கும் மெய்ஞ்ஞான விளக்கில் இருந்து ஒளி உருவாவதை அறியாது உள்ளார்கள்;
❊ எல்லாவற்றிற்கும் மூலமாகிய இறைவிளக்கில் இருந்து ஒளி எம்முன்னே புலப்படும்;
❊ சுத்த சத்தியாகிய கானகத்திலே இறைவிளக்கின் ஒளியை நாம் காண வேண்டும்;
❊ எல்லாவற்றிற்கும் மேலான மெய்ஞ்ஞான ஒளியின் வீட்டை மிக எளிதாக நாம் அடைந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## ஈசத்துவம்

684 நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படை அவை எல்லாம்
கொண்டவை ஓர் ஆண்டு கூடி இருந்திடில்
பண்டைய ஈசன் தத்துவம் ஆகுமே.

* மறைத்தல் தொழில் செய்யும் சதாசிவருடன் சுத்த சத்தி சேர்ந்திருக்கும்;
* ஐந்து பூதங்களினது செயற்பாடுகள் அனைத்தும் சுத்த சத்தியின் கட்டளையின் நிமித்தமே நிகழும்;
* சுத்த சத்தி சதாசிவருடன் கூடியிருப்பது போன்று ஆத்மா சுத்த சத்தியுடன் கூடி ஓர் ஆண்டு இருத்தல் வேண்டும்;
* அப்பொழுது பழம்பெரும் பொருளாம் இறைவரின் தத்துவம் எம்மை வந்து சேரும்.

685 ஆகின்ற சந்திரன் தன் ஒளி ஆயவன்
ஆகின்ற சந்திரன் தட்டமும் ஆயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தான் அவன் ஆமே.

* சந்திரனைப் போன்று மிகவும் குளிர்ச்சி நிறைந்தது இறையவர் ஒளி;
* குளிர்ச்சி நிறைந்த இறை கருணையே இறை ஒளியின் ஆதாரம் ஆகும்;
* குளிர்ச்சி நிறைந்த இறை ஒளி, குளிர்ச்சி நிறைந்த ஆத்மாவுடன் கூடினால்;
ஆத்மா இறையவரின் தன்மையைப் பெற்றுவிடும்.

686 தானே படைத்திட வல்லவன் ஆயிடும்
தானே அளித்திட வல்லவன் ஆயிடும்
தானே சங்காரத் தலைவனும் ஆயிடும்
தானே இவன் எனும் தன்மையன் ஆமே.

* ஆத்மாவானது தானாகவே ஆக்கும் வல்லமையைப் பெற்றுவிடும்;
* ஆத்மாவானது தானாகவே கருணை வழங்கும் வல்லமையைப் பெற்றுவிடும்;
* ஆத்மாவானது தானாகவே சங்காரங்களுக்கு எல்லாம் தலைமைத்துவம் பெற்று விளங்கும்;
* இந்த ஆத்மா இறைவரோ! என எல்லாரும் வியக்கும் வண்ணம் இறை தன்மையைப் பெற்றிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

687 தன்மையது ஆகத் தழைத்த கலையினுள்
பன்மையது ஆகப் பரந்த ஐம் பூதத்தை
வன்மையது ஆக மறித்திடில் ஓர் ஆண்டில்
மென்மையது ஆகிய மெய்ப்பொருள் காணுமே.

❊ "ஈசத்துவம்" எனும் கலை இறை தன்மை நிறைந்து வளர்ந்து கொள்ளும்;
❊ எல்லா வழிகளிலும் பரந்து செயற்படும் ஐம்பூதத்தை அதன் செயற்பாட்டை;
❊ கடுமையான சாதனையால் ஓராண்டு காலம் தடுத்து நிறுத்தவும்;
❊ அப்பொழுது மிக மிக நுட்பமான சூக்குமமான மெய்ப்பொருளைக் காண லாம்.

## வசித்துவம்

688 மெய்ப்பொருள் ஆக விளைந்தது ஏது எனின்
நற்பொருள் ஆகிய நல்ல வசித்துவம்
கைப்பொருள் ஆகக் கலந்த உயிர்க்கு எல்லாம்
தற்பொருள் ஆகிய தன்மையன் ஆகுமே.

❊ மெய்ப்பொருளாகிய இறையவர் தான் எல்லா இடமும் பரந்து விளைந்து காணப்படுகின்றார்;
❊ வசித்துவம் ஆகிய இறை சித்து மிகவும் சிறந்த பொருளாக விளங்கு கின்றது.
❊ வசித்துவம் சிறந்த சாதனையாளரின் உயிருடன் ஒரு நல்ல கைப் பொருளாகவே இருக்கும்;
❊ சாதனையாளருக்கு வசித்துவம் ஆகிய சித்து, அவரது சொந்தப் பொரு ளாகவே விளங்கும்.

689 தன்மை அது ஆகத் தழைத்த பகலவன்
மென்மை அது ஆகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மை அது ஆகப் புலன்களும் போயிட
நன்மை அது ஆகிய நற்கொடி காணுமே.

❊ இறைதன்மை நிறைந்து வளர்ந்தது ஆத்ம சூரியன் ஆகும்;
❊ இது மிகமிக நுட்பமான சூக்குமமான மெய்ப்பொருளாகிய இறைவரைக் கண்டு கொள்ளும்;
❊ அப்பொழுது ஆத்மாவும் பொன்நிறம் ஆகிவிடும். ஆத்மாவைச் சூழவுள்ள ஐந்து புலன்களும் அகன்றுவிடும்.
❊ என்றும் ஆத்மாவிற்கு நன்மை பயக்கின்ற சுத்த சத்தியை ஆத்மா கண்டுகொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

690 நற்கொடி ஆகிய நாயகி தன்னு டன்
அக்கொடி யாகம் அறிந்திடில் ஓராண்டு
பொற்கொடி ஆகிய புவனங்கள் போய்வரும்
கற்கொடி ஆகிய காமுகன் ஆமே.

❊ சிறந்த துணையாகிய இறைவியுடன் சேர்ந்து ஓராண்டு காலம், மிகவும் கடுமையான அந்தர் யாகம் செய்தல் வேண்டும்;
❊ அப்பொழுது பொன்மயமான சர்வ புவனங்களும் எம்மூடாக வந்து அகலும்;
❊ நாம் பேரானந்தப் பேரின்ப நிலையில் என்றும் இருப்போம்.

691 காமரு தத்துவம் ஆனது வந்த பின்
பூமரு கந்தம் புவனம் அதாயிடும்
மாமரு உன் இடை மொய்த்திடு மானனாய்
நாமருவும் ஒளி நாயகம் ஆனதே.

❊ பூ மலர்ந்தால், அதன் நறுமணம் புவனம் முழுதும் பரந்து செல்லும்;
❊ காமம் மலரும்போது, அது உடல் பூராவும் காமதத்துவ யோகம் ஆக மாறிவிடும்;
❊ அப்பொழுது இறையவர் ஒளி எம்முள்ளே மருவி நிற்கும்.

692 நாயகம் ஆகிய நல் ஒளி கண்டபின்
தாயகம் ஆகத் தழைத்து அங்கு இருந்திடும்
போய் அகம் ஆன புவனங்கள் கண்டபின்
பேய் அகம் ஆகிய பேரொளி காணுமே.

❊ எல்லாவற்றிற்கும் தலைமைத்துவமாக விளங்கும் நல்ல சிறந்த இறை ஜோதியைக் காணவேண்டும்;
❊ அதன் பிற்பாடு இறைஜோதி எம்முள்ளேயே இருந்து – தாயகத்தில் இருந்து உருவாகும் குழந்தைபோன்று – தொடர்ந்து உருவாகி வளர்ந்து கொண்டே இருக்கும்;
❊ இந்த இறை ஒளியின் உதவியுடன் சகல புவனங்களையும் கண்டு கொள்ளுங்கள்;
❊ சகல பிரமிப்புக்கும் உரிய பேரொளியைக் காணுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

693 பேரொளி ஆகிய பெரிய அவ் எட்டையும்
பார் ஒளி ஆகப் பதைப்பு அறக் கண்டவன்
தார் ஒளி ஆகத் தரணி முழுது மாம்
ஓர் ஒளி ஆகிய கால் ஒளி காணுமே.

❊ பேரொளி நிறைந்த அட்டமா சித்திகள் எட்டையும் மெய்யடியார்கள்,
❊ பூமியிலே சிறந்த ஒளியாக எந்தவித நடுக்கமும் இன்றிக் கண்டுகொள் வார்கள்;
❊ பூமி முழுவதற்கும் சிறந்த ஒளியாய் விளங்கும், ஏக ஒளியான காலம் கடந்த இறை ஒளியை நீங்களும் கண்டு கொள்ளுங்கள்.

694 காலோடு உயிரும் கலக்கும் வகை சொல்லில்
காலது அக்கொடி நாயகி தன் உடன்
காலது ஐந்து நூற்று ஒரு பத்து மூன்றையும்
காலது வேண்டிக் கொண்ட இவ்வாறே.

❊ காற்று உயிருடன் கலந்து கொள்கின்றது.
❊ காற்று சுத்த சத்தியாகிய இறைவியுடன் கலந்து கொள்கின்றது;
❊ காற்று இவ்வாறு அவரவர்களின் தன்மைக்கு ஏற்றவாறு மாறுபட்டுச் செயற்படும்;
❊ காற்றின் செயற்பாட்டு வகைகள் 513 ஆகும்.

695 ஆறது ஆகும் அமிர்தத் தலையின் உள்
ஆறது ஆயிர முந்நூற்றொரு ஐஞ்சுள
ஆறது ஆயிரம் ஆகும் அரு வழி
ஆறு அது ஆக வளர்பது இரண்டே.

❊ சகஸ்ரம் உள்ள இடமாகிய சிரசில் இருந்து கங்கை உருவாகும்- அமிர்தம் உருவாகும்;
❊ 1305 வகையான ஆற்றுப் படுக்கைகள் எம்முள்ளே உண்டு;
❊ ஆயிரக் கணக்கான ஆறுதல் தரும் வழிகள் இருந்தபோதும் இறை வழியைக் காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது;
❊ உடலுக்கும் மனதிற்கும் ஆறுதல் தருவது ஒன்று. -உலக வாழ்க்கை; உயிருக்கும் ஆத்மாவிற்கும் ஆறுதல் தருவது இரண்டாவது. - இறை வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

696 இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால் கொண்டு எழுவகை சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பத்தோடு ஒன்றாய்த்
திரண்டது காலம் எடுத்ததும் அஞ்சே.

❊ உலக வாழ்க்கையையும், இறைவாழ்வையும் சதாசிவரின் தாயாகிய சுத்த சத்தி இணைக்கின்றாள்;
❊ இவ்விரு வகையான வாழ்வின் தன்மையில் இருந்தும் எழுகின்ற வகையினைக் கூறில் 2051 வகையாகும்;
❊ இவ் 2051ம் ஒன்றுதிரண்டு 5 இலே நிறைவுறும். அது ஐந்து எழுத்தாகிய பஞ்சாட்சரம் ஆகும்.

697 அஞ்சுடன் அஞ்சு முகம் உள நாயகி
அஞ்சுடன் அஞ்சு அது ஆயுதம் ஆவது
அஞ்சது அன்றி இரண்டது ஆயிரம்
அஞ்சது காலம் எடுத்துளும் ஒன்றே.

❊ ஐவரையும், ஐந்து எழுத்துக்களையும் முகமாக உடையவர் இறைவி;
❊ ஐவரும், ஐந்து எழுத்துக்களும் அணுமுதல் சர்வ பிரபஞ்சங்களையும் காவல் காத்து நிற்பன;
❊ ஐந்து எழுத்துக்களும், இரண்டாகிய "உகரம்" ஆகி, எம்மில் ஆயிரம் இதழ்த்தாமரை ஆகிய சகஸ்ரம் ஆகியது;
❊ ஐந்து எழுத்தாகிய பஞ்சாட்சரம் காலத்தையும் கடந்து ஒன்றாகிய ஏகத்தில் அடங்கும்.

698 ஒன்று அது ஆகிய தத்துவ நாயகி
ஒன்று அது கால் கொண்டு ஊர்வகை சொல்லிடில்
ஒன்று அது என்று கொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்று அது காலம் எடுத்துளு முன்னே.

❊ ஏகமாகிய இறைவரின் தத்துவமாக விளங்குவது இறைவி ஆகும்;
❊ ஒன்றாகிய இறைவரே, காலப் பிரமாணத்தை ஏற்படுத்திப் பல்வேறு வகையான செயற்பாடுகளையும் வகைப்படுத்தியுள்ளார்;
❊ ஒன்றே பல் ஆயிரம் ஆயிரமாகப் பெருகியுள்ளது;
❊ காலப்பிரமாணம் அற்றுப் போகின்ற போது சர்வமும் ஒன்றிலேயே ஒடுங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

699 முன் எழும் அக்கலை நாயகி தன்னு டன்
முன் உறு வாயு முடிவகை சொல்லிடில்
முன் உறும் ஐம்பத்து ஒன்றுடன் அஞ்சுமாய்
முன் உறு வாயு முடி வகை ஆமே.

❇ எல்லாவிதமான இறைகலைகளும் இறைவியுடன் சேர்ந்து வெளிப்படும்–செயற்படும்;
❇ முன்பே தோன்றிவிட்ட வாயுவின் செயற்பாடுகள் முடிவுறும், ஒடுங்கும் இடம் 51 எழுத்து. இறுதியில் இவை 5 எழுத்தில் ஒடுங்கி அடங்கிவிடும்.

700 ஆய்வரும் அத் தனிநாயகி தன்னு டன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐந்நூற்று முப்பதொடு ஒன்பதும்
ஆய் வரு வாயு வளப்புள் இருந்ததே.

❇ ஏக நாயகியாகிய இறைவியுடன் வாயுவானது இணைந்து பலவகையான செயற்பாடுகளை ஆற்றுகின்றது.
❇ இவ்வாறு வாயு ஆற்று ம் செயற்பாடுகளின் எண்ணிக்கை539 ஆகும்;
❇ இவ்வாறு செயலாற்றும் வாயு தனது சொந்த இருப்பிடமான இறைவியில் இருந்து புறப்பட்டே செயற்படுகின்றது.

701 இரு நிதி ஆகிய எந்தை இடத்து
இரு நிதி வாயு இயங்கு நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இரு நிதி வாயு இயங்கும் எழுத்தே

❇ அருட் செல்வமும், பொருட் செல்வமும் இறையவர் இடத்தில் இருந்தே ஊற்றெடுக்கின்றது;
❇ வாயுவானது எம்முள்ளே இயங்கும் போது உலக வாழ்க்கை நெறியிலும் செயலாற்றுகின்றது. ஆத்மீக வாழ்க்கை நெறியிலும் செயலாற்றுகின்றது.
❇ எம்முள்ளே செயற்படும் வாயுவின் செயற்பாட்டு முறைகள் 238 வகைகளாகும்;
❇ இருவகைச் செல்வங்களை உடைய வாயு இயங்கும் எழுத்தாகிய "உகரத்தில்" இறைவியில் இருந்தே செயலாற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

702 எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடம் அது சொல்லில்
எழுநூற்று இருபத்து ஒன்பான் அது நாலாய்
எழுந்து உடன் அங்கி இருந்தது இவ்வாறே.

* இறையவர் ஜோதி தோன்றுகின்ற பொழுது, இறைவியும் ஜோதியுடன் சேர்ந்து புலப்படுவார்.
* வாயு தோன்றுகின்ற இடம் கூறுவதாயில், 733 இடங்களில் இருந்து தோன்றும்;
* உடலும் ஆத்மாவும் வாயு தோன்றுகின்ற இடமெல்லாம் தோன்றி அங்கேயே அமர்ந்து கொள்ளும்.

703 ஆறது கால்கொண்டு இரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண்டு இரட்டி இறக்கிட
எட்டது கால் கொண்டு இடவகை ஒத்த பின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே.

* வாயுவானது ஆறாதாரத்தையும் தேராகப் பயன்படுத்தும்;
* வாயு ஏழாவது நிலையான சகஸ்ரத்தில் இருந்து மேல் நோக்கிய, கீழ் நோக்கிய செயற்பாடுகள் இரண்டையும் உடையது;
* எட்டாவதாகிய அகரநிலையில்–சிவ நிலையில் வாயு எம்முள்ளே அமர்ந்து கொள்ளும்;
* உடலாகிய மாநிலத்தில் வாயுவானது ஒன்பது பகுதிகளாகிச் செயற்படும்.

704 சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவில்
சந்திரன் தானும் தலைப்படும் தன்மையைச்
சந்தியிலே கண்டு தானாம் சகமுகத்து
உந்திச் சமாதி உடை ஒளி யோகியே.

* சந்திரனும், சூரியனும் மந்தர மலையாகிய மேருவை வலம் வருகின்றன;
* எம்முள்ளே சந்திரஒளி எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை உணர வேண்டும்;
* மூன்று நாடிகளும் சந்திக்கின்ற இடத்திலே சந்திர ஒளி வெளிப்படும்;
* சமாதி நிலை கைவரப்பெற்ற ஒரு யோகி ஒளிமயமாக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

705 அணங்கு அற்றம் ஆதல் அஞ்சன நீவல்
வணங்கு உற்ற கல்வி மாஞான மிகுத்தல்
சுணங்கு உற்ற ஆயர் சித்தி தூரம் கேட்டல்
நு ணங்கு அற்று உரோதல் கால் வேகத்து நுந்தலே.

❋ பெண்மைக்குக் கருமைநிற விழிகள் சிறப்புற அமைவதால் பெண்மை மேன்மை அடையும்.
❋ கற்ற கல்வியினால் இறைவரை வணங்கும் போது புவியிலே இறைஞானம் வளரும்;
❋ சித்துக்களினது செயற்பாட்டில் ஒன்றித்து இருப்பவர்கள் எமது இறை பயணத்தையும், தமது இறை பயணத்தையும் தாமதப்படுத்திவிடுவர்;
❋ எந்தவித தடைகளும்-உராய்வுகளும் இன்றி ,மிகமிக நுட்பமான துகள் நிலையும் அற்று, காலத்தையும் கடந்து இறைநிலையை அடைதல் வேண் டும்.

706 மரணம் சரைவிடல் வண் பர காயம்
இரணம் சேர் பூமி இறந்தோர்க்கு அளித்தல்
அரணன் திருஉற ஆதல் மூ ஏழாம்
கரன் உறு கேள்வி கணக்கு அறிந்தேனே.

1. இறப்பு, 2. நரைநீக்கல்,
3. திடகாத்திரமான காயம்,
4. துன்பம் கலந்த பூமி,
5. இறந்தவர்களுக்கு கொடுக்க வேண்டியது. பிதிர்க்கடன்,
6. காவல் நிறைந்த இறைகவசம்- இறை அருள் பெறல்,
7. தெளிவு நிறைந்த கேள்வி.

ஆகிய ஏழு வகைத் தன்மையின் கணக்குகளையும் நான் அறிந்து கொண் டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

707 ஓதம் ஒலிக்கும் உலகை வலம் வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயன் இல்லை
காதலில் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகர் அறிவாரே.

- ❊ சப்த்தம் நிறைந்த இந்தப் பூமியை வலம் வந்து;
- ❊ எமது கால்கள் நோகும்படி நடந்தாலும் எந்தவித பயனும் இல்லை;
- ❊ அன்பு நிறைந்த இறை காதலால் இறைவரைக் காண்பவர்கள்;
- ❊ கடவுள் இருக்கும் தெய்வீக நகரை அறிந்து கொள்வார்கள்.

708 மூல முதல் வேதா மால் அரன் முன்நிற்கக்
கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்து தனிநாதம்
பாலித்த சத்தி பரை பரன் பாதமே.

- ❊ இறைவேதம், விஷ்ணு, சங்கரன், ஐந்து எழுத்து, விந்து, நாதம், சுத்த சத்தி ஆகிய அனைத்தும் இறையவர் திருப்பாதத்திலே அடங்கும்.

709 ஆதார யோகத்து அதிதேவொடும் சென்று
மீதான தற்பரை மேவும் பரன் ஒடு
மேதாதி ஈர் எண் கலை செல்ல மீது ஒளி
ஓதா அசிந்த மீது ஆனந்த யோகமே.

- ❊ ஆறு ஆதாரங்களையும் நன்கு பயன்படுத்தி யோகசாதனை செய்து தேவர்நிலை அடையவேண்டும்;
- ❊ மேலும் தேவர் நிலையைத் தாண்டி சத்தியும் சிவமும் ஒன்றாக இருக்கும் நிலையை உணரவேண்டும்;
- ❊ இறையவர் ஒளி 16 கலைகளுக்கு ஊடாகவும் வெளிப்படும்;
- ❊ யாராலும் ஓத முடியாத இறைவரின் ஆனந்த யோகத்தை அறிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

710 மதியமும் ஞாயிறும் வந்து உடன் கூடித்
துதி செய்பவர் அவர் தொல் வானவர்கள்
விதி அது செய்கின்ற மெய் அடியார்க்குப்
பதிஅது காட்டும் பரமன் நின்றானே.

❊ சந்திரனும், சூரியனும் ஒன்றுகூடி இறையவரை வழிபடுகின்றன;
❊ ஆதியான தேவர்களும் இறைவரை வழிபடுகின்றார்கள்;
❊ மெய்யடியார்கள் உண்மைப் பாதையை நோக்கித் தங்கள் விதியினை அமைத்துக் கொள்கின்றார்கள்;
❊ இவ்வாறான மெய் அடியவர்களுக்கு இறைவர் என்றும் காட்சி கொடுத்த வண்ணமே உள்ளார்.

711 கட்டவல்லார்கள் கரந்து எங்கும் தான் ஆவர்
மட்டு அவிழ் தாமரை உள்ளே மணம் செய்து
பொட்டு எழக் குத்திப் பொறி எழத் தண்டு இட்டு
நட்டு அறிவார்க்கு நமன் இல்லை தானே.

❊ எல்லாவகையான இருமை வகைச் செயற்பாடுகளையும் கட்ட வல்லார்களுக்கு இறையவர் தானாகவே எங்கும் புலப்படுவார்;
❊ இதயத் தாமரை அளவிடமுடியாத இறை மணத்தை என்றும் வீசிய வண்ணமே இருக்கும்;
❊ எந்தவித இருமைவகைத் தன்மைகளும் மீண்டும் தோன்றா வண்ணம் சாதனை செய்து, மேலும் இறைஜோதி தோன்றுமாறு சுசுமுனா நாடியை உணர்ந்து சாதனை செய்யவேண்டும்;
❊ அப்பொழுது காலதேவனின் செயலால் எந்தவித பாதிப்பும் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## XII கலைநிலை

712 காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடில்
காதல் வழிசெய்து கங்கை வழிதரும்
காதல் வழிசெய்து காக்கலும் ஆமே.

❊ இறையவரே அன்பாகிய காதல் நெறியை ஏற்படுத்தியவர்;
❊ இறையவரை நாம் அகக் கண்ணால் ஆத்மார்த்தமாக வழிபாடு செய்தல் வேண்டும்;
❊ அப்பொழுது காதல் நெறியான இறைவரின் அருள் எனும் கங்கை எம்மில் ஊற்றெடுக்கும்;
❊ அதனால் நாம் இறைவரை அன்பு செய்து அன்பால் பேண வேண்டும்.

713 காக்கலும் ஆகும் கரணங்கள் நான்கையும்
காக்கலும் ஆகும் கலை பதினாறையும்
காக்கலும் ஆகும் கலந்த நல் வாயுவும்
காக்கலும் ஆகும் கருத்து உற நில்லே.

❊ தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை நல்ல முறையில் காக்கலாம்;
❊ 16 வகையான கலைகளையும் நன்றே நாம் காக்கலாம்;
❊ எம்முள்ளே கலந்துள்ள பிராணவாயுவையும் நன்றாகக் காக்கலாம்;
❊ இறை சிந்தனையைக் கருத்தில் என்றும் நிலையாகப் பதித்தால் அனைத்தையும் நன்றாகக் காக்கலாம்.

714 நிலைபெற நின்றது நேர் தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலை வழி நின்ற கலப்பை அறியில்
அலைவு அற ஆகும் வழிஇது ஆமே.

❊ நெறிப்படுத்தப்பட்ட வாயுவானது எம்முள்ளே நிலையாக நிற்கின்றது.
❊ இறைஜோதி எம்முள்ளே சிலைபோன்று நிற்கின்றது.
❊ எம்முள்ளே உள்ள பல்வேறு வகையான செயற்பாட்டு வகைகளை உணரவேண்டும். சத்தி சிவம் கலப்பை, ஆத்மாசிவம் கலப்பை, ஆத்மா சத்தி கலப்பை அறிதல் வேண்டும்;
❊ அப்பொழுது நாம் எவ்வித அங்கலாய்ப்பும் இன்றி இருப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

715 புடை ஒன்றி நின்றிடும் பூதப் பிரானை
மடை ஒன்றி நின்றிட வாய்த்த வழியும்
சடை ஒன்றி நின்ற அச்சங்கர நாதன்
விடை ஒன்றில் ஏறியே வீற்றிருந்தானே.

❇ ஐந்து பூதங்களுக்கும் மேலாய இறைவர் எம்முள்ளே மலர்ந்த வண்ணமே உள்ளார்;
❇ எம்முள்ளே பல்வேறு வழிகளாகச் செல்வன அனைத்தும் ஒன்றுபட்டு ஒரே வழியில் நிற்கும்;
❇ சங்காரத் தொழில் செய்கின்ற சங்கரன் சுத்த சத்தியைச் சடையாக அணிந்துள்ளான்–விடையில்–எருதில் – ஆத்மாவில் வீற்றிருப்பான்.

716 இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு வெளிபெற நிற்கத்
தருக்கு ஒன்றி நின்றிடும் சாதகன் ஆமே.

❇ கண்முன்னே நிகழ்கின்ற காலத்தின் பெருமையைச், செயற்பாட்டை அறியாது அநேகர் உள்ளனர்.
❇ காலம் பெருக்கம் அடைவதை–அதன் பெருமை நிறைந்த செயற்பாட்டை அறிய வேண்டும்;
❇ சிறந்த சாதனை மேற்கொள்ளும்போது வாயு ஒடுங்கி வெளிநிலையை அடையும்;
❇ இச் சாதனையாளருக்கு சகலதும் எதுவித தடையும் இன்றி ஒன்றித்து நிற்கும்.

717 சாதகமான அத் தன்மையை நோக்கியே
மாதவம் ஆன வழிபாடு செய்திடும்
போதகம் ஆகப் புகல் உறப் பாய்ச்சினால்
வேதகமாக விளைந்து கிடக்குமே.

❇ சிறந்த சாதனையை மேற்கொண்டு, நல்ல சாதகன் ஆகி, இறைவரை நோக்கிப் பெரும் தவம் செய்து வழிபாடு ஆற்றவும்;
❇ சகலவற்றையும் இறைவரின் போதனையாக எம்முள்ளே உணர்ந்து கொண்டால்;
❇ அனைத்தும் எம்முள்ளே சப்த்த சொரூபமாகப் புலப்படும்–வெளிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

718 கிடந்தது தானே கிளர் பயன் மூன்று
நடந்தது தானே உள் நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே பங்கயம் ஆகத்
தொடர்ந்தது தானே அச்சோதியுள் நின்றே.

❊ எம்முள்ளே மூன்றுவித பயன்பாடுகள் இருக்கின்றன.
1. சத்தியின் பயன் 2. சடப்பொருளின் பயன்
3. சத்தி, சடப்பொருள் இணைவதால் வரும் பயன்.
❊ இம்மூன்று பயன்பாடுகளும் ஒருமித்து நடு நாடியில் ஒன்றாகிவிடுகின்றன;
❊ இவை பின்னர் சிரசின் உச்சியில் ஆயிரம் இதழ்த் தாமரையாக மலர்ந்து இருக்கும்;
❊ மேலும் இவை தொடர்ந்து சகஸ்ரத்தில் சோதிமயமாக இருக்கும்.

719 தானே எழுந்த அத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்து எம் உள்ளே இருந்திடும்
வானோர் உலகு ஈன்ற அம்மை மதித்திடத்து
தேனே பருகிச் சிவாலயம் ஆகுமே.

❊ இயல்பாகத் தானாக சுத்த சத்தி– இறைவி எம்முள்ளே எழுந்து அருளுவார்;
❊ இறைவி உடலின் வழியாகவும் உட்சென்று எம்முள்ளே வீற்றிருப்பார்;
❊ இறைவியே தேவர்களின் உலகத்தையும் பெற்றெடுத்தவர்;
❊ இவ்வாறான பெருமை நிறைந்த இறைவியை வழிபடும்போது எமக்கு சிவ அமிர்தம் கிடைக்கும். நாமும் சிவ பரம்பொருள் வாழும் ஆலயம் ஆகிவிடுவோம்.

720 திகழும் படியே செறிதரு வாயு
அழியும் படியை அறிகிலர் ஆரும்
அழியும் படியை அறிந்த பின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலும் ஆமே.

❊ வாயுவானது எல்லாவற்றையும் நன்றாகவே ஆக்குகின்றது;
❊ அதே நேரத்தில் அழிக்கும் செயலையும் ஆற்றிக் கொண்டுள்ளது.இதனை அநேகர் அறியாது உள்ளனர்;
❊ வாயுவினது அழித்தல் செயல்பாட்டை அறிந்து கொண்டால்;
❊ என்றும் மலர்ந்த வண்ணம் உள்ள பிராணனாரைச் சார்ந்தும், நந்தி எம் பெருமானுடன் அமர்ந்தும் விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

721 சோதனை தன்னில் துரிசு அறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னில் பிரியுநாள்
சாதனம் ஆகும் குருவை வழிபட்டு
மாதனம் ஆக மதித்துக் கொள்ளீரே.

* எந்தவிதமான சோதனைகள் வந்தாலும் இறைவரை நாம் எவ்வித குற்றமும் இன்றிக் காணலாம்;
* ஆத்மா உடல் எடுக்கு முன்னர் சிவ சத்தி ஐக்கிய நிலையில் இருக்கும். ஆனால் உடம்பு எடுக்கும் போது இவ்விரண்டும் பிரிந்து விடும்;
* எல்லா வகையான சதனா வகைகளையும் ஏற்படுத்திய இறை குருவை வழிபாடு செய்தல் வேண்டும்;
* இறைவரே எல்லாச் செல்வத்திலும் பெரிய சிறந்த செல்வம் ஆகும்.

722 ஈர் ஆறு கால் கொண்டு எழுந்த புரவியைப்
பேராமல் கட்டிப் பெரிது உண்ண வல்லிரேல்
நீர் ஆயிரமும் நிலம் ஆயிரத்து ஆண்டும்
பேராது காலம் பிரான் நந்தி ஆணையே.

* 12 வகையான ஆதாரங்களை- காலப் பிரமாணத்தை உடையவர் பிராணனார்;
* இந்தப் பிராணனாரை எவ்வித சோர்வும் ஏற்படாது பயன்படுத்தி, உள்ளே எடுக்க வேண்டியவற்றை எடுத்தல் வேண்டும்;
* அப்பொழுது நீரிலே ஆயிரம் ஆண்டுகளும், நிலத்திலே ஆயிரம் ஆண்டுகளும் உடம்பு சிதைவுபடாது வாழும் தன்மை கிடைக்கும்;
* இவ்வாறு நிகழும் என நந்தி எம்பெருமானார் மீது ஆணையாகக் கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

723 ஓசையில் எழும் ஒளியின் கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டும்
தேசியும் தேசனு ம் தன்னில் பிரியு நாள்
மாசறு சோதி வகுத்து வைத்தானே.

❊ சப்த்த சொரூபம் ஊடாக நாத சொரூபம் கடந்து ஜோதி சொரூபம் வெளிப்படும். அப்பொழுது ஜோதியில் இருந்து ஐந்து கண்களாகிய ஐந்து எழுத்துக்கள் புலப்படும்;

❊ இவ் ஐந்து எழுத்துக்களும் நாசியில் மூன்றாகவும் நாவில் இரண்டாகவும் உணரப்படும்;

❊ நாதமும் சப்த்தமும் இணைந்த நிலையில் இருந்து பிரிந்து போனால் "இறப்பு"- "வினை" எனும் நிலை உருவாகி விடும்;

❊ எந்தவித மாசுக்களும் அற்ற தூய சோதியை என்றும் காவலாக இறையவர் எமக்கு வகுத்துள்ளார்.

## XIII சரீர சித்தி உபாயம்

724 உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

❊ உடம்பைக் கண்ணும் கருத்துமாகப் பேணாவிட்டால் உடம்பு நோய்ப்பட்டு அழிந்துபோகும்; அதனோடு உயிராரும் அழிந்து போவர்;

❊ உறுதியான நிலையான மெய்ஞ்ஞானத்தை இவர்கள் பெற்றுக்கொள்ள மாட்டார்கள்;

❊ திருமூலராகிய யான் உடம்பை மிக நுட்பமாக வளர்த்துக் கொள்ளும் வழிவகைகளை அறிந்து கொண்டேன்;

❊ அதனால் உடம்பை நன்கு பாதுகாத்து வளர்த்தேன். அதனுள் உள்ள உயிரையும் வளர்த்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

725 உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே.

❋ மெய்ஞ்ஞான உணர்வு பெறுவதற்கு முன்னம் யான் உடம்பை இழுக்கானது-அருவருப்பு உடையது என எண்ணிவிட்டேன்;

❋ மெய்ஞ்ஞான உணர்வு பெற்ற பின்னர் உடம்பினுக்கு உள்ளே உறுதியான உண்மையான மெய்ப்பொருளைக் கண்டுகொண்டேன்;

❋ இந்த உடம்பினுக்கு உள்ளே உத்தமராகிய இறைவர் கோயில் கொண்டுள்ளார் என்பதை உணர்கின்றேன்;

❋ அதனால் உடம்பை யான் என்றும் கண்ணும் கருத்துமாக இருந்து போற்றுகின்றேன் - பாதுகாத்து வருகின்றேன்.

726 சுழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
உழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்குக்
கழற்றி தவிர்ந்து உடல் அஞ்சனம் ஆமே.

❋ இறைவரை நோக்கி எமது செயற்பாடுகளை நாம் நெறிப்படுத்த, எம்மில் உள்ள எல்லாவித குறைபாடுகளும் நீங்கிவிடும்;

❋ எம்மில் உள்ள சகல அழுக்குகளையும் நீக்க வேண்டும். இதய கமலம் மலர்ச்சி அடையும் வண்ணம் பிராணாயாமம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

❋ எல்லாவற்றையும் சிறந்த முறையில் நெறிப்படுத்தும் வழிவகையை அறிதல் வேண்டும்;

❋ அப்பொழுது உடலானது சகலவிதமான தடைகளையும் தவிர்த்து அஞ்சனம் போல் ஆகிவிடும். முக்காலமும் அறியும் தன்மையைக் கொண்டது அஞ்சனம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

727 அஞ்சனம் போன்று உடலை அறும் அந்தியில்
வஞ்சக வாதம் அறு மத்தியானத்தில்
செஞ்சிறு காலையில் செய்திடில் பித்து அறும்
நஞ்சு அறச் சொன்னோம் நரை திரை நாசமே.

❊ கருமை நிறம் போன்று உடலின் உள்ளே கலந்து இருக்கும் அழுக்கை அகற்ற மாலைவேளையில் இறைசாதனை மேற்கொள்ள வேண்டும்;
❊ எல்லாவிதமான வஞ்சகங்களையும் விளைவிக்க வல்ல வாதத்தை அகற்ற, மத்தியானத்தில் இறைசாதனை மேற்கொள்ள வேண்டும்;
❊ காலையில் இறைசாதனை மேற்கொண்டால் பித்தம் நீங்கிவிடும்.
❊ இவ்வாறு அனைத்து சாதனைகளையும் மேற்கொண்டால் நரையும், மூப்பும் நீங்கிவிடும் எனத் திருமூலராகிய யான் உறுதி கூறுகின்றேன்.

728 மூன்று மடக்குடைப் பாம்பு இரண்டு எட்டு உள
வேன்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம்
நான்ற இம்முட்டை இரண்டையும் கட்டியிட்டு
ஊன்றி இருக்க உடம்பு அழியாதே.

❊ நடுநாடி, இடநாடி, வலநாடி ஆகிய மூன்று குடைகள் எம்முள்ளே உள்ளன. பத்து வகையான பாம்புகள் உள்ளன. (காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்,மாச்சரியம், சாமம், பேதம், தானம், தண்டம்)
❊ சுவாசத்தின்போது பிராணனார் ஓடும் வீதி எம்முள்ளே 12 அங்குலமாக உள்ளது;
❊ மூன்று நாடிகளின் செயற்பாட்டாலும் ***"சித்துக்கள் எனும் முட்டை"*** உருவாகும். பத்து வகைப் பாம்புகளாலும் ***"உலகாயுதம் எனும் முட்டை"*** உருவாகும். இவ் இரண்டையும் இறை வழிபாட்டால்- சாதனையால் கட்டிப் போட வேண்டும்;
❊ பின்னர் உறுதியான சிந்தனையுடன் இருந்தால் உடம்பு ஒருபோதும் அழியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

729 நூறும் அறுபதும் ஆறும் வலம் வர
நூறும் அறுபதும் ஆறும் இடம் வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே.

❊ நூறு வயதிலும், அறுபது வயதிலு ம் ஆறு வயதிலும் அர்த்த நாரீஸ்வர சொரூபத்தில் உள்ள அப்பனை வழிபடுங்கள்;
❊ நூறுவயதிலும், அறுபது வயதிலும், ஆறு வயதிலும் அர்த்த நாரீஸ்வர சொரூபத்தில் உள்ள அம்மையை வழிபடுங்கள்;
❊ நூறு வயதிலும் அறுபது வயதிலும், ஆறு வயதிலும் அம்மை அப்பர் ஆகிய அர்த்தநாரீஸ்வரரை வழிபடுங்கள்;
❊ அப்பொழுது நீங்கள் நூறு வயது நீங்கி, அறுபது வயதும் நீங்கி ஆறு வயதுப் பாலகனாக இருப்பீர்கள்.

730 சத்தியார் கோயில் இடம் வலம் சாதித்தால்
மத்தியானத்திலே வாத்தியம் கேட்கலாம்
தித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியம் சொன்னோம் சதா நந்தி ஆணையே.

❊ எம்முள் சுத்த சத்தியாகிய இறைவி வீற்றிருக்கும் கோயிலை இடநாடியாலும், வல நாடியாலும் பிராணனாரின் துணை கொண்டு வழிபாடு செய்தல் வேண்டும்;
❊ அப்பொழுது உச்சி வெய்யிலிலும் எமக்குள்ளேயே நாம் இறைவரின் வாத்தியத்தின் ஒலியினைக் கேட்போம்;
❊ இறைவர் எம்முள்ளே தித்தித்த ஆனந்தக் கூத்தாக வெளிப்படுவர்;
❊ இவ்வாறு உண்மையில் நிகழும் எனத் திருமூலர் ஆகிய நான் நந்தி மீது ஆணையாகக் கூறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

731 திறத் திறம் விந்துத் திகழும் அகாரம்
உறப் பெறவே நினைந்து ஓதும் சிகாரம்
அறிப்பது மந்திர மன்னிய நாதம்
அறப் பெற யோகிக்கு அற நெறியாமே.

❊ சப்த்த சொரூபமாகிய விந்து சிவ நிலையில் இருந்து புறப்படும்;
❊ எல்லாம் உறுதி பெறும் வண்ணம் "நினைந்து" சி எனும் எழுத்தை ஓத வும்;
❊ அப்பொழுது எம்முள்ளே ஒன்றாக உள்ள இறை மந்திர நாதம் "சி" எமக்கு இறைவரால் அறிவிக்கப்படும்;
❊ ஒரு யோகிக்கு இதனைத் தெளிவு பெற அறிதலே அறநெறியாகும்.

732 உந்திச் சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித்து எழுப்பிச் சிவ மந்திரத்தினால்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித்து எழுப்பச் சிவன் அவன் ஆமே.

❊ இறைவரைச் சதா சிந்தை செய்த வண்ணம், வயிற்றினுள் உள்ள நாபிக் கமலத்தில் இருந்து பிராணனாரை எழுப்ப வேண்டும்.
❊ பிராணனாரை சகஸ்ரத்தில் சிவமந்திரத்தின் உதவியினால் நிலையாக நிறுத்த வேண்டும்;
❊ அதே நேரத்தில் இறை சிந்தனையால் அபானனையும் எழுப்பவும்;
❊ அப்பொழுது "சிவன்" எனும் தேவதை போன்று வந்துவிடலாம்.

733 மாறா மலக் குதம் தன்மேல் இருவிரல்
கூறா இலிங்கத்தின் கீழே குறிக் கொண்மின்
ஆறா உடம்பிடை அண்ணலும் அங்கு உளன்
கூறா உபதேசம் கொண்டது காணுமே.

❊ குதத்தில் இருந்து மேல்நோக்கி இருவிரல் தூரத்தில், ஆண்குறியில் இருந்து கீழ்நோக்கி இருவிரல் தூரத்தில் உள்ள மூலாதாரத்தைச் சிந்தை செய்யவேண்டும்;
❊ எப்பொழுதும் ஓய்வு எடுக்காத உடம்பினுக்கு உள்ளே இறைவர் உள் ளார்;
❊ அவரிடம் இருந்து யாருக்கும் கூற முடியாத சிறந்த இறைபோதனையைக் கேட்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

734 **நீல நிறன் உடை நேரிழையாள் ஒடும்**
**சாலவும் புல்லிச் சதம் என்று இருப்பார்க்கு**
**ஞாலம் அறிய நரை திரை மாறிடும்**
**பாலனும் ஆவர் பரா நந்தி ஆணையே.**

* நீல நிறம் உடைய இறைவியுடன் ஒரு கணமேனும் பிரியாது, இணைந்து இருத்தல் வேண்டும்;
* "சர்வ அணுமுதல் பிரபஞ்சம் வரையுள்ள அனைத்தும் ஒரு சதமும் பெறாது" எனும் எண்ணம் இருத்தல் வேண்டும்;
* அப்பொழுது எமது நரையும், மூப்பும் இப்பூமியில் உள்ளவர்களின் கண் முன்னேயே மாறிவிடும்;
* அத்துடன் நாம் என்றும் பாலன் ஆகவே விளங்குவோம் என திருநந்தி தேவர்மீது திருமூலர் ஆகிய யான் ஆணையிட்டுச் சொல்கின்றேன்.

735 **அண்டம் சுருங்கில் அதற்கு ஓர் அழிவு இல்லை**
**பிண்டம் சுருங்கில் பிராணன் நிலை பெறும்**
**உண்டி சுருங்கில் உபாயம் பல உள**
**கண்டம் கறுத்த கபாலியும் ஆமே.**

* அண்ட சராசரங்கள் சுருங்கில் அவை சுருங்கி ஒடுக்க நிலையில் இருக்கும். ஒரு போதும் அவை அழிந்து போவதில்லை.
* உடம்பு சுருங்கி இல்லாது போனாலும் பிராணனார் என்றும் நிலை பெறுவர்;
* நாம் உட்கொள்ளும் உணவைச் சுருக்கினால் பலவிதமான சாதனைகளை மேற் கொள்ளும் வழிவகைகள் கிடைக்கும்;
* இச் சாதனைகளை மேற்கொண்டால், கண்டம் கருமை நிறம் உடைய சிவன் எனும் தேவதை போன்று ஆகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

736 பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை
அண்டத்துள் உற்று அடுத்து அடுத்து ஏகிடில்
வண்டிச் சிக்கு மலர்க் குழல் மாதரார்
கண்டிச் சிக்கு நற் காயமும் ஆமே.

* உடம்பில் இருக்கும் நோய் ஏற்படுத்துகின்ற வாசல்களைப் பிரபஞ்சத் தினை நோக்கிச் சஞ்சாரம் செய்ய விடவேண்டும்;
* தொடர்ச்சியாகவே இறைவரை நோக்கிச் சாதனை - தவம் செய்யவும்;
* உலகாயுத வாழ்க்கைச் சக்கரத்தில் இருக்கும் இளம் பெணகள்;
* உனது தெய்வீகம் நிறைந்த உடலைக் கண்டு மிகவும் ஆச்சரியப்படு வார்கள்.

737 சுழலும் பெரும் கூற்றுத் தொல்லை முன் சீறி
அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
கழல் கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழல் உளும் தெற்று உளும் நிற்றலும் ஆமே.

* இறைவரின் உண்மையான அடியவர் காலதேவனின் பிடியில் சிக்கி யிருந்தால் ;
* ஈசன் எனும் தேவதை மிகவும் சீற்றம் அடைந்து, அந்த அடியவரை கால தேவனின் பிடியில் இருந்து மீட்கும்;
* இறைவரின் உண்மை அடியவர், இறைவரின் திருப்பாதத்தினைக் காண் பர்;
* இவர்கள் இறைவரின் திருவடி நீழலில் -திருவடியுடன் அமர்ந்து கொள் வார்கள்.

738 நான் கண்ட வன்னியும் நாலு கலை ஏழும்
தான் கண்ட வாயுச் சரீர முழுதொடும்
ஊன் கண்டு கொண்ட உணர்வு மருந்தாக
மான் கன்று நின்று வளர்கின்ற வாறே.

* நாலுவகையான அக்கினிகளை யான் என்னுள்ளே கண்டு கொண் டேன்-காமாக்கினி, கோபாக்கினி, மூலாக்கினி, ஞானாக்கினி;
* ஏழுவகையான கலைகளையும் என்னுள்ளே கண்டேன். ஏழு கலைகளும் ஏழு ஆதாரங்களில் இருந்தும் புறப்படுவன;
* வாயு நிறைந்த சரீரத்தில்"இறை உணர்வு" எனும் மருந்தினைக் கண் டேன்.
* இவ்வாறு பல்வேறு வகையான சூழல்களின் மத்தியில், ஆத்மாவாகிய மான்கன்று இறை அருளால் நல்லவாறு வளர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

739 ஆகும் சனவேத சத்தியை அன்புற
நீர்கொள நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகுபடுத்திப் பல்கோடி களத்தினால்
ஊழ்கொண்ட மந்திரம் தன்னால் ஒடுங்கே.

* வேதங்களில் சாமவேதமே முதன் முதலில் தோன்றியது. இதனை இராவணேஸ்வரர் இசைத்தவர் ஆவர். சாமவேதம் என்றும் சப்த சொரூபமாக இசைக்கப்பட்ட வண்ணமே உள்ளது. சாமவேதம் ஆத்மசத்தியாகி இறை அன்பாக வளர்கின்றது;
* வரம்பு உயர்ந்தால் நீர்கொள்ளும் அளவும் உயரும். நெல்லும் நன்கு வளரும்;
* நெல்லை நன்கு பாகுபடுத்தி நெல் களத்தில் பல்கோடிக்கணக்கானநெல் மணிகள் ஆக்கலாம்;
* இவ்வாறு எமது ஊழ்வினையையும் நன்கு பதப்படுத்தி இறை வழிபாட்டால்–இறைமந்திரத்தால் நாமாகவே நாம் எம்முள்ளேயே ஒடுங்க வேண்டும்.

## XIV கால சக்கரம்

740 மதி வட்டம் ஆக வரை ஐந்து நாடி
இது விட்டு இங்கு ஈர் ஆறு அமர்ந்த அதனால்
பதி வட்டத்து உள் நின்று பாலிக்கு மாறு
மது விட்டுப் போமாறு மாயல் உற்றேனே.

* ஐந்து புலன்களும் ஐந்து வகை வட்டங்களாக ஒரு எல்லைக்குள் நின்று செயற்படுவனவாகும். முதலில் இவ் ஐந்து புலன்களையும் நாடி அவற்றை நன்கு பயன்படுத்த வேண்டும்.
* இறுதியில் இவற்றைவிட்டு இயல்பாகவே நீங்கலாம். 12 வகையான பிராணாயாமக் கலைகளையும் ஆறு ஆதாரங்கள், ஆறு அத்துவாக்கள் ஊடாகச் செயற்படுத்த வேண்டும்.
* இதன் பயனாக நாம் இறைவரின் வட்ட வடிவான – லிங்க வடிவான சந்நிதானத்தில் அமர்ந்து கொள்ளலாம்.
* இதற்காக மயக்கம் தருகின்ற சகலவற்றையும் நீக்க நாம் இறை சாதனை செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

741 உற்ற அறிவு ஐந்தும் உணர்ந்து அறி. ஆறு ஏழும்
கற்று அறி. எட்டும் கலந்து அறி. ஒன்பதும்
பற்றிய பத்தும், பலவகை நாழிகை
அற்று அறியாது அழிகின்ற வாறே.

❊ ஐந்து புலன்களினாலும் சேர்க்கப்படுகின்ற அறிவை உணர்ந்து அறிதல் வேண்டும்;

❊ ஆறு அத்துவாக்களினாலும், ஏழு ஆதாரங்களினாலும் ஆராய வேண்டியவற்றை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

❊ ***"அகர"*** நிலையாகிய சிவநிலை இறை ஆத்ம கலப்பினாலேயே அறியப்படும்;

❊ ஒன்பது வகை சத்தியையும், பற்றிய பிணைப்பையும், காலத்தின் பல்வேறு செயற்பாடுகளையும் நாம் தெளிவுற அறியாததினால்;

❊ அவை எமக்கு முன்னே மறைந்து போகின்றன.

## ஒன்பது வகையான சத்திபேதம் – நவராத்திரி நாயகிகள்.

| சத்திநாமம் | | நிறம் | | சத்திபேதம் |
|---|---|---|---|---|
| 1. அண்ட காயத்திரி | – | கரும் கருமை | – | அண்ட(வீரம் )சத்தி |
| 2. காம காயத்திரி | – | மென் கருமை | – | காம(வீரம்) சத்தி |
| 3. ஆத்ம காயத்திரி | – | செங்கருமை | – | ஆத்ம (வீரம்) சத்தி |
| 4. அண்ட சாவித்திரி | – | கரும் சிகப்பு | – | அண்ட செல்வம் |
| 5. காய சாவித்திரி | – | மென் சிகப்பு | – | காய செல்வம் |
| 6. ஆத்ம சாவித்திரி | – | வெண் சிகப்பு | – | ஆத்ம செல்வம் |
| 7. அண்ட சரஸ்வதி | – | செவ்வெள்ளை | – | அண்ட கல்வி |
| 8. உடற் சரஸ்வதி | – | மென்வெள்ளை | – | உடற் கல்வி |
| 9. ஆத்ம சரஸ்வதி | – | தூய வெள்ளை | – | ஆத்ம கல்வி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

742

அழிகின்ற ஆண்டு அவை ஐ ஐஞ்சு மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்று என்பது ஆகும்.
கழிகின்ற கால் ஆறு பத்து இரண்டு என்பது
எழுகின்ற ஈர் ஐம்பது எண்ணற்று இருந்தே.

* திருமூலராகிய எனது முதல் இருபத்து எட்டு ஆண்டுகளும் வெறுமனே கழிந்துவிட்டன;
* 33 ஆவது ஆண்டில் எல்லாவிதமான சொல்லக் கூடிய அறிவினைப் பெற்றுக்கொண்டேன்;
* 62 ஆவது ஆண்டில் அழிந்து போகின்ற காலத்தைக் கடந்து விட்டேன்;
* அதன்பின்னர் எண்ணமுடியாத நூறுநூறு ஆண்டுகள் யான் வாழ்ந்து கொண்டுள்ளேன்.

743

திருந்து தினம் அத் தினத்தின் ஒடு நின்று
இருந்து அறி நாள் ஒன்று இரண்டு எட்டொடு மூன்று
பொருந்திய நாளொடு புக்க அறிந்து ஓங்கி
வருந்துதல் இன்றி மனை புகலாமே.

* நாம் விழிப்படைந்த நாளை என்றும் எண்ணி அந்த நாளொடு என்றும் நிலையாக நிற்றல் வேண்டும்;
* 14 நாட்கள் தொடர்ச்சியாக ஓரிடத்தில் ஆறி அமர்ந்து கொள்ள வேண்டும்;
* எந்த நாளில் நாம் தெளிவு பெற்று, இறைவருடன் தொடர்பு ஏற்பட்டது என்பதை அறிய வேண்டும்.
* அதன் பின்னர் எந்தவித கஷ்டமும் இன்றி இறைவரின் வீட்டிற்கு நாம் செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

744 **மனை புகுவீரும் அகத்திடை நாடி**
**என இருபத்து ஐஞ்சும் ஈர் ஆறு அதனால்**
**தனை அறிந்து ஏறட்டுத் தற்குறி ஆறு**
**வினை அறி ஆறு விளங்கிய நாலே.**

* இறையவரின் மெய்ஞ்ஞான வீட்டிற்கு செல்பவர்களும் தங்களது ஆத்மாவிற்குள் முதலில் செல்ல வேண்டும்;
* ஆத்ம தத்துவத்தை அறிய 36 தத்துவங்களையும், 60 தாத்துவிகங்களையும் அறிதல் வேண்டும்(36 + 1) ;
* தன்னை முற்று முழுதாக அறிந்தபின், தன்னுள்ளே உள்ள ஆத்மசொரூபத்தினுள் ஆறிக் கொள்ள வேண்டும்;
* "வினை" இருப்பதை நன்கு அறிந்து ஆறவேண்டும். வினையின் தாற்பரியம் **நாலுவகையான வாழ்க்கைப்** பருவத்திலும் செயற்படுகின்றது; **(மாணவப்பருவம், குடும்பப் பருவம், சமுதாயப் பருவம், சந்நியாசப் பருவம்).**

745 **நாலும் கடந்தது, நால்வரும் நால் ஐஞ்சு**
**பாலம் கடந்தது பத்துப் பதின் ஐஞ்சு**
**கோலம் கடந்த குணத்து ஆண்டு மூ இரண்டு**
**ஆலம் கடந்தது ஒன்று ஆர் அறிவாரே.**

* நாலு சனற்குமாரர்களும் நாலு வகையான வாழ்க்கைப் பருவத்தையும், இருபது வகையான பாலங்களையும் கடந்தவர்கள்;
* இவர்கள் இருபத்து ஐந்து வகையான கோலங்களைக் கடந்த குணத்தவர்கள்;

பூமியில் உள்ளவர்களை ஆண்டு கொள்வதற்காக 6 வகையான, 6 வகை மாற்றங்களைக் (ஆலம்-நஞ்சு-மாற்றம்) கடந்தவர் ஒருவர் உளர். அவரே * திருநந்தி தேவர். அவரை யார்தான் அறியப் போகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

746 **ஆறும் இருபதுக் கை ஐஞ்சு மூன்றுக்கும்**
**தேறும் இரண்டு இருபத்து ஒரு ஆறு இவை**
**கூறு மதி ஒன்றினுக்கு இருபத்து ஏழு**
**வேறுபதி அங்க நாள் விதித்தானே.**

* இருபது கை – இராவணேஸ்வரர்
ஐஞ்சு – பிரம்மா, விஷ்ணு, சிவன், ஈசர், சதாசிவர்
மூன்று – திருநந்திதேவர், அர்த்த நாரீஸ்வரர், சுத்தசத்தி
இரண்டு – நாதம், பிந்து
ஆகியோர் இறையவர் சந்நிதானத்தில் ஆறுதல் பெற்றுக் கொள்கின்றார்கள்;

* இருபத்து – சர்வலிங்கமும் , ஆத்மலிங்கமும்
இறை சந்நிதானத்தில் ஆறுதல் பெறுகின்றன.

* சந்திரனது சூழற்சியை வைத்து 27 நட்சத்திரங்கள் பூமி சார்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.
பூமியின் சுழற்சியை வைத்து ஒருநாள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

747 **விதித்த இருபத்து எட்டொடு மூன்று அறையாகத்**
**தொகுத்து அறி முப்பத்து மூன்று தொகுமின்**
**பதித்து அறி பத்து எட்டும் பார் ஆதி கணால்**
**உதித்து அறி மூன்று இரண்டு ஒன்றின் முறையே.**

* இருபத்து – சர்வலிங்கம் –சத்தி சொரூபம்
ஆத்மலிங்கம் –ஆத்ம சொரூபம்
எட்டு – அகரம்– சிவம்
– ஆகிய இம்மூன்றும் தனித்தே விளங்கும்;

* மூன்றுபத்து – சர்வலிங்கம் –சத்தி சொரூபம்
ஆத்மலிங்கம்–ஆத்ம சொரூபம்
சிவலிங்கம்–சிவ சொரூபம்
இம்மூன்றையும் தொகுத்து அறிந்து தெளிவடையுங்கள்;

* பத்து – லிங்க வடிவம்
எட்டு – அகரம்–சிவம்
சகல வடிவங்களையும்"**சிவம்**" ஆகவே பாவனை செய்ய வேண்டும். ஆதியாகிய அகக்கண்ணால் – ஆத்மாவால் இறைவரை வழிபாடு செய்ய வேண்டும்;

* **இரண்டு** – உகரம் – சுத்த சத்தியின் கருணையால் , உதவியால், **மூன்றாகிய** – சிவம், ஆத்மா, சுத்த சத்தி ஆகியவற்றைத் தெளிவுபெற உணர்ந்து அறிதல் வேண்டும்.
**ஒன்று** –சிவம், **இரண்டு** – சுத்த சத்தி, **மூன்று** – ஆத்மா
என்ற ஒழுங்கில் இம் மூன்றையும் தெளிவுபெற உணர்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

748 **முறை முறை ஆய்ந்து முயன்றிலர் ஆகில்**
**இறை இறை ஆர்க்கும் இருக்க அரிது**
**மறையது காரணம் அற்று ஒன்றும் இல்லை**
**பறை அறையாது பணிந்து முடியே.**

❋ மிகவும் உயர்ந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து முறையாகவும், தெளிவாகவும் முயற்சியுடன் அனைத்தையும் ஆராய்ந்து கொள்ளுங்கள்;
❋ இவ்வாறு சிரத்தையுடன் முயற்சி செய்யாவிடில் இறையவர் காட்சி காண்பது மிகவும் கடினமாகிவிடும்;
❋ இறையவர் என்றும் மறைபொருளாகவே இருப்பதற்கு எந்தவித காரணங்களும் இல்லை;
❋ அதனால் எவ்வித படாடோபமும் இன்றி இறையவரை என்றும் பணிந்து வழிபாடு செய்யுங்கள்.

749 **முடிந்தது அறியார் முயல்கின்ற மூர்க்கர்**
**இடிஞ்சில் இருக்க விளக்கு எரிகொண்டு**
**கடிந்தனன் மூளக் கதுவ வல்லார்க்கு**
**நடந்திடும் பாரினில் நண்ணலும் ஆமே.**

❋ ஏற்கனவே தீர்மாணிக்கப்பட்டதை அறியாது, உணராது உள்ளனர் மூர்க்கக் குணம் உடையோர்;
❋ விளக்கின் பீடமும், விளக்கும் உண்டு. ஆனால் அவ்விளக்கில் ஒளியினை ஏற்றி அதனை நன்கு பயன்படுத்த வேண்டும்;
❋ வேண்டாதவற்றைக் கடிந்து நீக்கி, இறை ஒளியுடன் நாம் ஒன்றாக வேண்டும்;
❋ அப்பொழுது நாம் பூமியில் நிகழவேண்டிய நல்ல நிகழ்வுகளை நாடிச் செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

750 நண்ணு சிறு விரன் ஆண் அக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடும்
சென்னியில் மூன்றுக்கும் சேரவே நின்றிடும்
உன்னி உணர்ந்திடும் ஓவியம் தானே.

* சிறுவிரல்- சின்னிவிரல் அளவு அமைந்த முக்கோண வடிவிலான மூலாதாரம் ஆண்குறியின் கீழ் உள்ளது;
* மார்பின் மையத்தில் முன்னோக்கி சிறுவிரல் அளவு அமைப்பில் ஆத்ம இதயவெளி உண்டு;
* சிறுவிரல் அளவு அமைப்பில் சகஸ்ரத்தில்-சிரசின் உச்சியில் உயிர் செறிவு அடைந்துள்ளது;
* இறை ஆர்வத்துடன் முயற்சி செய்யும்போது இவை அனைத்தும் இறை ஓவியம் போன்று எம்மால் உணரப்படும்.

751 ஓவியமான உணர்வை அறிமின்கள்
பாவிகள் இத்தின் பயன் அறிவார் இல்லை
தீவினையாம் உடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே.

* எம்முள்ளே, இறையவர் ஓவியம் போன்று உணர்வு வடிவமாக உள்ளதை அறிந்து கொள்ளுங்கள்;
* சதா திசை விலகிச் செல்லும் சிந்தனை உடையவர்கள் இவ் ஓவியத்தின் பயன்பாட்டை அறியாது உள்ளார்கள்;
* இதனை அறியாதவர்கள் மண், வான், விண் ஆகிய மூன்று மண்டலங்களிலும் தீவினையில் நின்று உழல்வார்கள்;
* இறையவர் ஓவியம் புண்ணியம் நிறைந்தது. ஒரு ஆத்மபூவில் அமர்ந்திருக்கும் லிங்க அமைப்பைப் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

752 தண்டு உடன் ஓடித் தலைப்பு எய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்து உடல் ஒத்திடும்
கண்டவர் கண்டனர் காணார் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்கு கின்றாரே.

* தன்னுள்ளே உள்ள ஆத்ம தண்டுடன்-லிங்கத்துடன் ஒன்றாகி இறை தத்துவம் பெற்ற யோகி ஒருவரின் உடல்;
* மண், வான், விண் ஆகிய மண்டலங்களில் மிகவும் மகிழ்வுடன் வாழும் வல்லமை உடையதாகிவிடும்;
* இறைவரை-உண்மையை- சத்தியத்தைப்- பரம்பொருளைக் கண்டவர்கள் என்றும் கண்ட வண்ணமே உள்ளார்கள்;
* மற்றையோர் காணவே மாட்டார்கள். இவர்கள் தங்கள் வினைப்பயனுக்கு ஏற்றவாறு உடலால் பிணங்கி, உடல் வாழ்வு செய்து இறப்பர்.

753 பிணங்கி அழிந்திடும் பேறு அது கேள் நீ
அணங்கு உடன் ஆதித்தன் ஆறு விரியில்
வணங்கு உடனே வந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக்கு ஆகச் சுழல்கின்ற வாறே.

* தெளிவில்லாத நிலையில் பலவிதமான பிணக்குகள் தோன்றும். அதனால் பல அழிவுகளே ஏற்படும்;
* சுத்த சத்தியுடன் ஆத்மாவானது கூடி ஆறு ஆதாரங்களுக்கு ஊடாகவும் விரிந்து மலர்ச்சி அடையும்;
* அப்பொழுது சுத்த சத்தியை - இறைவியைப் பணிந்து தாமதம் இன்றி வழிபாடு செய்யவும்;
* தெளிவில்லாதவர்கள் வெறும் உலக வாழ்வுக்காக மட்டும் சுழன்று திரிவர். அதனால் அவர்கள் பெற்ற வாழ்வும் குலைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

754 சுழல்கின்றவாறு இன் துணை மலர் காணான்
தழல் இடைப் புக்கிடும் தன்னுள் இலாமல்
கழல் கண்டுபோம் வழி காண வல்லார்க்குக்
குழல் வழி நின்றிடும் கூத்தனும் ஆமே.

* வாழ்க்கையில் தெளிவில்லாதவர்கள் - அலைந்து திரிபவர்கள் சிறந்த துணையினைக் காணவே மாட்டார்கள்;
* தன்னுள்ளே தோன்றுகின்ற ஞான அக்கினியை உணரவே மாட்டார்கள். ஆனால் வெளியே அக்கினியை வளர்த்துக் கொள்வார்;
* இறையவரின் திருப்பாதத்தினைக் காணவல்ல சாதனையை மேற் கொள்ள வேண்டும்;
* அவ்வாறாயின், சகல அனுத்துகள்களிலும் இறையவர் நடனம் புரிவதை நாம் உணரலாம்.

755 கூத்தன் குறியில் குணம்பல கண்டவர்
சாத்திரம் தன்னைத் தலைப்பு எய்து நிற்பர்கள்
பார்த்து இருந்து உள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனும் ஆகி அலர்ந்து இரும் ஒன்றே.

* இறைவரின் கட்டளையில் பலவிதமான குணங்களைக் காண்பவர்கள்;
* இறையவர் தத்துவத்தை சாஸ்திரங்களாக வகுத்துத் தொகுப்பார்கள். மக்கள் முன்னிலையில் தலைமைத்துவம் பெற்றும் விளங்குவர்;
* சதா விழிப்பு நிலையில் இருந்து அகமுகமாக உள்நோக்கிச் சென்றால் இறையவரின் சகலவித அனுபவங்களும் கிடைக்கும்;
* இதனால் தெளிவு பெற்று, ஆத்மார்த்தமாக மலர்ச்சி அடைந்து இறை வரின் ஏகாந்த சிந்தனையில் நாம் அமர்ந்து கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

756 ஒன்று இல வளர்ச்சி உலப்பு இலி கேள் இனி
நன்று என்று மூன்றுக்கு நாள் அது சென்றிடும்
சென்றிடு முப்பதும் சேர இருந்திடில்
குன்று இடைப் பொன் திகழ் கூத்தனும் ஆமே.

- ❇ உவமைகள் எதுவும் கூற முடியாதது. வளர்ச்சியும், தேய்வும் அற்றது. முழுமைத்துவமானது. என்றும் ஒன்றானது. ஏகமானது. அதுவே பரம் பொருள் ஆகும்;
- ❇ கடந்த காலம், எதிர்காலம் என்று எண்ணி நன்மை தீமையை ஆராய்ந்தால் நிகழ்காலமும் சென்றுவிடும்.
- ❇ முதல் முப்பது ஆண்டுகளும் தெளிவுடனே, இறையவர் சிந்தனையோடு இருத்தல் வேண்டும்;
- ❇ இறையவரின் திருக்கூத்து, மலைத்தொடர்களின் இடையே தென்படும் பொன்மலையாகிய கைலாயம் போன்று எமக்குப் புலப்படும்.

757 கூத்து அவன் ஒன்றிடும் கூர்மை அறிந்து அங்கே
ஏத்துவர் பத்தினில் எண்திசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பது மரை நோக்கிடில்
சாத்திடு நூறு தலைப்பு எய்யலாமே.

- ❇ இறைவரின் திருக்கூத்தை அறிந்து, அதன் தெய்வீக நுட்பத்தை உணர்ந்து அதனுடன் ஒன்றாக வேண்டும்.
- ❇ பக்தர்கள் இறைவரின் திருக்கூத்தை எண்திசைகளுக்கு ஊடாக லிங்கவடிவமாகக் கண்டு வழிபடுவர்;
- ❇ சாந்த சொரூபராகவே என்றும் விளங்கும் மௌன ஞான மூர்த்தியான திருநந்திதேவரை மிகவும் ஆத்ம மகிழ்வுடன் போற்றுங்கள்;
- ❇ அப்பொழுது நீங்கள் நூறு தலைமுறைகளைக் கண்டு வாழ்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

758 **சாத்திடு நூறு தலைப்பு எய்து நின்றவர்**
**காத்து உடல் ஆயிரம் கட்டு உறக் காண்பர்கள்**
**சேர்த்து உடல் ஆயிரம் சேர இருந்தவர்**
**மூத்து உடன் கோடி யுகம் அது ஆமே.**

* நூறு தலைமுறைகளைக் கண்டு வாழ்ந்தவர்கள் ,ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் தங்கள் உடலைக் காத்து வாழ்வார்கள்;
* ஆயிரம் ஆண்டுகள் இறைவரின் சிந்தனையோடு இருந்தவர்கள்;
* கோடிக்கணக்கான யுகங்களாக முழுமைத்துவம் அடைந்த ஞானப் பழமாக வாழ்வார்கள்.

759 **உகம் கோடி கண்டும் ஒசிவு அற நின்று**
**அகம் கோடி கண்டு உள அயர்வு அறக் காண்பர்கள்**
**சிவம் கோடி விட்டுச் செறிய இருந்து அங்கு**
**உகம் கோடி கண்டு அங்கு உயர் உறுவாரே.**

* உண்மை ஞானிகள், கோடிக்கணக்கான யுகங்கள் வாழ்ந்தும் ,எந்தவித பெருமையும், புகழ்ச்சியும் இன்றி இருப்பார்கள்;
* இவர்கள் எந்தவித சோர்வும் இன்றி தம்முள்ளே ஏக முடிவான இறைவரைக் காண்பார்கள்;
* ***"சிவம்"*** அன்பு எனும் தெளிந்த முடிவுடன் இவர்களினுள் இருக்கும்;
* கோடிக்கணக்கான யுகங்களைக் கண்டு இவர்கள் இறைவரின் ஏற்பாட்டில் மிக உயர்நிலையில் இருப்பார்கள்.

760 **உயர் உறுவார் உலகத்தொடும் கூடிப்**
**பயன் உறுவார் பலர் தாம் அறியாமல்**
**செயல் உறுவார் சிலர் சிந்தை இலாமல்**
**கயல் உறுவார் கண்ணியைக் காண்கிலாரே.**

* இறை சிந்தனையாளர்கள், உலகத்தவர்களுடன் சேர்ந்து மேலும் உயர்வு நிலை அடைவர்.
* உலகத்தவர்கள் பலர் தங்களை அறியாமல் இறை சிந்தனையாளர்களிடம் இருந்து நல்ல பயன்பெற்றுக் கொள்வார்கள்;
* சிலர் எதுவித தெளிந்த சிந்தனையும் இன்றிச் செயல்படுவார்கள்;
* அழகு நிறைந்த கண்களை உடைய சுத்தசத்தியைக் காணாது உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

761 காணகிலாதார் கழிந்து ஓடிப் போவார்கள்
நாணகிலாதார் நயம் பேசி விடுவார்கள்
காணகிலாதார் கழிந்த பொருள் எல்லாம்
காணகிலாமல் கழிகின்ற வாறே.

- ❊ இறையவர் காட்சியைக் காணாதவர்கள் தங்கள் வாழ்க்கையை வீணாகக் கழித்து அற்றுப் போவார்கள்;
- ❊ பணிவு, கருணை, தயவு தாட்சண்யம் இல்லாதவர்கள் வெறுமனே குறை நிறையின் நயப்பாடுகளைப் பேசித்திரிவார்கள்;
- ❊ எமது ஒவ்வொரு சுவாசத்திலும் எம்முள்ளே காண வேண்டிய மெய்ப் பொருள் உண்டு;
- ❊ மெய்ப்பொருளை ஒவ்வொரு சுவாசத்திலும் காணாதவர்களின் பிராணனாரும் வீணாக விரையம் ஆகிவிடுகின்றது.

762 கழிகின்ற அப்பொருள் காணகிலாதார்
கழிகின்ற அப்பொருள் காணலும் ஆகும்
கழிகின்ற உள்ளே கருத்து உற நோக்கில்
கழியாத அப்பொருள் காணலும் ஆமே.

- ❊ வீணாகக் கழிந்து போகின்ற பிராணனாரைத் தெளிவுபடக் காணாதவர்கள்;
- ❊ கழிந்து போகின்ற பிராணனாரை உண்மையில் கண்டு கொள்ள முடியும்.
- ❊ எம்முள்ளேயே நாம் ஏகமாகி ஒருமித்து இறைசிந்தையுடன் அனைத்தையும் தெளிவு பட நோக்குதல் வேண்டும்;
- ❊ அப்பொழுது நாம் என்றுமே விரையமாகாத மெயப்பொருளை எம் முள்ளே காணுவோம்;.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

763 **கண்ணன் பிறப்பு இலிகாண் நந்தியாய் உள்ளே**
**எண்ணும் திசை உடன் ஏகாந்தன் ஆயிடும்**
**திண் என்று இருக்கும் சிவகதியாய் நிற்கும்**
**நண்ணும் பதம் இது நாட வல்லார் கட்கே.**

❋ எம் அகக் கண்ணுக்குள் எந்தவித பிறப்பும் அற்ற ஒருவர் உள்ளார். அவர் திருநந்திதேவர் ஆவர்;

❋ நாம் எத்திசை நோக்கி எண்ணினாலும் திருநந்திதேவர் ஏகாந்தம் ஆக எமக்குக் காட்சி கொடுப்பார்;

❋ திருநந்தி தேவர் ஒருவரே திடமாகவும், மௌனமாகவும் இருந்து, உண்மையான ஞான வழிகாட்டியாகி, சிவபரம் பொருளை என்றும் குறித்து நிற்பர்;

❋ சிவபரம்பொருள், திருநந்திதேவர், உண்மைஞானம், உண்மை மௌனம் ஆகியன நாம் காணக்கூடிய காட்சிகளே ஆகும். இவற்றை நாடவல்லார்கள் என்றும் காண்பார்கள்.

764 **நாட வல்லார்க்கு நமன் இல்லை கேடில்லை**
**நாட வல்லார்கள் நரபதியாய் நிற்பர்**
**தேட வல்லவர்கள் தெரிந்த பொருள் இது**
**கூட வல்லார் கட்குக் கூறலும் ஆமே.**

❋ என்றும் இறைவரை நாட வல்லவர்களை நாடி, காலதேவன் ஒருபோதும் செல்லமாட்டான்;

❋ இறைவரை என்றும் நாடுபவர்கள், மனிதர்களுக்குத் தலைவராய் விளங்குவார்கள்;

❋ உண்மைத் தாகத்துடன் தேடுபவர்களுக்கு இறையவர் தெரிந்த பரம் பொருளாகவே இருப்பார்;

❋ உண்மையுடன் உண்மையாகவே கூட வல்லவர்களுக்கு, இறையவர் காட்சியை, இறை செய்தியைக் கூறுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

765 கூறும் பொருள் இது அகார உகாரங்கள்
தேறும் பொருள் இது சிந்தையுள் நின்றிடக்
கூறும் அகாரம் குழல்வழி ஓடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலும் ஆமே.

❊ இறையவர் அகரம் ஆகிய சிவபரம் பொருளாகவும், **உகரம்** ஆகிய சுத்த சத்தியாகவும் காட்சி கொடுப்பார்;
❊ இறைபரம்பொருள் என்றும் எமது சிந்தையில் தெளிந்த காட்சியாகப் புலப்படும்;
❊ சிவபரம்பொருள் சகல அணுத்துகள்களிலும் புலப்படும்;
❊ சிவபரம்பொருள் என்றும் எமது ஆத்மாவில் அமர்ந்து எமக்கு ஆறுதலை வழங்கும்.

766 அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலார்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்களுக்கு
அண்ணல் அழிவு இன்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவன் ஆமே.

❊ இறையவர் வீற்றிருக்கின்ற இருப்பிடத்தை ஒருவரும் அறியாது உள்ளார்களே;
❊ இறையவர் வீற்றிருக்கின்ற இருப்பிடத்தை ஆய்ந்து, உணர்ந்து ,தெளிந்து கொள்ள வேண்டும்.
❊ இவ்வாறு சாதனை மேற்கொள்பவர்களுக்கு, இறையவர் எல்லாவிதமான ஆக்க அழிவுகளும் கடந்து, அவர்களின் உள்ளேயே அமர்ந்திருப்பார்;
❊ இறையவரை நாம் நேரடியாகக், காண்போமானால், நாமும் அவரின் தன்மையைப் பெற்றுவிடுவோம்.
❊ நாம் உண்மையில் அவர் அல்ல.

767 அவன் இவன் ஆகும் பரிசு அறிவார் இல்லை
அவன் இவன் ஆகும் பரிசு அது கேள் நீ
அவன் இவன் ஓசை ஒளியின் உள் ஒன்றிடும்
அவன் இவன் வட்டம் அதாகி நின்றானே.

❊ இறையவரின் சொரூபம் எம்முள்ளே ஆகி இருக்கும் அருட்செய்தியை ஒருவரும் உணர்ந்து அறியாது உள்ளார்கள்;
❊ எம்முள்ளே இருக்கும் இறையவரின் அருட்சொரூபமாகிய பரிசு யாதெனில்;
இறை, ஓசை
இறை ஒளி
ஆத்மலிங்கம் ஆகியன ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

768 வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் உம் உளே
சிட்டன் இருப்பிடம் சேர அறிகிலீர்
ஒட்டி இருந்து உள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடம் காணலும் ஆகுமே.

* எம்முள்ளே உள்ள மூலாதாரத்தில் இருந்து சகஸ்ரம் வரை ஏழுவகை யான வட்டங்கள்-சக்கரங்கள் மலர்ந்துள்ளன;
* இறையவரின் உண்மையான இருப்பிடத்தைச் சேர்ந்து கொள்ளும் வகை தெரியாது எல்லோரும் இருக்கின்றார்களே!
* எம்முள்ளே ஒன்றித்து ஏகமாகி இருக்கும் சிறந்த இறைவழியை உணர வேண்டும்.
* அப்பொழுது என்றும் நிரந்தரமாகவே இருக்கும் இறையவர் இருப்பிடம் நாம் காணலாம்.

769 காணலும் ஆகும் பிரமன் அரி என்று
காணலும் ஆகும் கறைக் கண்டன் ஈசனைக்
காணலும் ஆகும் சதாசிவ சத்தியும்
காணலும் ஆகும் கலந்து உடன் வைத்ததே.

* இறைவரால் ஏற்படுத்தப்பட்ட அண்டத்தின் தொழில் அதிபதிகளாகிய பிரம்மா, விஷ்ணு, சங்கரர், ஈசர், சதாசிவர், சுத்த சத்தி ஆகியோரை நாம் எமது கண்களால் காணலாம்;
* இவர்கள் அனைவரையும் காணும்படியாகவே, எம்முள்ளே - எம்முடன் இத்தேவதைகளின் அம்சங்களை இறையவர் ஏற்படுத்தி உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## XV. ஆயுள் பரிட்சை

770 **வைத்த கை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்**
**உத்தம மிக்கிடில் ஓர் ஆறு திங்களாம்**
**அத்த மிகுத்திட்டு இரட்டியது ஆயிடில்**
**நித்தல் உயிர்க்கு ஒரு திங்களில் ஓசையே.**

* இறையவரின் அருளாகிய திருக்கரம் எமது சென்னியில்-சகஸ்ரத்தில் மிகவும் தெளிவுபடத் தோன்றும்;
* அப்பொழுது ஆறுமாதங்கள் பகலாகவும், ஆறு மாதங்கள் இரவாகவும் அமையும் உத்தமம் ஆன நிலை எமக்குக் கைகூடும்.-ஒருவருடம் ஒரு நாளாகிவிடும்;
* இவ்வாறு ஒருவருடம் ஒருநாள் ஆகும்போது - ஒளி இருள் ஆகிய இருமை வகை நிலையை உணரும்போது;
* அக் கணத்தில் இருந்தே எமது உயிருக்குள் நிரந்தரமாகவே இறை ஓசை ஒலிக்க ஆரம்பித்துவிடும்.

771 **ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின் கண்**
**ஓசை இறந்தவர் ஈசனை உள்குவர்**
**ஓசை இறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்**
**ஓசை உணர்ந்த உணர்வு இதுவாமே.**

* இறையவரின் ஓசையும், அருளல் தொழில் செய்யும் ஈசரும், ஒரேவகையான உணர்வுத் தன்மையைக் கொண்டன;
* இறையவரின் ஓசையினையும் தாண்டிச் செல்பவர்கள், இறையவரைத் தம்முள்ளே உணர்ந்து கொள்வார்கள்;
* இறை ஓசை கடந்தவர்களது ஆத்ம இதயத்தின் உள்ளே ஈசன் குடி இருப்பார்;
* இறை ஓசையினை உணர்ந்து, அதன் பயன்பாட்டையும் கடந்து, இறை உணர்வுடன் இருத்தலே மிகவும் சிறப்புடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

772 ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமே உறைகின்ற நன்மை அளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே உலகில் தலைவனும் ஆமே.

* இயல்பாகவே எம்முள்ளே தோன்றுகின்ற பிராணனார், வாயுவின் செயற்பாட்டால் வீணாக அழிந்து போவதை நோக்கிப் பாருங்கள்.
* இவ்வாறு வீணாக விரையமாகின்ற பிராணனாரை எம்முள்ளேயே நிரந்தரமாக நிறுத்திச் சேமித்தால், எமக்குப் பலவிதமான நன்மையை அது வழங்கும்.
* சகஸ்ரத்தில் நிலையாக ஊற்றெடுக்கின்ற இறை அருட்போதம் எம்மை வந்து சேரும்;
* அதனால் நாமே எமது உலகத்தினில் சிறந்த தலைவராக விளங்குவோம்;

773 தலைவன் இடம் வலம் சாதிப்பார் இல்லை
தலைவன் இடம் வலம் ஆயிடில் தையல்
தலைவன் இடம் வலம் தன்வழி அஞ்சில்
தலைவன் இடம் வலம் தன்வழி நூறே.

* இறைவரை அம்மையாகவும், அப்பராகவும் வழிபாடு செய்து தவம் இருப்பவர்கள் ஒருவரையும் காண முடியவில்லையே;
* இறைவரை அம்மையாகவும், அப்பராகவும் வழிபாடு செய்யும் போது ஆத்மா பெண்மை நிலையை அடையும்;
* இறைவரை அம்மை அப்பராக வழிபாடு செய்ய ஒருபோதும் அஞ்ச வேண்டாம்;
* அவ்வாறு அஞ்சினால், அம்மை அப்பரை அடைய வேண்டிய நேரடியான ஏகமான பாதையை விட்டு நாம் விலகிவிடுவோம். வேறு திசை திரும்பிச் செல்கின்ற நூற்றுக் கணக்கான பாதைகளில் நாம் செல்ல நேரிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

774 ஏறியவாறு எனில் எண்பது சென்றிடும்
தேறிய ஏழில் சிறக்கும் வகை எண்ணில்
ஆறு ஒரு பத்தாய் அமர்ந்த இரண்டையும்
தேறியே நின்று தெளி இவ் வகையே.

❋ பிராணனார் என்றும் மேல்நோக்கி-சகஸ்ரத்தை நோக்கிச் செயற்பட்டால், 80 ஆண்டுகள் மிகத் தெளிவு நிலையில் – எந்தவித நோய் நொடியும் இன்றி வாழலாம்;

❋ இவ்வாறு தெளிவு பெற்று இருந்தால்;
ஆறு ஆதாரம், ஆறு அத்துவா, ஆறு அத்துவாசுத்தி என்று தத்துவங்கள் பலதாய் விரிந்து செல்வதை உணரலாம்;

❋ இவ்வாறு வேறுபட்டுச் செல்கின்ற தத்துவ வகைகளை நன்கு தேறித் தெளிவடைந்து கொள்ளுங்கள்.

775 இவ்வகை எட்டும் இடம் பெற ஓடிடில்
அவ்வகை ஐம்பதே என்ன அறியலாம்
செவ்வகை ஒன்பதும் சேரவே நின்றிடில்
முவ்வகையாம் அது முப்பத்து மூன்றே.

❋ எட்ட முடியாத பலவகையான நிலைகளுக்குப் பிராணனார் ஓடிச் செல்வார்;

❋ அப்பொழுது ஐம்பது வகையான சப்த்தங்களையும் அறிந்து கொள்ளலாம்;

❋ ஒன்பது சத்தியுடனும் மிகவும் தெளிவுபட ஒன்றாகி நிற்றல் வேண்டும்;

❋ மண், வான், விண் ஆகியன மேலும் முப்பத்து மூன்று மண்டலங்களாக விரிந்து செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

776 மும் மூன்றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்
எண் மூன்றும் நாலும் இட வகையாய் நிற்கும்
ஐம் மூன்றும் ஓடி அகலவே நின்றிடில்
பன்மூன்றொடு ஈர் ஆறு பார்க்கலும் ஆமே.

❊ ஒன்பது சத்திகளும், சுத்த சத்தியும் ஒரு எல்லைக்கு உட்பட்டே நிற்கும்;
❊ 24 வகையான ஆத்ம தத்துவங்களும், நாலுவகையான வாழ்க்கைப் பருவங்களும், எமக்கு மிகவும் தெளிவுபட விளங்கி நிற்கும்;
❊ அகர நிலையாகிய சிவம் எங்கும் பரந்து விரிந்து நிற்கும்;
❊ பத்தாகிய லிங்கவடிவம்; மூநிலை - இறைவர், சுத்தசத்தி ஆத்மா; 12 வகையான பிராணாயாமக் கலைகள் ஆகியவற்றை மிகவும் தெளிவுபட நாம் பார்க்கலாம்.

777 பார்க்கலும் ஆகும் பகல் முப்பதும் ஆகில்
ஆக்கலும் ஆகும் அவ் ஆறு இரண்டு உள்ளிட்டுப்
போக்கலும் ஆகும் புகல் அற ஒன்று எனில்
தேக்கலும் ஆகும் திருத்திய பத்தே.

❊ 30 நாட்கள் தொடர்ச்சியாக ஓரிடத்தில் அமர்ந்து அகமுகமாக இறைவழி பாடு ஆற்றவும்;
❊ 12 வகையான பிராணாயாமக் கலைகளையும் நன்கு பயன்படுத்தி ஆக வேண்டியவற்றை ஆக்கிக் கொள்ளுங்கள்;
❊ ஏகமாகிய இறையவரின் புகலிடத்தை அடைந்தால் வேண்டாதவை அனைத்தும் எம்மைவிட்டு நீங்கி விடும்;
❊ எம்முள்ளே, நாம் இறைவரை ஆத்மலிங்கவடிவில் கண்டு உணர்ந்து கொள்ளலாம். நிலையாகவே "அதை" நாம் எம்முள் வைத்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

778 ஏய் இருநாளும் இயல்பு உற ஓடிடில்
பாய் இரு நாலும் பகை அற நின்றிடும்
தேய்வு உற மூன்றும் திகழவே நின்றிடில்
ஆய் உருவாறு என்று அளக்கலும் ஆமே.

❊ எம்மிலே உள்ள இருமை வகைநிலைகள், செயற்பாடுகள் அனைத்தும் எம்மைவிட்டு ஓட வேண்டும்;

❊ அப்பொழுது எம்முள்ளே உள்ள அகரநிலை – சிவநிலை – ஆத்மா எவ்வித பகைமையும் அற்று நிற்கும்;

❊ எம்முள்ளே உள்ள அனைத்து இருமை வகைத் தன்மையும் தேய்ந்து அற்றுப் போகும் வண்ணம் நாம் சாதனை செய்தல் வேண்டும்; நாமே ஆத்மா–ஆத்மாவே நாம் எனத் தெளிவு பெறுவோம்;

❊ ஆகிக் கொண்டே உள்ள எல்லா உருவங்களும் என்றும் காலத்தின் முப்பரிமாண அளவுக்கு உட்பட்டனவே.

779 அளக்கும் வகை நாலும் அவ்வழியே ஓடில்
விளக்கும் ஒரு நாலு மெய்ப்ப நிற்கும்
துளக்கும் வகை ஐந்தும் தூய் நெறி ஓடில்
களக்கம் அற மூன்றில் காணலும் ஆமே.

❊ நாலுவகை வாழ்க்கைப் பருவம் எம்மை அளந்து கொண்டே உள்ளது. பிராணனாரின் செயற்பாடே இந்நாலு வகை வாழ்கைப் பருவங்களையும் அளவிடுகின்றது;

❊ நாலு பருவம்:– 1. மாணவப் பருவம், 2. குடும்பப் பருவம்
3. சமுதாயப் பருவம், 4. சந்நியாசப் பருவம்

இந்நாலு பருவங்களிலும் நாலு வகையான மெய்யியல் வெளிப்பட்டு நிற்கும்;

1. அறிவு 2. அன்பு
3. கருணை 4. அருள்

❊ ஐந்து புலன்களும் இந்நாலு பருவத்திலும் மிகவும் தெளிவு நிலையில் செயற்பட்டுத் தூய நெறியில் நடைபோடும்;

❊ மண், வான், விண் ஆகிய மூன்று நிலைகளிலும் எதுவித களங்கமும் இன்றி நாம் இறை காட்சியைக் காணலாம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

780 காணலும் ஆகும் கருதிய பத்து ஓடில்
காணலும் ஆகும் கலந்த இரண்டையும்
காணலும் ஆகும் கலப்பு அற மூ ஐந்தேல்
காணலும் ஆகும் கருத்து உற ஒன்றே.

* எம்முள்ளே ஓடும் பிராணனாரின் செயற்பாட்டு அமைப்பு, ஆத்மலிங்க அமைப்பை அரவணைத்துச் செயற்படுவதை உணர்ந்தால், இறை காட்சியை நாம் காணலாம்;
* எம் முள்ளே நாதமும், பிந்துவும் இணைந்து இருப்பதை நாம் காணலாம்– உணரலாம்;
* எம்முள் தனித்துத் தூய நிலையில் கலப்பற உள்ள சிவநிலையை – அகர நிலையை நாம் காணலாம்.
* எம்முள்ளே உள்ள கருத்து அனைத்தும் ஒன்றும் போது பலவிதமான இறைகாட்சியை எம்முள்ளேயே நாம் காணலாம்.

781 கருதும் இருபதில் காண ஆறு ஆகும்
கருதிய ஐஐந்தில் காண்பது மூன்றாம்
கருதும் இருபது உடன் ஆறு காணில்
கருதும் இரண்டு எனக் காட்டலும் ஆமே.

* இருபது வயதிற்கு முன்னாக ஆறு ஆதாரங்களினது அறிவையும், அவற்றின் செயற்பாட்டையும் நாம் தெளிவுபடக் கண்டு உணரவேண்டும்.
* இருபத்து ஐந்து வயதிற்கு முன்னாக மண், வான், விண் ஆகியவற்றின் சகல செயற்பாட்டு நிலைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்;
* இருபதாவது வயதில் ஆறுவகை அத்துவாக்களையும் தெளிவுறக் காணல் வேண்டும்;
* அப்பொழுது எம் உள்ளேயும், வெளியேயும் உள்ள இருமை வகைத் தன்மையைத் தெளிவுபட நாம் கண்டு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

782 காட்டலும் ஆகும் கலந்து இருபத்து ஏழில்
காட்டலும் ஆகும் கலந்து எழும் ஒன்று எனக்
காட்டலும் ஆகும் கலந்து இருபத்து எட்டில்
காட்டலும் ஆகும் கலந்தது ஈர் ஐந்தே.

❋ இருபத்து ஏழு வயதில் உள்ளேயும், வெளியேயும் தெரிந்து தெளிந்த வற்றை உணரவேண்டியவர்களுக்கு உணர்த்தித் தெளிபடுத்திக் காட்ட லாம்;
❋ சர்வத்திலும் கலந்து இருக்கும் ஒன்றான ஏக உண்மையை – இறையவரைத் தெளிவு பெற்றவர்களுக்குக் காட்டலாம்;
❋ இருபத்து எட்டு வயதில் அனைத்துமே லிங்கவடிவமாக இருப்பதைத் தெளிவற்றோர்க்குக் காட்டலாம்.

783 ஈர் ஐந்தும் ஐந்தும் இரு மூன்றும் எட்டுக்கும்
பார் அஞ்சி நின்ற பகை பத்து நாள் ஆகும்
வாரம் செய்கின்ற வகை ஆறு ஐஞ்சு ஆமாகில்
ஓர் ஐஞ்சொடு ஒன்று ஒன்றென ஒன்று நாளே.

❋ பத்து வகையான விரோதங்கள், ஐந்து வகைப் பூதங்கள், ஆறுவகைக் கரணங்கள், எட்டுவகைத் திக்குகள்;
❋ ஆகியன பூமியில் உள்ளவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தும். பயத்தினால் பகைமையும் பத்து நாட்களில் ஏற்பட்டு விடும்.
❋ எல்லா நாட்களையும் பாகுபடுத்தி 30 நாட்களைச் சராசரியாகக் கொண்ட மாதம் ஏற்படுத்தப்படுகின்றது.
❋ ஒரு நாளில் அச்சமற்ற பகலும், அச்சமுள்ள இரவும் அமைந்துள்ளது.

784 ஒன்றிய நாள்கள் ஒரு முப்பத்து ஒன்றாகில்
கன்றிய நாளும் கருத்து உற மூன்றாகும்
சென்று உயிர் நால் எட்டும் சேரவே நின்றிடில்
மன்று இயல்பு ஆகும் மனையில் இரண்டே.

❋ 31 நாட்கள் கொண்ட மாதமும் உண்டு.
❋ இவ்வாறு இயற்கையாகவே மாறுபடும் நாட்கள் 3 ஆகும். ஆகவே மாதங்களில் உள்ள நாட்களின் எண்ணிக்கை பேதம் 27,28, 29, 30, 31,32, 33 என வகுக்கப்படும்;
❋ உயிரானது எட்டுத் திசைகளுக்கும் சென்று அவற்றுடன் ஒன்றித்து நிற்கும் ஆற்றல் உடையது.
❋ அப்பொழுது உயிர் **"வெளியின்"** தன்மையைப் பெற்றுவிடும். உடல் இருமை வகைத்தன்மைக்கு அமையவே செயற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

785 மனையில் ஒன்றாகும் மாதமு மூன்றும்
சுனையில் ஒன்றாகத் தொனித்தனன் நந்தி
வினை அற ஓங்கி வெளி செய்து நின்றால்
தனை உற நின்ற தலைவனும் ஆமே.

* மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக எமது உடலுக்குள்ளேயே அகமுகமாக ஒன்றித்து இருத்தல் வேண்டும்;
* அப்பொழுது எமது இதயத்தில் ஊற்றெடுக்கும் அன்பாகிய அருவியில் நந்தி எம்பெருமானார் வெளிப்படுவர்.
* அவர் அங்கே இறை நாத ஒலியை எழுப்புவர்.
* எல்லா வினைகளும் நீங்கும் வண்ணம் இறை சாதனை செய்து என்றும் தூய இறையவரின் அருள்வெளியை நோக்கவும்;
* அப்பொழுது எம்மை ஆட்கொண்டு நிற்கும் இறையவருடன் நாம் ஒன்றித்து நிற்கலாம்.

786 ஆரும் அறியார் அளக்கின்ற வன்னியை
ஆரும் அறியார் அளக்கின்ற வாயுவை
ஆரும் அறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரும் அறியா அறிவு அறிந்தேனே.

* எம்முள்ளே ஏற்படுத்தப்பட்டுள்ள வேறுபட்ட அக்கினித் தன்மையை அநேகர் அறியாதுள்ளனர்.
* எம்முள்ளே ஏற்படுத்தப்பட்டுள்ள வேறுபட்ட வாயுக்களின் நிலைப்பாட்டை அநேகர் அறியாதுள்ளனர்;
* எமது சுவாசத்தின்போது வீணாகக் கழிந்து போகின்ற பிராணனாரை யாருமே அறியாது உள்ளார்கள்;
* திருமூலராகிய யான் எவருமே அறிந்து கொள்ளமுடியாத அறிவினைப் பெற்றுக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

787 **அறிவு அது வாயுவொடு ஐந்து அறிவு ஆய**
**அறிவு ஆவது தான் உலகு உயிர் அத்தின்**
**பிறிவு செய்யா வகை பேணி உள் நாடில்**
**செறிவு அது நின்று திகழும் அதுவே.**

❋ வாயுக்களை, ஐந்து வகைப் புலன்களை, ஐந்துவகைப் பூதங்களை அறிதல் வேண்டும்.

❋ உலகத்தை, உயிரை அறிதல் வேண்டும்;

❋ எந்தவித பேதமும் இன்றி உடலை நன்கு காத்து அகமுகமாக அதன் உட்செல்ல வேண்டும்;

❋ அப்பொழுது இறையவர் எம்முள்ளே அன்பின் செறிவாய், கருணையின் செறிவாய், அருளின் செறிவாய் எழுந்து அருள்வார்.

788 **அது அருளும், மருள் ஆனது உலகம்**
**பொது அருளும், புகழ் ஆளர்க்கு நாளும்**
**மது அருளும், மலர் மங்கையர் செல்வி**
**இது அருள் செய்யும் இறையவன் ஆமே.**

❋ இறையவர் அருள் நிறைந்தவர். அருளையே வழங்க வல்லவர். ஆனால் உலகமோ இருளையே நிறைத்து வைத்துள்ளது.

❋ இறையவர் சர்வ அணுமுதல் கோடிக்கணக்கான அண்டங்கள் வரைக்கும் அருளையே என்றும் சமமாக வழங்குகின்றார். ஆனால் உலகத்தவர்கள் தினமும் புகழையும் மதுவகைகளையுமே விரும்புவர். அவற்றைப் பெற்றும் கொள்வர்;

❋ இவர்கள்; இறையவருடன் ஒன்றாகவே உள்ள சுத்த சத்தியிடம் இருந்து சத்தியையும் பெற்றுக்கொள்வர். ஆனால் அருளைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

789 பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி ஆவது பற்று அறும் பாசம்
அழப்படி செய்வார்க்கு அகலு மதியே.

* பெருமை நிறைந்த சர்வ தகுதிகளும் உடைய திருநந்திதேவரைச் சூழ பல்வேறு வகைப்பட்ட பிறப்புக்களை உடைய ஆத்ம கோடிகள் காணப் படுகின்றன;
* எல்லாவிதமான கோலங்களும் உடைய எமது உடம்பின் உள்ளே, எல்லாவற்றையும் குறிப்பாலே உணர்ந்து கொள்ளக் கூடிய ஆத்மா உள்ளது;
* பழம்பெரும் பொருளாகிய பரம்பொருளை ஆத்மா முழுமைத்துவமாக உணர்வதானால் பாசம் ஆகிய சுத்த சத்தி முற்றாக விலகவேண்டும்;
* பணிந்தவர்களுக்கு, சதா இறைவரை நினைந்து அழுபவர்களுக்கு அவர்களின் மனம், புத்தி, சித்தம், அகங்காரங்களால் ஏற்படும் உபாதிகள் முற்றாக அகன்றே விடும்.

## XVI வாரசரம்

790 வெள்ளி வெண் திங்கள் விளங்கும் புதன் இடம்
ஒள்ளிய மந்தன் இரவி செவ்வாய் வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறை இடம்
தெள்ளிய தேய்பிறை தான் வலமாமே.

* வெள்ளிக் கிழமை, திங்கட்கிழமை, புதன் கிழமை ஆகிய நாட்களில் இடது கலையால்(சந்திரநாடி) சுவாச ஓட்டத்தை ஏற்படுத்த வேண்டும்;
* இந்நிகழ்வு வளர்பிறை காலங்களுக்குப் பொருத்தமானவையாகும்;
* தேய்பிறை காலத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நாட்களில் வலது கலையால் சுவாச ஓட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

791 வெள்ளி வெண் திங்கள் விளங்கும் புதன் மூன்றும்
தள்ளி இடத்தே தயங்குமே ஆமாகில்
ஒள்ளிய காயத்துக்கு ஊனம் இலை என்று
வள்ளல் நமக்கு மகிழ்ந்து உரைத்தானே.

❊ வெள்ளி, திங்கள், புதன் ஆகிய நாட்களின் தன்மைகளை உணர வேண்டும்;
❊ அந்நாட்களில் பூமியில் சாந்தமான சப்த்த, அதிர்வு அலைகள் ஏற்படுவதை உணர வேண்டும்;
❊ இந்நாட்களில் ஒரு சாதகன் சிறந்த சாதனையை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுது உடலும் உறுதிப்படும்;
❊ இந்தவகையான செய்திகளையும் எமது நந்தி எம்பெருமானார் மிகவும் ஆனந்தமாகவே எனக்கு உரைத்து விட்டார்.

792 செவ்வாய் வியாழம் சனி ஞாயிறே என்னு ம்
இவ்வாறு அறிகின்ற யோகி இறைவனே
ஒவ்வாத வாயு வலத்துப் புரிய விட்டு
அவ்வாறு அறிவார்க்கு அவ் ஆனந்தம் ஆமே.

❊ செவ்வாய், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பூமியில் மின்காந்த சப்த்த, நாத அதிர்வு அலைகளின் தாக்கம் மிகவும் அதிகமாகவே இருப்பதை உணரவேண்டும்.
❊ இவற்றை அறிந்து, உணர்ந்து உலகுக்கு அறிவிக்கின்ற ஒரு யோகி இறைவனுக்குச் சமமாக மதிக்கப்படுவர்;
❊ மாறுபட்டுச் செயற்படுகின்ற வாயுக்கள் எமக்கு உள்ளேயும் வெளியேயும் உண்டு. இவற்றை நன்கு ஒழுங்குபடுத்தி நெறியாக்க வேண்டும்;
❊ இவ்வாறு தெளிவுபட அறிந்து செயலாற்றினால் நல்ல ஆனந்தம் நமக்குக் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

793 மாறி வரும் இருபால் மதி வெய்ய அவன்
ஏறி இழியும் இடை பிங்கலை இடை
ஊறும் உயிர் நடுவே உயிருக்கு இரந்து
ஏறி அறிமின் தெரிந்து தெளிந்தே.

❋ பிராணனார் மாறுபட்ட இருமை வகைக்குரிய செயற்பாட்டை உடையவர்;
❋ பிராணனார் இடைகலை ஊடாகவும், பிங்கலை ஊடாகவும் மேல் நோக்கி ஏறியும், கீழ்நோக்கி இறங்கியும் உடல்பூராவும் ஓடிச் செயற்படுவர்;
❋ பிராணனார் மிக நெருக்கமாகவும், நேரடியாகவும் உயிராருடன் தொடர்பு வைத்திருப்பார்;
❋ இந்நிகழ்வுகளை எல்லாம் முன் கூட்டியே அறிந்து, தெரிந்து, தெளிந்து கொள்ளுங்கள்;

794

உதித்து வலத்து இடம் போகின்ற போது
அதிர்த்து அஞ்சி ஓடுதலாம் அகன்று ஆரும்
உதித்ததுவே மிக ஓடிடும் ஆகில்
உதித்த இராசி உணர்ந்துகொள் உற்றே.

❋ பிராணனார் சதா மலர்ந்த வண்ணம் இடது நாடியாலும், வலது நாடியாலும் உடல் பூராவும் ஓடிக்கொள்வர்;
❋ அப்பொழுது மனமானது அதிர்வடையும். அச்சம் கொள்ளும். பயத்தினால் அங்கும் இங்கும் ஓடும்.
இவ்வாறான செயற்பாடுடைய மனத்தை முற்றாக மாற்றம் அடையச் செய்ய வேண்டும்;
❋ சாந்த நிலையிலே மலர்ச்சி அடையும் பிராணனார் உடல் பூராகவும் ஓட வேண்டும்.
❋ பிராணனார் எம்முள்ளே மலர்ச்சி அடைகின்ற அதிஷ்டத்தை என்றும் நாம் உணர்ந்து அதனுடன் உறுதியாக நிற்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

795 நடுவு நில்லாமல் இடம் வலம் ஓடி
அடுகின்ற வாயுவை அந்தணன் கூடி
இடுகின்ற வாறு சென்று இன்பணி சேர
முடிகின்ற தீபத்தின் முன் உண்டு என்றானே.

- ❋ வாயுவானது நடுநிலைப்படாது இடநாடியாலும், வல நாடியாலும் எழுந்த மானமாக ஓடவல்லது;
- ❋ பிராணனார் நடுநிலைப்படாத வாயுவை ஒன்று சேர்த்து நெறிப்படுத்துவார்;
- ❋ நெறிப்பட்ட வாயு எம்முள்ளே உடல்பூராவும் சென்று நற்பணி ஆற்றும்.
- ❋ ஆத்மசுடர் அணையும் முன்னர், ஆத்மா உடலைவிட்டு அகலும் முன்னர் இச் செயற்பாடுகளை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள் என நந்தி எம் பெருமானார் எனக்குக் கூறிவிட்டார்.

796 ஆயும் பொருளும் அணிமலர் மேல் அது
வாயு விதமும் பதினாறு உள வலி
போய மனத்தைப் பொருகின்ற ஆதாரம்
ஆயுவு நாளு முகுர்த்தமும் ஆமே.

- ❋ ஆய்வுக்குரிய வழிபாட்டுக்குரிய பரம்பொருள் ஆத்ம மலரின் மேல் அமர்ந்துள்ளது;
- ❋ வாயுவின் செயற்பாடுகள் 16 வகைப்படும். இச் செயற்பாடுகள் வலிமை நிறைந்தன;
- ❋ எல்லா இடமும் அலைபாய்கின்ற மனத்தைப் பொருதி – மோதிச் செய லிழக்க வைக்க வேண்டும்.
இதுவே ஆத்ம வளர்ச்சிக்குச் சிறந்த ஆதாரம் ஆகும்.
- ❋ ஆத்மாவே நாமென ஆய்ந்து, உணர்ந்து, என்று தெளிந்து கொள்கின் றோமோ, அதுவே எமது வாழ்வின் சிறந்த நாளும் முகூர்த்தமும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## XVII வார சூலம்

797 வாரத்தில் சூலம் வரும் வழி கூறும் கால்
நேர் ஒத்த திங்கள் சனி கிழக்கே ஆகும்
பார் ஒத்த சேய் புதன் உத்தரம் பானு நாள்
நேர் ஒத்த வெள்ளி குடக்காக நிற்குமே.

* "சூலம்" எனும், எமக்கு வரும் ஒரு குறைபாட்டைக் கூறுகின்றேன். இது இரேவதி எனும் நட்சத்திரத்தால் ஏற்படுவதாகும்;
* திங்கள், சனி ஆகிய நாட்களில் நேர் கிழக்குத் திசையில் இந்நட்சத்திரம் தோன்றும்.
* செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் வடக்குத் திசையில் இந் நட்சத்திரம் தோன்றும்;
* வெள்ளிக் கிழமையில் நேரே மேற்கே இந் நட்சத்திரம் தோன்றும்.

798 தெக்கணம் ஆகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமுமாம் இடம் பின்னாகில்
துக்கமும் இல் வல முன்னே தோன்றிடில்
மிக்கது மேல் வினை மேன்மேல் விளையுமே.

* வியாழக் கிழமையில் தெற்குத் திசையில் இரேவதி நட்சத்திரம் தோன்றும்;
* இந்நட்சத்திரம் முற்குறித்த திசைகளுக்கு நேர்மாறாகத் தோன்றில், பூமியில் குறைபாடுகள் ஏற்படும்;
* இந் நட்சத்திரம் முற்குறித்த திசைகளுக்கு நேரே வலதுபக்கம் தோன்றில், பூமியில் நல்ல வகையில் இயற்கையின் சமநிலை ஏற்படும்;
* இவை தவிர்த்து வேறு வேறு திசைகளில் தோன்றினால், பூமியின் இயற்கைச் சமநிலை முற்றாகப் பாதிப்பு அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## XVIII கேசரி யோகம்

799 கட்டக் கழன்று கீழ் நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணை கோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்டம் இருக்க நமன் இல்லைத் தானே.

* கேசரியோகம் ஒன்பது வகையோகங்களில் ஒன்றாகும்;
* சகஸ்ரம் அமைந்திருக்கும் பகுதியில் கபால எலும்புகள் உறுதியாகவும், ஒழுங்காகவும் அமைந்துள்ளன;
* வலநாடி, இடநாடி, நடுநாடி, ஆகிய மூன்று கற்களால் ஆன சகஸ்ரம் ஆகிய அடுப்பு அமைந்துள்ளது;
* பிராணனாரை அம்பாக்கி, உயிராரை நாணாக்கி, ஆத்மாவை மந்திர மாக்கி சகஸ்ரம் நோக்கி எய்தல் வேண்டும்;
* அப்பொழுது உடலும் உறுதியாக இருக்கும். காலதேவனும் எம்மை அணுகவே மாட்டான்.

800 வண்ணான் ஒலிக்கும் சதுரப் பலகை மேல்
கண் ஆறு மோழை படாமல் கரை கட்டி
விண் ஆறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க அழுக்கு அற்றவாறே.

* பிராணனார் எம்முள்ளே அசையும்போது ஒலி ஏற்படும். கண், மூக்கு, வாய், காது ஆகியவற்றால் ஏற்பாடாகிய சதுரத்திற்குள் பிராணனார் மிகவும் சிறப்பாக அசைந்து திரிவர்;
* அப்பொழுது கருணை எனும் ஆறு அகக் கண்ணில் இருந்து ஊற்றெடுக்கும். இதனை நன்கு கட்டிக் காக்கவேண்டும்.
* அதேநேரத்தில் சகஸ்ரத்தில் இருந்து விண் ஆறாகிய அருள் எனும் கங்காநதி ஊற்றெடுக்கும். இவ் அருள் நதி ஆத்ம இதயமாகிய குளத்தை நிரப்பும்;
* முழுமைத்துவமாக நாம் மேல் நோக்கி அண்ணாந்து தூய வெறுவெளியை நோக்குவோமானால், எம்மிலே உள்ள சகல அழுக்குகளும் அற்றுப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

801 இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணர வல்லார் கட்கு
இறக்கவும் வேண்டாம் இருக்கலும் ஆமே.

❇ இடநாடியாலும், வலநாடியாலும் செயற்படுத்தப்படுகின்ற பிராணனாரின் செயற்பாட்டை மாற்றவேண்டும்;

❇ பிராணனாரை நடுநாடியால் மாத்திரம் தெளிவாகச் செயற்படுத்தினால் ஒருபோதும் எமக்குச் சோர்வே ஏற்படமாட்டாது;

❇ உறக்கம் விழிப்பு ஆகிய இருமைவகைத் தன்மைகளை நீக்கிப் பிராண னாரின் செயற்பாட்டை நன்கு உணரவேண்டும்;

❇ அப்பொழுது எமக்கு இறப்பு ஏற்படாது. நாம் என்றும் இப்பூமியில் இருந்து கொள்வோம்.

802 ஆய்ந்து உரை செய்யில் அமுத நின்று ஊறிடும்
ஆய்ந்து உரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்து உரைசெய்யில் நிலா மண்டலம் அதாய்ப்
பாய்ந்து உரை செய்தது பாலிக்குமாறே.

❇ உண்மை ஆய்வினை மேற்கொண்டு நாம் தெளிவடையும் போது, எம்முள்ளே இறை அமிர்தம் சதா வற்றாது ஊறிக் கொள்ளும்;

❇ இறை அமிர்தம் ஊறுகின்ற காலத்து, அனைத்திலும் மேலும் மேலும் தெளிவடைந்து கொள்ளுங்கள்;

❇ எல்லாவித இருமை வகைத் தன்மைகளும் அகலுமாறு நாம் தெளிவு பெற்றால், எம்முள்ளே ஆனந்தமான ஒளிமண்டலம் தோன்றும்;

❇ எல்லாத் திக்கிலும் சென்று தெளிவு பெற்றுத் தெளிவு ஏற்படுத்தில் இறைதாற்பரியம் அனைவரிலும் வெளிப்பாடாகும்.

803 நாவின் நுனியை நடுவே விசிறிடில்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்
சாவதும் இல்லைச் சதகோடி ஊனே.

❇ நாவினது நுனியை உள்நோக்கி, நடுவே மேல்நோக்கி மடித்து நீட்டவும்;

❇ அதனால் எம்முள்ளே சீவனாரும் அமைதியோடு உறைந்து கொள்வார்; சிவன் என்னும் தேவதையும் எம்முடன் உறைந்து கொள்வார்.

❇ 36 தத்துவங்களும் எம்முள்ளே தெளிவுபடத் தோன்றி எமக்குப் புலன் ஆகும்;

❇ அதனால் எமக்கு மரணமும் ஏற்படாது. நூற்றுக்கணக்கான கோடி வரு டங்கள் இந்த உடம்புடனேயே நாம் வாழுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

804 ஊன் ஊறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வான் ஊறல் பாயும் வகை அறிவார் இல்லை
வான் ஊறல் பாயும் வகை அறிவாளர்க்குத்
தேன் ஊறல் உண்டு தெளியலும் ஆமே.

* எமது உடம்பின் உள்ளே-வாயின் உட்பக்கமாக உச்சியின்மேல் இருந்து உமிழ்நீர் உருவாகும்;
* எமது வாயின் உட்பக்கமாக அண்ணத்தில் இருந்து "வான் கங்கை" உள்ளே ஊறிப் பாயும். ஆனால் இதனை அறிந்து கொள்வார் ஒருவரும் இல்லை;
* "வான்கங்கை" நீரோட்டத்தைத் தம்முள்ளேயே அறிந்து உணர்ந்து கொள்பவர்களுக்குத்;
* தேனாகிய அமிர்தம் அவர்கள் உள்ளேயே ஊறுவதை உணர்ந்து, அதை அருந்தித் தெளிவு பெற்றுக் கொள்ளலாம்.

805 மேலை அண்ணாவில் விரைந்து இருகால் இடில்
காலனும் இல்லைக் கதவும் திறந்திடும்
ஞாலம் அறிய நரை திரை மாறிடும்
பாலனும் ஆவன் பராநந்தி ஆணையே.

* அண்ணத்தின் மேற்பகுதியில் இடகலை, பிங்கலை ஆகிய இரு நாடிகளையும் எதுவித தாமதமும் இன்றித் தெளிவுபடச் செயற்படுத்துங்கள்;
* காலதேவனும் எம்மை அணுகமாட்டான். சகஸ்ரத்தின் வெளிநோக்கிய கதவு திறபட்டு வெளியுடன் தொடர்பும் ஏற்படும்;
* பூமியில் உள்ளவர்களின் கண்முன்னேயே நரையும் மூப்பும் முற்றாக நீங்கிவிடும்;
* நாம் என்றும் இளைஞன் ஆகவே விளங்குவோம். இவ்வாறு நிகழும் என நந்தியெம்பெருமானார் மீது திருமூலராகிய யான் ஆணை செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

806 நந்தி முதலாக நாமேலே ஏறிட்டுச்
சந்தித்து இருக்கில் தரணி முழுது ஆளும்
பந்தித்து இருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித்து இருப்பவர் தீவினையாளரே.

* ஆத்ம இதய கமலத்தையும், சகஸ்ரம் இருக்கும் சிரசையும் தெளிவுடன் தொடர்பாக்க வேண்டும்;
* இவ் இரு பகுதியையும் ஒளியால், நாதத்தால், சப்த்தத்தால் தொடர் பாக்கி ஒன்றாக்க வேண்டும்; அப்பொழுது பூமியை ஆளும் வல்லமை வந்து கைகூடும்;
* எல்லாவகையான இருமைவகைக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் ஓர் ஆத்மா;
* சதா தனது கட்டுப்பாட்டுக்குள் இருந்து சிந்தனை செய்து தீவினை யையே ஆற்றும்.
* ஆனால் ஆத்மா உண்மையில் ஒளிமயமானது. தூய வெளியானது.

807 தீவினை ஆடத் திகைத்து அங்கு இருந்தவர்
நாவினை நாடில் நமனுக்கு இடம் இல்லை
பாவினை நாடிப் பயன் அறக் கண்டவர்
தேவினை ஆடிய தீங் கரும்பு ஆமே.

* ஒருவருக்குத் தீவினையின் செயற்பாடு அளவு கடந்து விட்டால், அவர் தன்னுள் திகைத்தும் கலங்கியும் இருப்பர்;
* நாவினது துணைகொண்டு கேசரி முத்திரையால் சகஸ்ரத்தைச் செயற் படவைத்தால், காலதேவன் ஒருபொழுதும் எம்மை அணுகான்.
* இறையவர் மீது பாசுரங்கள் பாடுபவர்கள், எல்லாவிதமான பலாபலன்க ளையும் கடந்து இறையவரைக் காண்பர்;
* இவர்கள் தேவர்களின் இன்பத்தைவிட, மேலான இறையவர் இன்பத்தை அனுபவிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

808 தீங்கரும்பு ஆகவே செய்தொழில் உள்ளவர்
ஆங்கரும்பு ஆக அடை நா ஏறிட்டுக்
கோங் கரும்பு ஆகிய கோணை நிமிர்த்திட
ஊன் கரும்பு ஆகிய ஊன் நீர் வருமே.

❋ இறைவரின் பேரின்பத்தையே பெரும் பேறாகக் கருதும் அடியவர்கள்;
❋ இவர்கள் ஐம்புலனில் ஒன்றாகிய நாவை நல்ல முறையில் பயன்படுத்துப வர்கள்;
❋ ஆத்ம தண்டாகிய அகத் தண்டை–ஆத்மலிங்கத்தை–என்றுமே அழிவில் லாத ஆத்மாவை, இறைவரை நோக்கிச் சாதனை மேற்கொள்ள நெறிப் படுத்த வேண்டும்;
❋ அப்பொழுது உடம்பாகிய கரும்பில் இருந்து அமிர்தம் ஊற்றெடுக்கும்.

809 ஊன் நீர் வழியாக உண்ணாவை ஏறிட்டுத்
தேன் நீர் பருகிச் சிவாய நம என்று
கான் நீர் வரும் வழி கங்கை தருவிக்கும்
வான் நீர் வரும் வழி ஆய்ந்து அறிவீரே.

❋ உமிழ்நீர் ஊறுகின்ற இடத்தின் ஊடாக உண்ணாவை அண்ணத்தை நோக்கி நாவினை மடிக்க வேண்டும்;
❋ அப்பொழுது அமிர்தம் உள்ளே உருவாகும். அதனைப் பருகியவாறே "சிவாய நம" என்று சதா ஜெபம் செய்யவும்;
❋ அதேநேரத்தில் உடல்பூராவும் "கங்கை" ஆகிய நீரோட்டம் பாய்ந்து செல்லும்;
❋ மேலும் இறைவரின் அருட்கடாட்சமும் எமக்குச் சதா கிடைத்த வண்ணமே இருக்கும்.

இவை அனைத்தையும் இடைவிடாது ஆய்ந்து அறிந்துகொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

810 ஆய்ந்து அறிந்து உள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்து அறிவாகக் கருணை பொழிந்திடும்
பாய்ந்து அறிந்து உள்ளே படிக்கதவு ஒன்றிட்டு
ஓய்ந்து அறிந்து உள் உறை கோயிலும் ஆமே.

* இவ்வாறாக எம்முள்ளே நிகழ்கின்ற அனைத்தையும் ஆராய்ந்து, அறிந்து, தெளிவுபெற்று,, வழிபாடு செய்தல் வேண்டும்.
* அப்பொழுது இறையவரது கருணை, எல்லாவிதமான வெப்பத்தாலும் காய்ந்துபோன எமது உடலைக் குளிராக்க எமக்குக் கிடைக்கும்;
* எல்லாவற்றையும் தாமதம் இன்றி எம்முள்ளேயே அறிந்து தெளிந்து நாம் அனைத்தையும் நெறிப்படுத்தி ஏகத்துடன் ஒன்றாக வேண்டும்.
* பின்னர் பரிபூரணமாகிய ஓய்வுநிலையை அறிந்துகொள்ள வேண்டும். எமது உடலாகிய கோயிலிலும், ஆத்மா உறைவதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

811 கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லர் தரணி முழுதுக்கும்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம் உளும்
தீயினும் தீயர் அத்தீவினை ஆளர்க்கே.

* உடம்பாகிய கோயிலின் உள்ளே, ஆத்மா எனும் மூலஸ்தானத்தில், இறையவர் உறைந்துள்ளார்;
* இறையவர் உடம்பாகிய தரணிக்கும், பூமியில் உள்ள சகல ஜீவராசிகளுக்கும், தாயிலும் பார்க்கச் சிறந்து விளங்குகின்றார்;
* எல்லாவித வேட்கையாலும், வெப்பத்தாலும், வறண்டு காய்ந்து போனவர்களுக்கும், இறையவர் மிகவும் சிறந்தவராக விளங்கிக் காட்சிகொடுப்பார்;
* அழிவுகளைத் தீமைகளைச் செய்கின்றவர்களுக்கு இறையவர் நெருப்பிலும் பார்க்க நெருப்பாக விளங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

812 தீவினை ஆளர் தம் சென்னியில் உள்ளவன்
பூவினை ஆளர் தம் பொற்பதி ஆனவன்
பாவினை ஆளர் தம் பாவகத்து உள்ளவன்
மாவினை ஆளர் மதியில் உள்ளானே.

* அக்கினி வளர்த்துத் தம் கருமம் செய்பவர்களுக்கு, அவர்களின் உச்சியில் இறையவர் விளங்குவார்;
* மலர்களால் இறைவரை வழிபாடு செய்பவர்களுக்கு, இறைவர் பொன் மயமாக-உருவங்களுக்கு ஊடாகக் காட்சி கொடுப்பார்;
* இறையவர் மீது பாசுரங்கள்பாடி வழிபாடு செய்பவர்களுக்கு, அவர்களின் ஆத்மார்த்த பாவனையின் ஊடாக இறையவர் காட்சி கொடுப்பார்;
* யோக நுட்பங்களால் இறைசாதனை மேற்கொள்பவர்களுக்கு, அவர்களின் புத்தியில் இறைவர் காட்சி கொடுப்பார்.

813 மதியின் எழும் கதிர் போலப் பதின் ஆறாய்
பதி மனை நூறு நூற்று இருபத்து நாலாய்க்
கதி மனை உள்ளே கணைகள் பரப்பி
எதிர் மலையாமல் இருந்தனன் தானே.

* சந்திரகலை எம்மில் இருந்து 16 வகையாகப் புறப்படும்;
* சூரியகலை எம்மில் இருந்து 224 வகையாகப் புறப்படும்;
* இறையவர் எமதுள்ளேயும், இவ் உலகத்திலும், வான் வெளியிலும், சர்வ பிரபஞ்சங்களிலும் அன்பை, கருணையை, அருளை வழங்கிய வண்ணமே உள்ளார்;
* இருமைவகைத் தன்மை, செயற்பாடுகள் அனைத்தையும் கடந்தே இறையவர் உள்ளார்.

814 இருந்தனள் சத்தியும் அக்கலை சூழ
இருந்தனள் கன்னியும் அந்நடு வாக
இருந்தனள் மான் நேர் முக நிலை ஆர
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே.

* சுத்த சத்தியாகிய இறைவியும், இறைவருடனேயே எழுந்தருளியுள்ளார்;
* ஆத்மாவாகிய கன்னிப் பெண் சுத்தசத்திக்கும் , இறையவருக்கும் நடுவாக எழுந்தருளியுள்ளார்;
* சுத்த சத்தி சர்வ பிரபஞ்சத்தையும், உலகத்தையும், எமது உடலையும் ஆரத் தழுவிய வண்ணமே உள்ளார்;
* சுத்த சத்தி சர்வ அணுமுதல் சர்வ பிரபஞ்சம் வரை உள்ள அனைத்திற்கும் இறை அமுதத்தைப் பொழிந்த வண்ணமே உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

815 பொழிந்த இரு வெள்ளி பொன் மண் அடையில்
வழிந்து உள் இருந்தது வான் முதல் அங்குக்
கழிந்தது போகாமல் காக்க வல்லார்க்குக்
கொழுந்தது ஆகும் குணம் அதுதானே.

- ❊ சுத்தசத்தியின் செயற்பாட்டால் வெள்ளியாகிய பிந்துவும், பொன் ஆகிய நாதமும், எம் உடலின் உள்ளேயே தோன்றும்;
- ❊ வானமாகிய சித்தாகாசத்தை முதலாக வைத்து நாதமும், பிந்துவும் எம் முள்ளே உருவாகிய வண்ணமே உள்ளன.
- ❊ இவ்வாறு தோன்றுகின்ற நாதத்தையும், பிந்துவையும் விரையமாக்காமல் காக்க வேண்டும்.
- ❊ அப்பொழுது எமது உடல், மனம், பிராணன், உயிர், ஆத்மா அனைத்தும் என்றும் இளமையாகப் புதுத் தளிராகவே இருக்கும்.

816 குணம் அது ஆகிய கோமள வல்லி
மணம் அது ஆக மகிழ்ந்து அங்கு இருக்கில்
தனம் அது ஆகிய தத்துவ ஞானம்
இனம் அது ஆக இருந்தனன் தானே.

- ❊ சுத்த சத்தி எல்லாவிதமான இளமை நிறைந்த ஆனந்தத்தை ஆத்மாவிற்கு வழங்குகின்றது.
- ❊ சுத்த சத்தியின் கருணையை உணர்ந்து, அருள் வாசனையை முகர்ந்து, நாம் எம்முள்ளேயே மகிழ்ந்து இருக்க வேண்டும்;
- ❊ அப்பொழுது எமக்குப் பெரும் செல்வமாகிய இறைதத்துவ ஞானம் கை கூடும்.
- ❊ நாம் என்றும் இறையவர் அன்பர்களை-இனத்தைச் சேர்ந்தே இருப்போம்.

817 இருந்த பிராணனு ம் உள்ளே எழுமாம்
பரிந்த இத் தண்டுடன் அண்டம் பரிய
விரிந்த அப் பூவுடன் மேல் எழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலும் ஆமே.

- ❊ விழிப்படையாது எம்முள் இருக்கும் பிராணனார், எமது இறை சாதனையால், எம் முள்ளே சதா மலர்ந்த வண்ணமே இருப்பார்;
- ❊ பிராணனார் சுசுமுனா நாடித் தண்டூடாக ஓடுவர். சகஸ்ரத்தின் ஊடாக பிராண னார் அண்டத்துடன் தொடர்பு கொள்ளுவார்;
- ❊ சதா விரிந்து மலரும் பிராணனாரை எம்முள்ளே எப்பொழுதும் மேல்நோக்கிவரச் செயற்படுத்த வேண்டும்;
- ❊ அப்பொழுது எம்முள்ளே உள்ள மண், வான், விண் ஆகிய மண்டலங்கள் என் றும் மலாச்சி அடைந்த வண்ணமே இருக்கும். நாமும் எதுவித குறைவும் இன்றி வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

818 மண்டலத்து உள்ளே மன ஒட்டியானத்தைக்
கண்டு அகத்து அங்கே கருதியே கீழ்க்கட்டிப்
பண்டகத்து உள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனு ம் கூத்து ஒழிந்தானே.

❋ எம்முள்ளே உள்ள மண், வான், விண், ஆகிய மண்டலங்களுக்குள் மன மாகிய ஆபரணத்தை அனுப்பி மனத்தைப் பதப்படுத்த வேண்டும்;

❋ என்றும் மனத்தை எமது உடலின் உள்ளே மேல் நோக்கியே செயற்படுத்த வேண்டும்.

மனத்தின் கீழ்நோக்கிய செயற்பாட்டைக் கட்டிவிட வேண்டும்;

❋ "பண்டகம்" ஆகிய இறையவர் சந்நிதானத்தில் மெய்ஞ்ஞான ஒளியே பகலாக விளங்கும்;

❋ உண்மையிடத்தில்-இறையவர் சந்நிதானத்தில் நிசப்த்தமே-மௌனமே என்றும் திகழும். அங்கே எந்தவிதமான தேவதைகளினது கூத்துக்களும் இல்லை.

819 ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமரும்
கழிகின்ற வாயுவும் காக்கலும் ஆகும்
வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்து பை அகற்றீரே.

❋ எல்லாவகையாலும் அழிந்து போகின்ற வாயுவானது எம்முள்ளேயே அமர்ந்து ஆறிக்கொள்ளும்;

❋ வீணாக விரையம் ஆகின்ற வாயுவை நாம் காத்துக் கொள்ளலாம்.

❋ உயிர் உடலைவிட்டு நீங்குகின்றபொழுது, வட்டவடிவமான தொண்டையில் உள்ள கழலைப் பகுதி, அது தங்கியுள்ள பைபோன்ற அமைப்பு, அனைத்தும் செயலற்றுப் போய்விடும்.

820 பையினின் உள்ளே படிக் கதவு ஒன்றிடின்
மெய்யினின் உள்ளே விளங்கும் ஒளியதாம்
கையினுள் வாயுக் கதித்து அங்கு எழுந்திடின்
மை அணி கோயில் மணி விளக்கு ஆமே.

❋ கழலை அமைந்த பையின் உள்ளே கதவு ஒன்று உண்டு;

❋ இக் கதவினை நன்கு பயன்படுத்தினால், உடம்பினின் உள்ளே உள்ள அனைத்தும் ஒளிமயமாகிவிடும்;

❋ வாயுவானது பிராணனாரோடு ஐக்கியமாகி, உள்ளே மலர்ச்சி அடைந்து எழுந்தால், உடலும் உள்ளமும் கோயில் ஆகும். ஆத்மா அக்கோவிலின் தீபம் ஆகும். இறையவர் அங்கே தெய்வமாக வீற்றிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

821 விளங்கிடும் வாயுவை மேல் எழ உன்னி
நலங்கிடும் கண்டத்து நாபியின் உள்ளே
வணங்கிடும் மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலும் ஆமே.

❊ எம்முள்ளே சதா மலர்ந்த வண்ணம் உள்ள வாயுவை என்றும் மேல் நோக்கி எழவைத்தல் வேண்டும்;
❊ கண்டத்தில் இருந்து நாபிக்கமலம் உள்ள பகுதியை வாயு – ஏறி இறங்கு கின்ற பகுதியை, நல்ல முறையில் அவதானிக்க வேண்டும்;
❊ வணக்கத்திற்குரிய விண்மண்டலம் அமைந்த சகஸ்ரத்தை அவதானிக்க வேண்டும். இப்பகுதியில் வாயு ஒடுங்குவதை உணரவேண்டும்;
❊ அப்பொழுது தெளிவு பெறாதவை, விளங்காதவை, உணராதவை அனைத்தும் எமக்குப் புலப்படும்.

822 சொல்லலும் ஆயிடும் ஆகத்து வாயுவும்
சொல்லலும் ஆகும் மண்ணீர்க் கடினமும்
சொல்லலும் ஆகும் இவை அஞ்சும் கூடிடில்
சொல்லலுமாம் தூர தெரிசனம் தானே.

❊ ஆத்மாவைச் சூழவுள்ள பிராணனாரின் தோற்றம், தன்மை செயற்பாடு ஆகியவற்றைத் தெளிவுபடக் கூறமுடியும்;
❊ உடலுடன் நீர் கூடுவதால் ஏற்படும் உறுதி நிலையையும் தெளிவாகக் கூறலாம்.
❊ உடல், மனம், பிராணனார், உயிர், ஆத்மா இவ் ஐந்தும் ஒன்றாகி ஒரு மித்துச் செயற்படில், தெளிவுபடாத சகல செயற்பாட்டு நிலைகளையும் தெளிவுபடக் கூறலாம்.
❊ கண்ணுக்குப் புலப்படாத கால, தூர, இடம் கடந்த இறைகாட்சியையும் மிகவும் தெளிவுபடக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

823 தூர தரிசனம் சொல்லுவன் காணலாம்
கார் அரும் கண்ணி கடை ஞானம் உட்பு எய்தி
ஏராரும் தீபத்து எழில் சிந்தை வைத்திடில்
பாரார் உலகம் பகல் முன்னது ஆமே.

❊ கண்ணுக்குப் புலப்படாத இறையவர் தரிசனத்தை, இப்பொழுது யான் கூறுகின்றேன்;
❊ கருமை நிறைந்த சுத்த சத்தி இறையவரின் மெய்ஞ்ஞானத்தின் உள்ளே பரிபூரணத்துவமாக மலர்ந்துள்ளாள்;
❊ இவ் எழில் நிறைந்த இறை காட்சியை எமது இதய கமலத்திலே நிலையாகப் பதித்துவிட வேண்டும்;
❊ நாம் பார்க்கின்ற உலகத்திலே இறையவர் ஒளி எல்லாவற்றிற்கும் முன்னதாகவே புலப்படும்.

குறிப்பு 1. **தூர தரிசனம்:** - ஆத்மீக இதயத்தால் இறைவருடன் ஏற்படும் அண்டசராசர இறை தொடர்பு, தூய நேரடியான மாசு மறு அற்ற இறைகாட்சி.

குறிப்பு 2. பூமி அண்டசராசரத்து இறை சத்தியுடன் நேரடியான தொடர்பு வைத்திருக்கின்றது.

உ + ம்(i) **பெர்முட நாட்டில் உள்ள கடல் முக்கோண வலயம்.**
நூற்றுக்கணக்கான மிகப் பிரமாண்டமான கப்பல்களும், ஆகாய விமானங்களும் இவ் முக்கோண எல்லைக்குள் வந்ததும் திடீரெனக் காணாமல் போய்விடுகின்றன.
இன்று வரை விஞ்ஞானிகளால் இதற்கு விளக்கம் கொடுக்க முடியாது திணறுகின்றார்கள்.
மெய்ஞ்ஞானிகள் கூறும் விளக்கம் சுத்த சத்தியால் பூமியும் அண்டசராசரமும் இணைக்கப்படும் பகுதி இதுவாகும்.
இப்பகுதியில் எப்பொருள் சென்றாலும் அனைத்தும் வெறுமையாகி வெறு வெளியாகி விடுகின்றது. பஞ்ச பூதங்களின் செயற்பாடுகள் அனைத்தும் அற்றுப்போகின்றன.

உ + ம் (ii) இதேபோன்ற நிகழ்வுகள் கைலாய மலையிலும் நிகழ்கின்றன.

உ + ம் (iii) ஒரு தூய தெளிந்த உண்மை ஞானி, இது போன்ற ஒரு தொடர்பை ஏற்படுத்தி தன்னை உண்மை வெறு வெளியுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

824 முன் எழு நாபிக்கு முந்நால் விரல் கீழே
பன் எழு வேதப் பகல் ஒளி உண்டு என்னும்
நன் எழு நாதத்து நல் தீபம் வைத்திடத்
தன் எழு கோயில் தலைவனும் ஆமே.

* உடம்பின் சமநிலை மையம், புவிஈர்ப்பு மையம் - நாபிக் கமலம் ஆகும். இதற்கு நாலுவிரல் அளவு தூரம் கீழே உள்ள பகுதியில், வேதங்கள் எல்லாம் போற்றுகின்ற ஒளி-பகல் போன்ற ஒளி ஒன்று உண்டு;
* நல்ல வகையில் எம்முள்ளே எழுகின்ற நாதாந்த பிரம்மத்தை உணர்ந்து, அதில் சிறந்த வகையில் இறை தீபத்தை ஏற்றுதல் வேண்டும்;
* அப்பொழுது ஆத்மா எமது உடலாகிய கோயிலில் எழிற்சி பெற்று, சிறந்த தலைவராக விளங்குவர்.

## XIX பரி அங்க யோகம்

825 பூசுவன எல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறும் குழல் மாலையும் சாத்திக்
காயக் குழலி கலவி ஒடும் கலந்து
ஊசித் துளை உறத் தூங்காது போகமே.

* உடலைக் கோயில் ஆக்கவேண்டும். அதனை நீராட்டி அணிய வேண்டியன எல்லாம் அணிவித்துத் தீப தூபம் காட்டி;
* மாலை சூட்டி, வாசனைத் திரவியங்கள் பூசித் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்;
* ஒரு சிறந்த பெண்ணுடன் காமயோகத்தை அனுபவியுங்கள்;
* காம யோக போகத்திலே உடம்பில் உள்ள சகல அணுக்களும் விழித்தே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

826 போகத்தை உன்னவே போகாது வாயுவும்
மோகத்தை வெள்ளியும் மீளும் வியாழத்தில்
சூது ஒத்த மென் முலையாளு நல் சூதனும்
தாதில் குழைந்து தலை கண்ட வாறே.

* குடும்ப யோகமாகிய காம போகத்தில் திளைக்கும்போது, பிராணனார் எங்கும் செல்லாது எம்முள் இருப்பர்;
* வெள்ளிக் கிழமையில் காம யோக போகத்தில் ஈடுபட்டால், வியாழக்கிழமையில் ஆரம்ப நிலைக்கே இருவரும் வந்து விடுவார்;
* காமமே வடிவான இளமுலை மங்கையும், காமமே உருவான இளைஞனும்;
* காமயோக போகத்தில் முற்று முழுதாகவே ஒன்றிச் செயற்பட்டுத் தலைமைத்துவமாக விளங்கும் உண்மையைக் காண்பர்.

827 கண்டனும் கண்டியும் காதல் செய் யோகத்து
மண்டலம் கொண்டு இருபாலும் வெளி நிற்கும்
வண்டியை மேற்கொண்டு வான் நீர் உருட்டிடத்
தண்டு ஒரு காலும் தளராது அங்கமே.

* சகலவற்றையும் கண்டித்த ஓர் இளைஞனும், சகலவற்றையும் கண்டித்த ஓர் நங்கையும் குடும்பக் கலையாகிய காமயோக போகத்தில் உண்மையாக, முழுமைத்துவமாகத், தெளிவாக ஈடுபடும் போது;
* இருவரும் மண், வான், விண் ஆகிய மூன்று மண்டலங்களிலும் சஞ்சாரம் செய்வார்கள். பின் தூய வெறு வெளியிலும் ஆத்மார்த்தமாக உலவுவார்கள்;
* பிராணனாரை முறையாக இவர்கள் பயன்படுத்தி இறையவரின் அமுதத்தைப் பெற்றுக் கொள்வார்கள்;
* அப்பொழுது சுசுமுனை நாடியும், உடம்பும் ஒருபோதும் தளர்ந்து போக மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

828 அங்கப் புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
அங்கத்தில் விந்து வருகின்ற மோகத்துப்
பங்கப் படாமல் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனும் ஆமே.

❋ குடும்பக் கலையாகிய காமயோக போகம், ஒரு தூய சிறந்த இறை காம தத்துவமாகவே விளங்கும்;
❋ காமயோக போகத்தில் சப்த்த சொரூபமாகிய விந்து தோன்றிய வண்ணமே இருக்கும்;
❋ உடலுக்கும், மனதுக்கும், உயிருக்கும், ஆத்மாவிற்கும் எந்தவிதமான பங்கமும், இடரும், நடுக்கமும் ஏற்படா வண்ணம் காமயோக போகத்தில் ஈடுபட வேண்டும்;
❋ அதனால் இவர்கள், ஒரு சமுதாயத்தில் தலைமைத்துவம் பெற்றுத் தன்னையும், தனது குடும்பத்தையும், தனது சமுதாயத்தையும் நல்ல முறையில் வழி நடத்திச் செல்வார்கள்.

829 தலைவனும் ஆயிடும் தன் வழி ஞானம்
தலைவனும் ஆயிடும் தன் வழி போகம்
தலைவனும் ஆயிடும் தன் வழி உள்ளே
தலைவனும் ஆயிடும் தன் வழி அஞ்சே.

❋ குடும்பக் கலையாகிய காமயோகம் அனுபவிக்கும் ஒருவருக்கு ஞானம் கைகூடும் சாத்தியம் உண்டு. அவர் தனது பாதையில் தலைவனாக விளங்குவர்;
❋ தனது பாதையில் காமபோகத்தை நிறைவாக அனுபவிப்பவர் தனது நிலையில் தலைவனாகவே விளங்குவர்;
❋ காமயோக போகத்தை அனுபவிப்பவர், தன்னுள்ளே அமர்ந்து, தலைவனாக விளங்குவர்;
❋ காமயோக போகத்தை அனுபவிக்கும் ஒருவர் எவ்வழியில் சென்றாலும், அவர் எதற்கும் அஞ்சுவதில்லை.

இப்பாடலில், காமசத்தியால் ஏற்படும் ஆளுமையை திருமூலர் பெருமான் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

830 அஞ்சு கடிகைமேல் ஆளும் கடிகையில்
துஞ்சுவது ஒன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய் கொளாது என்றது
பஞ்ச கடிகை பரி அங்க யோகமே.

❇ காமயோக போகத்தை ஐந்து நாழிகை வரை பயிற்சி செய்யலாம்.

❇ ஆறாம் நாழிகையில் காம யோக போகம் பயிற்சி செய்தால் உடல் வாடிப் போகும்.

❇ துணைவியும், துணைவரும் காமயோக போகத்தில் முழுமையாக ஒன்றிக் கொள்வார்கள். இவர்களின் குடும்ப ஆனந்தம் அவர்களின் இதயத்தை நிறைக்கும். இவர்களின் ஆனந்தத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது;

❇ காமயோக போகம் ஐந்து நாழிகை பயில்வதே பரி அங்க யோகத்தின் சிறப்பு அம்சம் ஆகும்.

831 பரி அங்க யோகத்துப் பஞ்ச கடிகை
அரிய இவ் யோகம் அடைந்தவர்க்கு அல்லது
சரிவளை முன்கைச்சி சந்தனக் கொங்கை
உருவித் தழுவ ஒருவற்கு ஒண்ணாதே.

❇ பரி அங்க யோகத்தின் சிறப்புநிலை, காம யோகபோகத்தில் ஐந்து நாழிகை வாழும் ஒரு வாழ்க்கை ஆகும்;

❇ இறை பாக்கியமும், இறையோகமும் கைவரப் பெற்றவர்களால் மாத்திரமே, பரி அங்க யோகத்தில் தெளிவாக வாழ முடியும்;

❇ சந்தன நிறமும், வாசனையும் கொண்ட, மென்மையான மேல்நோக்கிய சிறு முலையை உடைய நங்கையை;

❇ ஒருபொழுதும் காமவெறிகொண்டு, அவதிப்பட்டு அவளுடன் கூடவே வேண்டாம். இவ்வாறு கூடில், இது குடும்பக் கலையும் அல்ல, காமயோக போகமாகிய பரி அங்க யோகமும் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

832 ஒண்ணாத யோகத்தை உற்றவர் ஆரென்னில்
விண்ணார்ந்த கங்கை விரிசடை வைத்தவன்
பண்ணார் அமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணாம் என எண்ணி இருந்தான் இருந்தே.

* மிகவும் நுட்பமான காமயோக போகத்தை உணர்ந்து வாழ்பவர் யார் என்றால்;
* இறையவர் அருளாகிய கங்கையைத் தனது சகஸ்ரத்தில் உள் எடுத்து, உடல் பூராகவும் நிறைத்து, ஆத்மார்த்தத்திலும் நிறைப்பவர்கள் ஆவர்;
* ஐந்து நாழிகை பரி அங்க யோகம் பயில்பவர்கள் குடும்பக் கலையின்–பண்பாட்டின் உன்னத நிலையில் இருப்பார்கள். பரி அங்க யோகத்தின் அமிர்தத்தினையும் பெற்றுக் கொள்வார்கள்;
* பரி அங்க யோகத்தின் ஆனந்தத்தை, சிந்தனை அறச் சிந்தித்து, ஆறுதல் பெற்று, இவர்கள் தங்கள் வாழ்வில் அமர்ந்திருப்பார்கள்.

833 ஏய்ந்த பிராயம் இருபது முப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கும் ஆனந்தம்
வாய்ந்த குழலியோடு ஐந்து மலர்ந்திடச்
சேர்ந்தன சித்தமும் சோர்வில்லை வெள்ளிக்கே.

* பரி அங்க யோகம் பயில – குடும்ப வாழ்வில் நுழையச் சிறந்த வயது எல்லை நங்கைக்கு இருபதும், நம்பிக்கு முப்பதும் ஆகும்;
* அப்பொழுது தான் நங்கையும், நம்பியும் குடும்பக் கலையின் பரிபூரண ஆனந்தத்தினைப் பெறுவார்கள்;
* நங்கையும், நம்பியும் பரி அங்க யோகத்தில் ஈடுபடும் போது, ஐந்து நாழிகை பூராவும் விழிப்படைந்தும், மலர்ச்சி அடைந்தும் இருப்பார்கள்;
* இருவரினதும் சித்தமும் ஓய்வுபெற்று செயல் இழந்துபோகும். இவர்கள் இருவரினதும் மூலதாதுக்கள் ஒருபொழுதும் சோர்வதும் இல்லை ,விரையம் ஆவதும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

834 வெள்ளி உருகிப் பொன் வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரி இட்டு மூடினார்
கொள்ளி பறியக் குழல் வழியே சென்று
வள்ளி உண்ணாவில் அடக்கி வைத்தாரே.

❇ உண்மையாகப் பரி அங்க யோகத்தில் ஈடுபடும் போது, வெள்ளியாகிய நம்பியின் தாதுவும், பொன்னாகிய நங்கையின் தாதுவும் இழக்கப்படு வதே இல்லை;
❇ பிராணனார் தனது செயற்பாட்டால் இவற்றை நிலை நிறுத்தி வைப்பார்;
❇ காம வெப்பம் இல்லாது போகும் வண்ணம், நடுநாடி ஊடாகப் பிராணனார் உடல் பூராவும் ஓடிச் சென்று;
❇ வளியினை, சகஸ்ரத்திற்குச் சற்றுக் கீழாக உள்ள பகுதியில்–உண்ணா வில் நிலை நிறுத்திவைப்பர்.

835
வைத்த இருவரும் தம்மில் மகிழ்ந்து உடன்
சித்தம் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதின் எண் கணத்துக்கும்
வித்தகனாய் நிற்கும் வெங் கதிரோனே.

❇ நங்கையும், நம்பியும் ஒருவரை ஒருவர் உண்மையாகவே அன்புசெய்து, ஒன்றாகவே இருவரும் மகிழ்ந்து தெளிவு பெற்றுத்;
❇ தங்கள் சித்தம் கலக்கம் அடையாது, பரி அங்க யோகம் ஆகிய குடும்பக் கலையை ஆனந்தமாக அனுபவிக்க வேண்டும்;
❇ இவர்கள் இவ்வாறு அநுபவித்தால், இவர்கள் இருவரிலும் இருந்து சாந் தமான சப்த்த நாத அலைகள் ஒன்றாகி வெளிப்பட்டுப் புறப்படும். இவ் அலைகள் பத்துத் திசையினையும், பதின் எட்டுக் கணங்களையும் சாந்தம் ஆக்கும்;
❇ இவர்களின் ஆத்மா எல்லாவற்றிலும் முதன்மை பெற்று சூரியனைப் போன்று பிரகாசிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

836 வெங்கதிருக்கும் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ஆனந்தம்
தங்களில் பொன் இடைவெள்ளி தாழா முனம்
திங்களில் செவ்வாய் புதைத்து இருந்தாரே.

* சனிக்கிழமையிலும், ஞாயிற்றுக் கிழமையிலும்; நங்கையும் , நம்பியும் காம யோக போகத்தில் ஈடுபட்டால், அவர்கள் பேரானந்தத்தில் திளைப்பார்கள்;
* திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் காமயோகபோகத்தில் ஈடுபடுவது நங்கைக்கும், நம்பிக்கும் சிறப்பு உடையது அன்று;
* அவ்வாறு ஈடுபட்டால், இருவரினதும் மூலதாதுக்களும் வீண்விரையம் ஆகும். அவர்களின் உடற்சுகமும் குன்றிவிடும்.

837 திருத்திப் புதனைத் திருத்தல் செய்வார்க்குக்
கருத்து அழகாலே கலந்து அங்கு இருக்கில்
வருத்தமும் இல்லையாம் மங்கை பங்கற்கு
துருத்தியில் வெள்ளியும் சோராது எழுமே.

* புதன் கிழமையில் நங்கையும், நம்பியும் தங்களின் உடலையும், உள்ளத்தையும் பக்குவம் ஆக்கிப் பாதுகாத்தல் வேண்டும்;
* அப்பொழுது இருவரினதும் உள்ளார்ந்த கருத்துக்கள் ஒன்றாகிக் கலந்து, அவர்களின் காதலை, அன்பை வளர்த்துக் கொள்ளும்;
* இதனால் நங்கைக்கும், நம்பிக்கும் எந்தவிதமான சஞ்சலமும் இருக்காது. நோய் நொடிகளும் ஏற்படாது;
* இருவரினது மூலதாதுக்களும் ஒருபோதும் வற்றாது தோன்றும்.

838 எழுகின்ற தீயை முன்னே கொண்டு சென்றிட்டால்
மெழுகு உருகும், பரிசு எய்திடும் மெய்யே
உழுகின்றது இல்லை ஒளியை அறிந்த பின்
விழுகின்றது இல்லை வெளி அறிவார்க்கே.

* காம யோக போகத்தில் ஒருவர் உண்மையில் ஈடுபடும் போது, முதலில் அவருக்குக் காமம் ஆகிய தீயே முன்னிற்கும்;
* இத்தீயை முதலில் அணைக்க வேண்டும். அதனால் உடம்பில் இருந்து அகல வேண்டியவை அகன்றுவிடும்; அதன் பின்னரே உடம்பு பெற வேண்டிய உண்மைப் பரிசைப் பெற்றுக் கொள்ளும்;
* இறைஜோதியைத் தன்னுள்ளே அறிந்தால் , உடம்புக்கு ஒருபோதும் ஊனம் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

839 வெளியை அறிந்து வெளியின் நடுவே
ஒளியை அறியினும் உளி முறியாமே
தெளிவை அறிந்து செழு நந்தியாலே
வெளியை அறிந்தனன் மேல் அறியேனே.

❋ உண்மையான தூய வெளியை அறிந்து கொள்ளுங்கள்;
❋ தூய்மையான உண்மை வெளியின் நடுவே ஒளியை அறிந்து கொள்ளுங்கள்;
❋ உங்களின் அனைத்து ஆய்வின் முடிவிலும், நீங்கள் தெளிவு நிலையை அறிந்து கொள்ளுங்கள்;
❋ திருமூலராகிய யானோ திருநந்திதேவரின் அருளாலே, தூய்மையான உண்மை வெளியை முழுதாக அறிந்து கொண்டேனே. இதற்கு மேல் ஒன்றும் யான் அறியேன்.

மேலாம் தலத்தில் விரிந்தவர் ஆர் எனில்
840 மாலாம் திசைமுகன் மாநந்தி ஆயவர்
நாலா நிலத்தின் நடுவான அப்பொருள்
மேலாய் உரைத்தனர் மின் இடையாளுக்கே.

❋ இறைவரால் ஏற்படுத்தப்பட்ட அருள் ஞான சபையில் மலர்ந்திருப்பவர்கள் பத்துப்பேர் ஆவர்கள்;
❋ இவர்கள் முறையே நாதம், பிந்து, சுத்த சத்தி, அர்த்த நாரீஸ்வரர், திருநந்திதேவர், பிரம்மா, விஷ்ணு, சங்கரர், ஈசர், சதாசிவர் ஆவர்;
❋ இந்தப் பரப்பிரம்ம ஞான தூய உண்மை அருள் வெளியிலே, வெளியாக-நடுநாயகமாக, உண்மையாக இருப்பது சிவம் ஆகும்;
❋ பரி அங்க யோகத்தின் நுட்பம், சுத்த சத்தியாகிய இறைவிக்கே உணர்த்தப்பட்டது. உரைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

841 மின் இடையாளும் இன்னாளனும் கூட்டத்துப்
பொன் இடை வட்டத்தின் உள்ளே புகப்பு எய்து
தன்னொடு தன்னைத் தலைப்பு எய்ய வல்லாரேல்
மண்ணிடைப் பல் ஊழி வாழலும் ஆமே.

❇ நங்கையும், நம்பியும் காமயோக போகத்தில் ஈடுபடும் காலத்து;
❇ நம்பியானவர் பொன்னாகிய நாத சொரூபத்தின் உள்ளே செல்ல வேண்டும்;
❇ இவ் இருவரும் தமக்குள்ளேயே சென்று, தம்மை முழுமையாக உணரத் தலைப்பட வேண்டும்;
❇ அப்பொழுது இவர்கள் எதுவித சிரமமும் இன்றி, இப்பூமியில் பலவிதமான ஊழிக்காலங்களையும் கண்டு, கடந்து நீண்ட காலம் வாழ்வார்கள்.

842 வாங்கல் இறுதலை வாங்கலில் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகு அறிவார் இல்லை
வீங்க வலிக்கும் விரகு அறிவாளரும்
ஓங்கிய தன்னை உதம் பண்ணினாரே.

❇ காம யோக போகத்தில் சப்த்தமும், நாதமும் ஐக்கியம் ஆவதை ஒருவரும் அறியாது உள்ளார்கள்;
❇ சப்த்தமும் நாதமும்–ஆண் மூலதாதுவும், பெண் மூலதாதுவும் ஒன்றாகச் சங்கமம் ஆவதை உணர்ந்து அறிந்து கொள்ளுங்கள்.
❇ எல்லாவற்றிலும் வேகத்துடனும், வேட்கையுடனும் செயலாற்றியவர்கள்; தங்களைத் தாங்களே சாந்தப்படுத்திக் கொள்வார்கள்.

843 உதம் அறிந்து அங்கே ஒரு சுழிப்பட்டால்
கதம் அறிந்து அங்கே கபாலம் கறுக்கும்
இதம் அறிந்து என்றும் இருப்பாள் ஒருத்தி
பதம் அறிந்து உம் உளே பார் கடிந்தாளே.

❇ சாந்த நிலையை அடையும் வழிவகைகளை அறிந்து ஏகமாகி இருக்க வேண்டும்;
❇ அப்பொழுதுதான் எமது "கோபத்தின் நிலையை" முற்றாக நாம் அறியலாம். நாமும் கோப நிலையில் இருந்து விடுபடுவோம். எமது கபாலமும் கருமையாகி விடும்;
❇ சுத்த சத்தி எமது எல்லாவித விருப்பங்களையும் அறிந்து, அவற்றை நிறைவேற்றி வைத்து எம்முடனேயே இருப்பாள்;
❇ எமக்கு வழங்கவேண்டியவற்றின் பதத்தை –பக்குவத்தை அறிந்து, எம்மைக் கடிந்து கொள்ள வேண்டிய இடத்தில் கடிந்து, எமது அகத்தையும் புறத்தையும் சுத்த சத்தி நெறிப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

844 பார் இல்லை நீர் இல்லைப் பங்கயம் ஒன்று உண்டு
தார் இல்லை வேர் இல்லை தாமரை பூத்தது
ஊர் இல்லைக் காணும் ஒளி அது ஒன்று உண்டு
கீழ் இல்லை மேல் இல்லை கேள்வியில் பூவே.

❋ பூமியைக் காணவில்லை. நீரையும் காணவில்லை. ஆனால் ஓர் தாமரைப் பூ காணப்படுகின்றது;

❋ இத்தாமரைப் பூவுக்குத் தண்டையும் காணவில்லை. வேரையும் காண வில்லை. ஆனால் மிகவும் நன்றாகப் பூத்துள்ளது;

❋ எந்தவிதமான சப்த்தங்களையும் காணவில்லை. ஆனால் அங்கே ஒளி தெளிவான காட்சியாகப் புலப்படுகின்றது;

❋ ஆரம்பத்தையும் காணவில்லை. முடிவையும் காணவில்லை. மெய்ஞ்ஞானக் கேள்வியிலேயே ஆத்ம பூ மலரும். காம ஞான யோக போகத்தில் திளைக்கும் போது, சகஸ்ரம் ஆகிய ஆயிரம் இதழ்த்தாமரையும் பூக்கும். தூய ஒளி வெளியாகிய ஆத்மாவும் மலரும்.

## XX அமுரிதாரணை

845 உடலில் கிடந்த உறுதிக் குடிநீர்க்
கடலில் சிறு கிணற்று ஏற்றம் இட்டால் ஒக்கும்
உடலில் ஒரு வழி ஒன்றுக்கு இறைக்கில்
நடலைப் படாது உயிர் நாடலும் ஆமே.

❋ எமது உடம்பினுக்கு உள்ளே உறுதியான, தெளிந்த, சிறந்த, அருந்து வதற்குரிய நீர் ஊற்றெடுத்த வண்ணமே உள்ளது;

❋ இந்நீர் கடற்கரையின் அருகே உருவாகும். சிறந்த குடிப்பதற்குரிய கிணற்று நீருக்கு ஒப்பாகும்.

❋ இத் தெளிந்த நீரைத் தொடர்ச்சியாகவே நாம் பாவனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்;

❋ அப்பொழுது உடலும் நோயின்றி இருக்கும், உயிரும் வாடாது என்றும் சிறப்புடன் விளங்கும்.

இந்நீர் –சிவநீர் என்றும், அமுரி என்றும் **சிவாமிர்தம்** என்றும் அழைக்கப் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

846 தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரும் ஓர் ஆண்டில் ஊனம் ஒன்று இல்லை
வளி உறும் எட்டில் மனமும் ஒடுங்கும்
களி தரும் காயம் கனகம் அதாமே.

❋ எமக்குத் தெளிவு தருகின்ற தெளிந்த சிவநீரை நாம் பருகவேண்டும்;
❋ ஓராண்டில் எமக்குள் ஆனந்தமான ஒளியினை நாம் காண்போம்; அதனால் உடலுக்கும் உயிருக்கும் எந்தவிதமான ஊறும் ஏற்பட மாட்டாது;
❋ வளியும் அகரத்தில் அடங்கி விடும். மனமும் ஒடுங்கிவிடும்;
❋ எமக்கு ஆனந்தத்தைத் தருகின்ற உடல், இச் சிவநீர் பருகுவதனால் பொன்மயம் ஆகிவிடும்.

847 நூறு மிளகு நுகரும் சிவத்தி நீர்
மாறும் இதற்கு மருந்து இல்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளி உச்சி கப்பு இடில்
மாறும் இதற்கு மறு மயிராமே.

❋ அதிகாலையில் நூறு மிளகு அளவு சிவ அமிர்தம் எடுத்து, வெறு வயிற்றில் தினமும் பருகவேண்டும்;
❋ இச்சிவ அமிர்தத்திற்கு ஈடு இணையான மருந்து மண், வான், விண்ணிலும் கிடையாது;
❋ சிவ அமிர்தத்தை முறையாகப் பயன்படுத்தி சகஸ்ரம் அமைந்துள்ள பகுதியில் நன்றாக ஊறவிட்டுத் தேய்த்து நீராட வேண்டும்;
❋ இதனால் நரையும் மாறும். முதுமையும் நீங்கும்.

848 கரை அருகே நின்ற கானல் உவரி
வரை வரை என்பர் மதி இல்லா மாந்தர்
நுரை திரை நீக்கி நுகர வல்லார்க்கு
நரை திரை மாறும் நமனும் அங்கு இல்லையே.

❋ உடலின் ஒரு எல்லையிலே சிவ அமிர்தம் உருவாகும். வெப்பம் மிகுந்த ஓர் இடத்தில் இருந்து உருவாகும். இது சில சமயம் உவர்த்தன்மை கொண்டதாகவும் விளங்கும்;
❋ புத்தி இல்லாத மனிதர்கள் இச்சிவ அமிர்தத்தை “வேண்டாம் வேண்டாம். அருவருப்பானது” என்று கூறுவர்;
❋ சிவ அமிர்தத்தின் முதற்பகுதி நுரையாகிய நச்சுப் பொருளைக் கொண்டது. அதன் இறுதிப்பகுதி, திரையாகிய பித்தப் பகுதியைக் கொண்டது. இவ் இரு பகுதிகளையும் நீக்கி , அதன் மத்திய பகுதியை நுகர வேண்டும்;
❋ அப்பொழுது நரையும் மாறும். மூப்பும் நீங்கும். காலதேவனும் எம்மை அணுகவே மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

849 அளக நன் நுதலாய் ஓர் அதிசயம்
களவு காயம் கலந்த இந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பு இடில்
இளகும் மேனி இருளும் கபாலமே.

❊ நீண்ட கூந்தலையும், அழகிய நெற்றியையும் உடைய நங்கையே! ஓர் அதிசயமான செய்தி உண்டு;

❊ காதல் நிறைந்த இந்த அற்புத உடம்பில், சிவ அமிர்தம் ஊறுகின்றது;

❊ இச் சிவ அமிர்தத்திற்கு மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகியவற்றை முறைப்படி கலக்க வேண்டும்;

❊ இதனை உள்ளே அருந்தியும், உடல் பூராவும் தேய்த்தும் நீராட வேண்டும். அப்பொழுது உடம்பு இளமையாகும். கபாலமும் கருமை ஆகும்.

குறிப்பு. சிவ அமிர்தத்துடன் பசுவின் பாலைக்கலந்து, உடல் பூராவும் தேய்த்து நீராடலாம்.

850 வீர மருந்து என்றும் விண்ணோர் மருந்து என்றும்
நாரி மருந்து என்றும் நந்தி அருள் செய்தான்
ஆதி மருந்து என்று அறிவார், அகல் இடம்
சோதி மருந்து இது சொல்ல ஒண்ணாதே.

❊ சிவ அமிர்தம்; நோய் நொடி அனைத்தையும் வீரமாக- வெற்றியாக நீக்கும்;

❊ இதனை விண்ணவர்கள் மருந்து என்றும், பெண்மை நிறைந்த மருந்து என்றும்;

❊ மிகவும் ஆதியான மருந்து என்றும், சோதிமயமான மருந்து என்றும் எனக்குக் கூறினார், நந்தி எம்பெருமானார். மேலும் அதை எனக்குக் காட்டி அருள் செய்துவிட்டார்;

❊ உலக வாழ்க்கையில் மயங்கிக் கிடப்பவர்களுக்கு, இம் மருந்தை ஒரு பொழுதும் சொல்லவே கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

## XXI சந்திரயோகம்

851 எய்து மதிக்கலை சூக்கத்தில் ஏறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்தும் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே.

* இடகலை ஆகிய சந்திர நாடியை நெறி பிறழாது பயன்படுத்தி, சூக்கும மாகிய ஆத்ம நகரைப் பிராணனார் அடைய வேண்டும்;
* தெளிவாக்கப்பட வேண்டிய தூலமாகிய உடலுக்கு இருவகைப் பக்கங் கள் உண்டு.

  1. உடலுக்கு உள்ளே உள்ள ஆத்ம வெளி
  2. உடலைச் சூழ்ந்துள்ள வெறுவெளி.

* இவ் இருவகையான பக்கங்களுக்கும் பிராணனார் பிரயாணம் செய்வர்;
* உருவ நிலையில் உள்ள உடலின் உள்ளேயும், வெளியேயும் தூய வெறு வெளி உண்டு.

852

ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈர்எட்டொடு ஆறு இரண்டு ஈர்ஐந்து உள்
ஏகின்ற அக்கலை எல்லாம் இடை வழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே.

* பிராணனார் இடது கலையால் செயற்படும் போது தாய்மை நிலையைப் பெறுவர். சந்திரன் எனப் பிராணனார் பெயர் பெறுவர்.
* பிராணனார் வலது கலையால் செயற்படும்போது, தந்தையின் நிலையைப் பெறுவர். சூரியன் எனப் பிராணனார் பெயர் பெறுவார். பிராணனார் சுசுமுனாநாடியால் செயற்படும்போது குருவின் நிலையைப் பெறுவர். அக்கினி எனப் பிராணனார் பெயர் பெறுவர்;
* பிராணனார் சந்திரகலையால் செயற்படும்போது, அர்த்தநாரீஸ்வரரின் தாற்பரியம் வெளிப்படும். பிராணனார் சூரியகலையால் செயற்படும்போது ஆறு அத்துவா, அத்துவாசுத்தியின் தாற்பரியம் வெளிப்படும். பிராணனார் அக்கினி கலையால் செயற்படும்போது, லிங்க தாற்பரியம் வெளிப்படும்.
* மூன்று கலைகளையும் எதுவித குறைபாடும் இன்றிப் பயன்படுத்தி, ஏக வேண்டியவற்றை ஏக வேண்டும்;
* இவ்வாறு மூன்று கலைகளாலும் ஆகிக்கொண்டு தன்னுள் இருப்பதை சிறந்த ஞான அறிவாக ஒரு யோகி அறிந்து கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

853 ஆறு ஆறு அதாம் கலை ஆதித்தன் சந்திரன்
நாறா நலங்கினார் ஞாலம் கவர் கொளப்
பேறாம் கலை முற்றும் பெரும் கால் ஈர் எட்டு
மாறாக் கதிர்கொள்ளு மற்று அங்கி கூடவே.

❋ ஆறு ஆதாரம் கடக்கப் பிராணனார் சந்திரகலையில் நின்றும், ஆறு அத்துவா கடக்க -அத்துவா சுத்தம் செய்யப் பிராணனார் சூரிய கலையில் நின்றும், முக்கிய பங்கு ஆற்றுவார்;

❋ எவ்வித ஊனமும் இல்லாது, மிகவும் விருப்புடனே பிராணனார் ஞாலமாகிய எமது உடலை நன்கு காத்துக் கவர்ந்து தன் வயமாக்குவார்;

❋ அப்பொழுது உடலார் முற்று முழுதாக அர்த்த நாரீஸ்வரர் தன்மையைப் பெற்றுக்கொள்வார் ;

❋ பிராணனார் அக்கினி கலையில் நின்று செயலாற்றும்போது மாற்றம் அடையாத ஒளிக்கதிரைத் தன்னில் இருந்து வெளிப்படுத்தி உடல் பூராவும் பிரகாசிக்கச் செய்வர்.

854 பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினொடு ஆறும் உயர்கலை பான்மதி
ஒத்த நல் அங்கியது எட்டு எட்டு உயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்து கொள்வீரே.

❋ சூரிய கலையில் பிராணனார் முழுமையாகச் செயலாற்றில், லிங்க சொரூபமும், சத்தி சொரூபமும் எம்முள் தெளிவாக உணரப்படும்.

❋ சந்திரகலையில் பிராணனார் முழுமையாகச் செயலாற்றில் , ஆறு அத்துவாக்களும் சுத்தம் அடைந்துவிடும். லிங்க சொரூபமும் உணரப்படும்;

❋ அக்கினி கலையில் பிராணனார் முழுமையாகச் செயற்படும்போது, தூல சிவ நிலையும், சூக்கும சிவநிலையும் உணரப்படும்;

❋ இவ்வாறு சந்திர, சூரிய, அக்கினி கலைகளில் பிராணனார் சஞ்சாரம் செய்யும்போது ஏற்படும் மாற்றங்களைத் தெளிந்து, உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

855 எட்டு எட்டு அனலின் கலை ஆகும், ஈர் ஆறு உள்
சுட்டப்படும் கதிரோனுக்கும், சூழ்கலை
கட்டப்படும் ஈர் எட்டா மதிக்கலை
ஒட்டப்படா இவை ஒன்றோடு ஒன்றாவே.

❋ சர்வ லிங்கமும், சிவநிலையும் அக்கினி கலையால் உணரப்படும்;
❋ ஆறு ஆதாரங்கள், ஆறு அத்துவாக்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் சூரியகலையால் உணரப்படும்;
❋ சுத்த சத்தி நிலையும், சிவநிலையும் சந்திரகலையால் உணரப்படும்;
❋ இம்மூன்று கலைகளும் ஒன்றுடன் ஒன்று சேரமாட்டாதன. தனித்தே செயற்படுவன.

856 எட்டு எட்டும் ஈர் ஆறும் ஈர் எட்டும் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றும் கலை எனக்
கட்டப்படும் தாரகை கதிர் நாலு உள
கட்டிட்ட தொண்ணூற் டொடு ஆறும் கலாதியே.

❋ சர்வ லிங்க நிலையும்-சிவநிலையும், ஆறு ஆதாரநிலையும்- ஆறு அத்துவா நிலையும், சுத்த சத்திநிலையும்-சிவநிலையும்;
❋ சந்திரகலையாலும், சூரிய கலையாலும், அக்கினி கலையாலும் தெளிவுபட எம்முள்ளே புலப்படுத்தப்படும்;
❋ இம்மூன்று கலைகளும் எம்முள்ளே தெளிவுபட செயற்படும்போது, ஆத்மா எம்முள் நட்சத்திரம் போன்று இயற்கையாகவே ஒளிவீச ஆரம்பிக்கும்.
❋ நாலுவகை கதிர்கள் அப்பொழுது எம்மில் இருந்து வெளிப்படும். அவை யாவன;
1. நாதக் கதிர் 2. சப்தக் கதிர் 3. ஜோதிக் கதிர் 4. அமிர்தக் கதிர்.
96 வகைத் தத்துவங்களும் எம்முள்ளே உணரப்படும்.

857 எல்லாக் கலையும் இடைபிங்கலை நடுச்
சொல்லா நடுநாடி ஊடே தொடர் மூலம்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணி நிற்போரே.

❋ எல்லாவிதமான கலைகளும் இடைகலை, பிங்கலை சுசுமுனை ஆகிய நாடிகள் ஊடாகச் செயற்பட்ட வண்ணம், மூலத்துடன் தொடர்பு கொள் வன.
❋ இவ்வாறு மூலத்துடன் தொடர்பு கொள்ளும்போது அனைத்து நிகழ்வு களும் சிரசிலேயே ஒடுக்கம் அடைந்து கொள்ளும்;
❋ சிறந்தோர்-பெரியோர்-நல்லோர் என்றும் இறைவரின் திருவடியைப் பற்றி அதைச் சார்ந்தே வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

858 அங்கியில் சின்னக் கதிர் இரண்டு ஆட்டத்துத்
தங்கிய தாரகை ஆகும் சசி பானு
அங்கிய தாரகை ஆகும் பரை ஒளி
தங்கு நவ சக்கரம் ஆகும் தரணிக்கே.

* அக்கினி கலையில் இருந்து இருவகைக் கதிர்கள் புறப்படுகின்றன. ஒன்று ஆத்ம நகரை நோக்கிச் செல்வது மற்றையது உலக நகரை நோக்கிச் செல்வது;
* சந்திரகலையும், சூரியகலையும் பிராணனாரினது சஞ்சாரத்தினால் நட்சத் திரம் போன்று பிரகாசித்துக் கொண்டு இருக்கும்;
* சுத்த சத்தியினது ஒளியும், நட்சத்திரம் போன்று சுடர்விட்டு எமக்குச் சிறந்த கவசமாக விளங்கும்;
* சுத்த சத்தியின் ஏற்பாட்டால் ஒன்பது வகை சக்கரங்களும், பூமியில் உள்ளோர்க்கு வழங்கப்பட்டுள்ளன. இவ் ஒன்பது சக்கரங்களும்; ஒன்பது வகைச் சத்தியுடனும், ஒன்பது வகை யோகங்களுடனும் தொடர்புடையன.

| சக்கரங்கள் | சத்திபேதம் | யோகங்கள் |
|---|---|---|
| 1. திரிபுரைச் சக்கரம் | திரிபுரை | பக்தி யோகம் |
| 2. வயிரவிச் சக்கரம் | வயிரவி | கர்மயோகம் |
| 3. பூரணிச் சக்கரம் | பூரணி | இராஜயோகம் |
| 4. புவனாபதிச் சக்கரம் | புவனாபதி | ஞானயோகம் |
| 5. ஏரொளிச் சக்கரம் | ஏரொளி | அட்டாங்கயோகம் |
| 6. காயத்திரிச் சக்கரம் | காயத்திரி | பரிஅங்கயோகம் |
| 7. சாம்பவிச் சக்கரம் | சாம்பவி | சந்திரயோகம் |
| 8. காலச்சக்கரம் | காலதேவி | கேசரி யோகம் |
| 9. நவாக்ஷரி சக்கரம் | நவாக்கரி | சிவயோகம். |

859 தரணி சலம் கனல் கால் தக்க வானம்
அரணிய பானு அரும் திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவம் ஆகும் பெருநெறி தானே.

* பூமி , நீர், தீ, காற்று, ஆகாயம், சந்திரன், அக்கினி, எண்ணிறந்த நட்சத்திரங்கள் ஆகிய அனைத்தும் பிரணவமான ஓங்காரத்தின் சப்த்தமாக, அதன் வடிவமாக, அதன் நாதமாக, அதன் ஜோதியாக எமக்குப் புலப்படும்;
* இவை அனைத்தும், நாம் இறைவரை அனுபவிக்கின்ற பெரு நெறியைக் காட்டிய வண்ணமே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

860 தாரகை மின்னும் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னா சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவில் சகலத்தி யோனிகள்
தாரகைத் தாரகை தானாம் சொரூபமே.

* எம்முள்ளே உள்ள ஆத்ம தாரகை தனது இயல்பான பிரகாசத்தை வெளிப்படுத்தும் காலத்து சந்திரகலையும், அக்கினி கலையும் சிறப்புறவே செயற்படும்;
* ஆத்ம தாரகை வெளிப்படாத காலத்து சந்திரகலையும், அக்கினி கலையும் செயற்படாதிருக்கும்;
* ஆத்ம பூவிலே ஒன்பது சத்தியினது; ஒன்பது யோனிகளும் - ஒன்பது சங்கரங்களும் தெளிவுற உணரப்படும்;
* ஆத்மாவாகிய தாரகை என்றும், சுயமாகவே பிரகாசித்த வண்ணம் இருக்கும்.

861 முற்பதின் ஐஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
பிற்பதின் ஐஞ்சில் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதின் ஐஞ்சும் அறிய வல்லார் கட்குச்
செப்பு அரியான் கழல் சேர்தலும் ஆமே.

* பிராணனார் மேல்நோக்கி எமக்குள் எழுகின்ற போது, 15 எழுத்தாகிய பஞ்சதசாட்சரத்தினைப் படிப்படியாக உணர்ந்து மேற்செல்வர். அப் பொழுது பிராணாயாமப் பூ மலர்ந்து வளர்ந்து பெரிதாகும்;
* பிராணனார் கீழ்நோக்கி எம்முள் இறங்குகின்றபோது, 15 எழுத்தாகிய பஞ்சதசாட்சரத்தினைப் படிப்படியாக உணர்ந்த வண்ணம் கீழ்நோக்கி வருவார். அப்பொழுது பிராணாயாமப் பூ சிறிதாகிவிடும்;
* இப் பதினைந்து எழுத்தாகிய, சத்தி மூல மந்திரத்தை - பஞ்சதசாட் சரத்தை உணர்ந்து அறியவல்லவர்கள்;
* இறைவரின் மௌன ஞான அருட்திருவடியைச் சேர்ந்து கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

862 அங்கி எழுப்பி அரும் கதிர் ஊட்டத்துத்
தங்கும் சசியால் தாமம் ஐந்து ஐந்து ஆகிப்
பொங்கிய தாரகையாம் புலன் போக்கு அறத்
திங்கள் கதிர் அங்கி சேர்கின்ற யோகமே.

* அக்கினி கலையைப் பிராணனாரின் உதவிகொண்டு நன்கு செயற்பட வைத்து, அதில் ஒளியைப் பிரகாசிக்கச் செய்தல் வேண்டும்;
* சந்திரகலையை நன்கு பயன்படுத்தி, அதை ஒளிபெறச் செய்து, உள்ளே உள்ள லிங்க சொரூபத்தை உணரவேண்டும்;
* எம்முள்ளே உள்ள ஆத்ம தாரகை பொங்கிப் பிரகாசிக்கும் காலத்து, புலன்களின் செயற்பாடுகள் எல்லாம் அற்றுப் போகும்;
* சந்திரயோகத்தின் உண்மையான செயற்பாடு சுசுமுனையிலும், உடல் பூராவும் ஒளியை ஏற்படுத்துவது ஆகும்.

863 ஒன்றிய ஈர் எண் கலையும் உடல் உற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்து உழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வர் திகைப்பு ஒளியாரே.

* ஒன்றாகவே, எமது உடலோடு உள்ளார்ந்து ஐக்கியமாகி உள்ள சிவ சத்தி நிலையைத்;
* தெளிவுபடக் கண்டும், உணராது, நினையாது, உள்ளார்களே இவ் உலக மாந்தர்;
* காலதேவனோ இவர்களுக்கு மரணப் பொறியை அமைத்துவிடுவான்;
* இவர்களும் எவ்வித தங்கு தடையும் இல்லாது, அதில் சென்று வீழ்ந்து விடுவார்கள்.

இவர்கள் ஒருபொழுதும் தங்களின் திகைப்பில் இருந்து விடுபடவே மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

864 அங்கி மதிகூட ஆகும் கதிர் ஒளி
அங்கி கதிர் கூட ஆகும் மதி ஒளி
அங்கி சசிகதிர் கூட அத் தாரகை
தங்கி அதுவே சகலமும் ஆமே.

❋ அக்கினி கலையுடன் சந்திரர் கூடும்போது, அவற்றின் கதிர்கள்–கற்றைகள் ஒளிவடிவம் பெறுகின்றன;
❋ அக்கினி கலையுடன் அதன் கற்றைகள் இணையும்போது, சந்திர கலையில் இருந்து ஒளி பிரகாசிக்கும்;
❋ அக்கினி கலையுடன் சந்திர கலையும் ,அதன் கற்றைகளும் கூடும்போது, தாரகையாகிய ஆத்மா எம்முள்ளே ஒளிவிடும்;
❋ இவ் ஆத்ம ஒளியே, எமது உடலின் உள்ளும், புறமும் தங்கி, எமக்குச் சகலமும் ஆக விளங்கும்.

865 ஈர் ஆறு பெண்கலை எண் இரண்டு ஆண்கலை
பேராமல் புக்குப் பிடித்துக் கொடு வந்து
நேராகத் தோன்றும் நெருப்புறவே பெய்யில்
ஆராத ஆனந்தம் ஆனந்தம் ஆனதே.

❋ சந்திரகலை–பெண்கலை ஆகும். இது ஆறு ஆதாரம், அத்துவா சாதனைக்குச் சிறப்பாகப் பயன்படும்.
சூரியகலை–ஆண்கலை ஆகும். இது சுத்த சத்தியையும், சிவநிலையையும் உணர்வதற்கு வழிவகுக்கும்;
❋ இவ்விருகலைகளையும், அவற்றின் நிலையில் இருந்து பிறழாது, தெளிவுற நெறிப்படுத்தி நடுநாடியில், அக்கினி கலையுடன் ஒருப்படுத்த வேண்டும்;
❋ அப்பொழுது எம்முள்ளே குன்றாத ஆனந்தம், ஆனந்தமாகவே மலர்ந்த வண்ணம் இருக்கும்.

866 காணும் பரிதியின் காலை இடத்து இட்டு
மாணும் மதி அதன் காலை வலத்து இட்டுப்
பேணியே இவ்வாறு பிழையாமல் செய்வீரேல்
ஆணி கலங்காது அவ் ஆயிரத்து ஆண்டே.

❋ சூரிய கலையில் ஓடுகின்ற பிராணனாரைச் சந்திரகலையில் மாற்ற வேண்டும்;
❋ சந்திரகலையில், ஓடுகின்ற பிராணனாரைச் சூரியகலையில் மாற்றவேண்டும்;
❋ இவ்விரு கலைகளிலும் பிழைபடாது பிராணனாரை மாற்றுதல் வேண்டும்;
❋ அப்பொழுது உடலும், உயிரும் பிரியாது, கலங்காது, ஆயிரம் ஆண்டுகள் வாழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

867 பாலிக்கும் நெஞ்சம், பறை, ஓசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரம்
மேலைக்கு முன்னே விளக்கு ஒளியாய் நிற்கும்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே.

* எம்முள்ளே உள்ள ஒன்பது வகையான சத்தி பேதங்களில் இருந்தும் ஒன்பது வகையான ஓசைகள் வெளிப்படும். இவை ஆத்ம இதயத்தால் உணரப்படும்.
* தேவர்களுக்குத், தலைவராக விளங்கும் இறைவர், எமது ஆத்ம இதயத்தில் பிரகாசித்த வண்ணம் இருப்பார்;
* ஆத்மசுடர், இறையவர் சந்நிதானத்தில் ஒளிவிளக்காகிப் பிரகாசிக்கும்;
* இந்நிகழ்வு காலையில் சூரியன் உதிக்கும் போது கேட்கும் சங்க நாதத்திற்குச் சமானமாகும்.

868

கதிரவன் சந்திரன் காலம் அளக்கும்
பொதிர் அவன் உள்ளே பொழிமழை நிற்கும்
அதிர் அவன் அண்டப் புறம் சென்று அடர்ப்ப
எதிர் அவன் ஈசன் இடம் அது தானே.

* சூரியனு ம் சந்திரனும் பூமியினது காலத்தை அளவீடு செய்கின்றன. அவ்வாறே சூரியகலையும், சந்திரகலையும் எமது ஆயுட்காலத்தை அளவீடு செய்கின்றன;
* சூரியனும் சந்திரனும் பூமியிலே மழைபொழிய ஏதுவாகின்றன. சூரியகலையும், சந்திரகலையும் எமது அகத்தையும், புறத்தையும் குளிர்மையாக வைத்திருக்கும்;
* ஆத்மா அதிர்வு நிலையால் அண்டத்திற்கும், அண்டம் கடந்த நிலைக்கும் சென்று வரும்;
* ஆத்மா ஈசர் எனும் தேவதை போன்று ஆகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

869 உந்திக் கமலத்து உதித்து எழும் சோதியை
அந்திக்கு மந்திரம் ஆரும் அறிகிலார்
அந்திக்கு மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே.

❋ எம்முள்ளே இயல்பாகவே ஜோதி உதித்து எழுகின்றது;
❋ இந்த ஜோதி இறையவர் மந்திரத்தில் முடிவுறுகின்றது. இதனை ஆரும் அறியாது உள்ளார்கள்;
❋ இவ் இறை மந்திரத்தை எல்லோரும் அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டும்;
❋ அப்பொழுது. ஆத்மா(மகன்) எம்முள்ளே முதலில் உணரப்படும். ஆத்மா முதலில் எமது உடலின் உள்ளே கோயில் கொள்ளும். அதன் பின்னரே இறையவர்(தந்தை) எம்முள்ளே உறைவார். ***ஆத்மாவை முதலில் நாம் உணர்ந்தபின்னரே, இறையவரை நாம் உணர்வோம்.*** இதுவே தந்தையின் முன்னே மகன் பிறந்தான் என்பதன் தெளிவாம்.

870 ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லிரேல்
வேதியன் அங்கே வெளிப்படும் தானே.

❋ இறையவரின் சிறப்பு, பெருமை, மகிமை ஆகியவற்றை உரைத்தும், அநேகர் அறியாது உள்ளார்கள்;
❋ இறையவரின் நாமங்களை உச்சாடனம் செய்தபோதும், இறைவரை வழிபடாது, அறியமுயலாது, உணராது அநேகர் உள்ளார்கள். இவர்கள் மந்த புத்தி உடையவர்கள் ஆவர்.
❋ எல்லாச் செயற்பாட்டினது ஆரம்பத்தையும், முடிவையும் கடந்துவிட வல்லமை பெற்றுவிட்டால்;
❋ இறையவர் எம்முள்ளேயே வெளிப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

871 பாம்பு மதியைத் தினல் உறும் பாம்பினைத்
தீங்கு கதிரையும் சோதித் தனல் உறும்
பாம்பு மதியும் பகைதீர்த்து உடன் கொளீஇ
நீங்கல் கொடானே நெடுந்தகை யானே.

* பாம்பாகிய ஐந்து புலன்களும் புத்தியைத் தினமும் தூண்டிய வண்ணமே உள்ளன;
* ஒழுங்கின்றிச் செல்லும் காற்றும், ஐந்து புலன்களும் எம்முள் சதா நெருப்பைத் தோற்றுவித்த வண்ணமே உள்ளன;
* ஐந்து புலன்களும், புத்தியும் தங்களுக்குள்ளே உள்ள புரியாத நிலைப் பாட்டை விலக்கிப் பகைமையை நீக்கி, அவை ஒன்றாகி, செயலாற்ற வேண்டும்;
* அப்பொழுது இறையவர் எம்முள் எதுவித பேதமும் இன்றி நீக்கம் அற நிறைந்திருப்பார்.

872 அயின்றது வீழ்வு அளவும் துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று
நயம் தரு பூரணை உள்ள நடத்தி
வியம் தரு பூரணை மேவும் சசியே.

* வளர்பிறை காலங்களில் துயில் நீக்கி நாம் விழித்திருத்தல் வேண்டும்; சந்திரகலை மேல் நோக்கி வளரும்போது, நாம் விழித்திருத்தல் வேண்டும்;
* தேய்பிறை காலங்களில் நன்கு நாம் துயில வேண்டும்-சந்திரகலை கீழ் நோக்கி வரும்போது நாம் தூங்குதல் வேண்டும்;
* பூரணச்சந்திரன் நாளில் எல்லோருக்கும் நன்மை பயக்கும் ஆத்ம சாதனை செய்தல் வேண்டும். சந்திரகலையால் எம்முள் முழுமையான சந்திரஒளி தோன்றும்போது, எல்லோருக்கும் நன்மைபயக்கும் ஆத்ம சாதனையை நாம் செய்தல் வேண்டும்;
* சந்திரகலையின் உண்மையான பெறுபேற்றினைப் பூரணை நாட்களில் நாம் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

873 **சசி உதிக்கும் அளவும் துயில் இன்றிச்**
**சசி உதித்தானேல் தனது ஊண் அருந்திச்**
**சசி சரிகின்ற அளவும் துயிலாமல்**
**சசி சரிப்பின் கட்டன் கண்துயில் கொண்டதே.**

* சந்திரன் உதிக்கும் வரைக்கும் துயில் நீக்கி இருத்தல் வேண்டும்;
* சந்திரன் உதிக்கின்றபோது தனது உணவை உண்ணுதல் வேண்டும்;
* சந்திரன் சிரசின் உச்சிக்கு வரும்வரைக்கும் துயிலாதிருத்தல் வேண்டும்;
* சந்திரன் உச்சியில் இருந்து கீழ்நோக்கிச் சரிகின்றபோது நன்கு துயிலல் வேண்டும்.

874 **ஊழிபிரியாது இருக்கின்ற யோகிகள்**
**நாழிகையாக நமனை அளப்பர்கள்**
**ஊழி முதலாய் உயர்வார் உலகினில்**
**தாழ வல்லார் இச் சசி வன்னர் ஆமே.**

* எண்ணமுடியாத ஊழிக்காலங்கள், உடலும் உயிரும் பிரியாது, நிலையாக இருப்பவர்கள் யோகியர் ஆவர்;
* இவ் யோகிகள் கால தேவனது வாழ்க்கை வட்டத்தை விநாடி விநாடியாக அளந்து கொண்டு இருப்பர்கள்;
* இவர்கள் ஊழிக்காலத்திலே முதல்வராய் விளங்கும் சங்கரர் போன்று திகழ்வார்கள்;
* இருந்தபோதிலும் இவ்வாறான வல்லமை பெற்ற, சந்திரயோகம் கைவரப் பெற்ற ,யோகிகளும் ஒரு நாள் தாழ்ந்தே போவார்கள்-இறந்து போவார்கள்.

875 **தண்மதி பானுச் சரி பூமியே சென்று**
**மண்மதி காலங்கள் மூன்றும் வழி கண்டு**
**வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்**
**தண்மதி வீழ்வு அளவு இல் கணம் இன்றே.**

* குளிர்ச்சி நிறைந்த சந்திரன் அசையும்போது பூமியையும் வலம் வருகின்றது;
* பூமியில் உள்ள மூன்று வகையான காலப் பிரமாணங்களை உணர வேண்டும். அவை பிறப்பு, இருப்பு, இறப்பு ஆகியன ஆகும்;
* எம்முள்ளே தூய வெண்ணிறச் சந்திரன் தோன்றும். அதுவே நாம் ஒளி பெற்ற நாள் ஆகும்;
* சந்திர கலையின் செயற்பாடு நிற்கும் முன்னரே - இக்கணமே நாம் சந்திரகலையை நன்கு பயன்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

876 வளர்கின்ற ஆதித்தன் தன்கலை ஆறும்
தளர்கின்ற சந்திரன் தன்கலை ஆறும்
மலர்ந்து எழு பன்னிரண்டு அங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தமை யார் அறிவாரே.

❊ சூரியகலையில் பிராணனார் மலர்ந்து ஆறு ஆதாரங்களையும் புனிதம் ஆக்குவார்;
❊ சந்திரகலையில் பிராணனார் மலர்ந்து ஆறு அத்துவாக்களையும் புனிதம் ஆக்குவார்;
❊ இவ்விரு கலைகளினாலும் மலர்ந்து எழுகின்ற பிராணனார் பன்னிரண்டு அங்குலம் எம்முள்ளே ஓடிச் செல்வார்;
❊ இவ்வாறு மலரும் பிராணனார் எம்முள்ளே எவ்வாறு, எங்கே, மலர்ந்து, அலர்ந்து, உதிர்ந்து, மறைவதை யார்தான் அறியப் போகின்றார்கள்.

877 ஆம் உயிர்த் தேய்மதி நாளே எனல் விந்து
போம் வழி எங்கணும் போகாது யோகிக்குக்
காமுற இன்மையில் கட்டு உண்ணு மூலத்தில்
ஓமதியத்துள் விட்டு உரை உணர்வாலே.

❊ சந்திரகலையின் செயற்பாடு குறைகின்ற போதும், சூரியகலையின் செயற்பாடு அதிகரிக்கும்போதும், விந்து உருவாகும்;
❊ ஒரு யோகி ஒருவருக்கு உருவாகும் விந்து ஒருபோதும் வெளியே போகாது;
❊ யோகியர் காமத்தை முடிவு செய்ததால் தோன்றும் விந்தை அவர் மூலாக்கினிக்கு ஆகுதியாக்கி விடுவார்;
❊ இந்தச் சந்திரயோக காமதகன ஓமத்தில், உரைத்துக் கூறமுடியாத உயர்ந்த இறை உணர்வைப் பெற்றுக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

878 வேறு உறச் செங்கதிர் மெய்க்கலை ஆறொடும்
சூது உற நான்கும் தொடர்ந்து உறவே நிற்கும்
ஈறு இலி நன்கலை ஈர் ஐந்தொடே மதித்து
ஆறு உட்கலையுள் அகலுவா வாமே.

* ஆறு ஆதாரங்களையும் புனிதமாக்கும்போது ஆறு வகையான சூரிய கலைகள் வெளிப்பட்டுச் செயல் ஆற்றும்;
* மேலும் நாலு வகை அந்தக் கரணங்களையும் புனிதமாக்கும் நாலு வகை யான சூரியகலைகளும் உண்டு;
* ஆறு அத்துவாக்களையும் நாம் தெளிவாக்கிப் புனிதமாக்க வேண்டும்;
* முடிவே இல்லாது செயற்படும் சூரிய கலை, எம்முள்ளே உள்ள லிங்க சொரூபத்தை உணர்த்தும்.

879 உணர் விந்து சோணி உறவினன் வீசும்
புணர் விந்து வீசும் கதிரில் குறையில்
உணர்வும் உடம்பும் இவை ஒக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒரு கால் விடாவே.

* சப்த்தமும் நாதமும்-விந்துவும் சுரோணிதமும், நம்பியினதும் நங்கை யினதும் உணர்வால் ஐக்கியம் ஆகிக் கொள்ளும்;
* இவர்களுக்கு ஊடல்காலத்தின்போது, விந்துவும் ,சுரோணிதமும் குறை வில்லாது தோன்றும்;
* இவர்களின் உணர்வும் உடலும், சந்திரயோகத்தினை உணர்ந்து ஒன் றாக வேண்டும்;
* உணர்வும் உடலும், ஒன்றாக இயங்கினால், ஒருபோதும், உணர்வை விட்டு உடல் பிரிந்து வாழாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

880 விடாத மனம் பவனத்தொடு மேவி
நடாவு சிவ சங்கின் நாதம் கொளுவிக்
கடாவிடா ஐம்புலன் கட்டு உண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அமுதமே.

❋ விலகவே முடியாத மனத்தினுடைய சஞ்சாரங்களில் தெளிவு பெற்று, அவற்றில் எதுவித பயமும் இன்றி உலவுதல் வேண்டும்;
❋ அதனால் சிவபரம் பொருளின் சங்கநாதத்தை எம்மால் கேட்க முடியும். அத்துடன் அதனை உணர்ந்து, அதனுடனே சேர்ந்திருத்தல் வேண்டும்;
❋ கட்டுப்பாடே இல்லாது இயங்கும் ஐம்புலன்களும் இயல்பாகத் தானாகக் கட்டுப்படும்;
❋ ஒருநாளும் தேய்ந்து போகாத இறை இன்ப அமுதத்தை நாம் பருகு வோம்.

881

அமுதப் புனல் வரும் ஆற்றம் கரைமேல்
குமிழிக்குள் சுடர் ஐந்தையும் கூட்டிச்
சமையத் தண்டு ஓட்டித் தரிக்க வல்லார்க்கு
நமன் இல்லை நற்கலை நாள் இல்லை தானே.

❋ எம்முள்ளே அமுதம் ஊறிவரும் ஆற்றை, நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்;
❋ இந்த அமுத ஆற்றிலே; சப்த்த, நாத, அமிர்த, ஜோதி, அருட் செல்வங் களைச் சேர்த்து, ஆத்மாவை ஒளிரச் செய்தல் வேண்டும்;
❋ சத்தியம் ஆகிய ஆத்ம தண்டுடன் நாம் எப்போதும் இணைந்து நிலையாக இருத்தல் வேண்டும்;
❋ அதனால் , எம்மைக் காலதேவனும் அணுகமாட்டான். எமக்கு எந்தவித மான நல்ல கலைகளும் தேவைப்படமாட்டா. எமக்கு எந்தவிதமான நாள் கோள் பலனும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

882

**உண்ணீர் அமுதம் உறும் ஊறலைத் திறந்து**
**தெண்ணீர் இணை அடித் தாமரைக்கே செலத்**
**தெண்ணீர்ச் சமாதி அமர்ந்து தீரா நலம்**
**கண்ணால் ஒடே சென்று கால்வழி மாறுமே.**

❋ நாம் சதா அமிர்தம் அருந்தக் கூடிய இடத்தில் இருக்கும் ஊற்றை, எமது இறை சாதனையால் திறக்க வேண்டும்;

❋ அதன்பின் எம்முள்ளே, சகஸ்ரத்தில் புலப்படும் இறை திருவடியை நோக்கி நாம் செல்ல வேண்டும்;

❋ இத்திருவடியிலே நாம் அமரும்போது, சமாதிநிலை கைகூடிய, இறை நலத்துடன் இருப்போம்;

❋ நாம் ஆத்மாவின் வழி செயற்படும் போது ,வாயுக்களின் எல்லாவகையான செயற்பாடுகளும் எம்மைவிட்டு விலகிவிடும்.

883

**மாறு மதியும் மதித்து இருமாறு இன்றித்**
**தாறு படாமல் தண்டோடே தலைப்படில்**
**ஊறுபடாது உடல் வேண்டும் உபாயமும்**
**பாறுபடா இன்பம் பார் மிசைப் பொங்குமே.**

❋ எல்லா வகையான மாறுபாடுகளையும் உடைய சந்திரகலை, இருமை வகைத் தன்மைகளை நீக்கி, நடுவு நின்று செயலாற்றும்;

❋ எந்தவித பேதமும் இன்றி சந்திரநாடி, நடுநாடியுடன் இணைந்துவிடும்;

❋ அதனால் உடல் ஒருபோதும் ஊறுபடாது. உடல் தனக்கு வேண்டிய வற்றை சிறந்த உபாயத்தினால் பெற்றுக் கொள்ளும்;

❋ ஒருநாளும் தேய்ந்து போகாத இன்பம், சந்திரயோகத்தினால் இந்தப் பூமியில் நிறைந்திருக்கும்.

*மூன்றாம் தந்திரம் முற்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# நாலாம் தந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாலாம் தந்திரம்

884 I மோன மந்திரம் – அசபை – பேசா எழுத்து.

**போற்றுகின்றேன் புகழ்ந்தும் புகல் ஞானத்தைத்**
**தேற்றுகின்றேன் சிந்தை நாயகன் சேவடி**
**சாற்றுகின்றேன் அறையோ சிவயோகத்தை**
**ஏற்றுகின்றேன் நம் பிரான் ஓர் எழுத்தே.**

❊ இறைவருடைய உண்மை ஞானம் அனைவருக்கும் பொதுவானது. புகலப்படவேண்டியது. இவ் உண்மை இறைஞானத்தை யான் புகழ்ந்து பாடுகின்றேன். மெய் உணர்ந்து போற்றுதல் செய்கின்றேன்;

❊ இறையவரின் திருவடியினை எப்போதும் வழிபாடு செய்கின்றேன். அதனால் துன்பமும், வேதனையும் நிறைந்த எனது சிந்தை தேற்றப் படுகின்றது. அதற்கு ஆறுதலும் கிடைக்கின்றது;

❊ என்றும் உள்ள, நிலையான, உறுதியான அறை கூவிக் கூற முடியாத **"சிவயோகம்"** பற்றிக் கூறுகின்றேன்;

❊ இறைவர்-உண்மை-சத்தியம்-அது ஒன்று - ஓர் எழுத்து ஆகும். அதுவே **"அ"**. இவ் எழுத்தை எனது ஆத்மாவில் அமர்த்தி, ஆத்மாவில் சுடர் ஏற்றி வழிபாடு செய்கின்றேன்;

**"அ"** – இதுவே அசபை – அசபா மந்திரம் – மோன மந்திரம் – பேசா எழுத்து ஆகும்.

885 **ஓர் எழுத்தாலே உலகு எங்கும் தான் ஆகி**
**ஈர் எழுத்தாலே இசைந்து அங்கு இருவராய்**
**மூ எழுத்தாலே முளைக்கின்ற சோதியை**
**மா எழுத்தாலே மயக்கமே உற்றதே.**

❊ "அ" எனும் எழுத்து சர்வ அணுக்களிலும் உண்டு. சர்வ பிரபஞ்சங்களிலும் உண்டு. அசையும் அசையாப் பொருட்களிலும், வெறுவெளியிலும் உண்டு;

❊ **"உ"** எனும் எழுத்து இரண்டாம் எழுத்தாகும். இவ் எழுத்து சகல உயிர் அணுக்களிலும் "அ" எழுத்துடன் இணைந்து இருக்கும்;

❊ **"ம"** எனும் எழுத்து மூன்றாம் எழுத்து ஆகும். இவ் எழுத்து **"அ"** உடனும், **"உ"** உடனும் இணைகின்ற போது முதலிலே ஜோதி தோன்றும்;

❊ ஜோதியில் இருந்து பெரிய எழுத்து ஒன்று தோன்றுகின்றது. இவ் எழுத்து ஜோதியின் உள்ளே மறைந்து கிடக்கின்றது. அதுவே **"ஓம்"** ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

886 தேவர் உறைகின்ற சிற்றம்பலம் என்றும்
தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றும்
தேவர் உறைகின்ற திரு அம்பலம் என்றும்
தேவர் உறைகின்றது என் பொது ஆமே.

❊ பெரிய எழுத்தாகிய "ஓம்" இன் உள்ளே,
சிற்றம்பலம் உண்டு.
சிதம்பரம் உண்டு.
திருஅம்பலம் உண்டு.
❊ இவ் இடங்களிலேயே தேவர்கள் உறைவார்கள்.
❊ இவ் இடங்கள், மனிதர்கள் உறைவதற்கும் உரிய பொதுவான இடங்கள் ஆகும்.

887 ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்து அனவரத தாண்டவம்
ஆமே பிரளயம் ஆகும் அத்தாண்டவம்
ஆமே சங்காரத்து அரும் தாண்டவங்களே.

❊ பொன் மயமான வெறு வெளி அற்புதம் நிறைந்தது. ஆனந்தம் ஆனது;
❊ இறைவர் வெறுவெளியில் ஆடும் "திருக்கூத்து" "அனவரத தாண்டவம்" என்று அழைக்கப்படும்;
❊ இவ் அனவரத தாண்டவம் பிரளயகாலத்தில் நிகழுவதாகும்;
❊ அற்புதமான, அருமையான வேறு தாண்டவங்களும் சங்கார காலத்தில் நடைபெறும்.

888 தாண்டவம் ஆன தனி எழுத்து ஓர் எழுத்து
தாண்டவம் ஆனது அனுக்கிரகத் தொழில்
தாண்டவக் கூத்துத் தனி நின்ற தற்பரம்
தாண்டவக் கூத்துத் த மனியம் தானே.

❊ "அ" எனும் தனி எழுத்தே தாண்டவம் ஆடும்;
❊ "தாண்டவம்" என்பதன் உண்மைப் பொருள் அனுக்கிரகம் புரியும் ஒரு தொழிற்பாடாகும்;
❊ தாண்டவக் கூத்திலே தற்பரம் ஆகிய இறையவர் தனித்தே நிற்பர்;
❊ தாண்டவக் கூத்து என்றும் தனித்துவம் ஆனது. இது தூய வெறு வெளி யிலேயே நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

889 **தானே பரம் சுடர் தத்துவமாய் நிற்கும்**
**தானே அகார உகாரம் அதாய் நிற்கும்**
**தானே பரம்சுடர் தத்துவக் கூத்துக்குத்**
**தானே தனக்குத் தராதலம் தானே.**

- ❋ இறையவர் ஜோதிதான் என்றும் எமக்குத் தத்துவமாக விளங்கும்;
- ❋ இறையவரே, அகார உகாரமாகிய அர்த்த நாரீஸ்வர தாற்பரியத்தையும், லிங்க தாற்பரியத்தையும் எமக்குப் புலப்படுத்துவர்;
- ❋ இறைவர் ஜோதி தத்துவம் நிறைந்த திருக்கூத்தாக எமக்குப் புலப்படும்;
- ❋ இறையவர் ஒருவரே தனித்துவம் நிறைந்த இறையவராக விளங்குவர். சர்வ பிரபஞ்சங்களும் இறையவரின் விம்பமாக எமக்குப் புலப்படும்.

890 ***தராதல மூலைக்குத் தற்பர மாபரன்***
***தராதலம் வெப்பு நமவாசிய ஆம்***
***தராதலம் சொல்லில் தான் வாசிய ஆகும்***
***தராதல யோகம் தயா வாசி. ஆமே.***

- ❋ சர்வ பிரபஞ்சங்களுக்கும், அவற்றின் மூலத்திற்கும் இறையவரே தலைவர் ஆவர்;
- ❋ சர்வ பிரபஞ்சங்களினதும், அணுக்களினதும் மூலமந்திரம் **"நமவாசிய"** ஆகும்;
- ❋ சர்வ பிரபஞ்சங்களினதும், அணுக்களினதும் செயற்பாடு **"வாசிய"** ஆகும்;
- ❋ சர்வ பிரபஞ்சங்களுக்கும் அணுக்களுக்கும் தாயாகச் சிறந்த யோகமாக விளங்குவது **"வாசி"** யோகம் அல்லது **"சிவ"** யோகம் ஆகும்.

891 **ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்**
**ஆமே பரங்கள் அறியா இடம் என்ப**
**ஆமே திருக்கூத்து அடங்கிய சிற்பரம்**
**ஆமே சிவகதி ஆனந்தம் ஆமே.**

- ❋ சிவபரம் பொருளின் ஏற்பாட்டில் அமைந்த அருவ, உருவ, அருஉருவத் திருமேனிகள் அனைத்தும் **அகாரம், உகாரம்** ஆகிய இரு எழுத்துக்களுள்ளும் அடங்கும்;
- ❋ சிவபரம் பொருளின் இருப்பிடம் அறிந்து உணர்ந்து கொள்வது இலகுவான காரியம் அன்று;
- ❋ வெறுவெளியும், இறைவரின் திருக்கூத்தின் உள்ளே அடக்கம் ஆகும்;
- ❋ சிவபரம் பொருளை உணர்வதால் என்றும் வற்றாத ஆனந்தம் எமக்குக் கிடைக்கும்;.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

892 ஆனந்த மூன்றும் அறிவு இரண்டு ஒன்றாகும்
ஆனந்தம் சிவாய அறிவார் பலர் இல்லை
ஆனந்தம் ஓடும் அறிய வல்லார் கட்கு
ஆனந்தக் கூத்தாய் அகப்படும் தானே.

❊ மூன்று வகை ஆனந்தம் :

1. பதியால் ஏற்படும் ஆனந்தம்
2. பசுவால் ஏற்படும் ஆனந்தம்
3. பாசத்தால் ஏற்படும் ஆனந்தம்

இருவகை அறிவு :

1. பர அறிவு 2. தன் அறிவு

❊ "சிவாய" ஆனந்தம் நிறைந்து, ஆனந்தமாகவே உள்ளது. இதனை யாரும் அறியாது உள்ளார்கள் :

❊ ஆனந்த நிறைவை ஆனந்தமாகவே அறியவல்லார்களுக்கு, ஆனந்தம் இறையவர் திருக்கூத்தாய் அவர்களுக்குக் கிடைக்கும்.

893 படுவது இரண்டும் பலகலை வல்லார்
படுவது ஓங்காரம் பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே.

❊ எண்ணிறந்த யோக, பிராணாயாமக் கலைகளைத் தெளிந்து உணர்ந்தவர்கள் இரண்டு இறை மந்திரங்களை உணர்வர்;

1. ஓம்(ஓங்காரம்) –இறை சப்தம் .
2. நமசிவாய (பஞ்சாக்கரம்)–இறைநாமம்.

❊ இவ் இரு இறை மந்திரங்களும் சங்காரத் தாண்டவத்தின் போது பக்தி பூர்வமாக உணரப்படும்;

❊ இவ் இரு மந்திரங்களும் சர்வ அணுமுதல் அண்டங்கள் வரையும் பரந்து ஒலித்த வண்ணமே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894 வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்டு உறை புன்னையும்
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்
வாறே பொதுவாகு மன்றின் அமலமே.

❇ என்றும் மாறுபாடு அடையாதது ஆகமம் ஆகும். ஆகமத்தில் இருந்து சதாசிவர் வெளிப்படுகின்றார்;

❇ ஆகமத்தில் இருந்து சிவகதி எனும் நகர் வெளிப்படுகின்றது. இந்நகரில் ஆத்மா எனும் வண்டு உறையும், திருவடியாகிய புன்னை எனும் மரம் உண்டு;

❇ ஆகமமே திருக்கூத்தாகவும், திருக்கூத்து வசனங்களாகவும் வெளிப் படுகின்றது.

895 அமலம் பதி பசு பாசங்கள் ஆகமம்
அமலம் திரோதாயி ஆகும் ஆனந்தமாம்
அமலம் சொல் ஆணவ மாயை காமியம்
அமலம் திருக்கூத்து அங்கு ஆம் இடம் தானே.

❇ எவ்வித குறையும் அழுக்கும் அற்றவையே பதி, பசு, பாசம் ஆகும். இவை ஆகமத்தின் வெளிப்பாடாகும்;

❇ எவ்வித குறையும் அழுக்கும் அற்றதே திரோதான சத்தி ஆகும். இது ஆனந்தம் நிறைந்தது;

❇ இறைசொல்-மந்திரம் எவ்வித குறையும் அழுக்கும் அற்றது. இம் மந்தி ரத்தில் ஆணவம், கன்மம், மாயை ஆகியன இருக்க மாட்டா;

❇ இறை திருக்கூத்து என்றும் எங்கும் நிகழ்கின்ற இடத்தில் எவ்வித குறையும் அழுக்கும் இருக்கமாட்டா.

896 தானே தனக்குத் தலைவனுமாய் நிற்கும்
தானே தனக்குத் தன்மலையாய் நிற்கும்
தானே தனக்குத் தன்மயமாய் நிற்கும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே.

❇ இறையவர் ஒருவரே சர்வத்திற்கும், இறைவருக்கும் தலைவராக விளங்கு கின்றார்;

❇ இறையவர் ஒருவரே சகலதிற்கும், இறைவருக்கும் பெரிதாக விளங்கு கின்றார்;

❇ இறையவர் ஒருவரே சர்வத்திலும், இறைவரிலும் ஒன்றாகி இருப்பார்;

❇ இறையவர் ஒருவரே சர்வத்திற்கும், இறைவருக்கும் தலைவர். இது ஒன்றுதான் என்றும் உள்ள உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

897 தலைவனுமாய் நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனுமாய் நின்ற சற்பாத் திரத்தை
தலைவனுமாய் நின்ற தாது அவிழ் ஞானம்
தலைவனுமாய் நின்ற தாள் இணை தானே.

❇ சர்வத்திற்கும் தலைவராய் இருக்கும் இறையவர்;

❇ 1. தூய பர வெளியில் ஆடுவார்.
2. தூய உண்மையான அருட் பாத்திரத்தை எமக்கு வழங்குவார்.
3 தூய உண்மையான இறைஞானத்தை எமக்கு வழங்குவார்.
4. புனிதமான திருவடியாக எமது இதயக் கமலத்திலே வீற்றிருப்பார்.

898 இணையார் திருவடி எட்டு எழுத்து ஆகும்.
இணையார் திருவடி ஈர் ஐஞ்சு அதாகும்
இணையார் கழல் இணை ஐம்பத்து ஒன்றாகும்
இணையார் கழல் இணை ஏழ் ஆயிரமே.

❇ இறையவரின் திருவடியே "அ" ஆகும். இது "சிவம்" ஆகும்;

❇ இறையவரின் திருவடியே இலிங்கவம் ஆகும்(10);

❇ இறையவரின் திருவடியில் இருந்தே 51 சப்த்தங்கள் வெளிப்படுகின்றன;

❇ இறையவரின் திருவடி எமது ஏழாவது நிலையாகிய சகஸ்ரத்தில் ஆயிரம் இதழ்த் தாமரையாக மலர்ந்திருக்கும்.

899 ஏழாயிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழாயிரத்தும் எழுகோடி தான் ஆகி
ஏழாயிரத்து உயிர் எண்ணிலா மந்திரம்
ஏழாய் இரண்டாய் இருக்கின்ற வாறே.

❇ எமது ஏழாவது நிலையாகிய சகஸ்ரத்தில் சத்தி லிங்கமும் சிவலிங்கமும் எமக்குப் புலப்படும். (இருபது). பதிலிங்கமும், பசுலிங்கமும், பாசலிங்கமும் (முப்பது) எமக்குப் புலப்படும்;

❇ எமது ஏழாவது நிலையாகிய சகஸ்ரம் ஏழாவது முடிபு நிலையில் உள்ளது. முதல் ஆறு முடிபுகளும் ஆறு ஆதாரங்களின் நிலையில் ஏற்படுவன;

❇ எமது ஏழாவது நிலையாகிய சகஸ்ரத்தில் உயிர் செறிந்துள்ளது. சகஸ் ரத்தில் அளவிடமுடியாத இறைவரின் ஒலியினை நாம் கேட்கலாம்;

❇ எமது ஏழாவது நிலையாகிய சகஸ்ரம், சத்தியின் வடிவமாக விளங்கு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

900 **இருக்கின்ற மந்திரம் ஏழு ஆயிரமாம்**
**இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை**
**இருக்கின்ற மந்திரம் சிவன் திருமேனி**
**இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணம் தானே.**

* எமது ஏழாவது நிலையாகிய சகஸ்ரம் மந்திர சொரூபமாகவே இருக்கின்றது;
* வெறுமனே மந்திரவடிவமாகச் சகஸ்ரம் இருந்தால் எவ்வித பிரயோசனமும் இல்லை;
* சகஸ்ரத்தில் இறைவரின் திருவடிவம் மந்திரமாகப் பிரதிபலிக்க வேண்டும்;
* அப்பொழுதுதான் சகஸ்ரம் இறை மந்திரமாகி எம்மில் தெளிவுபட வீற்றிருக்கும்.

901 **தானே தனக்குத் தகு நட்டம் தான் ஆகும்**
**தானே அகார உகாரம் அதாய் நிற்கும்**
**தானே ரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்**
**தானே உலகில் தனி நடம் தானே.**

* இறையவரே இறைவருக்கு ஒப்பானவர். அவரின் திருக்கூத்தே அருள் நிறைவாகும்;
* இறையவரே **"அகாரம்"** ஆகவும் **"உகாரம்"** ஆகவும் புலப்படுவார்;
* இறைவரின் தத்துவம் நிறைந்த திருக்கூத்தே சர்வ பிரபஞ்சங்களிலும் ஒலிவடிவாகி ரீங்காரம் இசைத்துக் கொண்டுள்ளது;
* இறையவர் ஒருவரே என்று ம் எங்கும் தனித்தே திருநடனம் புரிந்த வண்ணம் உள்ளார்.

902 **நடம் இரண்டு ஒன்றே நளினம் அதாகும்**
**நடம் இரண்டு ஒன்றே நமன் செய்யும் கூத்து**
**நடம் இரண்டு ஒன்றே நகை செய்யா மந்திரம்**
**நடம் சிவலிங்கம் நலம் செம்பு பொன்னே.**

* சத்தியின் திருநடனம் ஒன்றுதான், நளினம் நிறைந்ததாகும்;
* சத்தியின் திருநடனம் ஒன்றுதான் கால தேவனின் செயற்பாட்டையும் நெறிப்படுத்துவது;
* சத்தியின் அழகு வாய்ந்த திருநடனம் ஒன்றுதான், எந்தவித நகையாலும்–ஆபரணத்தாலும் செய்யப்படாதது; இறை மந்திரத்தால் மட்டும் அமைந்த நடனம் ஆகும்;
* நடன சொரூபத்தை சிவலிங்கத்தை–செம்பும் பொன்னும் கலந்து வடிவமைத்து நாம் வழிபாடு செய்வது சிறப்புடையது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

903 செம்பு பொன்னாகும் சிவாயநம என்னில்
செம்பு பொன்னாகத் திரண்டது சிற்பரம்
செம்பு பொன்னாகும் ஸ்ரீயும் கிரீயும் எனச்
செம்பு பொன் ஆன திரு அம்பலமே.

❋ "சிவாயநம" என்று உண்மையாக ஆத்மார்த்தமாக நாம் செபித்தால் செம்பு உலோகம் பொன் உலோகம் ஆகும்;
❋ பரவெளியாகிய சிற்பரம் செம்பாகப்-பொன்னாகத் திரண்டு உள்ளது.
❋ ஸ்ரீம் (ஸ்ரீயும்), கிரீம் (கிரீயும்) எனும் மந்திரம் செபித்தால் செம்பு உலோகம் பொன் உலோகம் ஆகும்;
❋ திரு அம்பல வெளியே செம்பாகவும் பொன்னாகவும் விளங்குகின்றது.

904 திரு அம்பலம் ஆகச் சீர்ச் சக்கரத்தைத்
திரு அம்பலம் ஆக ஈர் ஆறு கீறித்
திரு அம்பலம் ஆக இருபத்து ஐஞ்சு ஆக்கித்
திரு அம்பலம் ஆகச் செபிக்கின்ற வாறே.

❋ திரு அம்பலவெளியைச் சக்கர வடிவில் சீராக்கலாம்;
❋ 12 சதுரங்கள் வருமாறு (2 x6) சக்கரம் அமைத்து அதில் ஸ்ரீம் முதலாக "நமசிவய" வும்; கிரீம் முதலாக ***நமசிவய*** வும் வரப் பதிக்கவும் – இது ஒருவகை;
❋ 5 x5 அறையாக 25 வட்டங்கள் வரைந்து அதில் "நமசிவய" ஒழுங்குபட மாறி மாறிப் பதிக்கவும். இது இரண்டாம் வகை;
❋ இவ்வாறு இருவகையான திரு அம்பலச் சக்கரங்களை செம்பு பொன் தகட்டில் அமைத்துப் பஞ்சாட்சர செபம் செய்யும்.

905 வாறே சிவாய நம- சிவாய நம
வாறே செபிக்கில் வரும் பேர் பிறப்பு இல்லை
வாறே அருளால் வளர் கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வரும் செம்பு பொன்னே.

❋ "சிவாயநம", "சிவாயநம" என்றவாறு சதா செபிக்கவும்;
❋ இவ்வாறு செபிக்கும்போது இனிமேலும் வரவுள்ள பிறப்புகள் அனைத்து ம் அற்றுப் போகும் ;
❋ இறையவர் அருளாலே என்றும் மலர்ந்த வண்ணம் உள்ள இறையவர் திருநடனத்தைக் காணலாம்;
❋ இவ்வாறு சிவாயநம என்று செபிக்கும் போது செம்பு பொன்னாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

906 **பொன்னான மந்திரம் புகலவும் ஒண்ணாது**
**பொன்னான மந்திரம் பொறிகிஞ் சுகத்தாகும்**
**பொன்னான மந்திரம் புகை உண்டு பூரிக்கில்**
**பொன் ஆகும் வல்லோர்க்கு உடம்பு பொற்பாதமே.**

❋ இப்பொன்னான இறை மந்திரத்தை வாய்திறந்து பேசவே கூடாது;
❋ இப்பொன்னான மந்திரத்தைப் பொன் தகட்டில் பொறித்து எம்முடன் வைத்திருந்தால் எமக்கு உண்மையின் சுகம் கிடைக்கும்;
❋ இப் பொன்னான மந்திரத்தைப் பிராணனாரால் மலர்ச்சி அடையச் செய்து ஆத்மார்த்தமாகச் செபிக்க வேண்டும்;
❋ அப்பொழுது எமது உடலும் பொன்போன்று ஆகிவிடும். இறைவரின் பொன்னான திரும்பாதமும் எம்முள்ளே வெளிப்படும்;

907 **பொற்பாதம் காணலாம் புத்திரர் உண்டாகும்**
**பொற்பாதத்து ஆணையே செம்பு பொன் ஆயிடும்**
**பொற்பாதம் காணத் திருமேனி ஆயிடும்**
**பொற்பாத நன் நடம் சிந்தனை சொல்லுமே.**

❋ எம்முள்ளே இறைவரின் பொற்பாதம் கண்டால், இறை அம்சம் நிறைந்த குழந்தைகள் உண்டாகும்;
❋ இறைவரின் பொற்பாதத்தின் கட்டளையின் நிமித்தமே செம்பு பொன் ஆகும்;
❋ இறைவரின் பொற்பாதம் எம்முள்ளே வெளிப்பட இறைவரின் திருமேனி எமக்குக் காட்சியாகக் கிடைக்கும்;
❋ இறைவரின் பொற்பாதம், இறைவரின் திருநடனத்தை எமக்குத் தெளிவுபட எம் ஆத்ம இதயத்தின் உள்ளே புலப்படுத்தும்.

908 **சொல்லும் ஒரு கூட்டில் புக்குச் சுகிக்கலாம்**
**நல்ல மடவார் நயந்து உடனே வரும்**
**சொல்லினும் பாசச் சுடர்ப் பாம்பு நீங்கிடும்**
**சொல்லும் திருக்கூத்தின் சூக்குமம் தானே.**

❋ இறைமந்திரத்தைச்–சொல்லை உணர்ந்து அம்மந்திரம் உள்ள கூட்டின் உள்ளே அமர்ந்தால் இகபர சுகம் அனைத்தும் அனுபவிக்கலாம்;
❋ சிறந்த துணையாக நல்ல ஒரு பெண்ணை வாழ்க்கைத்துணைவியாக்கவும்;
❋ சிறந்த பெண் வாழ்க்கைத் துணையாக அமையும் போது ஐந்து புலன்களால் ஏற்படும் பாசம் எனும் துன்பம் அகன்றுவிடும்;
❋ இறையவரின் சூக்குமமான திருக்கூத்தினால் இவை அனைத்தும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

909 சூக்குமம் எண்ணாயிரம் செபித்தாலும் மேல்
சூக்குமமான வழி இடைக் காணலாம்
சூக்குமமான வினையைக் கெடுக்கலாம்
சூக்குமமான சிவனது ஆனந்தமே.

❊ சூக்குமமான இறை மந்திரத்தை எண்ணாயிரம் தடவைக்குமேல் செபித்தால் மிகவும் மேன்மை உடையதாகும்;
❊ இறைவரை உணரும் சூக்குமமான நெறியை நாம் உணரலாம்;
❊ சூக்கும நிலையில் இருக்கும் வினையையும் இல்லாது ஒழித்து விடலாம்;
❊ இறைவரின் ஆனந்தமும் சூக்குமமாகவே உணரப்படுகின்றது.

910 ஆனந்தம் ஆனந்தம் ஒன்று என்று அறைந்திட
ஆனந்தம் ஆனந்தம் ஆ-ஈ-ஊ-ஏ-ஓம் என்று அறை
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும் அதாயிடும்
ஆனந்தம் ஆனந்தம் அம்-ஹரீம். அம்-க்ஷம்-ஆம் ஆகுமே.

❊ இறையவர் ஆனந்தம் ஒன்று தான் உண்மை ஆனந்தம் என்று அறைந்து கூறுங்கள்;
இறையவர் ஆனந்தம்
ஆ-ஈ-ஊ- ஏ- ஓம்.
எனும் எழுத்துக்கள் ஊடாக ஆனந்தமாக வெளிப்படும்;
❊ இறையவர் ஆனந்தம் பஞ்சாட்சரத்தின் எழுத்துக்கள் ஊடாக ஆனந்தமாக வெளிப்படும்;
❊ இறையவர் ஆனந்தம்
அம்-ஹரீம்-அம் - க்ஷம்-ஆம்
எனும் எழுத்துக்கள் ஊடாக ஆனந்தமாக வெளிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

911 மேனி இரண்டும் இலங்காமல் மேற்கொள்ள
மேனி இரண்டும் இகார விகாரியா
மேனி இரண்டும் ஊ-ஆ-ஈ-ஏ-ஓ- என்னும்
மேனி இரண்டும் ஈ-ஓ-ஊ- ஆ-எ-கூத்தாமே.

❋ எமது அருவத் திருமேனியும் (ஆத்மாவும்) எமது உருவத் திருமேனியும்(உடலும்) எதுவித பாதிப்பும் இன்றி ஒன்றாகி வாழ்வை மேற்கொள்ளும்;

❋ வாழ்வின் நெறியில் இருந்து பிறழ்ந்து போனால் இரண்டு மேனிகளும் (உடலும் ஆத்மாவும்) இகாரப்பட்டு-விகாரப்பட்டுப் போய்விடும்.

❋ இவ்விரு மேனிகளும்
ஊ-ஆ-ஈ-ஏ-ஓ- எனும்
5 எழுத்துக்களின் ஒழுங்கில் நடம் புரியும்.

❋ இவ் இரு மேனிகளும்
ஈ-ஓ-ஊ-ஆ-எ எனும்
5 எழுத்துக்களின் ஒழுங்கினாலும் நடம் புரியும்.

912 கூத்தே சிவாய நமமசி ஆயிடும்
கூத்தே ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவாயநம ஆயிடும்
கூத்தே ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவய நம ஆயிடும்
கூத்தே இ-ஊ-ஆ-ஏ-ஓம் நமசிவாய கோள் ஒன்றுமாறே.

❋ இறையவரின் திருக்கூத்து
"**சிவாயநமமசி**" எனவும் ஆகிவிடும்;

❋ இறையவரின் திருக்கூத்து
"ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-**சிவாயநம**" எனவும் ஆகிவிடும்;

❋ இறையவரின் திருக்கூத்து
"ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-**சிவயநம**" எனவும் ஆகிவிடும்;

❋ இறையவரின் திருக்கூத்து
"இ-ஊ-ஆ-ஏ-ஓம் - ***நமசிவாய***" எனவும் ஆகி அனைத்தையும் ஒன்றாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

913 ஒன்று இரண்டு ஆட ஓர் ஒன்றும் உடன் ஆட
ஒன்றில் மூன்று ஆட ஓர் ஏழும் ஒத்து ஆட
ஒன்றினால் ஆட ஓர் ஒன்பதும் உடன் ஆட
மன்றினில் ஆடினான் மாணிக்கக் கூத்தே.

❋ "அ" எனும் சிவமும் "உ" எனும் சத்தியும் சேர்ந்தும் ஆடுகின்றன. "சிவம்" "அ" தனித்தும் ஆடுகின்றது;

❋ "சிவம்" "அ" இல் மண், வான், விண் ஆகிய மூன்று மண்டலங்களும் ஆடுகின்றன. மூலாதாரத்தில் இருந்து சகஸ்ரம் வரையுள்ள எமது ஏழு நிலைகளும் இம்மூன்று மண்டலங்களுடனும் இசைந்து ஆடுகின்றன.

❋ ஒன்றாகிய ஏகத்தால் உண்மையால் சர்வமும் ஆடுகின்றன. ஒன்பது வகை சத்தியும் அவற்றோடு சேர்ந்து ஆடுகின்றன;

❋ மன்றாகிய தூய வெறு வெளியிலே - வெளியாகவே நடம் புரிகின்றார் இறையவர்.

## II திரு அம்பலச் சக்கரம்

914 இருந்த இவ்வட்டங்கள் ஈர் ஆறு இரேகை
இருந்த இரேகை மேல் ஈர் ஆறு இருத்தி
இருந்த மனைகளும் ஈர் அறு பத்து ஒன்று
இருந்த மனை ஒன்றில் எய்துவன் தானே.

❋ பன்னிரண்டு இரேகைகள் கொண்ட வட்டங்கள் அமைக்கவும்;

❋ ஒவ்வொரு இரேகையின் இடைவெளியிலும் 12 எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தைப் பதிக்கவும்;

ஸ்ரீம் நமசிவய
கிரீம் நமசிவய

❋ இப்பன்னிரண்டு மனைகளில் முதல் ஆறு மனைகளும் ஆறு ஆதார நிலையையும், இரண்டாவது ஆறு மனைகளும் ஆறு அத்துவா நிலையையும் எம்முள் குறித்து நிற்கும். முதல் ஆறு மனைகளும் லிங்க தாற்பரியத்தையும் இரண்டாவது ஆறு மனைகளும் ஒன்றாகிய இறை தாற்பரியத்தையும் குறித்து நிற்கும்;

❋ திருமூலராகிய யானோ என்றும் இறை தாற்பரியத்தைத் தெளிவாக்கும் மனையிலேயே வசிப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

915 தான் ஒன்றி வாழ் இடம் தன் எழுத்தே ஆகும்
தான் ஒன்றும் அந்நான்கும் தன்பேர் எழுத்து ஆகும்
தான் ஒன்று நாற்கோணம் தன் ஐந்து எழுத்தாகும்
தான் ஒன்றிலே ஒன்றும் அவ் அரன் தானே.

* இறையவர் சந்நிதானம் ஏக எழுத்தாகிய "அ" உள்ள இடம் ஆகும். இங்கேயே நாம் ஒன்றித்து வாழ வேண்டும்;
* பெரிய எழுத்தான-பேசா எழுத்தான "அ" உடன், மற்றைய நான்கு எழுத்துக்களும்(உ,ம,இ,எ) ஒன்றித்து நிற்கும்;
* இந்நான்கு எழுத்துக்களும் ஒவ்வொரு திசை நோக்கிச் செல்வன. "அ" எனும் பேசா எழுத்தே, இந்நான்கையும் ஒன்றாக்கி ஐந்து எழுத்தாக்கி அவற்றுடன் நிற்கும்;
* இறையவரின் ஏற்பாட்டாலேயே ஐந்து எழுத்தும் ஓர் எழுத்தாக்கி நிற்கும்.

916 அரகர என்ன அரியது ஒன்று இல்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பு அன்றே.

* அகர உகர-"அரகர" ஆகியது. இது அர்த்த நாரீஸ்வரர் சொரூபைக் குறிக்கும்;
* "அரகர" என்று செபித்தால் அதற்கு ஈடானது வேறு ஒன்றும் இல்லை;
* "அரகர" என்று செபிக்கும் வகை தெரியாது மக்கள் உள்ளார்களே;
* "அரகர" என்று செபித்தால் நாம் தேவர்களாக மாறுவோம்;
* "அரகர" என்று செபித்தால் எல்லாவிதமான பிறப்பும் அறுந்து போய்விடும்.

917 எட்டு நிலை உள எம் கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும் இரு மூன்றும் ஈர் ஏழும்
ஒட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பான் மொழி யாலே.

* இறையவர் இருப்பிடம் எட்டமுடியாத நிலையில் - எட்டாம் நிலையில்-"அ" நிலையில் உணரப்படுவார்;
* "அ" நிலையாகிய இறையவர் நிலையுடன் ஒன்றுவதாயின்; எம்முள்ளேஉள்ள ஆறு ஆதாரங்கள், எம்முள்ளே உள்ள பதின்நாலு லோகங்கள் அனைத்தையும் நாம் தாண்ட வேண்டும்;
* சப்த்தமும், நாதமும் எம்முள்ளே தெளிவுபட ஒன்றித்துச் செயலாற்ற வேண்டும்;
* அப்பொழுது எல்லா விதமான மந்திரங்களும் செயல் அற்று விடும். மௌன நிலைக்கு நாம் சென்று விடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

918 மட்டு அவிழ் தாமரை மாது நல்லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறி கிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்ட வல்லார் உயிர் காக்க வல்லாரே.

❇ எமது தாமரை மலராகிய சகஸ்ரத்தில் சுத்த சத்தி வீற்றிருக்கின்றார்;
❇ சுத்த சத்தி அர்த்த நாரீஸ்வரர் சொரூபமாக இருக்கும் தாற்பரியத்தை ஒருவரும் அறியாது இருக்கின்றார்கள்;
❇ "உ" எனும் சுத்த சத்தி தனித்து இருக்கின்றது.
"அ" எனும் எழுத்து எதையும் விட்டு விலகாது இருக்கின்றது.
❇ இவ் இரு எழுத்துக்களையும் பிரியாது ஒன்றாக்க வல்லவர்கள்–அர்த்த நாரீஸ்வரர் தாற்பரியத்தைத் தம்முள் உணர்பவர்கள் தங்கள் உயிரை என்றும் கண்ணும் கருத்துமாகக் காத்து நிற்பார்கள்.

919 ஆலயம் ஆக அமர்ந்த பஞ்சாக்கரம்
ஆலயம் ஆக அமர்ந்த இத்தூலம் போய்
ஆலயம் ஆக அறிகின்ற சூக்குமம்
ஆலயம் ஆக அமர்ந்து இருந்தேனே.

❇ பஞ்சாக்கரமே ஆலயம் ஆக – உருவமாக – நமசிவய ஆக – உடலாக அமைந்துள்ளது;
❇ இப்பஞ்சாக்கரமே தூல பஞ்சாக்கரம் என்று அழைக்கப்படும்;
❇ சூக்குமமான ஆலயம் – மறைபொருளான ஆலயம் அ – உ – ம –இ – எ ஆகும்; இது சூக்குமம பஞ்சாக்கரம் ஆகும்;
❇ திருமூலராகிய யானோ இவற்றை எல்லாம் உணர்ந்து ஆலயம் ஆக அமர்ந்துள்ளேன்.

920 இருந்த இவ்வட்டம் இருமூன்று இரேகை
இருந்த அதனுள் இரேகை ஐந்தாக
இருந்த அறைகள் இருபத்து ஐஞ்சு ஆக
இருந்த அறை ஒன்றில் எய்து மகாரமே.

❇ ஆறு இரேகைகள் அமையுமாறு ஒரு வட்டம் வரையவும்;
❇ ஒவ்வொரு அறையும் ஐந்தாக வரும் வண்ணம் இரேகைகள் அமைக்கவும். ஆறாம் அறையை வெறுமையாக விடவும்;
❇ ஆறாம் அறை தவிர்ந்த மற்றைய ஐந்து அறைகளிலும் மொத்தம் 25 அறைகள் இருக்கும்;
❇ வெறுமையாகவுள்ள அறையில் மகாரம் எனும் எழுத்தைப் பதித்துவிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

921 மகார நடுவே வளைத்திடும் சத்தியை
ஓகாரம் வளைத்திட்டும் பிளந்து ஏற்றி
அகாரம் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகார நல் கால் அது நாடுமே.

* எல்லா வகையிலும் செயற்படவல்ல சத்தி, "ம" காரத்தின் நடுவே உள்ளது;
* ஓம் காரத்தினைத் தெளிவுபட உணர்ந்து அதன் உச்சியிலும் சத்தியை அமரச் செய்யவும்;
* ஓம் காரத்தில் அகாரம் தலைபோன்றும் சிகாரம் இரு கண் போன்றும் விளங்கும்.
* நகாரமும், வகாரமும் இருகால்களாக விளங்கும்.

922

நாடும் பிரணவ நடு இரு பக்கமும்
ஆடும் அவர் வாய் அமர்ந்து அங்கு நின்றது
நாடு நடு உண்முக நமசிவாய
வாடும் சிவாயநம புறவட்டத் தாயதே.

* ஓம் காரத்தின் நடுவே, அதன் இருபக்கத்திலும் பிரணவத்தின் வாய் அமைந்துள்ளது;
* என்றும் அதன் வாய் ஆடி அசைந்த வண்ணம் உள்ளது;
* ஓம் காரத்தின் உள் வட்டத்தில் நமசிவாய அமைந்துள்ளது;
* ஓம்காரத்தின் புறவட்டத்தில் சிவாயநம அமைந்துள்ளது.

923 ஆயும் சிவாயநம மசிவாயந
வாயு நமசிவாய யநமசிவாந
வாயுமே வாயநமசி எனு மந்திரம்
ஆயும் சிகாரம் தொட்டு அந்தம் அடைவிலே.

* பஞ்சாக் கரத்தினைக் கீழே குறிப்பிட்டுள்ள ஐந்து வகையாகச் செபிக்க லாம்.

1. சிவாயநம 2. மசிவாயந
3. நமசிவாய 4. ய நமசிவா 5. வாயநமசி

* இவ்வாறு செபித்து "சி" நிலையை உணர்ந்து அதையும் கடந்து செல்லவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

924 அடைவினில் ஐம்பதும் ஐ ஐந்து அறையின்
அடையும் அறை ஒன்றுக்கு ஈர் எழுத்து ஆக்கி
அடையும் அகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்து ஐம்பத்து ஒன்றும் அமர்ந்ததே.

❊ 25 அறைகள் அமையும் வண்ணம் அமைப்பு ஒன்றை அமைக்கவும்;
❊ ஒவ்வோர் அறையுள்ளும் இரண்டு எழுத்துக்கள் அமையும் வண்ணம் மொத்தம் 50 எழுத்துக்கள் அமைய அறைகளை ஏற்படுத்தவும்;
❊ அடைவினுள் ஆரம்பம் "அ"காரம் ஆகும். அடைவினுள் முடிவ(ச.்.வ்வும்) னகரம் ஆகும்;
❊ அடைவினுள்ளே 51 எழுத்துக்களும் தெளிவுபட அமைய அமைக்கவும்.

925 அமர்ந்த அரகர ஆம் புறவட்டம்
அமர்ந்த அரிகரி ஆம் அதன் உள்வட்டம்
அமர்ந்த அசபை ஆம் அதன் உள் வட்டம்
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே.

❊ அடைவு அமர்ந்த புறவட்டம் அரகர எழுத்துக்களால் சூழ்ந்துள்ளது;
❊ இதற்கும் அடுத்தபடியாக உள்ள வட்டம் அரிகரி எழுத்துக்களால் சூழ்ந்துள்ளது;
❊ இதற்கும் அடுத்தபடி உள்ளாகவுள்ள வட்டம் "அ" எனும் எழுத்தால் சூழ்ந்துள்ளது.
❊ இதனையும் தொடர்ந்துள்ள அமைப்பில் சூலம் எனப்படும் அ உ ம எனும் எழுத்துக்கள் சூழ்ந்துள்ளன.

926 சூலத் தலையினில் தோற்றிடும் சத்தியும்
சூலத் தலையினில் சூழும் ஓங்காரத்தில்
சூலத்து இடைவெளி தோற்றிடும் அஞ்சு எழுத்து
ஆலப் பதிக்கும் அடைவது ஆமே.

❊ சூலமாகிய அ உ ம எழுத்துக்கள் இணையும் போது சத்தி வெளிப்படும்;
❊ அ உ ம வைச் சூழ உள் நோக்கி ஓம் காரத்தை அமைக்கவும்;
❊ இச் சூல அமைப்பின் உள்ளே ஐந்து எழுத்துக்கள் வெளிப்படும்;
❊ ஆலம் விழுது போன்று, உறுதியாக இவ் அமைப்பை ஏற்படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

927 அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஓகாரம் அது அஞ்சாம்
அது ஆகும் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்கு நம்பேறே.

* அமைப்பின் உள்ளே அகார, இகார, உகார, எகார, மகார எழுத்துக்களாகிய – ஐந்து எழுத்தை ஓம் காரத்தின் உறுப்புகளாக்கி விடவும்;
* வட்டங்கள் மேல் வட்டங்கள் இட்டுச் சக்கரம் ஒன்று அமைக்கவும்;
* இச் சக்கரத்தை அமைத்து இறை வழிபாடு செய்து இறை பேறு பெறவும். இவை அனைவர்க்கும் பொதுவான செயலாம்.

928 பேர் பெற்றது மூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்து உள் சந்தியின்
நேர்பெற்று இருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற்று இருந்த இயல்பு இதுவாமே.

* பின்னர் தோன்றிய மந்திரம் ஓம், மூல மந்திரம் எனப் பெயர் பெற்றுவிட்டது;
* சக்கரங்கள் அமைக்கப்பட்ட வட்டங்களின் மையத்தில்ஓம்காரம் உள்ளது;
* ஓம்காரத்தின் தன்மையால் சக்கரம் நேர்பெற்று உறுதியாக விளங்கும்;
* அனைத்தையும் நெறிப்படுத்தவல்ல இச்சக்கரத்தின் இயல்பு மேலே கூறப்பட்டுள்ளது.

929 இயலும் இம்மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்து அங்கி மண் விண்
முயலும் எழுத்துக்கு முன்னா இருந்ததே.

* பிரணவ மந்திரத்தினை ஓதி இறைவரை அடையும் மார்க்கத்தை உணர்ந்து கொள்ளுங்கள்;
* பிரணவ மந்திரத்தின் செயல்பாட்டைத் தெளிவுபட அறியும்போது, இறைவர் எம்முள்ளே தெளிவாக வெளிப்படுவார்;
* மண், நீர், அக்கினி, காற்று, ஆகாயம் ஆகியவற்றை எல்லாம் கடந்து ஓம்காரம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

930 ஆறு, எட்டு எழுத்தின் மேல் ஆறும் பதினாலும்
ஏறிட்டு அதன்மேல் விந்துவும் நாதமும்
சீறிட்டு நின்று சிவாய நம என்னக்
கூறிட்டு மும்மலம் கூப்பிட்டுப் போமே.

* சர்வத்திற்கும் ஆறுதல் தரவல்லது "அ" எனும் மூல முதல் எழுத்தாகும். இவ் எழுத்தின் உள்ளே 14 லோகங்களும் அடங்கும்;
* நாதவிந்து"அ" இனுள் அடங்கும்;
* "அ" எனும் மூல முதல் எழுத்தில் இருந்து சிவாயநம எனும் மந்திரம் வெளிப்படும்;
* சிவாயநம என்று செபிக்கும்போது மும்மலங்களும் எம்மை அழைத்து எம்மைவிட்டு விலகுவதாகக் கூறி அகன்று விடும்.

931 அண்ணல் இருப்ப தவளக் கரத்து உள்ளே
பெண்ணில் நல்லாளும் பிரான் அக் கரத்துளே
எண்ணி இருவர் இசைந்து அங்கு இருந்திடப்
புண்ணிய வாளர் பொருள் அறிவார்களே.

* எமது ஆத்ம இதய கமலத்து உள்ளே இறைவர் வீற்றிருக்கின்றார்;
* ஆத்ம இதய கமலத்துள்ளே சுத்த சத்தியும் வீற்றிருக்கின்றார்;
* சுத்த சத்தியும், இறைவரும் மிகவும் இசைவுடன் இதய கமலத்து உள் ளார்கள்;
* இறைபுண்ணியம் தெரிந்தவர்கள், சுத்தசத்தியும் இறைவரும் எம்முள் ஒன்றாக இருக்கும் உண்மை நிலையை அறிந்து கொள்வார்கள்.

932 அவ் இட்டு வைத்து அங்கு அரவு இட்டு மேல் வைத்து
இவ் இட்டுப் பார்க்கில் இலிங்கம் அதாய் நிற்கும்
மவ் இட்டு மேலே வளி உறக் கண்டபின்
தொம் இட்டு நின்ற சுடர்க் கொழுந்து ஆமே.

* "அ"வ் இட்டு அதன்மேலே அரவு இட்டு வைக்கவும்;
* மேலும் அதனோடு "இ" வ் இட்டுப் பார்க்கும்போது இலிங்க சொரூ பமாக இருக்கும்;
* "ம"வ் இட்டு அதன்மேல் பிராணனாரை அமரச் செய்ய வேண்டும்;
* அப்பொழுது மேற்குறித்த அமைப்பில் இருந்து ஜோதி சுடர்விட்டுப் பிரகா சிப்பதை நாம் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

933 அவ் உண்டு சவ் உண்டு அனைத்தும் அங்கு உள்ளது
கவ் உண்டு நிற்கும் கருத்து அறிவார் இல்லை
கவ் உண்டு நிற்கும் கருத்து அறிவாளர்க்குச்
சவ் உண்டு சத்தி சதாசிவன் தானே.

* "அ"வ் முதலாகச் சகலதும் திருஅம்பலச் சக்கரத்தில் உண்டு;
* அதில் அனைத்தும் ஒன்றித்து இருக்கும் கருத்தினை ஒருவரும் அறியாது உள்ளார்கள்;
* திரு அம்பலச் சக்கரத்தில் அனைத்தும் ஒன்றித்து இருக்கும் கருத்தினை நாம் அறிய வேண்டும்;
* திரு அம்பலச் சக்கரத்தில் உயிரும் உயிர்ப்புச் சத்தியும் உண்டு; சத்தியும் உள்ளார். சதா சிவரும் உள்ளார்.

934 அஞ்சு எழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்சு எழுத்தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்
அஞ்சு எழுத்து ஆகிய அக்கர சக்கரம்
அஞ்சு எழுத்து உள்ளே அமர்ந்து இருந்தானே.

* திருநந்தி தேவரும் ஐந்து எழுத்துக்களின் மூலத்தோடு அமர்ந்துள்ளார்;
* பஞ்சாக்கரமும், ஐந்து எழுத்துக்களின் மூலத்தில் இருந்து வெளிப்படுகின்றது;
* மூல முதற் சக்கரம் ஆகிய திரு அம்பலச் சக்கரம் ஐந்து எழுத்தை முதலாக வைத்து ஆக்கப்பட்டுள்ளது;
* இறையவர் ஐந்து எழுத்தின் உள்ளேயும் அமர்ந்துள்ளார்.

935 கூத்தனைக் காணும் குறிபல பேசிடில்
கூத்தன் எழுத்தின் முதல் எழுத்து ஓதினார்
கூத்தனொடு ஒன்றிய கொள்கையராய் நிற்பர்
கூத்தனைக் காணும் குறியது வாமே.

* என்றும் திருநடனம் புரியும் இறைவரை நாம் காண வேண்டும். இறைவரின் புலப்பாட்டை, வெளிப்பாட்டை நாம் பேச வேண்டும்;
* இறைவர் சர்வ எழுத்திற்கும் முதலாக விளங்கும் எழுத்தை- "அ" ஐ எமக்கு உணர்த்தி ஓதி விடுவார்;
* நாமும் இறைவரின் திருநடனத்துடன் ஒன்றிவிடுவோம்;
* இதுவே இறைவரின் திருநடனத்தின் புலப்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

936 அத்திசைக்குள் நின்ற அனலை எழுப்பியே
அத்திசைக்குள் நின்ற நவ் எழுத்து ஓதினார்
அத்திசைக்குள் நின்ற அந்த மறையனை
அத்திசைக்கு உள் உற ஆக்கினன் தானே.

* இறையவர் நடனம் புரிகின்ற எல்லாத் திக்கையும் நோக்கி, எமது ஞானாக்கினியைத் தூண்டி, இறைவரை நோக்கி ஏற்ற வேண்டும்;
* "ந"வ் எனும் எழுத்தை இறைவரை நோக்கிச் செபிக்க வேண்டும்;
* எல்லாத் திசைகளினுள்ளும் மறைந்திருக்கும் இறைவரை உணர வேண்டும்;
* எல்லாத் திசைகளிலும் வெளிப்படுகின்ற இறைகாட்சி எம்முள்ளேயும் வெளிப்படும்.

937 தானே அளித்திடும் தையலை நோக்கினால்
தானே அளித்திட்டு மேல் உற வைத் திடும்
தானே அளித்த மகாரத்தை ஓ திடத்
தானே அளித்ததோர் கல் ஒளி ஆகுமே.

* என்றும் இறை கருணையை வழங்கும் சுத்த சத்தியை நாம் வழிபட வேண்டும்;
* சுத்த சத்தியே கருணையுடன் எம்மை மேல் நிலைக்கு அழைத்துச் செல்லும்;
* "ம" காரத்தைச் சுத்த சத்தி கருணையுடன் எமக்கு வழங்கி உள்ளார். அதனை நாம் செபிக்க வேண்டும்;
* இயல்பாகத் தானாக விரும்பிக் கருணையுடன் இறை ஒளியை, எமக்குச் சுத்த சத்தி வழங்குவார்.

938

கல் ஒளியே என நின்ற வட திசை
கல் ஒளியே என நின்றனன் இந்திரன்
கல் ஒளியே என நின்ற சிகாரத்தைக்
கல் ஒளியே எனக் காட்டி நின்றானே.

* கற்க வேண்டிய - உறுதியான - கல்லில் இருந்தும் புறப்படுகின்ற - ஆராய வேண்டிய இறையவர் ஒளியே வடதிசையாகவும் விளங்கும்;
* இவ் ஒளியே "சி" காரம் ஆகவும் விளங்கும்;
* இறையவர் பெருமை நிறைந்த ஒளியை எமக்குக் காட்டுவார்;
* இந்திரனே! (திருமூலரின் சீடர்களில் ஒருவர்) நீயும் இவ் ஒளியாகவே விளங்குகின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

939 தானே எழுகுணம் தண் சுடராய் நிற்கும்
தானே எழுகுணம் வேதமுமாய் நிற்கும்
தானே எழுகுணம் ஆவதும் ஓதிடில்
தானே எழுந்த மறையவன் ஆமே.

❊ இறையவர் ஏழு வர்ணங்களை உடைய குளிர்ச்சி நிறைந்த ஜோதியாய் நிற்பர்;
❊ இறையவரே ஏழு குணம் உடைய வேதமுமாய் நிற்பர். (ஏழு சப்தங்கள்);
❊ இறையவரின் எல்லா வகையான நிலைப்பாட்டையும் நாம் உணர்ந்து ஓத வேண்டும்;
❊ இறையவர் எம்முள்ளே இயல்பாகத் தானாக மறை பொருளாக எழுந்து அருளுவார்.

940 மறையவன் ஆக மதித்த பிறவி
மறையவன் ஆக மதித் திடக் காண்பர்
மறையவன் அஞ்சு எழுத்து உண் நிற்கப் பெற்ற
மறையவன் அஞ்சு எழுத்தாம் அது ஆகுமே.

❊ எமது பிறப்பை, இறையவர் தந்த மறை பொருள் என்று-மறை கணக்கு என்று உணர்ந்து, நாம் இப்பிறப்பை நன்கு பயன்படுத்த வேண்டும்;
❊ இவ்வாறு செய்வது இறைவரைப் போற்றுவதற்கு ஒப்பானதாகும்;
❊ ஐந்து எழுத்தின் உள்ளேயும் இறையவர் மையமாக வீற்றிருப்பார்;
❊ ஐந்து எழுத்தும் இறையவர் போன்று செயற்படும். உண்மையில் இறையவர் ஐந்து எழுத்து அல்ல. ஐந்து எழுத்தும் இறையவர் விம்பம் ஆகும்.

941 ஆகின்ற பாதமும் அந்நடுவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீ-இரு தோள் வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற அச்சுடர் அவ் இயல்பு ஆமே.

❊ எமது இரு பாதங்களையும் "ந" எழுத்தாய்ப் பாவனை செய்யவும்;
❊ நாபிக் கமலத்தை "ம" எழுத்தாய்ப் பாவனை செய்யவும்; இரு தோள்களை "சி" எழுத்தாய்ப் பாவனை செய்யவும்;
❊ "வ" எழுத்தை வாயாகப் பாவனை செய்யவும்;
❊ "ய" எழுத்தை சிரசு, கண், மூக்கு, காது ஆகப் பாவனை செய்யவும். இவ்வாறு பஞ்சாக்கரத்தை, எம்முள்ளேயும் வெளியேயும் தெளிவுபட உணர்ந்து செபிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

942 அவ் இயல்பு ஆய இரு மூன்று எழுத்தையும்
செவ் இயல்பு ஆகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ் இயல்பு ஆக ஒளி உற நோக்கிடில்
பவ் இயல்பு ஆகப் பரந்து நின்றானே.

- ❊ இறைவரின் தாற்பரியத்தை உணர்த்துவது ஐந்து எழுத்து ஆகும்;
- ❊ திருநந்தி தேவரும் ஐந்து எழுத்தில் வெளிப்படுவார்;
- ❊ ஐந்து எழுத்தையும் ஒளி தோன்றும் வண்ணம் செபித்தல் வேண்டும்;
- ❊ இறைவர் ஐந்து எழுத்தின் ஊடாக எங்கும் பரந்தே உள்ளார்.

943 பரந்தது மந்திரம் பல் உயிர்க்கு எல்லாம்
வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரம் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓம் என்று எழுப்பே.

- ❊ எங்கும் பரந்துள்ள ஐந்து எழுத்து மந்திரம் சர்வகோடி உயிர் அணுக்க ளிலும் ஒன்று கலந்து உள்ளது;
- ❊ எல்லா வரங்களும் தரவல்ல மந்திரத்தை வாயாரச் செபித்தல் வேண்டும்;
- ❊ எல்லாவிதமான பகைமைகளும் போகும் வண்ணம் ஐந்து எழுத்தைச் செபிக்க வேண்டும்;
- ❊ ஐந்து எழுத்தும் ஒன்றாகும் போது தோன்றும் ஓம் எனும் மந்திரத்தை எம்முள்ளே எழுப்ப வேண்டும்.

944 ஓம் என்று எழுப்பித் தன் உத்தம நந்தியை
நாம் என்று எழுப்பி நடு எழு தீபத்தை
ஆம் என்று எழுப்பி அவ்வாறு அறிவார்கள்
மா மன்று கண்டு மகிழ்ந்து இருந்தாரே.

- ❊ "ஓம்" என ஆத்மார்த்தமாகச் செபித்து எம்மை விழிப்படையச் செய்ய வேண்டும். ஞான வழிகாட்டியாகிய திருநந்திதேவரை நாம் உணர வேண்டும்;
- ❊ ஆத்மாவைச் சதா விழிப்பு நிலையில் இருத்தி ஆத்ம தீபத்தை எம்முள்ளே ஏற்ற வேண்டும்;
- ❊ இவற்றை எல்லாம் செய்ய முடியும் என்று உறுதியோடு இருப்பவர்கள், பரந்த தூய வெறு வெளியைக் கண்டு உணர்ந்து இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# 51 எழுத்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஃஅ | அஃ | க | ஃக | கஃ |
| ஆ | | | ச | ஃச | சஃ |
| இ | ஃஇ | இஃ | த | | |
| ஈ | | | ட | | |
| உ | ஃஉ | உஃ | ப | ஃப | பஃ |
| ஊ | | | ற | | |
| எ | ஃஎ | எஃ | ய | ஃய | யஃ |
| ஏ | | | ர | | |
| ஐ | ஃஐ | ஐஃ | ள | | |
| ஒ | ஃஒ | ஒஃ | வ | | |
| ஓ | | | ல | | |
| ஔ | | | ழ | | |
| 12 | 6 | 6 | ந | | |
| | | | ன | | |
| | | | ண | | |
| | | | ங | | |
| | | | ஞ | | |
| | | | ம | | |
| | | | 18 | 4 | 4 |

உயிர் எழுத்து – 12+12 = 24

மெய் எழுத்து – 18+ 8 = 26

50

ஆயுத எழுத்து ஃ 1

51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE MODEL
# OF
# COSMOS - UNIVERSE - HUMAN STRUCTURE



## சித் அம்பரம் - திரு அம்பலம் - தூய வெறுவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

948 **நின்றது சக்கரம் நீளும் புவி எல்லாம்**
**மன்று அதுவாய் நின்ற மாய நல் நாடனைக்**
**கன்று அது ஆகக் கறந்தனன் நந்தியும்**
**குன்றிடை நின்றிடும் கொள்கையன் ஆமே.**

❊ திரு அம்பலச் சக்கரமே பூமி முழுதும் பரந்து நிற்கின்றது.

❊ திரு அம்பலச் சக்கரமே இறையவர் நடம் புரியும் பரந்த வெளியிலும் விளங்கி நிற்கும்;

❊ திரு அம்பலச் சக்கரத்தை திருநந்திதேவர் எமக்கு வழங்கியுள்ளார். கன்று தாயிடம் இருந்து பால் எடுப்பதுபோன்று திருநந்திதேவர் இறையவரிடம் இருந்து **திரு அம்பலச் சக்கரத்தை** எடுத்துள்ளார்;

❊ மலைபோன்ற உறுதியான இறை தாற்பரியத்தை உடையவர் திருநந்தி தேவர் ஆவர்.

பசு– இறைவர்
கன்று– திருநந்திதேவர்
பால்–திரு அம்பலச் சக்கரம்

949 **கொண்ட இச்சக்கரத்து உள்ளே குணம்பல**
**கொண்ட இச்சக்கரத்து உள்ளே குறி ஐந்து**
**கொண்ட இச்சக்கரம் கூத்தன் எழுந்து ஐந்து ஐந்து**
**கொண்ட இச் சக்கரத்து உள்நின்ற கூத்தே.**

❊ திரு அம்பலச் சக்கரத்தின் உள்ளே பலவிதமான செயற்பாடுகள் உண்டு;

❊ திரு அம்பலச் சக்கரத்தின் உள்ளே ஐந்து வகையான குறிகள் – ஐந்து தொழில்களின் தாற்பரியம் உண்டு;

❊ திரு அம்பலச் சக்கரத்தில் ஐந்து எழுத்துக்களே 25 எழுத்துக்களாகி, இறைவரின் கூத்தை வெளிப்படுத்தும்;

❊ திரு அம்பலச் சக்கரத்தின் உள்ளே இறையவர் கூத்தின் வடிவமாக விளங்குவார்.

950 **வெளியில் இரேகை, இரேகையில் அத்தலை**
**சுளியில் உகாரமாம், சுற்றிய வன்னி**
**நெளிதரு கால் கொம்பு, நேர் விந்து நாதம்,**
**தெளியும் பிரகாரம் சிவ மந்திரமே.**

❊ பரவெளியிலே இறையவர் எழுத்து உண்டு;

❊ இறை எழுத்தின் கீரிடமாக உகாரம் உண்டு;

❊ இவற்றைச் சூழ ஞானாக்கினி உண்டு. இவற்றின் காலாக விந்துவும், கொம்பாக நாதமும் உண்டு;

❊ இவை அனைத்தையும் "சிவ" மந்திரம் எமக்குத் தெளிவு படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

951 அகார உகார சிகார நடுவாய்
அகார மோடு ஆறும் வளியுடன் கூடிச்
சிகாரம் உடனே சிவன் சிந்தை செய்ய
உகார முதல்வன் உவந்து நின்றானே.

❇ "அ"காரம் "உ"காரம் "சி" காரம் ஆகியன திரு அம்பலச்சக்கரத்துள் நடுவாக விளங்குகின்றன;
❇ "அ"காரம் என்றும் ஆறுதலைத் தரவல்லார். இவருடன் பிராணனார் கூடியுள்ளார்;
❇ "சி"காரம் உடன், சிவன் எனும் தேவதை இருப்பதாகப் பாவனை செய்ய வேண்டும்;
❇ அப்பொழுது "உ"காரத்தின் - சுத்த சத்தியின் முதல்வராகிய இறையவர் திரு அம்பலச் சக்கரத்தினுள்-எம்முள் விரும்பி அமர்ந்து கொள்வார்.

952 அற்ற இடத்தே அகாரம் அது ஆவது
உற்ற இடத்தே உறுபொருள் கண்டிடச்
செற்ற அறுத்த செழும் சுடர் மெய்ப் பொருள்
குற்றம் அறுத்த பொன் போலும் குளிகையே.

❇ ஒன்றுமே இல்லாத இடத்தில் தூயவெளியில், அகாரம் இறை தாற்பரியத்தை வெளிப்படுத்திய வண்ணம் இருக்கும்;
❇ அகாரம் இல்லாத இடமே இல்லை. நிலையான உண்மைப் பொருளும் இல்லாத இடமே இல்லை;
❇ செந்நிற ஜோதி மயமான மெய்ப் பொருள் எமது எல்லாவிதமான பகைமையினையும் இல்லாது ஒழித்து விடும்;
❇ அகாரம் பொன்போன்ற ஒரு இறை மருந்து ஆகும்.
இது எமது எல்லாவிதமான குற்றங்களையும் அழித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

953 அவ் என்ற போதினில் உவ் எழுத்து ஆலித்தால்
உவ் என்ற முத்தி உருகிக் கலந்திடும்
மவ் என்று என் உள்ளே வழிபட்ட நந்தியை
எவ் வண்ணம் சொல்லுகேன் எந்தை இயற்கையே.

❋ "அ" வ் என்று ஆத்மார்த்தமாக உணர்ந்து அதில் சஞ்சாரம் செய்யும்போது "உ"வ் ஆகிய சுத்த சத்தி "அ"வ் உடன் ஒன்றாகிக் கொள்ளும்;

❋ "உ" வ் உடன் – சுத்த சத்தியுடன் ஒன்றாகக் கலத்தலே முத்தி ஆகும்;

❋ "ம"வ் என்று திருநந்தி தேவரை என் உள்ளே நான் வழிபட்ட வண்ணமே உள்ளேன்;

❋ இறைவரை-எந்தையின் இயற்கையான தாற்பரியத்தை எவ்வாறு என்னால் விளக்கமாகக் கூறமுடியுமோ தெரியவில்லை.

954 நீரில் எழுத்து இவ் உலகார் அறிவு அது
வானில் எழுத்து ஒன்று கண்டு அறிவார் இல்லை
யார் இவ் எழுத்தை அறிவார் அவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே.

❋ உலகத்து மக்கள் கற்கும் அறிவானது நீரில் எழுத்துப் போன்றது;

❋ வான் வெளியிலே – தூய வெறுவெளியில் உறுதியான நிலையான எழுத்து ஒன்று உண்டு. இதனை அறிவார் ஒருவரும் இல்லை;

❋ வான்வெளியில் உள்ள எழுத்தை யாரெல்லாம் அறிந்து கொள்வார்களோ! அவர்கள் தங்களின் உடம்பின் உள்ளே இருக்கின்ற அதே எழுத்தை அறிந்து கொள்வார்கள்.

955 காலை நடு உறக் காயத்தில் அக்கரம்
மாலை நடு உற ஐம்பதும் ஆவன
மேலை நடு உற வேதம் விளம்பிய
மூலம் நடு உற முத்தி தந்தானே.

❋ பிராணனாரை சுசுமுனையில் உறுதியாக-நிலையாகச் சஞ்சாரம் செய்யவிட வேண்டும். அப்பொழுது "அ"கரம் எம்முள்ளே தெளிவுற உணரப்படும்;

❋ பிராணனாரை மாலையாக்கி ஆத்மாவைச் சூழ அணிய வேண்டும். அப்பொழுது ஐம்பது எழுத்துக்களும் எம்முள்ளே தெளிவுபடப் புலப்படும்;

❋ பிராணனார் சகஸ்ரத்திலே உறுதியாக நிலையாக அமரவேண்டும். வேதம் வெளிப்படுகின்ற முதல் எமக்குத் தெளிவாகும்;

❋ பிராணனார் மூலாதாரத்தில் நிலைபேறாக அமரவேண்டும். அப்பொழுது எமக்கு இறைமுத்தி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

956 நாபியின் கீழ் அது நல்ல எழுத்து ஒன்று
பாவிகள் அத்தின் பயன் அறிவார் இல்லை
ஓவியராலும் அறிய ஒண்ணாதது
தேவியும் தானும் திகழ்ந்து இருந்தானே.

* நாபிக் கமலத்தின் கீழே சிறந்த போற்றப்படுகின்ற இறை எழுத்துத் தெளிவாக உணரப்படும்;
* பாவத்தின் செயல்களில் ஈடுபடுபவர்கள், இறை எழுத்தை அறியாது உள்ளார்கள்;
* இறை எழுத்தை எந்தச் சிறந்த ஓவியராலும் வடிவமைக்கவே முடியாது;
* சுத்த சத்தியும், ஆத்மாவும் அந்த இறை எழுத்துடன் ஒன்றித்து இருக்கும்.

957 அவ்வொடு சவ் என்ற தரன் உற்ற மந்திரம்
அவ்வொடு சவ் என்றது ஆரும் அறிகிலர்
அவ்வொடு சவ் என்றது ஆரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியும் ஆமே.

* அவ்வொடு சவ் எனும் எழுத்து ஒன்றாகும்போது இறைமந்திரம் வெளிப்படும். இதுவே அவ்சவ் -அசபா மந்திரம் ஆகும்;
* இம்மந்திரத்தை ஒருவரும் அறியாது உள்ளார்கள்;
* இதனை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்;
* இம் மந்திரமே அனாதியான இறை மந்திரம் ஆகும்.

958 மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியின் உள்ளே உதயம் பண்ணா நிற்கும்
சந்தி செய்யா நிற்பர் தாம் அது அறிகிலர்
அந்தி தொழுது போய் ஆர்த்து அகன்றார்களே.

* ஏக மந்திரம்-இறை மந்திரம் எம்முள்ளே-ஆத்மா எனும் மலரின் தாற்பரியத்தால் உதிக்கும்;
* எமது இதய கமலத்தின் உள்ளே இவ் இறை மந்திரம் தோன்றியும் தோன்றாமலும் நிற்கும்;
* ஒருவரும் இவ் இறை மந்திரத்துடன் ஒன்றித்து நிற்காதுள்ளார்கள்;
* இவர்கள், வெறுமனே மாலைவேளையில் கூடி ஆரவாரம் செய்து வழிபட்டுப் பின் அகன்று போகின்றார்கள். இறைவரின் உண்மைக் கருத்தும் காட்சியும் அறியமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

959 சேவிக்கு மந்திரம் செல்லும் திசை பெற
ஆவிக்குள் மந்திரம் ஆதாரம் ஆவன
பூவுக்குள் மந்திரம் போக்கு அற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குசம் ஆமே.

❋ நாம் அனுதினம் போற்றி வழிபாடு செய்கின்ற இறை மந்திரம் பிரபஞ்சத்தின் சர்வ திசைகளுக்கும் செல்லும்;

❋ சகலவிதமான வாயுக்களின் செயற்பாட்டிற்கும் இறைமந்திரமே ஆதாரமாக இருக்கும்;

❋ இறை மந்திரம், எம்மை, பூவாக உள்ள ஆத்ம சொரூபத்தினுள் இட்டுச் செல்லும்;

❋ இறைமந்திரமே சகல வாயுக்களுக்கும் அங்குசமாகக் - கடிவாளமாக விளங்கும்.

960 அருவினில் அம்பரம் அங்கு எழு நாதம்
பெருகு துடி இடை பேணிய விந்து
மருவி அகார சிகார நடுவாய்
உருவிட ஊறும் உறு மந்திரமே.

❋ தூய வெறுவெளியாகிய அம்பரம் அருவநிலை ஆகும். இவ்வெளியில் இருந்தே நாதம் எழுகின்றது.

❋ மின்னலைப் போன்ற மெல்லிய ஒளிக்கீற்றுப் போன்று விந்துவும் தூய வெறு வெளியில் இருந்தே புலப்படும்;

❋ வெறு வெளியில் **அகரமும் சிகரமும்** ஒன்றுடன் ஒன்று மருவி நடுவாய்த் தலைமைத்துவமாய் விளங்கும்;

❋ அப்பொழுது இறைமந்திரம் வெறு வெளியில் இருந்து உருவிப் புறப்படும்.

961 விந்துவும் நாதமும் மேவி உடன் கூடிச்
சந்திரனோடே தலைப்படும் ஆயிடில்
அந்திர வானத்து அமுதம் வந்து ஊறிடும்
அங்கு உதிமந்திரம் ஆகுதி ஆமே.

❋ விந்துவாகிய சப்த்த சொரூபமும், நாதம் ஆகிய அதிர்வு சொரூபமும் ஒன்றாகிக் கூடிக்கொள்ளும்;

❋ அப்பொழுது சந்திரனது ஒளிபோன்று தோன்றும் ஜோதியுடன் நாம் ஐக்கியம் ஆக வேண்டும்;

❋ அப்பொழுது எம்முள்ளே உள்ள வான வெளியில் இருந்து இறை அமுதம் ஊற்றெடுக்கும்;

❋ அவ்விடத்தில் தோன்றும் இறை மந்திரம் எம்முள்ளே நிகழும் அந்தர் யாகத்திற்கு ஆகுதியாக விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

962 ஆறு எழுத்து ஓதும் அறிவார் அறிகிலர்
ஆறு எழுத்து ஒன்றாக ஓதி உணரார்கள்
வேறு எழுத்து இன்றி விளம்ப வல்லார்கட்கு
ஓர் எழுத்தாலே உயிர் பெறலாமே.

* ஆறு எழுத்தினை ஓதுகின்ற அறிவு உடையவர்கள், ஆறு எழுத்தை அறியாது உள்ளார்கள்;
* ஆறு எழுத்தையும் ஒன்றாக ஓதி உணரவே மாட்டார்கள்;
* எந்தவிதமான வேறு எழுத்துக்களையும் கூறவேண்டாம்;
* ஓர் எழுத்தை மாத்திரம் ஆத்மார்த்தமாக உணர்ந்து நாம் உய்வடைய லாம்.

963 ஓதும் எழுத்தோடு உயிர்க்கலை மூ ஐஞ்சும்
ஆதி எழுத்து அவை ஐம்பத்தோடு ஒன்று என்பர்
சோதி எழுத்தினில் ஐ இரு மூன்று உள.
நாத எழுத்து இட்டு நாடிக் கொள்ளீரே.

* ஓதும் எழுத்திலே, உயிர்ப்பு நிறைந்த 15 எழுத்து வெளிப்படும். அது பஞ்ச தசாட்சரம் ஆகும்;
* ஆதியாகிய இவ் எழுத்தில் இருந்து 51 எழுத்துகள் வெளிப்படும்;
* சோதிமயமான இவ் எழுத்தில் பிரம்மா, விஷ்ணு, சங்கரர், ஈசர், சதாசிவர்,
* அர்த்த நாரீஸ்வரர், திருநந்திதேவர், சுத்தசத்தி, நாதம், விந்து ஆகிய 10 பேர் வெளிப்படுவர்;
* நாதமயமான இவ் எழுத்தை உணர்ந்து அதன் துணையுடன் இறைவரை நாடிக்கொள்ளுங்கள்.

964 விந்துவிலும் சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் தலையில் பதின் ஆறு கலை அதாம்
அந்தர வாகரம் கால் உடம்பு ஆயினாள்
அந்தமும் இன்றியே ஐம்பத்து ஒன்று ஆயதே.

* சப்த்த சொரூபத்தில் இருந்து நாதசொரூபம் எழுந்திடும்;
* ஐந்து புலன்களாலும் பந்தப்பட்டிருக்கும் சிரசில் 16 கலைகள் வெளிப்படும்;
* சத்தியே; எமது வாயாக, காலாக, கையாக உடம்பாக ஆகி உள்ளார்;
* ஆதியும் அந்தமும் இல்லாத சுத்த சத்தி 51 எழுத்தில், 51 சப்த்தங்களாக வெளிப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

965 ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமங்களும்
ஐம்பது எழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்பது எழுத்தும் போய் அஞ்சு எழுத்தாமே.

* அனைத்து வேதங்களும், அனைத்து ஆகமங்களும் 50 எழுத்துக்கள் ஆகியுள்ளன;
* 50 எழுத்தையும் நாம் தெளிவுபட அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டும்;
* 50 எழுத்தும் 5 எழுத்திலே அடங்கி விடுகின்றன.

966 அஞ்சு எழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்சு எழுத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்சு எழுத்தால் இவ் அகல் இடம் தாங்கினன்
அஞ்சு எழுத்தாலே அமர்ந்து நின்றானே.

* ஐந்து எழுத்தில் இருந்தே நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன வெளிப்படுகின்றன;
* ஐந்து எழுத்தில் இருந்தே எண்ணிறந்த கோடிக்கணக்கான உயிர் அணுக்கள் வெளிப்படுகின்றன;
* ஐந்து எழுத்தாலே சர்வ பிரபஞ்சங்களும் தாங்கப்படுகின்றன;
* ஐந்து எழுத்தே இறைவர் அமர்ந்து கொள்ளும் ஆசனம் ஆகும்.

967 வீழ்ந்து எழலாம் விகிர்தன் திருநாமத்தைச்
சேர்ந்து ஒழியாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் என்னு ம் புரிசடையோனே.

* இறைவரது திருநாமத்தை ஓதியவாறு நாம் எவ்விடமும் சென்று வீழ்ந்து எழுந்து கொள்ளலாம்;
* எவ்வித சோர்வும் இல்லாத, தேய்ந்து போகாத தெளிந்த பாதையில் ஒருவர் செல்ல ஆரம்பிக்க வேண்டும்;
* அப்பொழுது எம்மைச் சூழ்ந்துள்ள வினைத்துயர் அனைத்தும் இல்லாது போய்விடும்;
* இறையவரும் எம்முள்ளே தலைமைத்துவம் ஆகி வீற்றிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

968 உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணு கேள்வியும் பாடலுமாய் நிற்கும்
விண்ணின்று அமரர் விரும்பி அடி தொழ
எண்ணின்று எழுந்து அஞ்சும் ஆகி நின்றானே.

* எண்ணிறந்த காலங்களாகவே இறைமருந்தாகிய ஐந்து எழுத்து, அனைத்து உயிர்களாலும் உண்ணப்பட்டு வருகின்றது;
* ஐந்து எழுத்தே சிறந்த பண் இசையாகவும் மெய்ஞ்ஞானக் கேள்வியாக வும் பாடலாகவும் விளங்கும்;
* விண்ணிலே உறைகின்ற இறைநிலை எய்தியவர்கள் இறைவரின் திரு வடியை விரும்பி வழிபாடு செய்த வண்ணம் உள்ளார்கள்;
* எண்ணாகி ஐந்து எழுத்து ஆகி இறையவர் எம்முள்ளே வீற்றிருக்கின்றார்.

969 ஐந்தின் பெருமையே அகலிடம் ஆவதும்
ஐந்தின் பெருமையே ஆலயம் ஆவதும்
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமும்
ஐந்தின் வகை செய்யப் பாலனும் ஆமே.

* ஐந்து எழுத்தின் பெருமையாக விளங்குவது எமது ஆத்மாவாகும்;
* ஐந்து எழுத்தின் பெருமையாக விளங்குவது எமது ஆத்ம இதயக் கோயி லாகும்;
* ஐந்து எழுத்தின் பெருமையே இறையவரின் அறத்தின் நெறிகளாகும்;
* ஐந்து எழுத்தின் வகையைத் தெளிவுபட உணர்ந்து நாம் சாதனை செய் தால் என்றும் பாலனாக விளங்குவோம்.

970 வேர் எழுத்தாய் விண்ணாய் அப்புறமாய் நிற்கும்
நீர் எழுத்தாய் நிலம் தாங்கியும் அங்கு உளன்
சீர் எழுத்தாய் அங்கியாய் உயிராம் எழுத்து
ஓர் எழுத்து ஈசனும் ஒண் சுடர் ஆமே.

* ஐந்து எழுத்தே விண்ணின் மூல எழுத்தாகவும் விளங்கும். ஐந்து எழுத்தே விண் கடந்த தூய வெறு வெளியாகவும் விளங்கும்;
* ஐந்து எழுத்தே நீரையும், நிலத்தையும் தாங்கி அவற்றிற்கு ஆதாரமாகவும் உள்ளது;
* ஐந்து எழுத்தே உயிராகவும் அக்கினியாகவும் விளங்கும்;
* ஈசன் எனும் தேவதையும், ஜோதியும் ஓர் எழுத்தில் இருந்தே வெளிப் படுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

971 நாலாம் எழுத்து ஓசை ஞாலம் உரு அது
நாலாம் எழுத்தின் உள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே நவில வல்லார் கட்கு
நாலாம் எழுத்து அது நன்நெறி தானே.

❋ நாலாம் எழுத்து வ இல் இருந்து புறப்படும் ஓசையே பூமியின் உருவமாகி விட்டது;
❋ நாலாம் எழுத்தின் உள்ளே பூமி அடங்கி இருக்கின்றது;
❋ நாலாம் எழுத்தை நாம் அனைவரும் செபித்தல் வேண்டும்;
❋ நாலாம் எழுத்து எமக்கு என்றும் நல்ல நெறியைக் காட்டும்.

இயைந்தனள் எந்திழை என் உள மேவி
972 நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
பயந்தனை ஓரும் பதம் அது பற்றும்
பெயர்ந்தனன் மற்றும் பிதற்று அறுத்தேனே.

❋ சுத்த சத்தி எனது ஆத்ம இதய கமலத்திலே வீற்றிருக்கின்றார்;
❋ அங்கே அமர்ந்தவாறு நமசிவ என்று எனக்குப் போதித்தவாறும் உள்ளார்;
❋ எவ்வித பயமும் உள்ளத்தில் இருந்தாலும் சுத்த சத்தியின் பதம் ஆகிய வ ஐப் பற்றிக் கொள்ளுங்கள்;
❋ சுத்த சத்தி என்னுள் இருப்பதனால், என்னுள் இருக்கும் வேண்டாதன எல்லாம் அகன்று விட்டன. நானும் வெறுமனே பிதற்றுவதை அறுத்து விட்டேன்.

973 ஆமத்து இனிது இருந்த அன்ன மயத்தினை
ஓமத்திலே உதம் பண்ணும் ஒருத்தி தன்
நாம நமசிவ என்று இருப்பாருக்கு
நேமத் தலைவி நிலவி நின்றாளே.

❋ சகலவிதமான உணவுப் பொருட்களிலும் அன்னமயமாக சுத்த சத்தி உள்ளார்;
❋ அகத்திலும், புறத்திலும் நிகழும் ஓமத்திலே சுத்த சத்தி உள்ளார்;
❋ நாம், நமசிவ என்னும் இறை மந்திரத்தை உச்சரித்த வண்ணம் இருக்க வேண்டும்;
❋ அனைத்துக்கும் தாயாகத் தலைவியாக இருக்கும் சுத்த சத்தி எம்முடன் நிரந்தரமாகவே இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

974 பட்ட பரிசே பரம் அஞ்சு எழுத்து அதன்
இட்டம் அறிந்திட்டு இரவு பகல் வர
நட்டம் அது ஆடு நடுவே நிலயம் கொண்டு
அட்ட தேசப் பொருள் ஆகி நின்றானே.

* பரம்பொருளின் பிழிந்த பரிசாக எமக்குக் கிடைப்பது ஐந்து எழுத்து ஆகும்;
* இரவு பகல், ஆகியனவற்றின் புலப்பாட்டை நாம் அறிந்து கொள்ள வேண்டும்;
* இறையவர் சர்வத்திலும் நடுவாகி நடனம் ஆடியவாறு நிலைகொண்டுள் ளார்;
* இறையவர் எட்டுத்திக்குகளும் கடந்து என்றும் மெய்ப்பொருளாகவே விளங்குவார்.

975 அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் வரு முப் பதத்தில்
சிகாரம் சிவமாய் வகாரம் வடிவாய்
அகாரம் உயிர் என்று அறையலும் ஆமே.

* அகாரம் சர்வத்திலும் உயிர்ப்பாக விளங்கும். உகாரம் சர்வத்திலும் பரமாக விளங்கும்;
* மகாரம் சர்வத்திலும் வினையாக விளங்கும்;
* முப்பதங்களாகிய **சிகாரம்** சிவம் ஆகும். **வகாரம் சர்வத்தினதும்** வடிவம் ஆகும். **அகாரம்** சர்வத்திலும் **உ**யிராகவும் விளங்குகின்றது; என்று யான் உறுதியாகக் கூறுகின்றேன்.

976 நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஒகார முதல் கொண்டு ஒருக்கால் உரைக்க
மகார முதல்வன் மனத்து அகத்தானே.

* நகாரத்திற்கும், மகாரத்திற்கும், சிகாரத்திற்கும் நடுவாக வகாரம், யகாரம் வீற்றிருக்கும்;
* இவற்றைப் பிராணனாருடன் ஐக்கியமாக விட்டு ஆத்மார்த்தமாக ஜெபிக்க வேண்டும்;
* அப்போது ஓம்காரத்திற்கு முதல்வராக விளங்கும் இறைவர் அகர முதலாக மகரம் வரை நீண்டு எம்முள் முதல்வராக வீற்றிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

977 அஞ்சு உள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்சு எழுத்து-அங்குசம் ஆவன
அஞ்சையும் கூடத் தடுக்க வல்லார்கட்கே
அஞ்சு ஆதி ஆதி அகம் புகலாமே.

❋ எமது உடம்பின் உள்ளே ஐந்து வகை ஆனைகள்- ஐந்து புலன்கள் வாழ்கின்றன;
❋ இவ் ஐந்து ஆனையையும் நெறிப்படுத்த அங்குசமாக விளங்குவது ஐந்து எழுத்து ஆகும்;
❋ இவ் ஐந்து ஆனையினதும் செயற்பாடுகளை ஒரே நேரத்தில் நாம் தடுக்க வேண்டும்;
❋ அப்பொழுது ஆதியான ஐந்து எழுத்துக்களுடனும் நாம் ஒன்றித்து ஆதியாம் பரம்பொருளிடம் சேரலாம்.

978 ஐந்து கலையில் அகராதி தன்னிலே
வந்த நகராதி மாற்றி மகராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரை ஒடும்
சந்தி செய்வார்கட்குச் சடங்கு இல்லைத்தானே.

❋ ஐந்து எழுத்தாகிய ஐந்து கலையிலும், அகார எழுத்தைத் தெளிவாக நாம் உணரலாம்;
❋ நகாரம், மகாரம் ஆகிய இரண்டையும் மாற்றி நந்தி எம்பெருமானாரை நாம் நாட வேண்டும்;
❋ மூலத்தில் உள்ள சுத்த சத்தியுடன் சேர்ந்து, எமது அனைத்து செயற்பாட்டையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்;
❋ அப்பொழுது எமக்கு எந்தவித சடங்கும் தேவைப்படாது.

979 மருவும் சிவாயமே மன்னும் உயிரும்
அருமந்த போகமும் ஞானமும் ஆகும்
தெருள் வந்த சீவனார் சென்று இவற்றாலே
அருள் தங்கி அச்சிவம் ஆவது வீடே.

❋ "சிவாயம்" இதன் மருவிய விம்பமே உயிரார் ஆவர்;
❋ சிவாயம் - இதுவே அற்புத இறைபோகமும், இறை ஞானமும் தரும்;
❋ இருளால் சூழப்பட்ட உயிரார்; இறை அருள்பெற்று சிவபரம்பொருளின் மெய்ஞ்ஞான வீட்டை அடைந்து கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

980 அஞ்சுக அஞ்சு எழுத்து உண்மை அறிந்த பின்
நெஞ்சகத்து உள்ளே நிறையும் பராபரம்
வஞ்சகம் இல்லை மனைக்கும் அழிவு இல்லை
தஞ்சம் இது என்று சாற்றுகின்றேனே.

❊ ஐந்து எழுத்து உணர்த்தும் உண்மையைத் தெளிவுபட உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டும். அன்புடனும் பணிவுடனும் இறையவர் மீது பக்தி செய்தல் வேண்டும்;
❊ அப்பொழுது எமது ஆத்ம இதய கமலத்தின் உள்ளே இறையவர் நிறைந்து போய் இருப்பார்;
❊ அதனால் எம்மை எந்தவிதமான வஞ்சக செயற்பாடுகளும் வந்து தாக்கமாட்டாது; எமது உடலும் ஒருபோதும் அழிய மாட்டாது;
❊ இறையவர் ஒருவரே எமக்குப் புகலிடம் என்று மிகவும் உறுதியுடன் நான் சத்தியம் செய்கின்றேன்.

981 சிவாய ஒடு அவ்வே தெளிந்து உள்ளத்து ஓதச்
சிவாய ஒடு அவ்வே சிவன் உருவாகும்
சிவாய ஒடு அவ்வும் தெளிய வல்லார்கள்
சிவாய ஒடு அவ்வே தெளிந்து இருந்தாரே.

❊ "சிவாய" எனும் சொல்லுடன் "அவ்" எனும் எழுத்தைச் சேர்த்துத் தெளிந்த உள்ளத்துடன் ஓதவேண்டும். அப்பொழுது சிவன் எனும் தேவதையின் உருவம் வெளிப்படும்;
❊ "சிவாய – அவ்" இன் சேர்க்கையைத் தெளிந்தவர்கள்,என்றும் தெளிவுடனேயே இருப்பார்கள்.

982 சிகார வகார யகாரம் உடனே
நகார மகார நடு உற நாடி
ஒகாரம் உடனே ஒருகால் உரைக்க
மகார முதல்வன் மதித்து நின்றானே.

❊ சிகாரம், வகாரம், யகாரம், நகாரம், மகாரம் ஆகியவற்றை ஒன்றாக்கி அதில் "ஓம்"காரத்தை நடுவாக்கிச் செபித்தல் வேண்டும்;
❊ மகாரத்திற்கு முதலாக விளங்கும் இறைவர் எம்முள்ளே நிறைந்த ஆனந்தத்துடன் விளங்குவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

983 நம்முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முதல் உள்ளே தெளிய வல்லார் கட்குத்
தம்முதல் ஆகும் சதாசிவம் தானே.

* எமக்கு முதலாக விளங்குகின்ற ஐந்து எழுத்துக்களை என்றும் நாடிக் கொள்ளவேண்டும். எமது அனைத்துக் கருமங்களையும் ஐந்து எழுத்துக் களை நோக்கியே என்றும் நாம் செயற்படுத்த வேண்டும்;"அம்" ஐ முத லாகக் கொண்டுள்ள ஐந்து எழுத்துக்களின் முன்பாகக் கொடிய வினை கள் எல்லாம் அழிந்து போய்விடும்;
* "சிம்" ஐ முதலாக உள்ள இறைவர் அம்சத்தை உணர்ந்து நாம் எம்முள் ளேயே தெளிய வேண்டும்;
* எமக்கு முதலாக விளங்கும் இறைவர், சர்வத்திலும் "சிவம்" ஆகி இருப் பதை நாம் உணரவேண்டும்.

984 நவமும் சிவமும் உயிர் பரம் ஆகும்
தவம் ஒன்று இலாதன தத்துவம் ஆகும்
சிவம் ஒன்றி ஆய்பவர் ஆதரவால் அச்
சிவம் என்ப தானாம் எனும் தெளிவு உற்றதே.

* "நவம்" உயிராக விளங்கும் . "சிவம்" இறையாக விளங்கும்;
* எந்தவித தவமும் இன்றி வெறுமனே இருப்பவையே தத்துவம் ஆகும்;
* சிவபரம்பொருளுடன் ஒன்றித்து அனைத்தையும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும்;
* இறையவரின் அன்பாலும் ஆதரவாலும், "ஒருவரே இறைவர்" என்பதை நாம் உணர்ந்து தெளிவு பெறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

985 கூடிய எட்டும் இரண்டும் குவிந்து அறி
நாடிய நந்தியை ஞானத்துள்ளே வைத்து
ஆடிய ஐவரும் அங்கு உறவு ஆவர்கள்
தேடி அதனைத் தெளிந்து அறியீரே.

❋ சிவமும், சத்தியும், இணைந்து குவிந்து இலிங்கமாக உள்ளது. இதனை மிகவும் தெளிவாக உணர்ந்து நாம் அறிய வேண்டும்;

❋ நந்திதேவர் எமக்கு ஞானத்தையே வழங்கி, வழிகாட்டிய வண்ணம் உள்ளார்;

❋ பிரம்மா, விஷ்ணு, சிவர், ஈசர், சதாசிவர் ஆகிய ஐந்து தேவதைகளும் எம்முடன் மிகவும் நெருங்கிய உறவு வைத்திருப்பார்கள்;

❋ நாம் வெளிநோக்கித் தேடுகின்ற அனைத்தையும் தெளிவுடன் உணர்ந்து அறிதல் மிகவும் சிரமம் ஆகும்.

986 எட்டும் இரண்டும் இனிது அறிகின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இரு மூன்று நான்கு எனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.

❋ சிவமும் சத்தியும் லிங்க வடிவாக இருப்பதை ஒருவரும் தெளிவுபட அறியாது உள்ளனர்;

❋ சிவமும் சத்தியும் லிங்க வடிவாக இருப்பதை அறியாதவர்களே ஏழைகள் ஆவர்;

❋ இந்த ஏழைகளே சிவபரம்பொருளையும், சத்தியையும் விரிவாக்கி விளக்குவர்;

❋ மேலும் சித்தாந்தம் என்றும் சன்மார்க்கம் என்றும் பாதம் என்றும் மேலும் விளம்புவர். பின்னர் இவர்கள் பட்டும் போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

987 எட்டு வரையின் மேல் எட்டு வரை கீறி
இட்ட நடு உள் இறைவன் எழுத்து ஒன்றில்
வட்டத்திலே அறை நாற்பத்து எட்டும் இட்டுச்
சிட்டு அஞ்சு எழுத்தும் செபி சீக்கிரமே.

* 64 அறைகள் ( 8x 8) உள்ளாக்கிய கட்டமைப்பு ஒன்று வரைக;
* இவ் அறைகளின் மையத்தில் இறை எழுத்தைப் பொறிக்கவும்;
* வட்டம் வரைந்து. அதனுள் இவ் 64 அறைகளையும் ஏற்படுத்த வேண்டும். இதில் 48 வகை எழுத்துக்களும் பொறிக்கப்பட வேண்டும்;
* இவற்றை ஏற்படுத்தி ஐந்து எழுத்தையும் தெளிவுடன் செபித்தல் வேண்டும்.

988 தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆன இம் மூவரோடு ஆற்றவர் ஆதிகள்
ஏனைப் பதின் ஐந்தும் விந்துவும் நாதமும்
சேனையும் செய் சிவ சக்கரம் தானே.

* தானம் வழங்குபவர்கள், சட்டம் வகுப்பவர்கள், இருவகையான சதிர் ஆடுபவர்கள் எனச் சமுதாயத்தில் உள்ளார்கள்;
* இம்மூன்று வகையுடன், மேலும் ஆதிநிலையோடு தொடர்பு பட்டவர்களும் உள்ளார்கள்;
* பஞ்சதசாட்சரம் ஆகிய 15 எழுத்துக்களும், விந்துவும், நாதமும் உள்ளன;
* எல்லாவிதமான அமைய வேண்டிய சேனைகளையும் சேர்த்து அமைத்ததே சிவசக்கரம் ஆகும்.

989 பட்டன மாதவம் ஆறும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நம என்பர்
எட்டனை ஆயினும் ஈசன் திறத் திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்று அறியேனே.

* செய்த எல்லாத் தவங்களும் அற்றுப் போகின்றன. பராபரத்தின் சந்நிதானத்தில் ஆறுதல் கிடைக்கின்றது;
* "விகிதர்" எனும் பட்டங்கள் நாமங்கள் அனைத்தும் எம்மைவிட்டு விலகுகின்றன;
* இறைவரின் நிலைகள் எட்ட முடியாதவை ஆனாலும், இறைவரின் சிறப்பு மிகுந்த திறமைகளை நான் என்றும் பேசுவேன். என்றும் மறைந்தே இருப்பேன். வேறு ஒன்றும் அறியவே மாட்டேன்;.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

990 சிவன் முதல் மூவரோடு ஐவர் சிறந்த
அவை முதல் ஆறு இரண்டு ஒன்றொடு ஒன்றான
அவை முதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவை முதல் சங்கரன் தன்பெயர் தானே.

❋ சிவபரம்பொருள் முதலாக உள்ளது. பிரம்மா, விஷ்ணு, சங்கரன் மூவர் எனப்படும். சத்தி, உமாமகேஷ்வரர், சதாசிவர், ஈசர், திருநந்திதேவர் ஐவர் எனப்படும்;

❋ சிவபரம்பொருளின் சபையிலே பத்துப் பேர் உள்ளனர்.

❋ **விந்து** சப்த்த சொரூபமாக உள்ளது. நாதம் அதிர்வு சொரூபமாக உள்ளது. இவை இரண்டும் இருவர் ஆகும்;

❋ இந்த அவையில் சங்கரனே சங்காரத் தன்மையால் தனது நாமத்தை உயர்த்திக் கொள்கின்றான்.

991 வித்தாம் செகமயம் ஆக வரை கீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப் பின்
உத்தாரம் பன்னிரண்டு ஆதி கலை தொகும்
பத்தாம் பிரம சடங்கு பார்த்து ஓதிடே.

❋ பூமியைப் போன்ற அமைப்பு ஒன்றை வரையவும். இதே அமைப்பில் 16 வகைக் கலைகளையும் மூலமாகப் பதிக்கவும், இவையே நத்தார் கலைகள் எனப்படும்;

❋ 12 வகைக் கலைகளையும் இவ் அமைப்பில் பதிக்கவும். உத்தாரம் செய்யவும்;

❋ அனைத்து செயற்பாடுகளையும் பிரம்ம சடங்குகளாக்கவும்;

❋ இவை அனைத்தும் லிங்கத்தில் ஒடுங்குவதை உணர்ந்து செபம் செய்யுங்கள்;.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

992 கண்டு எழுந்தேன் கமலம் மலர் உள் இடை
கொண்டு ஒழிந்தேன் உடன் கூடிய காலத்துப்
பண்டு அழியாத பதிவழியே சென்று
நண் பழியாமே நம எனல் ஆமே.

* எனது இதய கமலத்தின் உள்ளே இறைவரைக் கண்டு விழித்து எழுந்தேன்;
* வேண்டாத அனைத்தையும் ஒழித்து விட்டேன். அதன்பின் இறைவருடன் கூடிக் கொண்டேன்;
* தொன்று தொட்டே என்றும் இருந்து வரும் இறைவழியில் சென்று கொண்டுள்ளேன்;
* எவரும் என்னைப் பழிக்காதவாறு நான் இறைவரை வணங்கிய வண்ணம் உள்ளேன்.

993 புண்ணிய வானவர் பூமழை தூவி நின்று
எண்ணுவர் அண்ணலை இணைஅடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நம என்று நாமத்தைக்
கண் என உன்னிக் கலந்து நின்றானே.

* புண்ணியம் நிறைந்த வானவர்கள், பூக்களை மழைபோல் தூவி நிற்பர்;
* இறைவருடைய திருவடியின் தூய மந்திரத்தை சதா எண்ணிக் கொள்வார்கள்;
* என்றும் இறைவரையே நாடி அணுகிக் கொள்வார்கள். இறை நாமத்தையே சதா செபித்துக் கொள்வார்கள்;
* இறைவர் எமது கண்போன்று எம்முள்ளே எம்முடன் கலந்து உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

994 ஆறு எழுத்து ஆவ ஆறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நால் என்பர்
சாவித்திரியிலே தலை எழுத்து ஒன்று உள
பேதிக்க வல்லார் பிறவி அற்றார்களே.

❇ திருமூலர் பெருமான் அறிவிக்கும் சமயங்கள் ஆறு ஆகும். இவை ஆறு எழுத்துக்களால் உணரப்படும்.

| | |
|---|---|
| 1. நாதாந்தம் | ஓம் |
| 2. காலாந்தம் | சி |
| 3 சித்தாந்தம் | வ |
| 4. வேதாந்தம் | ய |
| 5 யோகாந்தம் | ந |
| 6. போகாந்தம் | ம |

❇ ஆறு எழுத்தும் நாலு எழுத்தாகி விடும் - ஓம் சிவய, 24 ஆத்ம தத்துவங்களாக வெளிப்படும்;

❇ சாவித்திரி எனும் தேவதைக்குத் தலையாய எழுத்து ஒன்று உண்டு. (சா-அசா-சா)

❇ இந்த ஓர் எழுத்தை "அ" ஐ (சா ஐ) தெளிவாக உணர வல்லார்கள், தங்களது பிறவியை அறுத்து விடுவார்கள்.

995 எட்டினில் எட்டு அறை இட்டு ஓர் அறையிலே
கட்டிய ஒன்று எட்டாயக் காண நிறை இட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவம் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட்குமாம் பதியான் உண்டே.

❇ 64 அறைகள் வரும் வண்ணம் ( 8x8 ) அமைப்பு ஒன்றை ஏற்படுத்தவும்;

❇ அமைக்கப்பட்ட அறைகளில் 1இல் இருந்து 8 வரை நிறைக்க வேண்டியவற்றை நிரப்பவும்;

❇ இவ் அமைப்பை ஓம் காரம் சூழ்ந்திருக்குமாறு அமைக்கவும்;

❇ சர்வஜீவராசிகளுக்கும் தலைவராகிய இறைவரை உணரும் பொருட்டே மேற்கூறிய புற அமைப்புகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

996 நம் முதல் அவ்வொடு நாவினர் ஆகியே
அம் முதல் ஆகிய எட்டு இடை உற்றிட்டு
உம் முதல் ஆகவே உணர்பவர் உச்சிமேல்
உம்முதல் ஆயவன் உற்று நின்றானே.

❋ எமக்கு என்றும் முதலாகவே விளங்கும் "அ" வ் உடன் நாம் ஒன்றித்து இருக்க வேண்டும். புகழ்ந்துபாட வேண்டும்;
❋ அந்த முதலாகிய சிவபரம்பொருளின் உள்ளே அமர்ந்து கொள்ள வேண்டும்;
❋ சுத்த சத்திக்கும் முதல்வராக விளங்கும் சிவபரம் பொருளை எமது சகஸ்ரத்தில் நாம் உணரவேண்டும்;
❋ எம் எல்லோருக்கும் முதலாய இறையவர் எம்முள்ளே ஒன்றித்து நிற்பார்.

997 நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிய மவ் இட்டு ஓலையில் சாதகம்
துன்று மெழுகை உள்பூசிச் சுடர் இடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனம் காணுமே.

❋ அரசம் பலகை ஒன்றின் மேல் "ம" ஐப் பதிக்கவும்;
❋ சாதனை செய்வதற்கு ஏற்றவாறு மெழுகை அரசம் பலகையில் பதிக்கவும்;
❋ வெப்பத்தின் உதவியுடன் இவற்றை அமைக்கலாம்;
❋ அரசம் பலகையில் இருந்து இறை சாதனை செய்யும் போது தம்பனம் எனும் ஒருவகைக் குடும்பயோகம் கைகூடும்.

998 கரண விறளிப் பலகை யமன் திசை
மரணம் இட்டு எட்டின் மகார எழுத்திட்டு
வரணம் இலைங் காயம் பூசி அடுப்பிடை
முரணில் புதைத்திட மோகனம் ஆகுமே.

❋ விறளிப் பலகையில் ம காரத்தைப் பதிக்கவும். அகாரம் மரணத்தைக் காலதேவனை விரட்டி விடும்;
❋ இப்பலகையிலே; வரணம் மரத்தின் இலை, காய் ஆகியவற்றைப் பூசி; அடுப்பில் வைத்து வெப்பமேற்றி வலிமையுடன் பதித்தல் வேண்டும்;
❋ இதில் இருந்து இறைசாதனை செய்தால் கரணம், மோகனம் எனும் குடும்ப யோகம் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

999 ஆங்கு வட மேற்கில் ஐயனார் கோட்டத்தில்
பாங்கு படவே பலாசப் பலகையில்
காங்கரு மேட்டில் கடுப்பு ஊசி விந்து விட்டு
ஓங்காமல் வைத்திடும் உச்சாடனத்துக்கே.

❊ வடமேற்குத்திக்கில் உள்ள, இறையவனார் கோயிலை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்;
❊ பலாசு பலகையிலே மிகவும் தெளிவுபட 51 சப்த்தங்களையும் ஏற்படுத்தி விடுங்கள்;
❊ அதன் மையத்திலே மேருமலையின் அமைப்பை உருவாக்கி விடுங்கள்;
❊ பின்னர் தவறாது இறை நாமங்களை உச்சரித்துக் கொள்ளுங்கள்.

1000 உச்சியம் போதில் ஒளி வன்னி மூலையில்
பச்சோலையில் பஞ்ச காயத்தைப் பளித்து
முச்சதுரத்தின் முதுகாட்டில் வைத்திட
அச்சம் அறமேலோர் ஆரணம் வேண்டிலே.

❊ வன்னி மூலையை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். சகஸ்ரத்தில் ஒளிதோன்றுவதை அவதானியுங்கள்;
❊ ஐந்துவகைக் கவசங்களால் ஆன உடலை என்றும் குளிர்மையாக வைத்திருங்கள்;
❊ முப்பரிமாண உடலை முற்றாக நீக்கி இருங்கள்;
❊ அப்பொழுது எந்தவிதமான அச்சமும் இன்றி இருக்கலாம். இறைவரின் கவசத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஐந்து வகைக்கவசம்: உடல்
மனம்
பிராணன்
உயிர்
ஆத்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

1001 ஏய்ந்த வரி தாரம் ஏட்டின் மேலே பூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்து இட்டு
வாய்ந்தோர் வில்வம் பலகை வசியத்துக்கு
ஏய்ந்த வைத்து எண், பதினாயிரம் வேண்டிலே.

❊ வில்வம் பலகை, ஒன்று அமைத்து அதன்மேல் தங்கத் தகட்டினைப் பதிக்கவும்;
❊ அதிலே வகாரம், உகாரம் ஆகிய எழுத்துக்களைப் பொறிக்கவும்;
❊ எல்லாவற்றையும் ஒழுங்குபட அமைத்தபின்னர், இறைநாமங்களைப் பதினாயிரம் தடவை செபித்து வழிபாடு செய்யவும்.

1002 எண்ணாக் கருடனை எட்டின் உகாரம் இட்டு
எண்ணாப் பொன் ஒளி எழு வெள்ளி பூசிடா
வெண்ணாவல் பலகையில் இட்டு மேற்கே நோக்கி
எண்ணா எழுத்தொடு எண்ணாயிரம் வேண்டிலே.

❊ வெள்ளை நிற நாவல் மரப்பலகை ஒன்றை அமைக்கவும். வெள்ளி, பொன், கலந்த தகட்டினை அதன்மேல் பதிக்கவும்;
❊ "சிவயோகம் பாவம்" செய்வதற்கு ஏற்றவாறு "உ" காரத்தை அதில் பொறிக்கவும்;
❊ யராலும் நினைத்தே பார்க்காத அ காரத்தை அதில் சேர்த்து எண்ணாயிரம் தடவை செபித்து இறைவழிபாடு செய்யவும்.

## III அருச்சனை.

1003 அம்புய நீலம் கழுநீர் அணி நெய்தல்
வம்பு அவிழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே.

❊ சிவபூசை செய்வதற்குச் சிறந்த மலர்கள்;
தாமரை, நீலோற்பலம், செங்கழுநீர், நெய்தல் பூ, பூகம்பூ(கமுகம்பூ),மாதவிப்பூ (குருக்கத்தி மரப்பூ), மந்தாரைப் பூ, தும்பைப் பூ, வகுளம்பூ, சுரபுன்னைப் பூ, மல்லிகைப்பூ, செண்பகப்பூ, பாதிரிப் பூ, செவ்வந்திப் பூ,வெள்ளெருக்கம் பூ ஆகியனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1004 சாங்கம தாகவே சந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமம் கற்பூரம் கார் அகில்
பாங்குபடப் பனிநீரால் குழைத்து வைத்து
ஆங்கே அணிந்து நீர் அர்ச்சியும் அன்பொடே.

❊ வாசம் நிறைந்த பல்வேறுவகையான சந்தனம், குங்குமம், கற்பூரம், கார், அகில் ஆகியனவற்றை ஒன்று சேர்த்து அதற்குப் பன்னீர் விட்டு நன்கு குழைத்து சிவலிங்கத்திற்குப் பூசி அன்புடன் அர்ச்சனை செய்யுங்கள்.

1005 அன்புடனே நின்று அமுதமும் ஏற்றியே
பொன் செய் விளக்கும் புகைதீபம் திசைதொறும்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையும் கால்
இன்புடனே வந்து எய்திடும் முத்தியே.

❊ அன்புடன் அமுதமும் செய்து வைக்கவும். விளக்கு ஏற்றித் தீபம் தூபம் ஆகியனவற்றை எல்லாத் திசைக்கும் காட்டவும்;

❊ துன்பம் அனைத்தையும் நீக்கி இறைவழிபாடு செய்யவும்;

❊ அப்பொழுது முத்தியானது மிகவும் இன்பமாக எம்முடன் வந்து சேர்ந்து கொள்ளும்.

1006 எய்தி வழிபடில் எய்தாதன இல்லை
எய்தி வழிபடில் இந்திரன் செல்வ முன்
எய்தி வழிபடில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிபடில் எய்திடும் முத்தியே.

❊ உண்மை விருப்பத்துடன் வழிபட்டால் கிடைக்காத அனைத்தும் கிடைக்கும்;

❊ இந்திரனது செல்வமும் கிடைக்கும்;

❊ எட்டு வகையான சித்திகளும் கிடைக்கும்;

❊ முத்தியும் தானே வந்து கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1007 நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத்திய மனு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணும் செபம் என்னு
மன்னு மன பவனத் தொடு வைகுமே.

* தனக்குப் புறம்பாகவுள்ள நன்மை தீமையை நாடாது நீங்கியவர்கள் எல்லாவற்றையும் மானசீகமாக எரித்தவர்கள் ஆவர்;
* எல்லாவற்றையும் எரித்தபின்னர் ஏற்படுகின்ற வெறுமை நிலைப்பாடே இறைவருக்குச் சிறந்த நைவேத்தியம் ஆகும்;
* இந்நிலையே அனைத்து செயற்பாடுகளையும் காலத்தையும் கடந்ததாக – சிறந்த செபமாக இறைவருக்கு விளங்கும்;
* மனத்தினதும் அதனால் ஏற்படும் புலங்களையும் நாம் கடந்து சென்று விடவேண்டும்.

1008 வேண்டார்கள் கன்மம் விமலனுக்கு ஆட்பட்டோர்
வேண்டார்கள் கன்மம் மதில் இச்சை அற்றபேர்
வேண்டார்கள் கன்மம் மிகு சிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோர் ஆய்ந்த அன்பே.

* இறைவனுக்கு ஆட்பட்டவர்கள் எந்தவித கருமங்களாலும் பாதிக்கப்பட மாட்டார்கள்;
* எல்லாவித இச்சைகள் அற்றவர்களும் எந்தவித கருமங்களாலும் பாதிக்கப்படமாட்டார்கள்;
* சிறந்த சிவயோகிகளும் எந்தவித கருமங்களாலும் பாதிக்கப்பட மாட்டார்கள்;
* சிறந்த தூய அன்புநெறியைக் கடைப்பிடிப்பவர்களும், எந்தவித கருமங்களாலும் பாதிக்கப்படமாட்டார்கள்.

1009 அறிவு அரு ஞானத்து எவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின்றார்கள்
நெறி மனை உள்ளே நிலை பெற நோக்கில்
எறிமணி உள்ளே இருக்கலும் ஆமே.

* அறிவினால் அறிந்து கொள்ள முடியாத உண்மை இறை ஞானத்தை ஒருவரும் அறியாது உள்ளார்கள்;
* ஐந்து பொறிகள் வழியே சென்று உலகத்தைத் தேடிப் புலம்பிக் கொண்டே இருக்கின்றார்கள்;
* எம்முள்ளே உள்ள ஆத்ம சொரூபத்தினை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்;
* அப்பொழுது நாம் இறை சொரூபத்தினுள்ளே தெளிவாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1010 இருளும் வெளியும் போல் இரண்டாம் இதயம்
அருள் அறியாமையும் மன்னு அறிவு
அருள் இவை விட்டு அறியாமை மயங்கு
மருளும் சிதைத்தோர் அவர்களாம் அன்றே.

❋ இருளும், வெளியும் என இருவகை நிலை உண்டு. இறைவரை அன்பு செய்தல் உலகத்தை அன்பு செய்தல் என இருநிலை உண்டு;

❋ ஒன்று அருள் நிறைந்தது. மற்றையது அறிவால் நிரப்பப்பட்ட அறியாமை ஆகும்;

❋ உண்மை அருளை ஒருவரும் நாடமாட்டார்கள். ஆனால் அறிவு நிறைந்த அறியாமையிலேயே மயங்கி இருப்பார்கள்;

❋ மருளை, அஞ்ஞானத்தை, அறியாமையைச் சிதைத்தவர்கள் - கடந்தவர்கள் ஒருவரையும் காணவில்லையே.

1011 தான் அவன் ஆக அவனே தான் ஆயிட
ஆன இரண்டில் அறிவன் சிவம் ஆகப்
போனவன் அன்பிது நாலாம் மரபுறத்
தான் அவன் ஆகும் ஓர் ஆதித்த தேவரே.

❋ **"தான்"** ***"அவன்"*** ஆக விளங்குகின்றது. **"அவன்", தான்** ஆகப் புலப்படுகின்றது;

❋ **"தான்"**, அவன் ஆகிய இருநிலைகளையும் கடந்து சிவபரம்பொருளை யான் அறிந்து கொள்வேன்;

❋ திருநந்திதேவரால் எனக்கு உணர்த்தப்பட்டது **அன்பு மரபாகும்**. இந்த **அன்பு மரபே** பூமியின் நாலுதிசையிலும் நிலையாகவே உணர்த்தப்பட வேண்டும்;

❋ **"தான்"** அவன் எனும் புலப்பாடுகள், ஓர் ஆதியான தேவரின் நிலைப்பாடாகும்.

1012 ஓங்காரம் உந்திக் கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள் கண்டத்து ஆயிடும்
பாங்கார் நகாரம் பயில் நெற்றி உற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாத மேல் ஆகுமே.

❋ **"ஓம்"** காரம் உந்திக்கமலத்தில் எந்நாளும் ஒலித்த வண்ணம் உள்ளது;

❋ **"வ"**காரம் கண்டத்திலே மலர்ந்த வண்ணம் இருக்கும்;

❋ **"ந"** காரம் நெற்றியிலே மலர்ந்த வண்ணம் இருக்கும்;

❋ விந்துவும் நாதமும் சகஸ்ரத்திலே மலர்ந்த வண்ணம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1013 நம அது ஆசனம் ஆன பசுவே
சிவம் அது சித்திச் சிவமாம் பதியே
நம அற ஆதி நாடுவது அன்றாம்
சிவம் ஆகுமாம் மோனம் சேர்தல் மெய்வீடே.

* ஆத்மாவினது ஆசனம் நம ஆகும்;
* "சிவாய நம" இல் பதியாகிய சிவபரம்பொருளை அடையச் சிவபரம் பொருளே எமக்கு உறுதுணையாகும்;
* "நம" ஐ முற்றாக நீக்கினால் பரம் பொருளை முழுமையாக நாம் நாடலாம்;
* மோனமான மெய்ஞ்ஞான வீட்டை அடைந்தால் சிவபரம் பொருளை உணர்ந்ததிற்குச் சமானமாகும்

1014 தெளி வரு நாளில் சிவ அமுது ஊறும்
ஒளி வரு நாளில் ஓர் எட்டில் உகளும்
ஒளி வரும் அப்பதத்து ஓர் இரண்டு ஆகில்
வெளி தரு நாதன் வெளியாய் இருந்தே.

* எமக்குத் தெளிவு ஏற்படுகின்றபோது, **"சிவஅமிர்தம்"** எம்முள்ளேயே ஊறும்;
* எம்முள்ளே ஒளி ஏற்படுகின்றபோது நாம் அகரமாகிய சிவநிலையுட் செல்வோம்;
* ஒளி எம்முள் தோன்றுகின்றபோது சுத்த சக்தி எம்முடனேயே இருக்கும்;
* தூய வெறுவெளியாகிய உண்மை-சத்தியம்-சிவம் என்றும் தூய வெறு வெளியாகவே இருக்கும்.

## IV நவகுண்டம்

1015 நவ குண்டம் ஆனவை நான் உரைசெய்யின்
நவ குண்டத்து உள் எழு நற்தீபம் தானும்
நவ குண்டத்து உள் எழு நன்மைகள் எல்லாம்
நவ குண்டம் ஆனவை நான் உரைப்பேனே.

* **"நவகுண்டம்"** என்றால் என்ன என்பதை இனிவரும் பாடல்களில் ஆராய்ந்து கொள்வோம்;
* நவகுண்டத்தின் உ ள்ளே சிறந்த தீபம் தோன்றும்;
* நவகுண்டத்தில் இருந்து பலவகையான நன்மைகள் வெளிப்படும்;
* நவகுண்டத்தால் ஏற்படுவனவற்றை யான் உரைசெய்யப் போகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

1016 உரைத்திடும் குண்டத்தின் உள்ளே முக்காலும்
நகைத்து எழு நாற்கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பார் அங்கி யோடே
மிகைத்து எழு கண்டங்கள் மேல் அறியோமே.

* நவகுண்டத்தின் உள்ளே முக்காலமும் தெளிவுபட வெளிப்படும்;
* நவகுண்டத்தின் நாலாபக்கத்தாலும் ஐந்துவகை நன்மைகள் வெளிப்படும்;
* பகைமையை ஏற்படுத்துகின்ற முப்புரமாகிய மும்மலங்களையும், நவகுண்டத்தின் ஊடாகத் தோன்றுகின்ற அக்கினியில் எரித்து விடவும்;
* நவகுண்டத்தில் இருந்து மேலும் எண்ண முடியாத கண்டங்கள்-அண்டங்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. இவற்றை அறிய முடியாமல் இருக்கின்றதே.

1017 மேல் அறிந்து உள்ளே வெளி செய்த அப்பொருள்
கால் அறிந்து உள்ளே கருத்து உற்ற செஞ்சுடர்
பார் அறிந்து அண்டம் சிறகு அற நின்றது
நான் அறிந்து உள்ளே நாடிக் கொண்டேனே.

* சகலவற்றையும் அறிந்து கடந்து செல்லவேண்டும். மேலும் தூய வெறு வெளியை உணரவேண்டும். அனைத்திற்கும் முதலாகப் பரம்பொருள் உண்டு;
* பிராணனாரின் செயற்பாடுகள் அனைத்தையும் அறிந்த, செந்நிற ஜோதி எம்முள்ளே தெளிவுற உள்ளது;
* இறைஜோதி பூமி முதல் சர்வ அண்டங்கள் வரையும் பரந்துள்ளது;
* திருமூலராகிய யான் இறைஜோதியை உணர்ந்து அறிந்து என்னுள்ளேயே அமர்ந்து கொண்டேன்.

1018 கொண்ட இக் குண்டத்தின் உள் எழு சோதியாய்
அண்டங்கள் ஈர் ஏழும் ஆக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பு எல்லாம்
இன்று சொல் நூலாய் எடுத்து உரைத்தேனே.

* நவகுண்டத்தின் உள்ளே இறைஜோதி இயல்பாகத் தோன்றி எழும்;
* இறைஜோதி அண்டங்கள் 14 ஐயும் ஆக்கவும் வல்லது அழிக்கவும் வல்லது;
* தொன்றுதொட்டுக் காலம் கடந்து சப்த்த சொரூபம் எங்கும் வியாபித்து உள்ளது;
* திருமூலராகிய யானோ இவற்றை எல்லாம் நூல்வடிவில் எடுத்து உரைத்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1019 **எடுத்த அக்குண்டத்து இடம் பதினாறில்**
**பதித்த கலைகளும் பாலித்து நிற்கும்**
**கதித் தனல் உள் எழக் கண்டு கொள்வார்க்கே**
**கொதித்து எழும் வல்வினை கூட கில்லாவே.**

❊ நவகுண்டம் பதினாறு வகையாகி நிற்கும்;
❊ அதில் பதினாறு வகையான கலைகளும் தெளிவாகி வெளிப்படும்;
❊ நவகுண்டத்தின் உள்ளே இறைஜோதி எழுவதைக் கண்டு கொள்பவர்களுக்கு, ஒருபோதும் கொடிய வினைகள் வந்து சேரவே மாட்டாது.

1020 **கூட முக் கூடத்தின் உள் எழு குண்டத்துள்**
**ஆடிய ஐந்தும் அகம் புறம் பாய் நிற்கும்**
**பாடிய பன்னீர் இராசியும் அங்கு எழ**
**நாடிக் கொள்வார் கட்கு நற்சுடர் தானே.**

❊ நவகுண்டத்தின் முப்பரிமாணத்தை நன்கு நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்;
❊ ஐந்து புலன்களும், புறம் நோக்கியும் செயற்படும். அகம் நோக்கியும் செயற்படும்;
❊ பன்னிரண்டு வகை இராசியும் நவகுண்டத்தில் இருந்து தெளிவுபட வெளிப்படும்;
❊ உண்மை ஆய்வுடையவர்க்கு இவை அனைத்தும் நல்ல சுடராகவே விளங்கும்.

1021 **நற்சுடர் ஆகும் சிரமுக வட்டமாம்**
**கைச்சுடர் ஆகும் கருத்து உற கைகளில்**
**பைச்சுடர் மேனி பதைப்புற்று இலிங்கமும்**
**நற்சுடராய் எழு நல்லது என்றாளே.**

❊ வட்டவடிவ முகமும், சிரசும் சிறந்த தீபம் ஆக விளங்கும்;
❊ சிறந்த கருத்துக்கள் என்றும் கையில் உள்ள தீபத்தினைப் போன்றது;
❊ எம்முள்ளே உள்ள ஆத்மசுடர், எதுவித நடுக்கமும் இன்றி ஆத்மலிங்கமாக இருக்கின்றது;
❊ ***"நான்"*** எப்பொழுதும் சிறந்ததீபம் போன்று விளங்க வேண்டும் " என்று இறைவி எனக்கு உணர்த்திவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1022 நல்லது என்றாளே நமக்கு உற்ற நாயகம்
சொல்லது என்றாளே சுடர் முடி பாதமா
மெல்ல நின்றாளை வினவகில்லா தவர்
கல் அதன் தாளையும் கற்றும் இன்னாளே.

- ❋ எமக்கு என்றும் நல்லதையே இறைவி வழங்கிய வண்ணம் உள்ளார்;
- ❋ ஜோதியின் ஆரம்பமும் (பாதம்), முடிவும் (உச்சி); "இறைசொல்" என இறைவி எமக்கு உணர்த்துகின்றார்;
- ❋ மிகவும் மென்மையாக, நுட்பமாக எம்முடனே இறைவி உள்ளார். இதனை ஆய்ந்து அறியாது அநேகர் உள்ளனர்;
- ❋ இன்றே இப்பொழுதே இறைவியை ஆய்ந்து உணர்ந்து அறிந்து, அன்பு செய்து இறைவியின் தாளைப் பின்பற்றிக் கொள்ளுங்கள்.

1023 விண்ணா இளம் பிறை மேவிய குண்டத்துச்
சொன்னால் இரண்டும் சுடர் நாகம் திக்கு எங்கும்
பன்நாலு நாகம் பரந்த பரம் சுடர்
என்னாகத்து உள்ளே இடம் கொண்ட வாறே.

- ❋ நவ குண்டத்திலே விளம்பமுடியாத - விண்ணின் அம்சம் பொருந்திய இளம் பிறைச் சந்திரன் மருவி நிற்கும்;
- ❋ நவகுண்டமும், இளம் பிறையின் சுடரும் எட்டுத் திக்கிலும் பிரதிபலிக்கும்;
- ❋ பரம்பொருளின் சுடர் 14 புவனங்களும் கடந்து பரந்து விரிந்துள்ளது;
- ❋ இப் பரம் சுடர் என்னுள்ளே மிகவும் தெளிவு பட வீற்றிருக்கின்றது.

1024 இடம் கொண்ட பாதம் ஏழில் சுடர் ஏக
நடம் கொண்ட பாதங்கள் நண்ணீர் அதற்குச்
சகம் கொண்ட கை இரண்டும் ஆறும் தழைப்ப
முகம் கொண்ட செஞ்சுடர் முக்கண னார்க்கே.

- ❋ ஆறு ஆதாரங்களூடாகவும் இறை சுடர் பிரகாசித்து ஏழாவது நிலையான சகஸ்ரத்தில் திருவடியாக விளங்கும்;
- ❋ இறை ஒளியே திருநடனம் ஆடும் திருப்பாதங்களுக்குச் சிறந்த நீர் ஆக விளங்கும்;
- ❋ உடலாகிய பூமியிலே இருமைவகைத் தன்மையும் ஆறு ஆதாரங்களும் காணப்படுகின்றன;
- ❋ முகத்திலே புருவத்து இடைவெளியிலே உள்ள நெற்றிக் கண்ணில் ஜோதி புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

1025 முக்கணன் தானே முழுச்சுடர் ஆயவன்
அக் கணன் தானே அகிலமும் உண்டவன்
திக் கணன் ஆகித் திசை எட்டும் கண்டவன்
எக் கணன் தானுக்கும் எந்தை பிரானே.

❊ மூன்று கண்களை உடையவரே முழுச் சுடராகவும் உள்ளார்;
❊ அகக் கண்ணில் இருந்து புறப்படுகின்ற முழுச்சுடர் அகிலத்தையும் ஆட் கொள்கின்றது;
❊ இச்சுடர் எட்டுத் திசையையும் ஊடறுத்துச் செல்ல வல்லது;
❊ எந்தவித சத்தியினைப் பெற்றவர்களுக்கும் இறையவரே பரம்பொருளே தந்தை ஆவர். – தலைவர் ஆவர்.

1026 எந்தை பிரானுக்கு இரு மூன்று வட்டமாய்த்
தந்தை தன்முன்னே சண்முகம் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்து அங்கு இருத்தலால்
மைந்தன் இவன் என்று மாட்டிக் கொள்ளீரே.

❊ இறைசத்தி ஆறு முகங்களைக் கொண்டது. கீழ்நோக்கிய ஆறாவது முகம் மற்றைய முகங்களுக்கு முன்னாகவே தோன்றுகின்றது;
❊ ஆறுவது முகமாகிய மைந்தனும், சுவாமியாகிய இறைவரும் ஒன்றாகவே உள்ளனர்;
❊ மைந்தன் தனித்தவர் முழுமையானவர் என்று நம்பி அவரிடம் சிக்கி விடாதீர்கள். மைந்தன் பகுதியானவர். முழுமையானவர் அல்லர்.

1027 மாட்டிய குண்டத்தின் உள் எழு வேதத்துள்
ஆட்டிய கால் ஒன்றும் இரண்டும் அலர்ந்திடும்
வாட்டிய கை இரண்டு ஒன்று பதைத்து எழ
நாட்டும் சுரர் இவர் நல் ஒளி தானே.

❊ நவகுண்டத்தில் இருந்து சப்த்த சொரூபம் புலப்படுகின்றது;
❊ இருமை வகைச் செயற்பாடு உடைய பிராணனாரும் அங்கே அலர்ந்து விடுவார்;
❊ இருமை வகைத் தன்மையில் ஒரு தன்மை வேகமாகித் தீமையை நோக் கிச் செயற்படும்;
❊ மற்றைய தன்மை சிறந்த ஒளியாகி, நாட்டுக்கு நன்மை பயக்கும் செயலை நோக்கிச் செல்லும். இதனை நெறிப்படுத்துபவர் சுரர் என அழைக்கப்படு வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

1028 நல் ஒளி ஆக நடந்து உலகு எங்கும்
கல் ஒளி ஆகக் கலந்து உள் இருந்திடும்
சொல் ஒளி ஆகத் தொடர்ந்த உயிர்க்கு எல்லாம்
கல் ஒளி கண் உளும் ஆகி நின்றானே.

* சிறந்த நன்மை பயக்கும் ஒளி, உலகம் எல்லாம் வியாபித்து நிற்கும்;
* அதே ஒளி ஆராய்வுக்கு உரியதாகி எம்முள்ளே அமர்ந்திருக்கும்;
* எல்லா உயிர்களிலும் ஓம் எனும் சொல் வடிவமாக ஒளி காணப் படுகின்றது;
* இவ் ஒளி எமது கண்ணுள்ளேயும் சகல அணுக்களிலும் கலந்து நிற்கின்றது.

1029 நின்ற இக்குண்டம் நிலை ஆறு கோணமாய்
பண்டையில் வட்டம் பதைத்து எழும் ஆறும்
கொண்ட இத் தத்துவம் உள்ளே கலந்து எழ
விண் உளும் என்ன எடுக்கலும் ஆமே.

* நவகுண்டம் ஆறு ஆதாரங்களின் நிமித்தம் நிலைக்குத்தாக ஆறு கோணமாய் மலர்ந்து இருக்கும்;
* ஆறு அத்துவாக்களாக, மேலும் ஆறு வட்டங்கள் மலர்ந்திருக்கும்;
* இயல்பாகவே உள்ள இத்தத்துவத்துடன் ஒன்றித்து இருக்கவேண்டும்;
* அப்பொழுது நாங்கள் விண்ணில் இருந்து நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். வேண்டியதைப் பெறலாம்.

1030 எடுக்கின்ற பாதம் கண்மூன்று எழுத்தைக்
கடுத்த முகம் இரண்டு ஆறு கண் ஆகப்
படித்து எண்ணு நா எழு கொம்பு ஒரு நாலும்
அடுத்து எழு கண்ணானது அந்தம் இலாற்கே.

* பாதம், கண், மூன்று ஆகிய எழுத்தால் ஆன ஓம், தெளிந்த முகம், ஆறு ஆதாரமும் ஆறு அத்துவாக்களும், கற்பதனால் வளர்ச்சி அடையும். அந்தக் கரணங்கள்;
* எல்லாவற்றையும் அந்தம் செய்தவர்களுக்கு மேற்கூறிய அனைத்தும் கண்களாக விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1031 அந்தம் இல்லானுக்கு அகலிடம் தான் இல்லை
அந்தம் இல்லானை அளப்பவர் தாம் இல்லை
அந்தம் இல்லானுக்கு அடுத்த சொல் தான் இல்லை
அந்தம் இல்லானை அறிந்து கொள் பத்தே.

❊ அந்தமே இல்லாத இறையவருக்கு இதுதான் இடம் என்று இல்லை. அவர் எங்கும் வியாபித்துள்ளார்;
❊ இறையவரை அளப்பவர் ஒருவரும் எங்கும் இல்லை;
❊ இறையவருக்கு வேறு நாமம் இறையவரே ஆவர். வேறு சொல்லே கிடையாது;
❊ இறையவரே இலிங்க வடிவமாக அமர்ந்திருப்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

1032 பத்து இட்டு அங்கு எட்டு இட்டு ஆறு இட்டு நால் இட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்து எழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்த மெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்பதி பாலே.

❊ நவகுண்டத்தில் இருந்து சகஸ்ரம் ஆகிய தாமரை மிக அற்புதமாக மலர்ந்துள்ளது. அங்கே ஆத்மலிங்கம், சிவசொரூபம், ஆறு ஆதாரங்கள், நாலுவகை வாழ்க்கைப் பருவங்கள் ஆகியன அமைந்துள்ளன;
❊ அங்கே உண்மையான அந்தர்யாகம் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றது;
❊ அப்பொழுது உண்மையான தெளிவுடன் இறைவரை நாம் எம்முள்ளே உண்மையாகவே காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1033 பார்ப்பதி பாகன், பரந்தகை நால் ஐஞ்சு
காற்பதி பத்து முகம் பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர் முடி
நாற்பது சோத்திரம், நல் இருபத்து அஞ்சே.

❋ அர்த்தநாரீஸ்வர சொரூபத்துடன் மிகவும் நெருக்கமாக இருப்பவர் ஒருவர் உள்ளார்;
❋ அவருக்கு இருபது கைகள் உண்டு. அவரிடம் பத்துவகையான பிராண னார் உண்டு. பத்துவகையான முகம் உண்டு;
❋ அவரது கண்களில் ஆத்மா பூப்போன்று மலர்ந்த வண்ணம் இருக்கும். அவரது பாதங்கள் தாமரைப் பூப் போன்றது.
❋ அவருக்கு இருவகையான சுடர்கள் உள்ளன. ஒன்று உலகை அன்புடன் ஆளும் சுடர். இரண்டாவது இறைவரை அருளுடன் ஆராதிக்கும் சுடர் ஆகும். இவர் நாற்பது வகையாக இறையவர் மீது பாடல்கள் பாடியுள்ளார். அவையே சாமவேதம் ஆகும். இவற்றில் இருபத்து அஞ்சுவகை மிகவும் சிறப்புடன் விளங்குகின்றன.
இவரே இராவணேஸ்வரர் ஆவர்.

1034 அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐ ஐந்தும்
மஞ்சிட்ட குண்டம் மலர்ந்து அங்கு இருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரம் சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே.

❋ ஐந்து பூதங்களால் ஆக்கப்பட்ட அமைப்பை 25 பேர் அளவீடு செய்கின் றார்கள்;
❋ நவகுண்டம் மஞ்சம்போன்று அவ் அமைப்பினுள் மலர்ந்துள்ளது;
❋ பஞ்சுபோன்ற ஜோதி எங்கும் பரந்து சுடராகப் பிரகாசிக்கின்றது;
❋ ஜோதியுடன் ஐக்கியமாகவே உள்ள அக்கினியைக் கூடுதல் முத்தி யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1035 முத்தி நல் சோதி முழுச்சுடர் ஆயவன்
கற்று அற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்று அற நாடிப் பரந்த ஒளி ஊடு போய்ச்
செற்று அற்று இருந்தவர் சேர்ந்து இருந்தாரே.

❊ இறையவரில் இருந்து ஜோதி முழுமையாகப் புறப்படுகின்றது. இவ் ஜோதியே முத்தியை வழங்கும்.
❊ எல்லாக் கல்வியாலும் வரும் அறிவையும் கற்றுப் பின்னர் விட்டு விலக வேண்டும். அதன் பின்னரே இறையவர் எம்முள்ளே புலப்படுவார்;
❊ எல்லா விதமான பற்றுக்களும் நீங்கிய பின்னர் பரந்து விரிந்த இறை ஒளியை நாடிக்கொள்ள வேண்டும்;
❊ எந்தவித குழப்பமும் இன்றி இருப்பவர்கள் இறைஜோதியுடன் சேர்ந்து இருப்பார்கள்.

1036 சேர்ந்த கலை அஞ்சும் சேரும் இக் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்த ஐம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே.

❊ நவகுண்டம் ஆகிய உடலானது, ஐந்து பூதங்களின் கலைகளால் நன்கு அமைந்துள்ளது;
❊ எல்லாத் திசைகளும் இந்த நவகுண்டத்தின் உள்ளே அமர்ந்து விடும்;
❊ எல்லா இடமும் செல்கின்ற ஐந்து பூதங்களையும் அக்கினியையும் கடந்தவர்கள் இறைவருடன் கலந்து இருப்பார்கள்.

1037 மெய் கண்ட மாமம் விரி நீர் உலகு ஏழையும்
உய் கண்டம் செய்த ஒருவனை சேருமின்
செய் கண்ட ஞானம் திருந்திய தேவர்கள்
பொய் கண்டம் இல்லாப் பொருள் கலந்தாரே.

❊ உண்மையான பரந்து விரிந்துள்ள, ஏழு உலகங்களையும் ஒழுங்கு படுத்துகின்ற, ஏகமாகிய ஒருவரைச் சேர்ந்து கொள்ளுங்கள்;
❊ செய்த வினைகள் இரண்டிலும் இருந்தும் விடுபட்ட தேவர்கள், எந்தவித பொய்யுமே இல்லாத மெய்ப்பொருளுடன் கலந்து இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1038 **கலந்து இருபாதம் இருகரம் ஆகும்**
**அலர்ந்து இரு குண்டம் அகாரத்து ஓர் மூக்கு**
**மலர்ந்து எழு செம்முகம் அற்றைக் கண் நெற்றி**
**உணர்ந்து இரு குஞ்சி அங்கு உத்தமனார்க்கே.**

* இந்த அற்புதமான நவகுண்டத்திலே இரண்டு பாதங்களும் இரண்டு கரங்களும் உண்டு;
* அகாரத்தின் அங்கமாக விளங்கும் மூக்கு, சிவந்த முகம், தெளிந்த கண்கள், நெற்றி ஆகியன உண்டு;
* ஆத்மா குழந்தையாக இருப்பதை நாம் உணர்வதே எமது சாதனையின் உத்தமமான நிலையாகும்.

1039 **உத்தமன் சோதி உளன் ஒரு பாலனாய்**
**மத்திமன் ஆகி மலர்ந்து அங்கு இருந்திடும்**
**பச்சிம திக்கும் பரந்து குழிந்தன**
**சத்திமான் ஆகத் தழைத்த கொடியே.**

* நவகுண்டத்தின் உள்ளே சோதியானது உத்தமனாக - பாலனாக விளங்குகின்றது;
* இச்சோதியின் செயற்பாடு சில சமயங்களில் மத்திமம் ஆக விளங்கும்;
* மேற்குத் திக்கிலே இச்சோதி பரந்து விரிந்து பின் குவிந்தும் செயற்படும்;
* இந்த நவகுண்டம் ஆனது சத்தியத்தின் ஒருசெடியாகிக் கொடியாகித் தழைத்து இருக்கும்.

1040 **கொடி ஆறு சென்று குலாவிய குண்டம்**
**அடி இரு கோணமாய் அந்தமும் ஒக்கும்**
**படி ஏழு உலகும் பரந்த சுடரை**
**மடியாது கண்டவர் மாதனம் ஆமே.**

* ஆறு ஆதாரங்களையும் ஆறு கொடிகளாகக் கொண்டதே நவகுண்டம் ஆகும்;
* முதல் ஆதாரம்- மூலாதாரம் முக்கோண வடிவமாய் இருக்கும். இது நவகுண்டத்தின் ஒரு அந்தமாகும்;
* மெய்ஞ்ஞானச் சுடர், நவகுண்டத்தின் ஏழுநிலைகளையும் படிகளாக்கிப் பரந்து விரிந்துள்ளது;
* இவற்றை ஒருபோதும் தவறாது கண்டவர்கள் இறைவரின் மெய்ஞ்ஞானச் செல்வத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1041 மாதனம் ஆக வளர்கின்ற வன்னியைச்
சாதனம் ஆகச் சமைந்த குரு என்று
போதனம் ஆகப் பொருந்த உலகு ஆளும்
பாதனம் ஆகப் பரிந்தது பார்த்தே.

❋ ஞானாக்கினி இறையவர் செல்வமாக எம்முள்ளே வளர்ந்து கொண்டே உள்ளது;
❋ இறை ஞானத்தை மட்டுமே நேரடியாக இறை குருவிடம் பெற்று, எமது வாழ்க்கையை நாம் அமைக்கவேண்டும்;
❋ இறைஞானம் ஒன்றே உலகங்கள் அனைத்தையும் தெளிவுடன் ஆளும்;
❋ இறைவரின் திருப்பாதத்தினைக் கண்டு வழிபாடு செய்ய, அன்பு கருணை ஆகியன எம்முள்ளே நிறைவாக மலர்ச்சி அடைந்த வண்ணம் இருக்க வேண்டும்.

1042 பார்த்து இடம் எங்கும் பரந்து எழு சோதியை
ஆத்தம் அதாகவே ஆய்ந்து அறிவார் இல்லை
காத்து உடல் உள்ளே கருதி இருந்தவர்
மூத்து உடல் கோடி யுகம் கண்ட வாறே.

❋ நாம் எவ்விடம் பார்த்தாலும் இறையவர் ஜோதியே பரந்து விரிந்து செல்கின்றது;
❋ இவ் “இறைஜோதியே” எமது உண்மையான உறைவிடம்” என்பதனை ஒருவரும் ஆராய்ந்து, உணர்ந்து அறியாது உள்ளார்கள்;
❋ என்றும் விழிப்புடன் எமது உடலையும், அகத்தையும் நாம் பாதுகாத்து இறை ஜோதியுடன் இருத்தல் வேண்டும்;
❋ அப்பொழுது எமது உடலும், உயிரும் கோடிக் கணக்கான யுகங்கள் வாழ்ந்து கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1043 **உகம் கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க**
**அகம் கண்ட யோகி உள் நாடி எழுப்பும்**
**பயம் கண்டு கொண்ட இப்பாய் கரு ஒப்பச்**
**சகம் கண்டு கொண்டது சாதனமாமே.**

✻ எம்முள்ளே உள்ள ஒன்பது வகைக் குண்டங்களும் ஒன்றாகி நவகுண்டம் ஆகியுள்ளது. இந்த நவகுண்டம் பல கோடி யுகங்களைக் காணும் வல்லமை உடையது;

✻ தன்னுள்ளேயே என்றும் இந்த நவகுண்டத்தைக் காண்பவர் ஒரு சிறந்த யோகி ஆவர். அவர் தனது உடம்பின் ஒவ்வொரு நாடி நரம்பிலும் இறை நாதத்தை எழுப்பிய வண்ணமே இருப்பார்;

✻ உடம்புக்கும் உள்ளத்திற்கும் ஏற்படுகின்ற சகலவிதமான பயங்களையும் நீக்க வேண்டும்;

✻ இச்சாதனா முறையே எமது உடலாகிய பூமியைப் புனிதம் ஆக்கும்.

**சாதனை நாலு, தழல் மூன்று வில் வயம்**
1044 **வேதனை வட்டம், விளை ஆறு பூ நிலை**
**போதனை போது அஞ்சு பொற்கய ஆரண**
**நாதனை நாடு நவகோடி தானே.**

✻ எமது வாழ்க்கையில் நாலுவகையான பருவங்கள் சாதனை செய்வதற் கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மூவகை ஒளி எம்முள் மூவகை நாடிகளாலும் ஏற்படும். சந்திர ஒளி (இடைகலை), சூரிய ஒளி (பிங்கலை), அக்கினி ஒளி (சுசுமுனை) ஆகியன வற்றை எம்வசம் ஆக்கவேண்டும்;

✻ ***எந்தவிதமான வட்டங்களுக்குள்ளும் சட்டதிட்டக் கட்டுப் பாடுகளுக்குள்ளும் நாம் நின்றால் அவை உளவியல், உடலியல் ரீதியாக எமக்கு வேதனையைத் தரும்.***

இவற்றினுள் சிக்காது, இயல்பாகவே தோன்றும் உண்மை ஆறுதலை நாடவேண்டும். இது இயற்கையாகவே பூ மலரும் நிகழ்வுக்கு ஒப்பாகும்;

✻ சகலவிதமான இறைபோதனைகளையும் பொன்போன்று பாதுகாத்து, உங்களது ஆபரணங்களாக அணிந்து கொள்ளுங்கள்;

✻ இறையவரை எப்பொழுதும் தெளிவுடன் நாடவேண்டும். அப்பொழுது நாம் ஒன்பது வகை முடிவுகளையும் (நவகுண்டத்தின் ஒன்பது வகை முடிவு) உணரலாம்.

*பகுதி 11 முற்றும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thirumoolar Thirumanthiram

**Stanzas with Interpretation.**

**Publication No: 8**

*Publication & Copyright*

**Mounashram Trust**
**19, I. B. C. Road,**
**Wellawatta, Colombo - 6,**
**Shri Lanka.**

Printed by United Merchants Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org